வெளியீட்டுத் தொடர் எண்: 9

# அநுபோக வைத்திய நவநீதம்

ஒன்பதாம் பாகம்

ஆசிரியர்:

**ஹக்கீம் பா. முகம்மது அப்துல்லா சாயபு அவர்கள்**



அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவநூல் வெளியீட்டுக் குழுவினரால்
பதிப்பிக்கப்பட்டு
தமிழ்நாடு அரசுக்கு
நன்கொடையாக அளிக்கப்பட்டது

கி. பி. 1975 விலை ரூ.

முதற் பதிப்பு : 1905

இரண்டாம் பதிப்பு :
அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சி. ம. நூ. வெ. குழு — 1975ஆம் ஆண்டு

உரிமை :

**அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்**
**சித்த மருத்துவநூல் வெளியீட்டுக்குழு,**
**இந்திய மருத்துவத்துறை இயக்குநர் அலுவலகம்**
**சென்னை-600029.**

அச்சிட்டோர் :

**பூம் பிரிண்டர்ஸ்,**
32, தாறு தெரு,
புரசைவாக்கம்,
சென்னை-600 007,

# அருள்மிகு
# பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்


## அறங்காவலர் குழு

திரு. பு. மனோகரன், அறங்காவலர் குழுத் தலைவர்

திரு. வி. வி. சி. ஆர். எம். கந்தசாமி பி. எஸ்ஸி அறங்காவலர்

திரு. என். நாச்சிமுத்து எம். எல். ஏ. ,,

திரு. புலவர் சி. பழனிச்சாமி எம். எல். ஏ. ,,

திரு. ஏ. பச்சையப்ப கவுண்டர் ,,

வி. எஸ். கோதண்டபாணி பி. எஸ்ஸி., பி.எல்
துணை ஆணையர்—நிர்வாக அதிகாரி



# அருள்மிகு
# பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்


## சித்த மருத்துவநூல் வெளியீட்டுக் குழு

டாக்டர் இரா. தியாகராசன் எல். ஐ. எம்.,
பொறுப்பு அலுவலர்,
சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம்,
சென்னை-600010. ... தலைவர்

டாக்டர் ஆ. ஆனந்தகுமார் ஜி. சி. ஐ. எம்.,
தலைவர், தமிழ்நாடு அரசு இந்திய மருத்துவ
மத்தியக் கழகம், சென்னை-600005. ... பொருளாளர்

திரு. பு. மனோகரன், தலைவர், அறங்காவலர் குழு
அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில். ... உறுப்பினர்

டாக்டர் ப. சிற்சபை, காஞ்சி,
துணைத் தலைவர்,
இந்திய மருத்துவ மத்தியக்கழகம். ... உறுப்பினர்

திரு. வி. எஸ். கோதண்டபாணி பி. எஸ்ஸி., பி.எல்.,
நிர்வாக அதிகாரி, அருள்மிகு பழநி
தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் ... உறுப்பினர்

டாக்டர். பு. மு. வே[illegible]கோபால் எச். பி. ஐ. எம்., சிறப்பு
இந்திய மருத்துவத்துறை இயக்குநர். ... அழைப்பினர்
சென்னை-600029

# சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழு

## உறுப்பினர்கள்

1. டாக்டர் இரா. தியாகராசன் எல். ஐ. எம்.,
பொறுப்பலுவலர், சித்த மருத்துவ
மைய ஆராய்ச்சி நிலையம், சென்னை-600010. ... தலைவர்

2. டாக்டர் பு. மு. வேணுகோபால் எச்.பி.ஐ.எம்.,
இந்திய மருத்துவத்துறை இயக்குநர்,
சென்னை-600029. உறுப்பினர் செயலர்

3. டாக்டர் சி. எஸ். உத்தமராயன் எச். பி ஐ. எம்.,
முன்னாள் இந்திய மருத்துவத்துறை
இயக்குநர், சென்னை-600005. உறுப்பினர்

4. டாக்டர் எம். சண்முகவேலு எச். பி.. ஐ. எம்.,
முன்னாள் மருத்துவப் பேராசிரியர்,
இராமநாதபுரம். ,,

5. டாக்டர் கே. இராதாகிருஷ்ணன் எல்.ஐ.எம்.,
மருத்துவ அலுவலர் ஊராட்சி ஒன்றிய மருந்தகம்,
காவேரிப்பாக்கம், வட ஆற்காடு. ,,

6. டாக்டர் எ. சிறில் ஹென்றி எல். ஐ. எம்.,
ஓய்வுபெற்ற மருத்துவ அலுவலர்,
நகராட்சி மருந்தகம், திருச்சி.

7. டாக்டர் ஆ. ஆனந்தகுமார் ஜி. சி. ஐ. எம்.,
தலைவர், தமிழக அரசு இந்திய மருத்துவ
மத்தியக் கழகம், சென்னை 600005. ,,

8. டாக்டர் ப. சிற்சபை ஆர். ஐ. எம். பி.,
துணைத்தலைவர்,
இந்திய மருத்துவ மத்தியக் கழகம்

9. பண்டிட் பெ. முத்துகருப்பப் பிள்ளை ஆர்.ஐ.எம்.பி.,
தலைவர், சித்த மருத்துவ சங்கம், மதுரை.

10. டாக்டர் டி. வி. கல்யாணசுந்தரம் ஆர். ஐ. எம். பி.,
தலைவர், சென்டிரல் சித்தா மெடிகல் கவுன்சில்,
சென்னை-600012. ,,

11. டாக்டர் என். சேதுரகுநாதன், தமிழ்ப் பேராசிரியர்,
விருதுநகர். ,,

12. திரு. நி. கந்தசாமிப்பிள்ளை.,
முன்னாள் செயலர், சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சை.

## சிறப்பு அழைப்பினர்கள்

1. டாக்டர் பொன். குருசிரோன்மணி பி.ஏ.,ஜி.சி.ஐ.எம்.,
முதல்வர், அரசினர் இந்திய மருத்துவக்கல்லூரி,
பாளேயங்கோட்டை. ,,

2. டாக்டர் மு. வே. ரமணன் எல். ஐ. எம்.,
பேராசிரியர், மேல் பட்டப் படிப்பு,
அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி,
பாளேயங்கோட்டை. ,,

3. டாக்டர் டி. வி. சுப்பாரெட்டி, கௌரவ இயக்குநர்,
இந்திய மருத்துவ வரலாற்று ஆராய்ச்சி நிலேயம், ஐதராபாத்.

4. டாக்டர் இரத்தினவேலுசுப்பிரமணியம் பி.எஸ்ஸி.,
எம் டி ,எம்.ஆர்.சி.பி. (லண்டன்), சென்னே-600010.

**மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்**

**மாண்புமிகு**

பேராசிரியர் **க. அன்பழகன்** எம். ஏ., அவர்கள்

அளித்த

## அணிந்துரை

முன் தோன்றிய—மூவா மொழியாம் தமிழுடனும் அதன் நாகரிகத்துடனும் பிறந்து வளர்ந்த — சித்த மருத்துவத்தின் நன்மையும் மேன்மையும் உலகம் என்றும் இழந்து விடாது காப்பது நம் கடன். தமிழகத்தி லும் பிற தென் மாநிலங்களான திராவிடத்திலும் சித்த மருத்துவம் இன்றும் பலரால் — வழிவழியாகவும் கற்றறிந்தும்—கையாளப்பட்டு வரினும் அதன் சிறப்பும் புகழும் நிலைபெறுதற்கு நாம் ஆற்ற வேண்டிய பணிகள் பலவாகும். தமிழக அரசின் ஆதரவாலும் - இத்துறை வல்லுநர்களின் முயற்சியாலும் — மருத்துவ முறைகளுள் சித்த மருத்துவமும் இடம் பெற்று வளருகிறது. எனி னும், அதன் தனிச் சிறப்புகள் அறிவியல் ஆய்வா ளர்கள் ஒப்புக்கொள்ளுமாறு ஆய்வுகள் மூலம் நிலை நிறுத்தப்பட்டாக வேண்டும் என்பதை நாம் 'கருத்'தில் கொண்டு செயற்படவேண்டும். அந்த நிலை உருவா வதற்கு—ஓலைச் சுவடிகளாகவும்—ஒரு காலத்தில் அச் சேறியும் இன்று கிடைத்தற்கரிதாகவும் உள்ள நூற்றுக் கணக்கான சித்த மருத்துவ நூல்கள் — உடனடியாகப் பதிப்பிக்கப்பட வேண்டும். இவை வெளிவந்தால் தான், இன்று சித்த மருத்துவம் பயிலும் மாணவரும், இளம் மருத்துவரும், அவற்றைப் பயின்று பயன்பெற இயலும். மருந்து செய்முறைகளை ஒப்புநோக்கி உண்மை தெளிய வும், மருந்துகளின் தரத்தை உறுதிப்படுத்தவும், அரிய மூலப் பொருள்கள் கிடைக்காத விடத்து மாற்று மூலப்

பொருள்களைக் கொண்டு மருந்து செய்திடவும், மருந்து உற்பத்தியைப் பல மடங்காகப் பெருக்கி மக்களுக்குப் பரவலாகக் கிடைக்கச் செய்யவும் வாய்ப்பாகும்; பரவலாக எங்கும் எளிதில் கிடைப்பதால் செல்வாக்குப் பெற்றுள்ள அலோபதி மருந்துகட்கு ஈடு கொடுத்து மக்களிடம் செல்வாக்குப் பெறவும் முடியும்.

எனவே, சித்த மருத்துவ நூல்கள் வெளியிடும் முயற்சிக்குத் தகுந்த நிதி உதவி வேண்டும் என்னும் எனது வேண்டுகோளை இசைவுடன் ஏற்று அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவல் குழுவினரும் — அதன் தலைவர் திரு. **பு. மனோகரன்** அவர்களும் — இதற்காக இரண்டு இலட்சம் ரூபாய் நிதிஒதுக்க முன் வந்ததுடன் சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக்கென டாக்டர் **இரா. தியாகராஜன்** எல். ஐ. எம்., அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவையும் அமைத்துச் செயல்படுத்தலாயினர்.

இக் குழுவின் தலைவரும் உறுப்பினர்களும் ஆர்வத்துடன் ஈடுபட்டு ஆற்றிவரும் நற்பணியும் - பல்வேறு வகையிலும் அவர்கட்குத் துணைநிற்போர் ஆற்றும் பணியும் — இந்திய மருத்துவத்துறை இயக்குநர் டாக்டர் **பு. மு. வேணுகோபால்** அவர்களின் இயக்குவித்திடும் திறனும் எனது பாராட்டுக்குரியனவாகும்.

பழநி திருக்கோயில் அறங்காவலர் குழுவினருக்கும், அக்குழுவின் தலைவருக்கும் எனது நன்றியும் பாராட்டும் உரியவாகும்.

இந்த நூல் வெளியீட்டுக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பெற்று முதலில் வெளியிடப்படும் நூல் வரிசையே **அநுபோக வைத்திய நவநீதம்** - ஒன்று முதல் பத்து பாகங்களும் அவற்றின் திறவுகோலும் - ஆகும். இன்று கிடைக்காத பதிப்பாக உள்ள இந்த மருத்துவக் களஞ்சியம் வெளிவருவது மிகுந்த பயன் தரவல்லதாம்.

இந்நூல்களின் ஆசிரியர் - சித்த மருத்துவ வல்லுநர் ஹக்கீம் பா. முகம்மது அப்துல்லா சாயபு அவர்கள் இளமை முதலே - தமது முன்னோர்தம் மருத்துவக்

கலையைப் பொன்னேபோல் போற்றிப் பயின்று தொடர்ந்து பல ஆண்டுகள் பாடுபட்டுப்பயன்படுத்தித் தேர்ந்து தெளிந்து - உலகோர்க்குப் பயன்பட வேண்டும் என்னும் உயர்ந்த நோக்கத்துடன் அரிய சித்த மருத்துவ நூல்கள் பலவற்றை இயற்றி வெளியிட்டுள்ளார். இச் செயல்களின் பெருமை அவரையே சாரும்.

மறைபொருளாய்ப் பேணப்பட்டு அதனாலேயே உருவழிந்து மறைந்து போவதற்கு ஆளாகிவிட்ட சித்த மருத்துவ உண்மைகள் — இருட்டறையிலிருந்து வெளிக் கொணரப்பட்டு — ஒளி காண்பதற்கு வழி கண்ட வல்லுநரில் அவர் தலைசிறந்தவர் என்பது மிகையாகாது.

தெளிவுடனும், துணிவுடனும், அறிவுடனும், ஆற்றலுடனும், நெறியுடனும், பொறுப்புடனும் எளிய இனிய தமிழில் - இத்தனை நூல்களை இயற்றியமைக்கு, சித்த மருத்துவ உலகம் - ஹக்கீம் அப்துல்லா அவர்கட்கு எந்நாளும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையதாகும்.

அவர் இயற்றிய அனுபோக வைத்திய நவநீதம் முதற் பாகத்தின் முகவுரையே சித்த மருத்துவத்தின் அக்கால நிலைமை விளக்கமாகவும், நம்மவர் கடமையை எடுத்துக் காட்டுவதாகவும் அமைந்துள்ளதைக் காண்க.

"மிகக் கொடிய நோய்களையும், அறத்தீர்க்கும் பற்பம் செந்தூரமாகிய முறைகள், நமது நாட்டு மருத்துவத்தில் இருப்பதுபோல மற்ற மருத்துவத்தில் இல்லையென நமது மருத்துவ நூல் பயிற்சியுள்ள ஐரோப்பிய மருத்துவர்கள் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்கின்றனர்கள். ஆங்கில மருத்துவம், நாட்டு மருத்துவம் ஆகிய இரண்டிலும் சிறப்புள்ளவர்களான சிறந்த பண்டிதர்களின் தீர்மானமாவது :

> "அறுவை செய்தல் முதலிய இரண மருத்துவத்தில் ஆங்கிலமுறை வைத்தியம் மிகவும் மேலானது. மற்ற நோய்களின் மருத்துவத்தில் தற்கால சாந்தியாகச் செய்வதிலும் ஆங்கில வைத்தியமே அதிகம் சிறந்தது; ஆனால், நாட்பட்ட நோய்களையும் பெரிய நோய்களான குன்மம், நீரிழிவு, சயம், எருவாய்நோய், பாண்டு, மந்தாக்கினி, மேகம், தாது இழப்பு முதலிய கடின நோய்களையும் அறத் தீர்ப்பதற்கு நாட்டு மருத்துவ முறைகளே மிக மேன்மையானவை. அவற்றுள்ளும் முறைக் கிரமமாகச் செய்யப்பட்ட பற்ப செந்தூரங்களே மிக மேன்மை பெற்றவை." என்பதே.

இந்த அபிப்பிராயமானது மிகவும் சரியானதெனவும் உத்தமமானதெனவும் அதிகம் வாய்மையானதெனவும் சிறந்த மருத்துவர்களான ஒவ்வொருவரும் முழுமன தோடு ஏற்றுக்கொள்வார்கள்.

இக்கூற்று உண்மையாவதை, நவீன கருவிகள் வளர்ச்சியால் ஆலென வளர்ந்து அடர்ந்து நிற்கும் அலோபதி மருத்துவமும் ஏற்கும் வண்ணம் நடைமுறையில் செயல்படுத்தி எண்பிக்கும் வல்லமையும், ஆராய்ச்சி முறையில் சான்றுகளை உருவாக்கும் முயற்சியும் ஓங்கவேண்டும் என்பதே எனது பேரவா.

இந்த உயர்ந்த நோக்கத்துக்கு உறுதுணையாகுமாறு — மருந்து செய்முறைகளை—அரிய நூல் வடிவத்தில் வழங்கிச் சென்ற — ஹக்கீம் பா. மு. அப்துல்லா சாயபு அவர்களின் தொண்டு,

''செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.''

என்னும், குறள் கூறும் பெரியருக்குச் சிறந்த ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.

இந்த நூல்களின் வெளியீடு மேலும் பல நூல்களை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோரை ஊக்கப் படுத்துவதற்குத் துணைசெய்வதாகும் என நம்புகிறேன். அவர்தம் முயற்சி வளர வாழ்த்துகின்றேன்.

சென்னை
20-3-1975

க. அன்பழகன்

# இரண்டாம் பதிப்பின் முன்னுரை

உலக மொழிகளில் மிகப் பழமையானது தமிழ்மொழி; தமிழ் மருத்துவ முறையும் அத்தகைத்தே. இம் மருத்துவ முறையைத் தோற்றுவித்தவர் சித்தர்கள் எனப்படுவர். ஆகையால், இம் மருத்துவத்திற்குச் சித்த மருத்துவமென்று பெயர் அமையலாயிற்று. அச் சான்றோர்கள் தாம் கண்ட உண்மைகளையும் மருத்துவ நுணுக்கங்களையும் மருந்து சரக்குகளின் குணம் முதலானவைகளையும் மாணவர்கள் பலரை ஏற்று ஓதியும் ஓதுவித்தும் பற்பல ஏடுகளில் பதிவு செய்தும் உலகோர்க்கு உதவி செய்து தம் மருத்துவ முறைகளைப் பரப்பி வந்தார்கள்.

காலப்போக்கில், சிறிது சிறிதாய் இயற்கையின்— நிலநடுக்கம், கடற்கோள் போன்ற — சீற்றம் காரணமாகவும், வெளி நாட்டார் படையெடுப்பு, சிதலை, இராமபாணம் போன்றவைகளின் தாக்குதலாலும் பல ஏடுகள் அழிந்தவை போக மிகுந்தவைகளில் சில, மேலைநாட்டு நூல் நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப் பட்டன வெனக் கூறப்படுகின்றது. இன்னும், எஞ்சியுள்ள ஏடுகளாலும், அம் மருத்துவக் கலையைத் தொன்று தொட்டு கையாண்டு வரும் மருத்துவர்கள் வாயிலாகவும் பல நூற்றாண்டுகளாக அதன் அடிப்படை உண்மை, தனித் தன்மை காரணமாகவும் சித்த மருத்துவம் அழியாது நிலைபெற்றிருக்கிறது.

தஞ்சையை ஆண்ட மாரட்டிய மன்னர் சரபோஜி அவர்களின் ஆட்சிக் காலத்தில் சித்த, அயுர்வேத, யூனானி மருத்துவ ஏடுகள் எல்லாம் சரசுவதி மகால் நூல் நிலையத்தில் அரியணை ஏறின மருத்துவப் புலவர்களின் அனுபவங்கள் ஏடுகளில் ஏறி ஏமமுற்றன. மருத்துவம் செய்முறையும், பிணித் தீர்வும் அவர் ஏற்படுத்திய தன்வந்திரி மகாலில் மறுமலர்ச்சியுற்றன. அவர் ஆட்சிக்குப் பின் சித்த மருத்துவம் அரசு ஆதரவை இழந்து பழையபடி குடிமக்களின் ஆதரவு கொண்டு ஆங்காங்கு வழக்கில் இருந்து வரலாயிற்று.

மிக அண்மையில் வெள்ளையராட்சிக் காலத்தில் நீதிக்கட்சிச் சார்பில் முதல் அமைச்சராகப் பணியாற்றிய பானகல் அரசர் 1924இல் இந்திய மருத்துவப் பள்ளியைத் தோற்றுவித்து, பல கிராம மருத்துவ மனைகளையும் அமைத்து இயங்கச் செய்து சித்த

மருத்துவம் முதலான இந்திய மருத்துவ முறைகளின் மறுமலர்ச்சிக்கு வித்தூன்றினர். அக்காலத்தில் மேற்படி கல்வி நிலையத்தில் பயிலும் மாணவர்களுக்கு அமைந்த பாடத்திட்டபடி கற்பிக்கப் போதிய பாடபுத்தகங்களும் முதல் (மூல) நூல்களும் இல்லாக் குறையை ஓர்ந்து பாடபுத்தக ஆக்கக் குழுவை அரசு அமைத்தது. அந்நாள் சித்த மருத்துவத்துறை தலைமை ஆசிரியராய் இருந்த பண்டிட். வைத்திய ரத்னம், மருத்துவ சிரோன்மணி காலஞ்சென்ற திரு. க. ச. முருகேச முதலியார் அவர்கள் குணபாடம் (மூலிகை வகுப்பு) என்னும், நூலைத் தன் சொந்த முயற்சியால் இயற்றி அரசினர்க்கு நன்கொடையாக அளித்து வெளியிடச் செய்தும் குழுவினர் அரசு வழி வெளியிட்ட நஞ்சுநூல், பாலவாகடம் என்னும், நூல்களைப் பார்வையிட்டும் உதவினர். அக் குழுவினர் நூற்றுக்கு மேற்பட்ட மருத்துவச் சுவடிகளையும் அச்சிட்ட நூல்களையும் சேகரித்து ஒரு நூல் நிலையம் ஏற்படுத்தினர்.

மேற்படி பள்ளி, கல்லூரியாக மிளிர்ந்த போது, அந்நாள் கௌரவ இந்திய மருத்துவ இயக்குநராகப் பணியாற்றிய டாக்டர் ம. ரா. குருசுவாமி முதலியார், ஊக்கம் கொடுத்தமை காரணமாக 1950இல் சித்த மருத்துவம், மருத்துவாங்கச்சுருக்கம், நோயில்லா நெறி, குணபாடம் (மூலிகை வகுப்பு), தாது சீவ வகுப்பு என்ற நூல்களும் அப்போது பணிபுரிந்து வந்த கல்லூரி விரிவுரையாளர்களைக் கொண்டு எழுதுவித்து அரசுவழி வெளியிடப் பெற்றன.

அக்கல்லூரி நிகழ்ந்த காலத்திலும் பின்னர்ப் பாளையங்கோட்டைக் கல்லூரி தோன்றிய பின்னுங்கூட பாடநூல்களும் துணைநூல்களும் நிரம்பாமை பெருங்குறையாக நீடித்து வருவதாயிற்று.

ஆகவே, பண்டைய சித்த மருத்துவ ஓலைச்சுவடிகளையும், கையேடுகளையும், ஒரு முறை அச்சாகிப் பின் விற்பனைக்குக் கிட்டாத புத்தகங்களையும் சேகரிக்கவும், மருந்து செய்முறை அட்டவணை தயாரிக்கவும், பாடநூல்கள் வெளியிடவும் ஆகிய பணிகள் செய்ய (pharmacopoea committee 1966 G. O.M.S. 2163 Dt. 23-8-60) ஒரு குழுவும், சித்த மருத்துவக் கல்வி மற்றும் பாடநூற் குழு என்று (G.O.MS. NO. 1060 health Dt. 13-6-56) ஒரு குழுவும் திருவருட்பா, திருப்புகழ் முதலியவைகளில் உள்ள மருத்துவப் பகுதிகளை ஆய்வதற்காக ஒரு குழுவும் என தமிழக அரசு குழுக்களை ஏற்படுத்தியது. அதன் விளைவாக அறுவை மருத்துவம், சூல் மருத்துவம் என்ற நூல்கள் வெளிவந்தன.

மீண்டும் விரைவில் பயன் காணவேண்டிய 1973ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15 ஆம் நாள் தமிழக அரசினர் மேற்கூறிய குழுக்களை ஒருங்கிணைத்துச் சித்த மருத்துவ அறிவியல்

வளர்ச்சிக்குழு என்னும், ஒரு குழுவைத் (G. O. MS. NO. 2571 of 23 - 10 - 73) தோற்றுவித்தார்கள். அக்குழுவின் பணிகளாவன, சித்த மருத்துவ அரிய சுவடிகள், கையேடுகள், அச்சாகிய பழைய நூல்கள் ஆகியவைகளைச் சேகரித்துப் பாதுகாத்தல்; ஓலைச்சுவடிகளை ஆய்ந்து கையெழுத்துப்படி, தட்டெழுத்துப் படி முதலியவைகளை எடுத்து அச்சியற்றி வெளியிடல் ; ஒரு முறை அச்சில் வெளிவந்து விற்பனைக்குக் கிடைக்கப் பெறாத நூல்களை மீண்டும் வெளியிடல்; இதுவரை அச்சிடப் பெறாத நூல்களை வெளியிடல் என்பனவாம். அதன்படி இக்குழுவினர் இதுவரை 400 சுவடிகளையும் 100 கையெழுத்துப் பிரிதிகளையும், 230 அச்சான பழைய நூல்களையும் சேகரித்துள்ளனர்.

இக்குழுவினர் தாம் மேற்கொண்ட பணிகளைச் செயலாற்ற இந்திய மருத்துவத்துறை இயக்குநர் அலுவலகத்தில் ஒரு தனி அலுவலரையும் அவர்க்கு உதவியாளர்களையும் நியமித்துள்ளனர். அவர்கள் நூல்களைப் படியெடுத்தும் திருத்தம் செய்தும் அச்சியற்றத் தக்க வகையில் செய்து வருகின்றனர்.

அருள்மிகு பழநி தண்டாயுதபணி சுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக்கென்று ஒதுக்கப்பட்ட இரண்டு இலட்சம் ரூபாயைக் கொண்டு மேற்படி நூல்களை, நடைமுறைச் சிக்கல்களைத் தவிர்த்து வெகு விரைவில் வெளியிட மேற்படி சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழுவிலுள்ள உறுப்பினர் சிலருடன் அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழுத்தலைவர் உயர்திரு. பு. மனோகரன் அவர்களையும் மேற்படி திருக்கோயில் நிர்வாக அதிகாரியையும் கொண்டு அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக்குழு ஏற்படுத்தப் பட்டது. அக்குழு முடிவெடுத்தபடி முதல் வெளியீட்டு வரிசையில் அனுபோக வைத்திய நவநீதம் பத்துப் பாகங்களும் திறவுகோலும் வெளியிடப்படுகின்றன. மேற்படி அனுபோக வைத்திய நவநீதம் என்னும், உரைநடை நூல்களின் ஆசிரியர் ஹக்கீம். பா. முகம்மது அப்துல்லா சாயபு ஆவார். இவர் சென்னை, ஜார்ஜ் டவுனில் அப்பு மேஸ்திரி தெருவில் 12-ஆம் எண்ணுள்ள வீட்டில் வாழ்ந்தார். இவர் தஞ்சை மன்னர் சரபோஜி அவர்களின் தன்வந்திரி மகாலை அலங்கரித்த மருத்துவர் ஒருவரின் வழித்தோன்றல் ஆவார். இவர் பரம்பரை மருத்துவர். சித்த, யூனானி ஆகிய இரு முறைகளிலும் கைபாகம், செய்பாகம், நோய்த்தீர்வு முதலிய எல்லாக் கலைகளிலும் மிக்கத் தேர்ச்சிபெற்றவர். இவர் தனக்குச் சொந்தமாக மருந்துவமனையும், மருந்துசெய்சாலையும், அச்சகமும் நடத்தி வந்தார்.

இவர் கடவுள் நம்பிக்கை, பிறர்நலம் பேணல், கொடை, பரிவு ஆகிய நற்பண்புகள் நிறைந்தவர். சர். உஸ்மான் சாயபு அவர் களின் நெருங்கிய உறவினராவார்.

இவர் ஐம்பதுக்கும் மேற்பட்ட மருத்துவ நூல்களை உரைநடை யில் இயற்றி வெளியிட்டதுடன், தேரையர் யமகம், தேரையர் கரி சல், அகத்தியர் இலக்க சௌமிய சாகரம் போன்ற முதல் (மூல) நூல்களையும் வெளியிட்டுள்ளார். இவருக்குப்பின் இவரது நூல்களை மறுமுறை பதிப்பித்து வெளியிடுவோரின்மையால் அவை கிட்டுவது அரிதாயிற்று.

ஆகவே, இவரது அனுபோக வைத்திய நவநீதம் பத்துப் பாகங்களையும் அவைகளின் திறவுகோலுடன், முன் பதிப்பிலிருந்த தமிழ் இலக்கங்களை நீக்கி ஆங்கில இலக்கங்களாக மாற்றி, பழைய எடுத்தலளவைக்குச் சரியான மெட்ரிக் எடையை இணைத்துப்பிழை களைத் திருத்தம் செய்து வெளியிடப்படுகிறது. இந்தப் பத்து நூல் களின் பெருமை அவைகளைக் கற்று மருந்துழைச் செல்வார்க்கு மிக நன்கு விளங்கும். அவ்வந்நூல்களின் பழைய முகவுரைகள் வாயிலாக அவற்றின் மேன்மை தெரியவரும்.

மேற்கண்ட அரிய நூல்களின் வெளியீட்டுப் பணிக்குப் பெருந் தொகை தேவைப்படுவதால், இப் பெரும் பணியை விரைவில் செயல்படுத்த உளங்கொண்ட நம் தமிழக அரசின் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் உயர்திரு க. அன்பழகன் எம். ஏ., அவர்கள் [illegible] முட்டின்றி முடிவதற்கு அரசு [illegible] ஐம்பதாயிரம் ரூபாய் வழங்க ஆணை பிறப்பித்து மேலும், அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலை வர் உயர்திரு. பு. மனோகரன் அவர்களைக் கொண்டு முதல் தவணை யாக மேற்படி திருக்கோயில் கருவூல நிதியிலிருந்து இரண்டு இலட் சம் ரூபாயை ஒதுக்கி வழங்கச் செய்ததமையும், சித்த மருத்துவ நூல் கள் விரைவில் வெளியாக வாய்ப்புத் தேடித் தந்தமையும் காலஞ்சென்ற திரு. டாக்டர் ஜி. டி. நாயுடு அவர்களைக் கொண்டு, காலஞ்சென்ற திரு. டி. வி. சாம்பசிவம் பிள்ளையவர்கள் தொகுத்து வைத்திருந்த மருத்துப் பேரகராதியின் முதல் மூன்று பகுதிகளையும் பிற சித்த மருத்துவ இலக்கிய நூல்களையும் அச்சிட்டு வெளியிடச் செய்ததுமட்டுமன்றி அமைச்சர் பெருமகனார் சித்த மருத்துவ மறுமலர்ச்சிக்கு முழுமனதுடன் ஆற்றிவரும் செயற்கரிய ஆக்கச் செயல்களாகக் கூறப்படுந்தன்மையனவாம். இதற்குத் தமிழகம் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமிதிருக்கோயில் அறங்காவலர் குழுத்தலைவர் உயர்திரு.பு.மனோகரன் அவர்கள் தமக்குள்ள பற்பல அறப்பணிகட்கிடையேயும் இக் குழுவின் கூட்டங்களில் பங்கு கொண்டு, நூல் வெளியீட்டுக்கான பற்பல வழிமுறைகளையும் ஆலோசனைகளையும் வழங்கி வெளியீட்டுபணி ஊக்கமும் ஆக்கமும் பெற்றுத் தங்குதடையின்றி நூல்கள் வெளிவர மேற்படி திருக்கோயில் நிதியிலிருந்து மேற்படி அறங்காவலர் குழுவினரைக் கொண்டு முதல் தவணையாக இரண்டு இலட்ச ரூபாய் வழங்கச் செய்ததோடு, சித்த மருத்துவக் கல்லூரி ஒன்று பழநியில் தோற்றுவிக்க உடன்பட்டமைக்கும், சென்னையில் மத்திய சித்தமருத்துவ நூலகமொன்றை நிறுவக் கட்டடம் கட்டித்தர முயன்று வருகின்றமைக்கும், இக்குழுவினரும், இதில் பணியாற்றி வருபவர்களும் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர் ஆவார்கள்

மேற்படி அறங்காவலர் குழுத் தலைவர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து ஒத்துழைத்துவரும் மேற்படி திருக்கோயில் நிர்வாக அதிகாரியாகிய உயர்திரு. வி. எஸ். கோதண்டபாணி பி. எஸ்ஸி., அவர்களுக்கும் இப்பணிகள் நிறைவுபெற ஆக்கிய தீர்மானங்களுக்கு ஒப்புதல் அளித்துவரும் இந்து சமய அறநிலையப் பாதுகாப்புக்குழுத் தலைவர் உயர்திரு. நரசிம்மன் ஐ. ஏ. எஸ்., அவர்களுக்கும் இக் குழுவினரின் உளங்கனிந்த நன்றி உரித்தாகும்.

இக்குழுவினர் பணியாற்றுவதற்கு ஏற்ற இடவசதியும் பிறவசதிகளும் தம் அலுவலகத்தின் ஒருபகுதியில் கொடுத்து, பணி இடையீடின்றி நடைபெற வேண்டிய ஆலோசனைகளும் ஊக்கமும் அளித்துவரும் இந்திய மருத்துவத்துறை இயக்குநர் உயர்திரு. டாக்டர். பு. மு. வேணுகோபால் எச். பி. ஐ. எம்., அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அடக்க விலையில், மிக விரைவில் அச்சடிக்கும் தாள்கள் சேஷசாயி பேப்பர் மில்சாரிடமிருந்து கிடைக்கும்படி செய்த முத்தமிழ்க் காவலர் உயர்திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களுக்கு இக்குழு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளது..

மற்றும், இந்நூல்களை அச்சியற்ற ஏற்ற வண்ணம் மூலப்படிகளைத் திருத்தம் செய்வித்தும், அச்சுப்படிகளைத் திருத்தம் செய்தும் இக்குழுவுக்குத் துணை புரிந்துவரும் தனி அலுவலர் திரு. டாக்டர் வி. விசுவநாதன் எல். ஐ. எம்., அவர்களையும் அவருக்குத் துணைபுரிந்துவரும் புலவர்கள் வை. மு. முத்துக்குமாரசாமி, மு. சௌரிராசன், வி. செ. விநாயகம், வே. வாசுதேவன் ஆகியவர்களையும் இக்குழு மனமுவந்து பாராட்டுகிறது.

மேற்கண்ட பணிக்குத் தேவையான நூல்களைக் கொடுத்து தவிய சித்த மருத்துவர்கள் திரு. ப. சிற்சபை, திரு.கே. சீனிவாசன் திரு. மு. சௌரிராசன் ஆகியோர்க்கும், அந்நூல்களைத் திரட்டித்தர துணைபுரிந்த சித்த மருவத்துவர்கள் திரு. டி. வி. கல்யாணசுந்தரம், திரு. பூசலிங்கம் ஆகியோர்க்கும் இக்குழுவின் சார்பில் நன்றி கூறப்படுகிறது.

அச்சுக்கலையில் மிகவும் பட்டறிவு வாய்ந்த திரு. புலவர் நா. மு. மாணிக்கம் அவர்கள் அச்சுக் கோப்புகளின் திருத்தங்களைச் செய்து உதவியமையை இக்குழு பாராட்டுகிறது.

ஒவ்வொரு நூலையும் குறுகிய காலத்தில் அழகிய முறையில் அச்சியற்றிய அந்தந்த வச்சகத்தாரின் சேவைக்கு இக்குழு மன முவந்து பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

சான்றோர் மிகுந்த இவ்வுலகு இந்நூல்களில் காணும் குற்றங் கண்டு முனியாது நனியாதரவு தந்து எம்மை ஊக்குவிக்குமென்ற துணிபுடன் இந்நூல்களை வெளியிடுகின்றனம்.

டாக்டர் இரா. தியாகராசன் எல். ஐ. எம்.,
தலைவர்

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவநூல் வெளியீட்டுக்குழு.

இந்திய மருத்துவத்துறை,
இயக்குநர் அலுவலகம்,
சென்னை-600029.

# அனுபோக வைத்திய நவநீதம்

## ஒன்பதாம் பாகம்

## முதற்பதிப்பின் முகவுரை

நண்பர்களே!

இந்த அனுபோக வைத்திய நவநீதத்தின் அருமை பெருமைகளும், இதிலெழுதப்பட்டுவரும் முறைகளின் உயர்வும் இதற்கு முன் வெளிப்பட்டுள்ள எட்டுப் பாகங்களையும் ஆதியோடந்தமாகப் படித்துக் கேட்டு அவற்றிலுள்ள முறைகளைச் செய்து அனுபவித்தவர்களுக்கு நன்கு விளங்கும். நம் மருத்துவ ஆதரவாளர்கள் கடினமான பலநோய்களுக்கான கைவல்யமான பலமுறைகளையும் எழுதும்படி நம்மைப் பலவாறு வற்புறுத்தி வந்தார்கள். அதனால், நமக்கு இச்சமயம் உடல் நலமின்மை முதலிய பல அசந்தர்ப்பங்களிருந்தும் அவற்றைக் கவனியாமல் நமது நண்பர்களின் விருப்பப்படி சில நாள்களாக இந்த ஒன்பதாம் பாகத்தை அச்சிடத் தொடங்கி இப்போது மிகுந்த முயற்சியுடன் முடித்து வெளிப்படுத்தி இருக்கின்றோம். இது மற்ற பாகங்களைக் காட்டிலும் மிகவும் சிறப்புற்றதென்பதை இதனைப் பார்வையிடும் ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ளுவார்கள்.

இதில், மிகவும் உன்னதமான கழிச்சல் முறைகளாகிய இராஜியானுச் சூரணம், இராஜியானு பேதி, சுகபேதிச் சூரணம், இராசபேதிச் சூரணம், மூலிகைபேதி, சுகபேதிக் குடிநீர், சுகபேதிக் குளிகை, சுக விரேசனத் தைலம், இலகு விரேசனங்கள், அயாரிச் மாத்திரை, கோரோசனை அயாரிச் மாத்திரை, முஞ்சிஷ்பேதி மாத்திரை, சர்வசுர பேதி, சீதசுர பேதி, ஆனந்த கோடாசுழி, அகத்தியர் கோடாசுழி, சுந்தர கோடாசுழி, திரியோதச கோடாசுழி, மகா கோடாசுழி, விநோத பேதி மாத்திரை, சூலைபேதி மாத்திரை, பால விரேசனக் குளிகை, தசவாயு பேதி மாத்திரை, இலகுபால விரேசனக்

குளிகை, இராச விரேசனக் குடிநீர், விரேசன நெய்கள், மலசலக் கட்டுநெய், சிவதை நெய், கருமேக பேதி, பேதிப் பச்சை எண்ணெய், நாக்குப்பூச்சி எண்ணெய், கிருமி எண்ணெய், கிருமி உசிதம், மணி பேதி, பால்பேதி எண்ணெய், மேகபேதி எண்ணெய், விநோத பேதி, குன்மபேதி, சூட்சுமபேதி, வாசனை பேதிகள், புட்ப பேதி, சூட்சும வாசனைபேதித் தைலம், இலகுவாசனை பேதித் தைலம், முகர்பேதி ஆகியவைகளும்;

குளிர் சுரம், நடுக்கு சுரம், முறைச்சுரம், மாறல் சுரம், பித்தசுரம், விடாச்சுரம், என்பு சுரம், சய சுரம், எலும்புருக்கி சுரம், வாத சுரம், கப சுரம், சுரக் கட்டிகள் முதலிய அறுபத்துநான்கு வகை சுரங்களுக்காம் பூபதி மாத்திரை, நந்தீசர் பூபதி, எமதண்டக் குளிகை, இராமபாணக் குளிகை, குளிர்ச்சுரக்குளிகை, சந்திரோதயக் குளிகை, வச்சிரகண்டி மாத்திரை, மேகனுதிக் குளிகை, சூடாமணி மாத்திரை, கோரோசனை மாத்திரை, இலிங்க மாத்திரை, அபின் மாத்திரை, சுரசங்கார மாத்திரை, சூட்சும பாலசஞ்சீவி மாத்திரை, சீதசுர உசிதம், முறைச்சுர உசிதம் ஆகியவைகளும்;

மேகநோய், பிரமியநோய், எலும்புருக்கி, நீரெரிச்சல், நீர்க்கட்டு, என்புச்சூடு, வெட்டைச்சூடு, உட்காய்ச்சல், மேக ஊறல், மேகத் தடிப்பு ஆகியவைகளுக்காம் சல பேதிகள், பால் தெளிநீர் (பிரயோகம்), மேகக் குடிநீர், மேகவெள்ளை உசிதம், சீன பற்பம், பால் இளகம், பிரமேக உசிதங்கள், பிரமிய உசிதங்கள், வெள்ளைச் சூரணம், இரத்தப்பிரமியக் குடிநீர், பிரமிய சாரணை உசிதம், பெண் பிரமிய உசிதம், பெண்மேக உசிதம், வீரியபந்தப் பிரயோகம், கல்லடைப்புச் சூரணம், நீரெரிவு உசிதங்கள், பிரமிய நிவாரண நெய்கள், பிரமேக வல்லாதகி நெய்கள், செம்பரத்தம்பூ சர்பத்து, பிரமிய நிவாரண நெய், சீரகநெய், நெய்தல் நெய், வல்லாதகி நெய்கள், மகாமேக நெய், அமுத இளகம், ரேவல்சீனி எண்ணெய், பூவந்திப் பட்டை எண்ணெய், மேகாதி எண்ணெய், சந்தன எண்ணெய்கள், கிரிச்சர ராஜன் குளிகை, வித்தாதிச் சூரணம், பட்டைச் சூரணம், வெட்டை உசிதம், வெள்ளைத் தைலம், பட்டைமது உசிதம், திலத உசிதம், ஆவாரையாதிச் சூரணம், வல்லாதகி உருண்டை, மகா மேக வல்லாதகி, புட்ப இளகம், குங்கிலிய நவநீதம், திந்திருணி உசிதம், மகாவிந்தாதிக் குளிகை, நீரிழிவு உசிதம், விழுது உசிதம், சத்துமா உசிதம், அத்தி உசிதம், சாமை உசிதம், மேனி உசிதம், தூதுவளை உசிதம், காந்த உசிதம், கிராந்தி உசிதம், மதுமேகச் சூரணம், மதுமேகப்பட்டைச் சூரணம், மேகசஞ்சீவி நெய், பூசணிக் காய் நெய், சலவல்லாதகி, கதலி நெய், அமுதாதி வல்லாதி, இளநீர் உசிதம், நெல்லி உசிதம், அத்திநக மாத்திரை, ஆகியவைகளும்;

கொடிப் பவுத்திரம், கிளைப் பவுத்திரம், சீழ்ப் பவுத்திரம், ஓடு பவுத்திரம் முதலிய பலவகைப் பவுத்திரங்களின் மருந்துகளாகிய ஈயல் உசிதம், பாலை உசிதம், அர்க்கன் உசிதம், பவுத்திரத் தைலம், பவுத்திர மேற்பூச்சுத் தைலம், பவுத்திரச் சூரணம், மகாபவுத்திரத் தைலம் முதலியவைகளும்;

மூலக் கிராணி, பாலக் கிராணி, சீழ்க் கிராணி, இரத்தக் கிராணி, வாயுக் கிராணி, ஓட்டுக் கிராணி, சங்கர கிராணி, சோகைக் கிராணி, சூசிகா கிராணி, முதலிய கிராணி நோய் மருந்துகளாகிய கிராணி உசிதங்கள், கிரகணி அண்டச் சூரணம், கிராணி சூட்சம சூரணம், கிரகணிதிலதாதிச் சூரணம், வாயுக்கிராணிக் குடிநீர், கிரகணி லவங்க உசிதம், கபாடச் சிந்தாமணி, சூசிகா கிராணி இளகம், சூசிகாகழற்சி உருண்டை, இரத்தக் கிராணி நெய், புரிபாரை நெய், கிராணி பல கறை பற்பம், கிராணி கெந்தி பக்குவம், பேதிகட்டக் குடிநீர்கள், ஓம உருண்டை, சலக்கழிச்சல் உசிதங்கள், விடபேதி இலிங்க மெழுகு, விடபேதி உசிதம், சோம்புத்தைல உசிதம், விடபேதிக் களங்கு முதலியவைகளும்;

அக்கினிமந்தம், வயிற்றிரைச்சல், வயிற்றுப் பொருமல், வயிற்றுக் கழிச்சல், புளித்த ஏப்பம்முதலிய உட்டிணவாயு சம்பந்தநோய்களின் மருந்துகளாகிய உட்டிணவாயு உருண்டை, உட்டிணவாயு ஓமச் சூரணம், உட்டிணவாயு பொடுதலை இளகம், உட்டிணவாயுக் சீரகச் சூரணம், உட்டிணவாயு மேனிச்சூரணம், உட்டிணவாயுச் கண்டுச் சூரணம், உட்டிணவாயு அடைக் குடிநீர், உட்டிணவாயு உசிதம், உட்டிணபேதிக் கருக்குச் சூரணம், உட்டிணவாயு இளகம் முதலியவைகளும்;

அக்கிரம சூதகம், சூதகத்திற் காணும் வயிற்றுவலி, சூதக பந்தம், சூதக இடுப்புவலி, முதலிய சூதகவாயு மருந்துகளாகிய சூதகவாயு எள்ளு இளகம், சூதகவாயு பட்டை இளகம், சூதகவாயு கத்திரி இளகம், சூதகவாயு நிம்பை இளகம், சூதகச் சன்னித் தைலம் சூதகவாயு உள்ளிப் பாயசம், சூதகவாயுக் குடிநீர் முதலியவை களும்;

மலசிறுநீர்க்கட்டு மருந்துகளாகிய மலசிறுநீர்க்கட்டு உசிதங் கள், நீர்க்கட்டு உசிதம் ஆகிய முறைகளும் வகை விவரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

இவைகள் யாவும் நமது பரம்பரையில் பத்திரமாகவும், இரகசிய மாகவும் வைக்கப்பட்டிருந்த பல்லாயிரம் முறைகளிலிருந்து தேர்ந் தெடுக்கப்பட்டவைகள்; இவை யாவும் குணத்தில் சிறப்பானவை களும், செய்வதற்கு இலகுவானவைகளுமாம். மருத்துவர்களின் சாமர்த்தியத்தையும் புத்தி நுட்பத்தையும் வெளிப்படுத்தக் கூடியவை கழிச்சல் முறைகளேயாம். அத்தகைய கழிச்சல் முறைகளும், மற்ற முறைகளும் இப்பாகத்திற் சொல்லப்பட்டிருப்பதால் இது முன் கூறிய படி மற்ற பாகங்களிலும் சிறப்புடையதென்பது நாம் எடுத்துச் சொல்லாமலே விளங்கும். இப் புத்தகம் முன் பாகங்களை வாங்கினோர் வாங்காதவர் ஆகிய எல்லோருக்கும் மிகவும் அவசியமுள்ளது; ஆதலின், நம் நாட்டு மருத்துவத்தில் வேட்கையுள்ளவர்கள் இதற்கு முன் நம்மால் வெளிப்படுத்தப் பெற்ற இதன் மற்ற பாகங் களையும், இன்னுமுள்ள மருத்துவ நூல்களையும் வாங்கி நம்மை மகிழ் வித்துக் ஆதரவு தந்து வந்தது போலவே இதனையும் இதற்கடுத்த பத்தாம் பாகம், திறவுகோல் ஆகியவைகளையும் வாங்கி நமக்கு ஊக்கத்தை உண்டாக்கி நம்மை ஆதரிக்கும்படி கேட்டுக் கொள் கிறோம். இதன் பத்தாம் பாகமும் அச்சாகி வருகிறது; சில நாள் களில் வெளிவரும். நம் நண்பர்கள், இந்த ஒன்பதாம் பாகத்தை வாங்கி ஆதியோடந்தமாகக் கவனித்துப் படித்து இதிலுள்ள முறைகளைச் செய்து தமக்கும் தம்முடைய உறவினர் நண்பர்கள் முதலியவர்களுக்கும் நேரிடும் நோய்களை நலப்படுத்தி நோயற்ற வாழ்வை அனுபவித்து நீடுழி வாழ்வார்களாக.

ஆமீன்.

ஹக்கீம் ப. மு. அப்துல்லா,

12, அப்புமேஸ்திரி தெரு, ஜார்ஜ்டவுன்,

சென்னை.



## பொருளடக்கம்

பக்கம்

### அ


| | | |
|---|---|---|
| அகத்தியர் கோடாசூரி | ... | 19 |
| அண்ட பற்பம் | ... | 75 |
| அத்தி உசிதம் | ... | 96 |
| அத்திநக மாத்திரை | ... | 104 |
| அபின் மாத்திரை | ... | 59 |
| அமுத இளகம் | ... | 83 |
| அமுதாதி வல்லாதி | ... | 102 |
| அயாரிச் மாத்திரை | ... | 9 |
| அரையாப்பு எண்ணெய் | ... | 42 |
| அர்க்கன் உசிதம் | ... | 105 |


### ஆ


| | | |
|---|---|---|
| ஆவாரையாதிச் சூரணம் | ... | 90 |
| ஆனந்த கோடாசூரி மாத்திரை | ... | 18 |


### இ


| | | |
|---|---|---|
| இரத்த கிராணி நெய் | ... | 115 |
| இரத்தப்பிரமிய உசிதம் | ... | 69-70 |
| இரத்தப்பிரமியக் குடிநீர் | ... | 71 |
| இராஜ விரேசனக் குடிநீர் | ... | 34 |
| இராஜியானுச் சூரணம் | ... | 3 |
| இராஜியானு பேதி | ... | 4 |
| இராசபேதிச் சூரணம் | ... | 7 |
| இர்ாமபாணக் குடிநீர் | ... | 78 |
| இராமபாணக் குளிகை | ... | 53 |
| இலகு அயாரிச் மாத்திரை | ... | 28 |

| | | |
|---|---|---|
| இலகுபால விரேசனக் குளிகை | ... | 33 |
| இலகுவாசனை பேதித்தைலம் | ... | 48 |
| இலகுவிரேசன இளகம் | ... | 8 |
| இலிங்க மாத்திரை | ... | 59 |
| இலிங்காதி சுகக்கழிச்சல் குளிகை | ... | 31 |
| இளநீர் உசிதம் | ... | 103 |
| இளநீர்ப் பிரயோகம் | ... | 76 |

ஈ

| | | |
|---|---|---|
| ஈயல் உசிதம் | ... | 105 |

உ

| | | |
|---|---|---|
| உஷ்ணபேதிக் கருக்குச் சூரணம் | ... | 124 |
| உஷ்ணவாயு அடை குடிநீர் | ... | 123 |
| உஷ்ணவாயு இளகம் | ... | 125 |
| உஷ்ணவாயு உசிதம் | ... | 123 |
| உஷ்ணவாயு உருண்டை | ... | 120 |
| உஷ்ணவாயு ஓமச்சூரணம் | ... | 121 |
| உஷ்ணவாயுக் கண்டுச்சூரணம் | ... | 123 |
| உஷ்ணவாயு சீரகச்சூரணம் | ... | 122 |
| உஷ்ணவாயு பொடுதலை இளகம் | ... | 121 |
| உஷ்ணவாயு மருத்துவம் | ... | 183 |
| உஷ்ணவாயு மேனிச்சூரணம் | ... | 122 |

எ

| | | |
|---|---|---|
| எமதண்டக் குளிகை | ... | 53 |

ஓ

| | | |
|---|---|---|
| ஓம உருண்டை | ... | 118 |

க

| | | |
|---|---|---|
| கழிச்சல் நெய் | ... | 85 |
| கதலி நெய் | ... | 101 |
| கபாடச் சிந்தாமணி | ... | 112 |
| கருமேக பேதி | ... | 88 |
| கல்லடைப்புத் தூள் | ... | 76 |

கா

காக்கரட்டான் சூரணம் ... 6
காந்த உசிதம் ... 97

கி

கிரகணி அண்டத் தூள் ... 108
கிரகணி திலதாதித் தூள் ... 110
கிரகணி லவங்க உசிதம் ... 111
கிராணிகெந்தி பக்குவம் ... 116
கிராணிக்கு உசிதம் ... 108
கிராணி சூட்சும சூரணம் ... 110
கிராணி பலகறைப் பற்பம் ... 116
கிராந்தி உசிதம் ... 97
கிரிச்சரராசன் குளிகை ... 87
கிருமி உசிதம் ... 41

கு

குங்கிலிய நவநீதம் ... 93
குளிர் சுரக்குளிகை ... 54
குன்மபேதி மெழுகு ... 46

கோ

கோடாசுழி மாத்திரை ... 17
கோரோசனை அயாரீச் மாத்திரை ... 10
கோரோசனை மாத்திரை ... 58

ச

சத்துமா உசிதம் ... 95
சந்தன எண்ணெய் ... 86
சந்திரோதயக் குளிகை ... 55
சகல காய்ச்சல் பேதி மாத்திரை ... 14
சலக்கழிச்சல் உசிதம் ... 118
சலபேதி ... 62-64
சலவல்லாதகி ... 100

சா

சாமை உசிதம் ... 96
சாரணை உசிதம் ... 71

சி


| | | |
|---|---|---|
| சிவதைத் தூள் | ... | 6 |
| சிவதை நெய் | ... | 37 |


சீ


| | | |
|---|---|---|
| சீதசுர உசிதம் | ... | 61 |
| சீதசுர பேதிச் சூரணம் | ... | 15 |
| சீரகக் கிருதம் | ... | 80 |
| சீனபற்பம் | ... | 65 |


சு


| | | |
|---|---|---|
| சுகபேதிக் குடிநீர் | ... | 8 |
| சுகபேதிக் குளிகை | ... | 15-16 |
| சுகபேதிச் சூரணம் | ... | 6 |
| சுகவிரேசனக் குளிகை | ... | 24 |
| சுகவிரேசனத் தைலம் | ... | 49 |
| சுந்தர கோடாசுழி | ... | 20 |
| சுரசங்கார மாத்திரை | ... | 60 |
| சுர நோய் மருத்துவம் | ... | 50 |


சூ


| | | |
|---|---|---|
| சூசிகாகழற்சி உருண்டை | ... | 114 |
| சூசிகாகிராணி இளகம் | ... | 113 |
| சூட்சும பாலசஞ்சீவி மாத்திரை | ... | 61 |
| சூட்சுமபேதி மெழுகு | ... | 46 |
| சூட்சுமவாசனை பேதி தைலம் | ... | 48 |
| சூடாமணி மாத்திரை | ... | 57 |
| சூதகசன்னித் தைலம் | ... | 129 |
| சூதகவாயு உள்ளிப் பாயசம் | ... | 129 |
| சூதகவாயு எள்ளு இளகம் | ... | 126 |
| சூதகவாயு கத்திரி இளகம் | ... | 138 |
| சூதகவாயுக் குடிநீர் | ... | 130 |
| சூதகவாயு மருத்துவம் | ... | 126 |
| சூதகவாயு நிம்பை இளகம் | ... | 128 |

| | | |
|---|---|---|
| சூதகவாயு பட்டை இளகம் | ... | 127 |
| சூரத்து நிலாவாரைக் குடிநீர் | ... | 10 |
| சூலைபேதி மாத்திரை | ... | 30 |
| **செ** | | |
| செம்பரத்தம்பூ சர்பத்து | ... | 79 |
| **சோ** | | |
| சோம்புத்தைல உசிதம் | ... | 119 |
| **த** | | |
| தசவாயு பேதி மாத்திரை | ... | 33 |
| **தா** | | |
| தாமரைக்காய்ப் பிரயோகம் | ... | 72 |
| **தி** | | |
| திந்திருணி உசிதம் | ... | 94 |
| திரியோதச கோடாசுழி | ... | 20 |
| திலத உசிதம் | ... | 90 |
| **தூ** | | |
| தூதுவளை உசிதம் | ... | 97 |
| **தொ** | | |
| தொடர்கழிச்சல் மருத்துவம் (கிராணி) | | 108 |
| **ந** | | |
| நந்தீசர் பூபதி | ... | 52 |
| **நா** | | |
| நாக்குப்பூச்சி எண்ணெய் | ... | 40 |
| **நீ** | | |
| நீரிழிவு உசிதம் | ... | 95 |
| நீரெரிவு உசிதங்கள் | ... | 77-79 |
| நீர்க்கட்டு உசிதம் | ... | 201 |
| **நெ** | | |
| நெய்தல் நெய் | ... | 81 |
| நெல்லிமுள்ளிக் குடிநீர் | ... | 11 |

பக்கம்


நெல்லி உசிதம் ... 104

நேர்வாள தூய்மை ... 12

ப

பட்டைச் சூரணம் ... 88

பட்டைமது உசிதம் ... 90

பயருதி உசிதம் ... 74

பருத்திப் பிரயோகம் ... 76

பவுத்திரத் தூள் ... 106

பவுத்திர தைலம் ... 159

பவுத்திர நோய் மருத்துவம் ... 157

பவுத்திர மேற்பூச்சுத் தைலம் ... 106

பா

பாலவிரேசனக் குளிகை ... 32

பால் இளகம் ... 66

பால்தெளிநீர் (பிரயோகம்) ... 64

பால்பேதி எண்ணெய் ... 48

பாஊ உசிதம் ... 105

பி

பித்தவாயு மருத்துவம் ... 120

பிரமிய உசிதம் ... 67

பிரமிய நிவாரண நெய் ... 79

பிரமேக உசிதம் ... 67

பு

புட்ப பேதி ... 47

புட்ப இளகம் ... 92

புளியாரை நெய் ... 115

பூ

பூசணிக்காய் நெய் ... 99

பூவந்திப்பட்டை எண்ணெய் ... 84

பெ

பெண் பிரமிய உசிதம் ... 71

பெண் மேக உசிதம் ... 72

பே

| | | |
|---|---|---|
| பேதிகட்டக் குடிநீர் | ... | 117 |
| பேதிக்கருப்பு மெழுகு | ... | 45 |
| பேதிபச்சை எ்ண்ணெய் | ... | 39 |
| பேதி முறைகள் | ... | 2 |

ம

| | | |
|---|---|---|
| மகா கோடாசுழி | ... | 21 |
| மகா பவுத்திர தைலம் | ... | 107 |
| மகா பூபதி மாத்திரை | ... | 50 |
| மகா மேக நெய் | ... | 83 |
| மகா மேக வல்லா தகி | ... | 92 |
| மகா விந்தாதிக் குளிகை | ... | 94 |
| மணி பேதி | ... | 41 |
| மதுமேகச் சூரணம் | ... | 97 |
| மதுமேகப் பட்டைச் சூரணம் | ... | 98 |
| மலசலக்கட்டு உசிதம் | ... | 130-132 |
| மலசலக்கட்டு | ... | 130 |
| மலசலக்கட்டு நெய் | ... | 36 |

மி

| | | |
|---|---|---|
| மிளகு உசிதம் | ... | 73 |

மு

| | | |
|---|---|---|
| முகர் பேதி | ... | 50 |
| முஞ்சிஷ்பேதி மாத்திரை | ... | 13 |
| முறைசுர உசிதம் | ... | 61 |

மூ

| | | |
|---|---|---|
| மூல நோய் | ... | 104 |
| மூலிகை பேதி | ... | 7 |

மே

| | | |
|---|---|---|
| மேகக் குடிநீர் | ... | 65 |
| மேகசஞ்சீவி நெய் | ... | 99 |
| மேகபேதி எண்ணெய் | ... | 44 |
| மேக நோய் மருத்துவம் | ... | 62 |

பக்கம்

| | | |
|---|---|---|
| மேகவெள்ளை உசிதம் | ... | 65 |
| மேகனுதிக் குளிகை | ... | 57 |
| மேகாதி உசிதம் | ... | 75 |
| மேகாதி எண்ணெய் | ... | 85 |
| மேனி உசிதம் | ... | 96 |
| **ரே** | | |
| ரேவல்சீனி எண்ணெய் | ... | 84 |
| **வ** | | |
| வச்சிரகண்டி மாத்திரை | ... | 56 |
| வட்டத்துத்திப் பிரயோகம் | ... | 71 |
| வல்லாதகி உருண்டை | ... | 92 |
| வல்லாதகி நெய் | ... | 81-82 |
| **வா** | | |
| வாசனைபேதி | ... | 46 |
| வாசனைபேதி தைலம் | ... | 48 |
| வாயுக்கிராணி குடிநீர் | ... | 111 |
| **வி** | | |
| விடபேதி இலிங்கமெழுகு | ... | 118 |
| விடபேதி உசிதம் | ... | 119 |
| விடபேதிக் களங்கு | ... | 19 |
| வித்தாதிச் சூரணம் | ... | 87 |
| விநோத பேதி | ... | 44 |
| விநோதபேதி மாத்திரை | ... | 29 |
| விழுது உசிதம் | ... | 95 |
| **வீ** | | |
| வீரியபந்தப் பிரயோகம் | ... | 78 |
| **வெ** | | |
| வெட்டை உசிதம் | ... | 89 |
| வெள்ளைச் சூரணம் | ... | 68 |
| வெள்ளைத் தைலம் | ... | 89 |
| **வே** | | |
| வேளை உசிதம் | ... | 70 |

**அ. வை. ந. ஒன்பதாம் பாகம் முற்றிற்று**

# அனுபோக வைத்திய நவநீதம்

## ஒன்பதாம் பாகம்.

### கடவுள் வணக்கம்

மாவா, ரனுபோக வைத்ய நவநீதம்
பாவாரு மச்சிற் பதித்திடவே—நாவாரும்
ஆதியே பல்கோடி யண்டமனைத் தும்படைத்தாள்
சோதியே செய்வாய் துணை.

### குருவணக்கம்

திருவும் புகழுந் திகழுந் திகழறிவுஞ் சேரெங்
குருவின் பதம் பணிந்து கொண்டு—வருநலனு
போகமாம் வாகடத்திற் போற்று நவ நீதமுயர்
வாகவியற் றத்தொடங்கு வாம்.

### நூல்.

இயற்கையினது அருளினாலும் பெரியோர்களின் வாழ்த்தினாலும், பல மருத்துவ அறிஞர்களின் உதவியினாலும் இதற்கு முந்தின ஏழு பாகங்களில் உலோக வகைகள், பாடாண வகைகள், ஆகியவற்றின் பற்பங்கள், செந்தூரங்கள் முதலிய அநேக அற்புத முறைகளை எழுதி எட்டாம் பாகத்தில் அம் முறைகளுக்குத் துணைமருந்துகளும், பல நோய்களைத் தீர்ப்பதற்கும் பயன்படும் கடைச்சரக்கு சம்பந்தமான பல உயர்ந்த முறைகளை எழுதி வெளியிட்டோம், அவைகளெல்லாம் பல தலைமுறைகளாக அனுபவ சித்தி பெற்றவைகளாதலின் அவற்றை நமது நண்பர்களெல்லோரும் நன்கு மதித்துக் கொண்டாடி-

வருவதோடு மேலும் பல நோய்களுக்காகும் முறைகளை எழுதி ஒன்பதாம் பாகமாக வெளிப்படுத்தும்படி வற்புறுத்தி வந்தார்கள். ஆதலின் முன்னிலும் அதிக உற்சாக முண்டாகப் பல நோய்களுக்கு உபயோகப்படும் பல அற்புத முறைகளையும் வேறு சில உசித முறைகளையும் இதில் எழுதத் தொடங்குகிறேன் இம் முறைகளெல்லாம் உலகத்திற்குப் பெரும் பயன் தருமென்பதில் சந்தேகமில்லை. இதனுண்மை ஒவ்வொருவரும் பழக்கத்தில் தாமே தெரிந்து கொள்ளக் கூடும்.

## கழிச்சல் முறைகள்.

பெரும்பான்மையான நோய்களில் நோய்க்குக் காரணமாகிய தீய நீர்களை நீக்கிப் பிறகு மருத்துவம்செய்வது எல்லா வைத்தியர்களின் தீர்மானம். இவ்விதம் தீயநீர்களைப் போக்குவதற்காகக் கழிச்சல் முறைகள், கக்கல் முறைகள், வேர்வை முறைகள், நீர் கழிச்சல் முறைகள் முதலியன அவசியமானவைகள். இம்முறைகளெல்லாம் நமது தாருட்யவிருத்தி போதினி இரண்டாம் பாகத்தில் வகை விபரமாகவும் சுருக்கமாகவும் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்தக் கழிச்சல் முறைகளில் கவனிக்க வேண்டிய விவரங்களாவன: இன்னாருக்கு கழிச்சல் மருந்து ஆகும் ஆகாதெனல், இன்னார் உடனே கழிச்சலுக்கு வாங்கவேண்டுமென்பது, கழிச்சலுக்கு வாங்கி உண்டாகும் இயல்பு மாற்றங்களின் குறிகள், கழிச்சல் மருந்தின் விவரம், கழிச்சல் மருந்து வாங்குவதற்கு முன்னும் பின்னும் கவனிக்க வேண்டிய கருத்துகள். கழிச்சல் மருந்து சாப்பிடும் விதம், கழிச்சலுக்குச்சாப்பிடுங்காலம், இளமைமிகு உடலினர்க்கும் மிகுகழிச்சலுக்காக கழிச்சலுக்குச் சாப்பிடுகிறவர்களுக்கும் மருந்து கொடுக்கும் வகை முதலியவைகளாம். கழிச்சல் முறைகளை உபயோகப் படுத்துவோர் இவ் விஷயங்களை எல்லாம் நன்ருக அறிந்திருக்கவேண்டியது அவசியமாகும். இவ் விஷயங்களும், நமது தாருட்யவிருத்தி போதினி இரண்டாம் பாகத்திலேயே விவரமாகச் சொல்லப் பட்டிருப்பதால் இவற்றையறிய விரும்புவோர் அப் புத்தகத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்ளவேண்டியது. அடிக்கடி சாதாரணமானவர்களும் உபயோகிக்க விரும்புவனவும் இக் கழிச்சல் முறைகளே, மருத்துவர்களின் சாமர்த்தியத்தைத் தெரியப்படுத்துவனவும், கழிச்சல் முறைகளே, ஆகையால், நம்முன்னோர்களுக்கும் நமக்கும் கைம்முறையிலான சில முறைகளைக் கீழ் எழுதுவோம். இம் முறைகளில் சில பல நமது நண்பர்களுள் பலருக்கும் தெரிந்திருக்கவும் கூடும். சிலருக்குத் தெரியாமலிருக்கவும்கூடும். ஆகையால் அத்தகையினருக்கும் பயன் படும்படி எல்லா முறைகளையும் இங்கு எழுதிவருகின்ருேம். இன்னும் இதில் யூனனி முறைகள், ஆங்கில முறைகள், இளைஞர்க்குரிய கழிச்சல் முறைகள், நற்கழிச்சல் முறைகள் முதலிய அநேக

அபூர்வ முறைகளும் எழுதப்பட்டிருக்கின்றன. இவற்றின் அருமைகளெல்லாம் அனுபவசாலிகளான அறிவாளிகளுக்கு நன்கு புலப்படும்.

### 1209. இரஜியானுச் சூரணம்.

சூரத்து நிலாவாரை 13 வராகன் எடை (45½ கிராம்), (இதிலுள்ள குச்சி, காம்பு, மடித்த இலை ஆகியவைகளை நீக்கித் தூய்மை செய்து நிறுத்துக்கொள்ள வேண்டும். இப்படிச் செய்யாவிட்டால் சில உடலினர்க்கு வயிற்று வலியுண்டாக ஏதுவாகும்) மஞ்சட்கடுக்காய்த் தோல் 12 வராகன் எடை (42 கிராம்), தான்றிக்காய்த் தோல் 11 வராகன் எடை (38½ கிராம்), சோம்பு 9 வராகன் எடை (31¼ கிராம்), மேற்றோல் சுறண்டின அதிமதுரம் 6 வராகன் எடை (21 கிராம்), காகு விதை 1½ வராகன் எடை (5¼ கிராம்), காசினி விதை 1½ வராகன் எடை (5¼ கிராம்), காம்பு உள்ளேயிருக்கிற கறுப்பு முதலியவற்றை நீக்கினரோசாப் பூவிதழ் 1 வராகன் எடை (3½ கிராம்), நற்சீரகம் 1½ வராகன் எடை (5¼ கிராம்), திராட்சையுப்பு 1½ பலம் (5½ கிராம்), முதல் 3 வரை.

செய்முறை:-சூரத்து நிலாவாரையை வெய்யிலிலுலர்த்தித்தனியே இடித்தத் தூளை துணியில் வடிகட்டி வாதுமை நெய்யை அல்லது நெய்யைத் தெளித்து நெய்ப்பசையுண்டாக்கிக் கொள்ளவேண்டியது. இவ்விதமே கடுக்காய்த்தோலையும் இடித்து துணியில் வடிக்கட்டாமல் மெல்லியதாகத் தெள்ளி எடுத்து வாதுமை நெய்யை அல்லது பசு நெய்யைத் தெளித்து நெய்ப் பசை உண்டாக்கிக் கொள்ளவேண்டியது. திராட்சையுப்பைத் தவிர மற்றவைகளையும் தனித் தனியிடித்து துணியில் வடிகட்டி தனித்தனி நிறுத்தெடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு எல்லா நாள்களையும் ஒன்ருகக் கலந்து திராட்சையுப்பையும் சேர்த்து கலந்து வைத்துக்கொள்ள வேண்டியது.

அளவு:—1 முதல் 2 வராகன் எடை.

இதனைப் படுக்கைக்குப் போகும்போது உட்கொண்டு மேலே வெந்நீர் கொஞ்சம் பருக செய்துபின் நித்திரை செய்து காலையில் எழுந்தவுடன் மறுபடியும் ஒருவராகன் எடை உட்கொண்டு கொஞ்சம் வெந்நீரைபருகச் செய்ய ஆமக்கட்டு, மலக்கட்டு ஆகியவைகள் வெளிபட்டு உடல் நலமுண்டாகும் ஆனல் அடுத்தடுத்து மூன்று நாள் சாப்பிடவேண்டும். கழிச்சலுக்குச் சாப்பிடவேண்டுமானல் உடல் வலிமைக்குத்தகுந்தபடி 2அல்லது 4வராகன் எடை (14 கிராம்)தூளுடன் சமன் சர்க்கரையைக் கலந்து உட்கொண்டு மேலே வெந்நீர் பருகச் செய்ய வேண்டும், சுகமாகக் கழிச்சலாகும். இன்னும் வாயுக்

கட்டு, தீய மலங்கள், நுண்புழுக்கள் ஆகியவை தீரும். இது மூல நோயுள்ள இளைஞர்கள், முதியவர்கள், முதலியவர்களுக்கெல்லாம் உபயோகப்படும்.

மருத்துணவு:—மிளகு நீர், இறைச்சி சூப்பு, கத்திரிப் பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு முதலியவற்றைச் சமயத்துக்குத் தக்கபடி கூட்டவும்.

## 1210. இரஜியாகு பேதி (வேறு)

மேற்கண்டபடி தூய்மைசெய்து சூரணித்து நெய்ப் பசையுண்டாக்கின சூரத்து நிலாவாரைத்தூள் 13 வராகன் எடை (45½ கிராம்), மேற்கண்டபடி நெய்ப்பசையுண்டாக்கின மஞ்சட்கடுக்காய்த் தோல் தூள் 12 வராகன் எடை (42 கிராம்), தான்றிக்காய்த்தோல் தூள் 11 வராகன் எடை (38½ கிராம்), ரோசாப்பூவிதழ்த்தூள் 10 வராகன் எடை (35 கிராம்), மேற்புறணி நீக்கின அதிமதுரத்தூள் 9 வராகன் எடை (31½ கிராம்), சோம்புத்தூள் 8 வராகன் எடை (28 கிராம்), காகு விதைத்தூள் 7 வராகன் எடை (24½ கிராம்) காசினி விதைத்தூள் 6 விராகன் எடை (21 கிராம்) நற்சீரகத்தூள் 5 வரைாகன் எடை (17½ கிராம்), சர்க்கரை 8 பலம் (28 கிராம்), திராட்சையுப்பு 4 பலம் (14 கிராம்).

செய்முறை:—எல்லாவற்றையும் ஒன்ருகக் கலந்து பளிங்குக்குப்பியில் வைத்துக்கொள்ளவும்.

அளவு:—1 முதல் 5 வராகன் எடை வரை சாப்பிட்டு மேலே வெந்நீர் பருகச் செய்யவும்.

தீரும்நோய்:— நன்ருய்க் கழிச்சலாகும். வாயுக்கள், மலக்கட்டு, ஆமக்கட்டு, நிணக்கட்டு முதலியவைகள் தீர்ந்து உடல் நலமுண்டாகும். நூண்புழுக்கள், உடலிலுள்ள வலிகள், வயிற்றுவலி, குன்ம வலி முதலியவைகளும் தீரும்,

மருத்துணவு:—மிளகு நீர், சூப்பு, கத்திரிப்பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு முதலியவைகளைச் சமயோசிதம்போல உபயோகிக்கவும்.

## குறிப்பு.

இந்த முறையானது பார்வைக்கு இலகுவாயிருந்தாலும் அநேகம் நோய்களில் உபயோகப்படும். அனுபோகசாலிகள் இதன் குணத்தை அனுபவத்தில் தாமே தெரிந்துகொள்ளுவார்கள். ஆகையால் இங்கு சிறப்பாக எழுதவில்லை.

## 1211. சிவதைத் தூள்.

முற்றினதும் பருமனுமான சிவதை வேரை நசுக்கி மேற் பட்டையை எடுத்து நிழலிலுலர்த்தி யெடுத்துக் கொள்ளவும். ஒரு படி பசுவின்பாலை ஒரு பானையில்விட்டு அதில் அரைப்படி தண்ணீரையும் விட்டுப் பானைவாய்க்கு வேடுகட்டி முன் சித்தப்படுத்தி வைத்திருக் கும் சிவதை வேரில் ஒரு சேர் (280 கிராம்) நிறுத்தெடுத்துப்பானை வேட்டின்மேல்வைத்து மேற்சட்டி மூடி மெதுவாக எரித்துப் பாலெல்லாம் சுண்டினபின்பு எடுத்து உலர்த்தி இடித்து துணியில் வடிகட்டி பளிங்குக்குப்பியில் பத்திரப்படுத்தவும். அவசியமானால் இதற்குச் சமனெடை சர்க்கரை சேர்த்து வைத்துக்கொள்ளலாம்.

அளவு;—மலம் போக வேண்டுமானால் 1 முதல் 2 வராகன் எடை. கழிச்சலாக வேண்டுமானால் 2 முதல் 5 வராகன் எடை (7 கிராம்). உடல் சத்துக்கு தகுந்ததுபோல் உபயோகிக்கவேண்டியது.

துணைமருந்து:—வெந்நீரில் கொஞ்சம் எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து அதில் கொஞ்சம் சர்க்கரையைக் கலந்து அதிற் போட்டுக் கரைத்து பருகச் செய்யவும். இன்னும் இவ்விதமாக பன்னீர், சோம்புத் தீநீர், சுக்குத்தீநீர் அல்லது சுக்குக்குடிநீர் முதலியவைகளிலும் கலந்து நோய்க்குத் தகுந்தபடி உட்கொள்ள வேண்டியது. தூளை உட் கொண்டு அதன் மீது வெந்நீரையும் பருகச் செய்யலாம்.

தீரும்நோய்:—வாதம், பித்தம், கபம் ஆகிய மூவகைத் தீயநீர்கள் வெளிப்பட்டு உடல்நலமுண்டாகும். பழைய மலம், மலக்கட்டு, வாயு, கபக்கட்டு, ஆமக்கட்டு முதலியவயிற்றிலுள்ள குற்றங்களெல்லாம் நீங்கி இரைப்பைதூய்மையாகும். இரைப்பையில் கபஞ்சேர்ந்து ஒரு வகை செரியாமைநோய் உண்டாகிறதுண்டு, அதற்கு இந்தத்தூள் மிகவும் மேலானது இன்னும் இதனால் பல நோய்கள் தீரும் அவரவர் கள் பழக்கத்தில் தெரிந்துக்கொள்வார்கள்.

## 1212. சிவதைத்தூள் (வேறு).

மேற்கண்டபடி சித்தப்படுத்தின சிவதை வேர்த்தூள் $3\frac{1}{2}$ பலம், (105 கிராம்), மேற்சொல் சீவியிடித்த சுக்குத்தூள் $1\frac{1}{2}$ பலம் (52 கிராம்) * கழிச்சல் உப்பு என்னும் சீமைஇந்துப்பு 1 பலம் (35 கிராம்).

செய்முறை:—இம்மூன்றையும் ஒன்றாகக்கலந்து பளிங்குக்குப்பி யில் வைத்துக்கொள்ளவும், இதனுடன் சர்க்கரையும் சேர்த்துக் கொள்ளலாம்,

அளவு:—1 முதல் 3, வராகன் எடை.

---

1. * Magnesim Sulphate.

துணைமருந்து:—வெந்நீர், சோம்புத் தீநீர் முதலியவைகளாம்.

தீரும்நோய்:—கபக்கட்டு, தொண்டைக்கட்டு, வயிற்றிலுள்ள கபம் முதலியவைகளை நீக்கித்தூய்மை செய்யும். கபநோய்களில் இந்தத் தூளை ஆரம்பத்தில் உபயோகித்துக் கபத்தை வெளிப்படுத்த இது மிகவும் உபயோகமாகும். ஆகையால் இதற்குக் கபக் கழிச்சல் என்னும் பெயர். கபசம்பந்தமாயுண்டாகும் இருமல், கோழைக்கட்டு, நெஞ்சடைப்பு, இடுப்புவலி, முதலியவாயு நோய்களும் தீரும்.

### 1213. காக்கரட்டான் சூரணம்.

காக்கரட்டான் விதை 1 பலம் (35 கிராம்), சோம்பு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), ஏலரிசி $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்).

செய்முறை:—இவைகளை இளவறுப்பாக வறுத்து இடித்துத்தூள் செய்து துணியில் வடிகட்டி சமன் சர்க்கரை கலந்து பளிங்குக் குப்பியில் வைத்துக் கொள்ளவும்.

அளவு:—1 முதல் 3 வராகன் எடை.

துணைமருந்து:—எலுமிச்சம்பழ சர்பத்து. பன்னீர் சர்பத்து புளித்தெளி நீர் சர்பத்து முதலியவைகளாம்.

தீரும்நோய்:—தேகத்திலின்ள முக்குற்ற நீர்களும் வெளிப்பட்டு உடல் நலம் உண்டாகும்.

மருத்துணவு:—மிளகு நீர், சூப்பு முதலியவைகள் சேர்க்கவும்.

### 1214. சுகபேதிச்சூரணம்.

முற்றின சிவதைவேர் 8 பலம் (280 கிராம்) (இதனை ஒரு படி பசுவின் பாலிற் போட்டுப் பால்சுண்டக்காய்ச்சி நிழலிலுலர்த்தி இடித்து துணியில் வடிகட்டி கொள்ளவும்) இந்த சூரணத்திற்கு அரைக்காற்பங்கெடை ஏலரிசித்தூளை சேர்த்துக்கொள்ளவும். இவ்விரண்டிற்கும் சமனெடை சர்க்கரையைச் சேர்த்துத் தூளை பளிங்குக்குப்பியில் பத்திரப்படுத்தவும்.

அளவு:—1 முதல் 3, வராகன் எடை.

துணைமருந்து:—எலுமிச்சம்பழ சர்பத்து, பன்னீர் சர்பத்து, புளித்தெளி நீர் சர்பத்து, சோம்புத்தீநீர், வெந்நீர் முதலியவைகளாம்.

தீரும்நோய்:—மலக்கட்டு, ஆமக்கட்டு, மலபந்தம் முதலியவைகள் தீரும். இரைப்பையிலுள்ள கபக்கட்டு, குன்ம நோய் முதலிய நோய்களுக்கும் இன்னும் பல நோய்களுக்கும் உபயோகப்படும். சுகமாய்க் கழிச்சலாகும். உடல் சத்துதனை நிதானித்து அளவுப்படி அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டியது.

மருத்துணவு:— இரசம், சூப்பு முதலியவைகளாம்.

## 1215. இராசபேதிச் சூரணம்.

சீனுக்கற்கண்டு 37 வராகன் எடை (124½ கிராம்), குச்சிகாம்பு முதலியவைகளை நீக்கி தூய்மை செய்த சூரத்து நிலாவாரை 16 வராகன் எடை (56 கிராம்), விதை நீக்கின திராட்சைப்பழம் 4 வராகன் எடை (14 கிராம்), மேற்புறணி சுறண்டின அதிமதுரம் 4 வராகன் எடை (14 கிராம), மஞ்சட்கடுக்காய்த்தோல் 4 விராகன் எடை (14 கிராம்), ரேவல் சின்னி 2 விராகன் எடை (7 கிராம்), ரோசாப்பூ மொக்கிதழ் 2 வராகன் எடை (7 கிராம்), சோம்பு 2 வராகன் எடை (7 கிராம்), நற்சீரகம் 1 வராகன் எடை (3½ கிராம்), காசினி விதை 1 வராகன் எடை (3 கிராம்), காவுஜுபான் 1 வராகன் எடை (3½ கிராம்).

செய்முறை:—கற்கண்டையும் திராட்சைப் பழத்தையும் தவிர மற்றச் சரக்குகளையெல்லாம் ஒன்ருகக் கலந்து கல்லுரலில் இடித்து துணியில் வடிகட்டி வைத்துக் கொள்ளவும். கற்கண்டைப் பொடித்து மேற்படி சூரணத்துடன் கலந்து வைத்துக் கொள்ளவும். திராட்சைப் பழத்தைக் கல்வத்திற் போட்டு அரைத்து வெண்ணெய் போலான பின்பு முன் சித்தப் படுத்தியிருக்கும் தூளைச் சிறுகச் சிறுகத் தூவி அரைத்துப் பளிங்கு குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு:—2 முதல் 4 வராகன் எடை.

படுக்கைக்குப் போகும்போது மேற்படி தூளை உட்கொண்டு வாய் கொண்ட அளவு வெந்நீர் பருகச்செய்து சற்று தாமதித்து நித்திரை செய்யவும் காலையில் இரண்டு மூன்று தடவை சுகமாகக் கழிச்சலாகும் உடலிள்ள துர் நீர்களெல்லாம் நீங்கி உடல் திடம் உண்டாகும். மல பந்தம், குன்மநோய் குடல் முறுக்குநோய் முதலியவைகளும் தீரும். அனுபவசாலிகள் இதன் சிறந்த குணத்தைத் தம் அனுபவத்திற்கண்டு நிதானித்து இன்னும் பலவித நோய்களில் உபயோகித்து வெற்றியடைவார்கள் இது கழிச்சல் முறைகளில் எழுதப்பட்டிருப்பினும் வேறு மருந்துகளைப் போலக் காலை மாலை, 2 வேளையும் உபயோகிக்கலாம்.

## 1216 மூலிகைபேதி.

சிறு செருப்படைச்சாறு 1 பலம் (35கிராம்) பசுவின் பால் 1 பலம் (35 கிராம்) இவ்விரண்டையுங் கலந்துப் பருகச் செய்யவும். இளமையானவர்களுக்கு இரண்டு மூன்று தடவை சுகமாகக் கழிச்சலாகும். வயிற்றிலுள்ள தீய நீர்களெல்லாம் வெளிப்பட்டு உடல் நலம் உண்டாகும்.

## குறிப்பு.

மேற்படி மூலிகைச் சாருனது சில உடல்களுக்கு அதிக அளவாக உபயோகிக்க வேண்டியதாயிருக்கும். ஆகையால் இரண்டரைப் பலம் முதல் ஐந்து பலம் வரையில் கொடுக்கலாம். ஆனால் அந்தச்சாற்றிக்கு சமனளவு பசுவின் பாலைக் கலந்து பருகச் செய்விக்க வேண்டும். இந்த மூலிகையின் சாற்றின் அளவை இரண்டொருதடவை குறைந்த அளவாகக் கொடுத்துப் பிறகு உடல் வன்மைக்குத் தகுந்தபடி அளவை அதிகப் படுத்துவது உசிதம். வயிற்றிலுள்ள நுண்புழு முதலியவைகளெல்லாம் வெளியாகி விடுகின்றன.

## 1217 சுகபேதிக் குடிநீர்.

குச்சி, காம்பு நீக்கித் தூய்மை செய்த சூரத்து நிலாவாரை ½பலம் (17½ கிராம்), மஞ்சட்கடுக்காய்தோல் ¼பலம் (8¾ கிராம்), ரோஜப்பூ மொக்கிதழ் ¼ பலம் (8¾ கிராம்), மேற்றோல் சீவின சுக்கு ⅛ பலம், பறங்கிச்சக்கை ⅛ பலம் கொத்துமல்லி விதை ⅛ பலம், சீமை இந்துப்பு 4 வராகன் எடை (14 கிராம்)

செய்முறை:—மேற்படி சரக்குகளைச் சிதைத்து ஒருமண்பாண்டத் திற்போட்டு முக்காற்படி தண்ணீரை விட்டு ஒரு ஆழாக்காகச் சுண்ட வைத்திறக்கி இளஞ்சூட்டுடன் பிசைந்து வடிகட்டித் திப்பிநீக்கின குடி நீரில் மேற்படி உப்பைப் போட்டுக் கரைத்துப் பருகச் செய்யவும்.

நாலைந்துதடவை சுகமாகக் கழிச்சலாகும் வயிற்றிள்ள துர்மலங்க ளெல்லாம் நீங்கி உடல் நலம் ஏற்படும். மாலையில் கொஞ்சம் மேற்றோல் நீக்கினசுக்கைச் சிதைத்துக் குடிநீர் செய்து பருகச் செய்ய வும்.

மருத்துணவு:—இரசம், சூப்பு முதலியவைகளாகும்.

## குறிப்பு.

மேற்கண்ட இரண்டு பாகங்களையும் பற்றி நமது நண்பர்களுள் ஒருவர் வெகுவாய்ப் புகழ்ந்து பேசுவது வழமை. இந்த இரண்டு முறைகளினால் தாம் அநேக நோய்களைப் போக்கக் கூடுமெனச் சாமர்த்தியம் கூறுவர். ஆனால் அவர் அனுபவத்தில் அப்படியிருக் கும் போலும்.

## 1218. இலகுவிரேசன இளகம்

சீமை அன்சீர் என்னும் சீமை அத்திப்பழம் 13 பலம் (455 கிராம்) குச்சி, காம்பு நீக்கிதூய்மை செய்திடித்த சூரத்து நிலாவாரைத் தூள் 7பலம் (245கிராம்) கோதுகொட்டை நீக்கிய பழம்புளி 6½பலம்

(227½ கிராம்), கோதுகொட்டை நீக்கியசரக்கொன்றைப்புளி 6½பலம் (227½ கிராம்), கொத்துமல்லி விதை 3½ பலம் (122½ கிராம்). அதிமதுரம் 2½ பலம் (87½ கிராம்) சர்க்கரை 32½ பலம் (1137½ கிராம்).

செய்முறை:—மேற்கண்டவைகளுள் சூரத்து நிலாவாரை, கொத்துமல்லி விதை, அதிமதுரம் ஆகிய மூன்றையும் இடித்துத் தூள்செய்து துணியில் வடிகட்டி அதில் எட்டேமுக்காற் பலம் (306·25 கிராம்). தூளை எடுத்துத் தனியே வைத்துக் கொள்ளவும். மிகுந்ததூளையும் மேற்படி அத்திப்பழத்தையும் சேர்த்து ஒரு பாத்திரத்திற் போட்டு ஒன்றரை படி தண்ணீரை விட்டுக் காய்ச்சி ஐந்தாழாக்கு நீராகச் சுண்டவைத்து இறக்கி இளஞ்சூடாயிருக்கையில் நன்ருகப் பிசைந்து வடிகட்டின குடிநீரில் மேற்படி சர்க்கரையைக் கரைத்துக் காய்ச்சி பாகுபதத்தில் முன்னெடுத்து வைத்திருக்கிற சூரணத்தைச் சிறுகச் சிறுகத் தூவிச்சூரணமெல்லாம் சென்றபின்பு புளியையும் சேர்த்துக் கடைந்து கீழிறக்கிப் பிறகு சரக்கொன்றைப் புளியையும் சேர்த்துக்கடைந்து ஆறினபின்பு பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு:—1 முதல் 3 வராகன் எடை.

தீரும்நோய்கள்: மலமிளகும், சுகபேதியாகும், மேகசாந்தியுண்டாகும், இரத்தசுத்தியுண்டாகி உடல் நலமுண்டாகும். இதனை அநேக பற்பங்கள், செந்தூரங்கள் ஆகியவைகளுக்குத் துணைமருந்துகளுடன் சேர்த்து பயன்படுத்தினுல் சிறந்த குணமுண்டாகும்.

### 1219. அயாரிஜ் மாத்திரை.

மஞ்சட் கடுக்காய்த்தோல், பிஞ்சுக் கடுக்காய், சூரத்துக் கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், இவை வகைக்கு 5 வராகன் எடை (17½ கிராம்), சடாமாஞ்சில், கோரைக் கிழங்கு, சோம்பு இவை வகைக்கு 2 வராகன் எடை (7 கிராம்) ரோசா மொக்கிதழ் 3 வராகன் எடை (10½ கிராம்), நெல்லிமுள்ளி 3 பலம (10½ கிராம்), கடுகுரோகணி 3 பலம் (10½ கிராம்). திராட்சையுப்பு ½ பலம் (17½ கிராம்), உலர்ந்த பொதினுயிலை 2 வராகன் எடை, (7 கிராம்) சோற்றுக் கற்ருழைச்சாறு செல்லத் தக்க அளவு, சூரத்து நிலாவாரைக் குடிநீர் செல்லத் தக்க அளவு.

செய்முறை :—மேற்கண்டவைகளில் திராட்சையுப்பைத் தவிர மற்றச் சரக்குகளையெல்லாம் ஒன்ருக இடித்துத் துணியில் வடிகட்டி திராட்சையுப்பையுங் கலந்து கல்வத்திலிட்டுச் சோற்றுக்கற்ருழைச்

சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரமரைத்து ஈரத்தை யுலர்த்திய பிறகு சூரத்து நிலாவாரைக் குடிநீரை சிறுகச் சிறுக வார்த்து இரண்டுசாம நேரமரைத்துக்கடலை அளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்திப் பளிங்குக்குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :—2 முதல் 6 மாத்திரைகள்.

துணைமருந்து :—சர்க்கரை கற்கண்டு, திராட்சைப்பழம் ஆகிய மூன்றையும் சமனெடையாகச் சேர்த்து அரைத்த விழுது பலம் $\frac{1}{4}$, $\frac{1}{2}$, $\frac{3}{4}$-ல் மேற்படி மாத்திரைகளைச் சேர்த்து உட்கொள்ள வேண்டும். அல்லது ரோசாப்பூ சர்பத்து, *அப்திமூன் சர்பத்து, இன்னும் வேறு சர்பத்துகளிலும் கலந்து பயன்படுத்தலாம்.

தீரும் நோய்கள் :— வாயுக்கள், நுண்புழுக்கள், தீயமலம் குடல், இரைப்பை ஆகியவைகளிலுள்ள அழுக்குகள், ஆகியவைகளை நீக்கி வெளிப்படுத்தும். உடலிலுள்ள சூட்டைத்தணிக்கும். உடல் நலமுண்டாகும். எவ்வித தொந்தரவுமில்லாமல் சுகமாகவும் பேதியாகும்.

### சூரத்து நிலாவாரைக் குடிநீர்.

குச்சி, காம்பு முதலியவை நீக்கித் தூய்மை செய்த சூரத்து நிலாவாரை $2\frac{1}{2}$ பலம்($87\frac{1}{2}$ கிராம்), இதனை ஒரு பாத்திரத்திற்போட்டு அரைப்படித் தண்ணீரைவிட்டு நான்கிலொருபாகமாகச் சுண்ட வைத்திறக்கி வடிகட்டித் திப்பி நீக்கினக் குடி நீரை எடுத்து மேற்கண்ட மாத்திரைக்கு விட்டரைக்கவும்.

### 1220. கோரோசனை அயாரிஜ் மாத்திரை.

மூங்கிலுப்பு 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), உலர்த்தின சதாப் பிலை 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), கோரோசனை 2 வராகன் எடை (7 கிராம்), பிஞ்சுக்கடுக்காய் 5 வராகன் எடை ($17\frac{1}{2}$ கிராம்), ரோசா மொக்கிதழ் 5 விராகன் எடை ($17\frac{1}{2}$ கிராம்) கீழ்க்கண்ட படி தூய்மை செய்த நேர்வாளப்பருப்பு 7 வராகன் எடை ($24\frac{1}{2}$ கிராம்), நெல்லிமுள்ளிக் குடிநீர் செல்லத்தக்க அளவு.

செய்முறை—மூங்கிலுப்பு, நேர்வாளப்பருப்பு கோரோசனை, ஆகிய மூன்றும் தவிர மற்றவைகளைக் கலந்து இடித்து துணியில் வடிகட்டிக்கொள்ளவேண்டும். கோரோசனையையும் மூங்கிலுப்பையும்

* அப்திமூன் - ஒரு யூனானி மருந்து சரக்கு.

தனித்தனி தூள்செய்து மேற்படி தூளுடன் கலந்துகொள்ளவேண்டும். நேர்வாளப் பருப்பைக் கல்வத்திலிட்டு ஆரம்பத்தில் கொஞ்சம் சிதைத்து மேற்படி குடிநீரை சிறுகச் சிறுக வார்த்து அரைத்து வெண்ணெய்போலான பதத்தில் முன் சித்தப்படுத்தி வைத்திருக்கும் தூளைச் சிறுகச் சிறுகச் சேர்த்து மேற்படி குடிநீரை சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமநேரம் (12 மணி) அரைத்துக் கடலையைப்போல மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பளிங்குக்குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :— 1 முதல் 2 மாத்திரை. ஒரு மாத்திரைக்கு இரண்டு தடவை பேதியாகும்.

துணைமருந்து :—*குல்கந்து, சர்க்கரை, வெல்லம், வெண்ணெய் பாலேடு முதலியவைகளாம். மாத்திரையை உட்கொண்டு மேலே வெந்நீர் சாப்பிடவேண்டும்.

தீரும் நோய் :—சுகமாகக் கழிச்சலாகும். இதில் வாளம் சேர்க்திருந்தபோதிலும் ஆசனக்கடுப்பு, நெஞ்செரிவு முதலியவைகள் இருக்காது. வாதம், பித்தம், கபம் ஆகிய மூவகைக் கெட்ட நீர்களும் வெளிப்பட்டு உடல் நலமுண்டாகும். மேக சம்பந்தமான நோய்கள் கைகால் பிடிப்பு, கீல்வாயு முதலியவை தீரும். இன்னும் பலவகை நோய்களும் தீரும். அவைகளை அனுபவத்தால் நிச்சயித்து கொள்ளலாம்.

## நெல்லிமுள்ளிக் குடிநீர்.

நெல்லிமுள்ளி 2½ பலம் (87½ கிராம்), தண்ணீர் ½படி இவ்விரண்டையுங் கலந்து காய்ச்சி நான்கிலொருபாகமாகச் சுண்டவைத் திறக்கி இளஞ்சூட்டுடன் நன்குகப் பிசைந்து சீலையால் வடிகட்டித் திப்பி நீக்கிக் குடிநீரை எடுத்துக்கொள்வதேயாம்.

## குறிப்பு.

நெல்லிமுள்ளிக் குடிநீருக்குப் பதிலாக நெல்லிக்காயை இடித்துப் பிழிந்த சாற்றை உபயோகிப்பது உத்தமம். நெல்லிக்காய் அகப்படாத காலங்களில் மேற்கண்டவிதமாக நெல்லிமுள்ளிக் குடிநீர் செய்துக்கொள்ளலாம். நெல்லிக்காயானது நேர் வாளத்தைச் சமப் படுத்தி விடுகிறது.

---

*குல்கந்து—ரோஜா இதழ்த்தேனூறல்.

## நேர்வாளத் தூய்மை.

நேர்வாளக்கொட்டை 10 பலம் (350 கிராம்), எருமைச்சாணிப் பால் படி $1\frac{1}{2}$, மேற்படி சாணிப்பாலை ஒரு மண்பாத்திரத்தில்விட்டு அதில் மேற்படி கொட்டைகளைப் போட்டு மூன்று நாளூறவைக்கவும். நான்காம்நாள் எடுத்துக் கொட்டைகளைத் தண்ணீர்விட்டு நன்ருயலம்பி ஈரத்தையுலர்த்திக் கொட்டைகளையுடைத்து மேலோட்டை நீக்கி விடவும் பின்பு பருப்பைப் பிளந்து அதிலுள்ள முளையையும் முளையிலையையும் நீக்கிப் பருப்புகளை இரண்டாந்தடவை தண்ணீரிற் போட்டு நன்ருயலம்பி எடுத்து உலர்த்திக்கொள்ளவும்.

பின்பு முன் சித்தப்படுத்தின பருப்பை மெல்லிய துணியில் தளர முடிந்து ஒரு படி எருமைச் சாணிப்பாலில் கிழிகட்டித் தொங்க விட வேண்டும். இந்த முடிச்சானது பானையிற்படாமல் சற்றுயர மாகச் சாணிப்பாலிற்குள் அமிழ்ந்திருக்கும்படியாகத் தொங்கவிட வேண்டும். பின்பு இதனை அடுப்பேற்றி எரித்து நீர் சுண்டினபின் னிறக்கி முடிச்சையெடுத்துத் தண்ணீரில் நன்ருயலம்பிப் பருப்பை யுலர்த்திக் கொள்ளவேண்டியது.

இதனை மேற்கண்டபடியே ஒரு படி சோற்றுக்கற்ருழைச் சாற்றில் கிழிகட்டித் தொங்கவிட்டு எரித்து உலர்த்திக் கொள்ளவேண்டியது.

பிறகு இதனை ஒரு படி பசுவின் பாலில் மேற்கண்டவாறே கிழி கட்டித் தொங்கவிட்டு மேற்கண்டவாறே எரித்து உலர்த்திக்கொள்ள வேண்டியது.

பிறகு இதனை நெய்யில் வறுத்து எடுத்துக்கொள்ளவேண்டியது.

இவ்விதம் செய்வதால் நேர்வாளம் தூய்மையாகிக் கரகரப்பு, வயிற்றுப்பிடுங்கல், ஆசன எரிச்சல் முதலிய கெடுதல்களுண்டாக் காது.

### குறிப்பு.

நேர்வாளத் தூய்மையானது பலவகையாகும், ஒவ்வொருவருக் கும் ஒவ்வொருவகை தெரிந்தேயிருக்கும். இதில் முக்கியமானது அதன் முளை, முளையிலை ஆகியவைகளைப் போக்கவேண்டியதுதான். அதன் கரகரப்பைப் போக்குவதற்கு முக்கியமானது எலுமிச்சம் பழச்சாறு, புளியைக்கரைத்த நீர் முதலியவைகளாம்.

சிலர் உப்பு, மிளகாய், புளி முதலிய இரச சாமன்களைச் சேர்ந்து இரசம் செய்து அதில் கிழிகட்டி பக்குவப்படுத்திக் கொள்வதும் ஒருவகை. எல்லாவகைகளுள்ளும் மேற்சொல்லப்பட்டதே மிகவும் நல்ல முறையாகும்.

### 1221. முஞ்ஜிஷ்பேதி மாத்திரை.

செண்பக மொட்டு, கடுகுரோகணி, மஞ்சள்கடுக்காய்த்தோல் ஏலரிசி இவற்றின் தூள் தனித்தனி 1 பலம் (35 கிராம்) தூய்மை செய்த வாளம் 4 பலம் (140 கிராம்).

செய்முறை:—மேற்கண்ட நான்கு சரக்கையும் தனித்தனியாக இடித்து துணியில் வடிகட்டி நிறுத்துக்கொள்ள வேண்டியது. அப்படியெடுத்துக்கொள்ளாமல் நான்கு சரக்கையும் ஒன்ருகச் சேர்த்து இடிக்கவேண்டியிருந்தால் அப்படியிடித்து தூள் செய்து துணியில் வடிகட்டிய சூரணம் கண்ட எடைக்குச் சமனெடை வாளத்தை நிறுத்தெடுத்துக் கொள்ள வேண்டும். வாளத்தைக் கல்வத்திலிட்டு ஆரம்பத்தில் தட்டி நசுக்கிக் குளிர்ந்த தண்ணீரை சிறுகச் சிறுக வார்த்தரைத்து வெண்ணெய் போலான பின்பு மேற்படி தூளைச் சிறுகச் சிறுகச் சேர்த்துத் தண்ணீரை வார்த்து நான்கு சாமம், 12 மணி) அரைத்துக் குன்றிமணி அளவுள்ள மாத்திரை செய்து நிழலிலுலர்த்திப் பளிங்குக்குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு:—1 முதல் 2 மாத்திரை.

துணைமருந்து:—சூரத்துக் கடுக்காய்த்தோல் ½ வராகன் எடை (1¾ கிராம்), மஞ்சட்கடுக்காய்த்தோல் 1 வராகன் எடை (3½ கிராம்) அதிமதுரம், ரேவல்சின்னி, நெல்லி முள்ளி, அக்கிரகாரம், வால்மிளகு பறங்கிப்பட்டை, கொட்டைப் பாக்கு, கண்டந்திப்பிலி, அரிசித்திப்பிலி இவை வகைக்கு ½ வராகன் எடை (1¾ கிராம்), இவை எல்லாவற்றையும் சிதைத்து ஒருபாண்டத்திற் போட்டுக் காற்படி தண்ணீர் விட்டு நான்கிலொரு பாகமாகச் சுண்டவைத்து இறக்கி இளஞ்சூட்டிற் பிசைந்து வடிகட்டின குடிநீரை இரவில் உட்கொண்டு காலையில் மேற்படி மாத்திரைகளில் இரண்டை சர்க்கரைக்குள் வைத்து உட்கொள்ளவேண்டும். இவ்விதம் மூன்றுநாள் அல்லது ஐந்து நாள் செய்யவும்.

தீரும்நோய்;—சூலை, அண்டவாயு, சூலைச்சுரம், பித்தவாயு ஆகியவை தீரும்.

குறிப்பு.

மேற்படி நோய்களில் மேற்கண்ட விதமாக உபயோகிப்பதினுல் உடலில் ஆழ்ந்து கிடக்கும் தீயநீர்களை இரவில் பக்குவப்படுத்திக் கழிச்சல் மூலமாகக் காலையில் வெளியாக்கும், இவ்விதம் பக்குவப் படுத்திக் கெட்ட நீரை வெளிப்படுத்துவதால் இதற்கு முஞ்சிஷ் (பக்குவப்படுத்துதல்) கழிச்சல் மாத்திரையெனப் பெயரிடப் பட்டிருக் கிறது. மேற்படி குடிநீரில்லாமல் இதனைத் தனியாகவும் உபயோகிக்க லாம். அப்போது காலையில் இரண்டு மாத்திரையைச் சர்க்கரையில் உட்கொண்டு அதன்மேல் வெந்நீர் குடித்தால் நன்ருகக் கழிச்சலாகும். உடலிலுள்ள தீய நீர்கள் வெளிப்பட்டு உடல் நல முண்டாகும்.

மருத்துணவு:—நோய்வலிமை, உடல்வலிமை ஆகியவைகளுக்குத் தகுந்தபடி கஞ்சிபோன்ற ஆகாரம் பத்திய மேற்படுத்தவும்.

## 1222. சகல காய்ச்சலுக்கும் பேதிமாத்திரை.

மிளகு 1 பங்கு தூய்மை செய்த நேர்வாளம் ½ பங்கு இவ்விரண் டையுங்கலந்து கொள்ளவும். எலுமிச்சம் பழத்தை வில்லையாக அறுத்து அந்த வில்லையை எடுத்துக்கொண்டு அந்தப் பழத்தைக் குடைந்து அது கொள்ளுகிற வரையில் முன் தயாரித்தவைகளை செலுத்தி முன் எடுத்த வில்லையை வைத்து நூலால் கட்டிவிட வேண்டிது. இவ்விதம் முன் தயாரித்தவை எல்லாம் முன் போல் எலுமிச்சம் பழங்களிலடைத்து நூலால் கட்டி ஒவ்வொரு எலுமிச்சம் பழத்தின் மீதும் கோதுமை மாவை அல்லது அரிசிமாவைக் கெட்டி யாகக் குழைத்து மேலேபூசி மூன்று நாள் வைத்தபிறகு கவசத்தை பிரித்து மிளகையும், வாளத்தையும் தனியே எடுத்துக் கல்வத்திலிட்டு வெண்ணெய் போலாகிற வரையிலரைத்து மிளகு அளவுள்ள மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பளிங்குக்குப்பியில் பத்திரப் படுத்தவும்,

அளவு:—½முதல் 1 மாத்திரை.

துணைமருந்து:—நெய், வெண்ணெய், சர்க்கரை முதலியவைகளாம்

தீரும்நோய்:—ஒரு மாத்திரையை உட்கொண்டால் ஒருதடவை கழிச்சலாகும். காய்ச்சல் கண்டிருக்கும் போது மலம் போக வேண்டிய அவசியமிருந்தால் இதனை உபயோகித்தால் மலத்தைப் போக்கிச் காய்ச்சலைத் தணிக்கும்.

தீரும் நோய்கள் :—நடுக்கல்சுரம், முறைச்சுரம், மாறல்காய்ச்சல் முத லிய எல்லாச்சுரங்களிலும் இதனை உபயோகித்தால் குணமுண்டாகும்.

குறிப்பு.

முன் கவசஞ் செய்த எலுமிச்சம் பழங்களைக் கரிநெருப்பிற் போட்டு மாவு சிவக்கிற வரையில் வேகவைத்து எடுத்து ஆறினபின் கவசத்தைப் பிரித்து அதற் குள்ளிருக்கும் மிளகு வாளம் முதலியவைகளை எடுத்து முன் போல் அரைத்து மாத்திரைகள் செய்து கொள்ளலாம்.

## 1223. சீதசுர பேதிச்சூரணம்.

தூய்மை செய்த வாளம், தூய்மை செய்த கருநாபித்தூள், தூய்மை செய்த இரசம், தூய்மை செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் இவை வகை 1 க்கு 2 வராகன் எடை (7 கிராம்).

செய்முறை:—இரசத்தையும், கெந்தகத்தையும் ஒன்ருகக் கலந்தரைத்து நன்ருகக் கறுத்தபின்பு மற்ற இரண்டையும் சேர்த்து ஒரு சாம நேரமரைத்துப் பளிங்குகுப்பியில் பந்திரப் படுத்தவும்.

அளவு:—1 முதல் 2 குன்றிமணி எடை.

துணைமருந்து:—சர்க்கரை.

தீரும்நோய்:—மகாகுளிர் காய்ச்சல்களெல்லாம் ஒரு நாளையில் நிற்கும். அப்படி நிற்காவிட்டால் ஒருநாள் விட்டு மறுநாள் கொடுக்கவும், அவசியம் நின்று போகும்.

பத்தியம்:—துவரம் பருப்பு, அரைக்கீரை, மிளகுரசம் கூட்டவும் புளி நீக்கவும்.

## 1224. சுகபேதிக் குளிகை.

தூய்மைசெய்த வாளம் 3 பலம் (105 கிராம்) கடுகுரோகணி 1 பலம் (35 கிராம்) உலர்ந்த இலுப்பைப்பூ 2 பலம் (70 கிராம்) எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—முன் மூன்று சரக்கையும் தனித் தனியாகவறுத்துக் கொள்ள வேண்டியது. பிறகு கடுகுரோகணியைக் கல்வத்திலிட்டு நன்ருகப் பொடித்து கலந்து வைத்துக் கொள்ளவும். பிறகு வாளத்தைக் கல்வத்திலிட்டு நசுக்கிச்சிதைத்து எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்தரைத்து முன் தயாரித்த சூரணத்தை யும் சிறுகச் சிறுகச் சேர்த்து எலுமிச்சம்பழச்சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமநேரம் அரைக்கவேண்டும். பிறகு கடலை அளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்திப்பத்திரப் படுத்தவும்.

அளவு:—1 முதல் 2 மாத்திரை. உடல்வலிமைக்கு தகுந்த படி உபயோகிக்க வேண்டியது.

துணைமருந்து:—புனல் முருங்கைச்சாறு, தேன், நெய், சுக்குக் குடிநீர் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:—வாயு நோய்கள், வயிற்றிலுள்ள கபங்கள், பித்த சம்பந்த நோய்கள், சூலைக்கட்டு, முடக்கு முதலிய நோய்கள் தீரும். மலச்சிக்கல், ஆமக்கட்டு, நுண்புழுக்கள் முதலியவைகளும் தீரும்.

மருந்துணவு:—பாசிப்பயறும், பச்சையரிசியும் சேர்த்துக் கஞ்சி காய்ச்சிக் கொடுக்க வேண்டும். கழிச்சல் அதிகப்பட்டால் ஆவாரம் பட்டை, நெல்லிமுள்ளி இவ்விரண்டும் வகைக்கு 2 வராகன் எடை (7 கிராம்) இவற்றைச் சிதைத்து ஒரு ஆழாக்கு தண்ணீரில் போட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத்திறக்கி வடிகட்டிப் பருகச்செய்ய உடனே கழிச்சல் நிற்கும்.

குறிப்பு

இது கடின உடலினர்க்கும் கடினவேலை செய்து வாழ்கிறவர்களுக்கும் உபயோகமாகும். இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் அவரவர்கள் உடல் நிலைமை அறியாமல் இதனை உபயோகிக்கலாகாது.

1225. சுகபேதிக்குளிகை.

தூய்மை செய்த நேர்வாளப்பருப்பு 1 பலம் (35 கிராம்) கடுகு ரோகணி 1 பலம் (35 கிராம்) இலுப்பைப்பூ 1 பலம் (35 கிராம்) தூய்மை செய்த சாதிலிங்கம் $\frac{1}{4}$ பலம் (8·75 கிராம்) மேற்றோல் சீவின சுக்கு, மிளகு, அரிசிதிப்பிலி இவை வகைக்கு $1\frac{1}{4}$ பலம் (43·75 கிராம்) எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—வாளம், இலிங்கம் ஆகிய இரண்டும் தவிர மற்றவைகளை ஒன்ருகச்சேர்த்திடித்து துணியால் வடிகட்டி வைத்துக் கொள்க. சாதிலிங்கத்தை நுண்மையாகப் பொடித்து முன் சூரணத்துடன் கலந்து கொள்க. வாளத்தைக் கல்வத்திலிட்டுச் சிதைத்து எலுமிச்சம்பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து முன் சூரணத்தையும் சிறுகச் சிறுகத் தூவி மூன்றுசாம நேரம் அரைத்துக் குன்றிமணியெடை மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி பத்திரப் படுத்தவும்.

அளவு :—1 முதல் 3 மாத்திரை.

துணை மருந்து :—வெல்லம், குல்கந்து, சர்க்கரை முதலியவை களாம்.

தீரும் நோய்கள் :—வாயுகள், பல்வேறு சுரங்கள், ஆமக்கட்டு, வயிற்றுவலி முதலிய பலவகை நோய்கள் தீரும்.

### 1226. கோடாசூழி மாத்திரை

தூய்மை செய்த இரசம், தூய்மை செய்த நெல்லிக்காய்க் கெந்தகம், தூய்மை செய்த இலிங்கம், தூய்மை செய்த அரிதாரம், பொரித்தவெண்காரம் இவை வகைக்கு இரண்டு வராகன் எடை (7 கிராம்) மேற்றோல் சீவிய சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, அக்கிரா காரம், சிற்றரத்தை இவற்றைத் தனித்தனியிடித்து துணியால் வடிகட்டிய சூரணம் வகைக்கு 4 வராகன் எடை (14கிராம்) தூய்மை செய்த நேர்வாளப் பருப்பு 30 வராகன் எடை (105 கிராம்) கையாந்தகரைச் சாறு, எலுமிச்சம்பழச்சாறு இவை வகைக்குச் செல்லத் தக்க அளவு.

செய்முறை :—இரசத்தையும் கெந்தகத்தையும் சேர்த்தரைத்து நன்றாகக் கருத்த பின்பு இதனைத் தனியே எடுத்து வைத்துக் கொள்ளவும். மற்றச்சரக்குகளையும் தனித்தனித் தூள் செய்து எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து முன் தயாரித்துள்ள தூள்களை யும் ஒன்றாகக் கலந்து கொள்ளவும். நேர்வாளத்தைக் கல்வத்திற் போட்டு நசுக்கிக் கையாந்தகரைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த் தரைத்துத் தூளைச் சிறுகச் சிறுகத் தூவி மறுபடியும் கையாந்தகரைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஆறுசாம நேர (18 மணி) மரைத்து எடுத்துப் பளிங்குக் குப்பியில் வைத்துலர்த்தி நன்றாயுலர்ந்த பின்பு மறுபடியும் கல்வத்தில் வைத்துப் பொடித்து எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஆறுசாமநேரமரைத்து உளுந்துப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

அளவு :—1 முதல் 2 மாத்திரை. அதிக கழிச்சலாக வேண்டு மானால் 4, 5 மாத்திரை உடல்வலிமைக்குத் தகுந்தபடி உட்கொள்ள வேண்டும்.

துணைமருந்து:—வெல்லம், குல்கந்து, வெண்ணெய், வாழைப்பழம், குடிநீர் முதலியவைகளாம்.

தீரும் நோய்கள் :—சுரங்கள், சீதசுரங்கள், குளிர்சுரங்கள், வாதசுரம், மலக்கட்டு, வயிற்றுவலி முதலியவைகள் தீரும். இதனைச் சிறுவர்கள், பெண்கள், பெரியோர்கள் ஆகிய எல்லோரும் உபயோகிக்கலாம்.

### 1227. ஆனந்த கோடாசுழி மாத்திரை.

மேற்ருேல் சீவிய சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, மஞ்சட் கடுக்காய்த்தோல், தான்றிக்காய்ந்தோல், நெல்லிமுள்ளி இவற்றைத் தனித்தனியிடித்த தூள்கள் வகைக்கு $2\frac{1}{2}$ வராகன் எடை, தூய்மை செய்த இரசம், தூய்மை செய்த நெல்லிக்காய்க்கெந்தகம், பொரித்த வெண்காரம் இவை வகைக்கு $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்) தூய்மை செய்த நேர்வாளப்பருப்பு $22\frac{1}{2}$ வராகன் எடை ($69\frac{1}{2}$ கிராம்) சோற்றுக்கற்ருழை சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரசத்தையும் கெந்தகத்தையும் சேர்த்தரைத்து நன்ருகக் கறுத்தபின்பு தனியே எடுத்து வைத்துக்கொள்ளவும். வெண்காரத்தைப் பொடித்துக் கொள்ளவும்; முன் தூள்களையும் இந்த இரண்டு வகைகளையும் ஒன்ருகக் கலந்து வைத்துக்கொள்ளவும். வாளத்தைக் கல்வத்திலிட்டு நசுக்கிச் சோற்றுக்கற்ருழைச் சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு அரைத்து வெண்ணெய் போலான பின்பு முன் தயாரித்து வைத்திருக்கும் தூள்களை சிறுகச் சிறுகச் சேர்த்து அரைத்து மேற்படி சோற்றுக்கற்ருழைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாம (12 மணி) நேரமரைத்துக் குன்றிமணி அளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி பளிங்குக்குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு:—1 முதல் 2 மாத்திரை. கழிச்சலுக்கு சாப்பிட வேண்டு மாளுல் 4, 5 மாத்திரை உடல் வலிமைக்குத் தகுந்தபடி உபயோகிக்க வேண்டும்.

துணைமருந்து:—வெல்லம், குல்கந்து, வெண்ணெய், வாழைப் பழம், இளக வகைகள் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:—வாதம், பித்தம், கபம் ஆகிய முக்குற்ற நோய் களிலும் உபயோகிக்கலாம். சுரங்கள், வாயுகள், கபக்கட்டு, மேல் மூச்சு, சுவாசம், இரைப்பு, சன்னி முதலிய நோய்களில் உபயோகிக்க லாம். வயிற்றுவலி, குன்மம், குடல் வாயு முதலிய இரைப்பை சம்பந்த நோய்களிலும் உபயோகிக்கலாம். அள்ளு மாந்தம், பொருமல் மாந்தம் முதலிய குழந்தைநோய்களிலும் உபயோகிக்கலாம். சிறுவர் களுக்குக் காணும் சுரங்கள், மார்ச்சளி, தொண்டையில் கரகரப்பு முதலியவைகளிலும் உபயோகிக்கலாம். இது கைவல்யமாகிய ஒரு சிறந்த மருந்தாகையால் சிறந்த வைத்தியர்களிடத்தில் அவசியமிருக்க வேண்டியது. இன்னும் அனுபவத்தில் இதன் சிறந்த குணத்தைக் கண்டுக்கொள்ளலாம்.

மருத்துணவு:—நோய்வலிமை, உடல்வலிமை முதலியவை களுக்குத் தகுந்ததுபோல் பத்தியமேற்படுத்தவும்.

1228. அகத்தியர் கோடாசுழி

மேற்றோல் சீவிய சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, தூய்மைசெய்த சிவதைவேர், பொரித்த பெருங்காயம், வாய்விளங்கம், ஓமம், குரோ சாணி ஓமம், இவற்றைத் தனித்தனி இடித்ததூள் வகைக்கு 2½ வராகன் எடை, ஆமணக்குப்பருப்பு 2½ வராகன் எடை (8¾ கிராம்), (இதனைப் பிளந்து இதற்குள்ளிருக்கிற முளையையும் முளையிலையையும் நீக்கிவிட்டு ஓட்டிலிட்டுத் தனியாக அல்ல கொஞ்சம் நெய்யைத்தெளித்து வறுத்தெடுத்துக் கொள்ள வேண்டியது. பொரித்த வெண்காரம், இந்துப்புத்தூள், சுத்திசெய்த சாதிலிங்கம் இவைவகைக்கு 2½ வராகன் எடை (8¾ கிராம்), தூய்மை செய்த நேர்வாளப்பருப்பு 1 பலம் (35 கிராம்), எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இலிங்கம், வெண்காரம், இந்துப்பு ஆகிய மூன்றை யும் தனித்தனித் தூள்செய்து முன் தூள்களையும், அதனுடன் கலந்து கொள்ளவும். நேர்வாளப் பருப்பையும், ஆமணக்குப்பருப் பையும் கல்வத்திலிட்டு நசுக்கிப் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து அரைத்து வெண்ணெய் போலானபின்பு முன் சித்தப்படுத்தி வைத்திருக்கும் தூளைச்சிறுகச் சிறுகச்சேர்த்துஎல்லாம் ஒன்ருகக்கலந்து பின்பு மேற்படி எலுமிச்சம்பழச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு சாமநேரமரைத்துக் குன்றிமணி அளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

அளவு:—1 முதல் 2 மாத்திரை. கழிச்சல் அதிகம் போகவேண்டு மாஞல் உடலுக்குத் தகுந்தபடி உபயோகிக்கவும்.

துணைமருந்து;—வெல்லம், சுக்கையரைத்த விழுது, சோம்பை அரைத்தவிழுது, வாழைப்பழம், வெண்ணெய் முதலிய வைகளாம்.

தீரும்நோய்கள்:—குன்மநோய், பாண்டு நோய், நீர்க்கட்டு, நீரடைப்பு, அக்கினிமந்தம், பலவகைச் சுரங்கள், சயம், இருமல், முதலிய பல நோய்கள் தீரும்.

மருத்துணவு:— நோயின் நிலமைக்கேற்றவாறு பத்தியம் வைத்துக்கொள்ளவும்.

## 1229. சுந்தர கோடாசூரி

தூய்மை செய்த அரிதாரம், தூய்மை செய்த சாதிலிங்கம் தூய்மை செய்த பச்சைநாபி, மஞ்சட் கடுக்காய்த் தோல், தான்றிக் காய்த்தோல், நெல்லிமுள்ளி இவற்றுள் தூள்செய்ய வேண்டியவை களைத் தனித்தனித் தூள்செய்தத் தூள் வகைக்கு $1\frac{1}{4}$ வராகன் எடை மேற்றோல் சீவின சுக்கு, தூய்மைசெய்த கருநாபி, இவற்றின் தனித் தனி தூள் வகைக்கு $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்) தூய்மை செய்த இரசம் $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்), தூய்மை செய்த நேர்வாளப் பருப்பு $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்) கலியாண முருக்கிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரசம், தாளகம், இலிங்கம் ஆகிய மூன்றையும் சேர்த்து அரைத்து எல்லாம் கலந்த பின்பு முள் முருக்கிலைச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்துக் கைவிடாமலரைத்தால் இரசம் மடிந்து போகும். இரசம் மடிந்த பிறகு நேர்வாளப்பருப்பைச் சிறுகச் சிறுகச்சேர்த்து முன் சாற்றையே சிறுகச்சிறுக வார்த்தரைத்து வெண் ணெய் போலானபின்பு மற்றத் தூள்களை எல்லாம் ஒன்றாகக் கலந்து அதிற்சேர்த்து பின்பு முன் சாற்றையே சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமநேரமரைத்துக் குன்றிமணி அளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

அளவு:—1 முதல் 2 மாத்திரை.

துணைமருந்து:—வெல்லம், வெண்ணெய், இளக வகைகள் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:—எலி நஞ்சு முதலிய பலவகை நஞ்சுகள், சுரம் வாயு ஆகிய நோய்கள் தீரும்.

## 1230. திரிபோதச கோடாசூரி

மேற்றோல் சீவிய சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, மஞ்சட் கடுக் காய்த்தோல், நெல்லிமுள்ளி, தூய்மைசெய்த பச்சைநாபி, தூய்மை செய்த கருநாபி, இவற்றைத் தனித்தனியிடித்துத் துணியில் சலித்த தூள் வகைக்கு $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்) தூய்மை செய்த இரசம், தூய்மைசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம், தூய்மை செய்த அரிதாரம், பொரித்த வெண்காரம் இவை வகைக்கு $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்) தூய்மை செய்த நேர்வாளப்பருப்பு 3 பலம் (105 கிராம்), கையாந்தகரைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:— இரசத்தையும், கெந்தகத்தையும் சேர்த்தரைத்து நன்ருகக் கருத்தபின்பு தனியே எடுத்து வைத்துக் கொள்ளவும். அரிதாரம், வெண்காரம் ஆகிய இரண்டையும் தனித்தனி பொடித்துக் கொள்ளவும். பிறகு எல்லாவற்றையும் ஒன்ருகக் கலந்து வைத்துக் கொள்க. வாளத்தைக் கல்வத்திலிட்டுச் சிதைத்துக் கையாந்த கரைச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து அரைத்து வெண்ணெய் போலானபின்பு முன் சித்தப்படுத்தி வைத்திருக்கும் தூளைச் சிறுகச் சிறுகச்சேர்த்து எல்லாம் ஒன்ருகக் கலந்த பின்பு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம (12 மணி) நேரமரைத்துக் குன்றிமணி அளவுள்ள மாத்திரைகள் செய்து நிழலி லுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

அளவு :—1 முதல் 2 மாத்திரை. கழிச்சல் அதிகமாக வேண்டு மாளுல் உடல் வலிமைக்குத் தகுந்தபடி மூன்று அல்லது ஐந்து மாத் திரைகள் உபயோகிக்கலாம்.

துணைமருந்து :—தேன், இஞ்சிச்சாறு, வெல்லம், சர்க்கரை, குல்கந்து, இளகம் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :—சுரங்கள், சன்னிகள், முறைசுரம், குளிர்சுரம், மாறல்சுரம், வாயுகள், கபநோய்கள், இரைப்பு, இழுப்புநோய் இருமல், தொண்டைக்கட்டு, கபக்கட்டு, சூலைகள், கீல்வாயுகள் முதலிய அநேக நோய்கள் தீரும்.

மருந்துணவு :—நோய் நிலைமைக்குத் தக்கபடி பத்தியம் மேற் கொள்ளவும்.

## 1231. மகா கோடா சுழி

தூய்மை செய்த இலிங்கம் 3 வராகன் எடை, இரசம் 3 வராகன் எடை, நாபி 3 வராகன் எடை, நெல்லிக்காய்க் கெந்தகம் 3 வரா கன் எடை, அரிசித் திப்பிலித்தூள் 5 வராகன் எடை, தூய்மை செய்த நெரிவிடம் 6 வராகன் எடை, தூய்மைசெய்த பொன்னரி தாரத்தூள் 7 வராகன் எடை, மைசாட்சி 8 வராகன் எடை, மிளகு தூள் 9 வராகன் எடை, மஞ்சட் கடுக்காய்த் தோல் தூள் 10 வரா கன் எடை, தான்றிக்காய்த் தோல் தூள் 11 வராகன் எடை, நெல்லிமுள்ளித் தூள் 12 வராகன் எடை, பொரித்த வெண்காரத் தூள் 13 வராகன் எடை, சாதிக்காய்த் தூள் 14 வராகன் எடை, சாதிப்பத்திரித் தூள் 15 வராகன் எடை, சீரகத்தூள் 16

வராகன் எடை, இலவங்கத்தூள் 17 வராகன் எடை குரோசாணி ஓமத்தூள் 18 வராகன் எடை தூய்மைசெய்த நேர்வாளப் பருப்பு 19 வராகன் எடை, தூய்மைசெய்த பவளக்கால் மனோசிலைத் தூள் 2 வராகன் எடை, கடுகுரோகணித்தூள் 3 வராகன் எடை, வருத்துச் சாம்பலாக்கின மயில்துத்தத்தூள் 3 வராகன் எடை, கருஞ்சீரகத்தூள் 4 வராகன் எடை, ஏலரிசித்தூள் 4 வராகன் எடை, அதிமதுரத்தூள் 2 வராகன் எடை, (7 கிராம்) கஞ்சாவிலைச் சாறு அல்லது கஞ்சாக்குடிநீர், வெள்ளாட்டுப்பால், வெள்ளெருக்கஞ்சாறு, வெண்ணொச்சிச் சாறு, குப்பைமேனிச் சாறு, ஆடாதோடைச் சாறு, வெள்ளைச்சாரணைச்சாறு, வெள்ளைக்காக்கரட்டான்சாறு, எலுமிச்சம் பழச்சாறு இவை வகைக்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை :—இரசத்தையும், கெந்தகத்தையும் சேர்த்தரைத்து நன்ருய்க் கருத்தபின்பு எடுத்துக் கொள்ளவும். மற்றக் கடினமான சரக்குகளின் தூள்களையெல்லாம் ஒன்ருகக் கலந்து மைபோலரைத்துக் கொள்ளவும். கடைச்சரக்கின் தூள்களையெல்லாம் ஒன்ருகக் கலந்து மைபோலரைத்தெடுத்துக் கொள்ளவும். பின்பு இவை எல்லாவற்றையும் ஒன்ருகக்கலந்து வைத்துக் கொள்க. நேர்வாளத்தைக் கல்வத்திலிட்டு வெண்ணெய் போலரைத்து அதன்மேல் முன் பக்குவப்படுத்தி வைத்திருக்கிற தூள்களைச்சிறுகச் சிறுகத்தூவி அரைத்து எல்லாம் கலந்தபின்பு கஞ்சாச்சாறு முதல் வெள்ளைக் காக்கரட்டான் சாறு வரையுள்ள சாறுகளில் ஒவ்வொரு வகைச்சாற்றிஞல் ஒவ்வொரு நாளரைத்துப் பிறகு முடிவாக எலுமிச்சம்பழச்சாற்றைவிட்டு நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு சாமமாக ஏழுநாள் அரைத்துக் குன்றிமணி அளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி ஒருமண் பாத்திரத்திற் போட்டு வாய்மூடி ஒரு மண்டலம் வரையில் வைத்துப் பிறகெடுத்து உபயோகிக்கவேண்டும்.

துணைமருந்தும், தீரும்நோயும் :—சீரகத்தூள் 1 வராகன் எடை மேற்படி மாத்திரை 1, இவ்விரண்டையும் சேர்த்துப் பொடித்துத் தேனில் அல்லது நெய்யில் கலந்து உட்கொள்ள இரத்தக்கழிச்சல், சீதக்கழிச்சல் ஆகியவை தீரும்

சிற்ருமணக் கெண்ணெய் 1 வராகன் எடை மேற்படி 1 மாத்திரையைப் பொடித்து மேற்படி எண்ணெயிற் கலந்து உட்கொள்ள வேண்டும். இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையும் இருபதுநாள் உட்கொண்டால் எவ்வகைப் பெருங்கழிச்சலும் தீரும்.

தேன் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்) இதில் மேற்படி மாத்திரை ஒன்றைப் பொடித்துக் கலந்து சாப்பிடவேண்டும். இவ்விதம் காலை, மாலை இரண்டுவேளையும் இருபத்தொருநாள் சாப்பிட இளைப்பு, உட் காய்ச்சல் ஆகியவை தீரும்.

கண்டந்திப்பிலித்தூள் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), தேன் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), மேற்படி மாத்திரை 1 இவற்றைக் கலந்துட்கொண்டு வர எல்லாவாயுக்களும் தீரும்.

ஆலம்பால் வராகன் எடை ஒன்றில் மேற்படி மாத்திரை ஒன்றைத் தூள்செய்து சேர்த்து உட்கொள்ளவும். குளிர் சுரம் தீரும்.

சீரகத்தூள் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), கற்கண்டுத்தூள் 1 வராகன் எடை இவ்விரண்டையுங் கலந்து மேற்படி மாத்திரை ஒன்றைப் பொடித்துச் சேர்த்து உட்கொண்டுவர பித்தசுரம் தீரும்.

மேற்படி மாத்திரையில் இரண்டொன்றை முருங்கையிலைச் சாற்றில் குழைத்து வாய்க்குள் பூசி இரண்டு மூன்றுமணிநேரம் சென்றவுடன் வாய் கொப்பளித்துவிடவேண்டும். இவ்விதம் செய்துவர வாய் நாற்றம் தீரும்.

நெல்லிக்காய்ச்சாறு 2 வராகன் எடை (7 கிராம்), இதில் மேற்படி மாத்திரை ஒன்றைப் பொடித்துச் சேர்த்து உட்கொண்டுவர மூலநோய் தீரும்.

சீரகத்தூள் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), சர்க்கரை 1 வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்படி மாத்திரை ஒன்றைப் பொடித்து அவற்றில் சேர்த்துட் கொண்டுவர எரிகுன்மம் தீரும்.

இஞ்சிச்சாறு 3 வராகன் எடை (7 கிராம்), இதில் மேற்படி மாத்திரை ஒன்றைப் பொடித்துச் சேர்த்துட்கொண்டுவர வலிகுன்மம் தீரும்.

அவுரிச்சாறு $1\frac{1}{4}$ வராகன் எடை, இதில் மேற்படி மாத்திரை ஒன்றைப் பொடித்துச் சேர்த்துட் கொண்டுவர நீர்க்கோவை நோய் தீரும்.

கடுக்காய்த்தோல்தூள், தான்றிக்காய்த்தோல்தூள், நெல்லி முள்ளித்தூள், எருக்கம்பூ, வெல்லம், சர்க்கரை இவை எல்லாவற்றையும் சமனெடுத்து குழி அம்மியில் வைத்து வெண்ணெய் போலரைத்

துக் பளிங்கு குப்பியில் வைத்துக்கொள்ளவும். இதில் 1 வராகன் எடை (3½ கிராம்), இதனுடன் மேற்படி மாத்திரை ஒன்றைப் பொடித்துச் சேர்த்துட் கொண்டுவர இரத்தபித்த நோய் தீரும்.

தேன் 1 வராகன் எடை, இதில் மேற்படி மாத்திரை ஒன்றைப் பொடித்து உட்கொண்டுவர அதிமூத்திர நோய், நீர்க்கழிச்சல் ஆகியவை தீரும்.

வெற்றிலையோடு ஒரு மாத்திரையைச் சேர்த்து மென்று தின்றுவர ஈளை, இருமல் தீரும்.

தேங்காய்ப்பால் 1 பலம் (35 கிராம்), இதில் மேற்படிமாத்திரை ஒன்றைப் பொடித்துப் போட்டுக் கொஞ்சம் சூடுவைத்துப் பருகச் செய்ய நன்ருய்க் கழிச்சலாகும். பேதி அதிகமாக வேண்டுமாஞல் பாலை அதிகமாகச் சேர்த்துக் கொள்ளவும்.

வேப்பிலைச்சாறு 1 வராகன் எடை, இதில் மேற்படி மாத்திரை ஒன்றைப் பொடித்துச் சேர்த்துட்கொள்ளக் காய்ச்சல் தீரும்.

இஞ்சிச்சாறு 1 வராகன் எடை, இதில் மேற்படி மாத்திரை ஒன்றைப் பொடித்துச் சேர்த்துட்கொண்டுவர மஞ்சள்நோய் தீரும்.

இஞ்சிச்சாறு 1 வராகன் எடை (3½ கிராம்), தேன் 1 வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து அதில் மேற்படி மாத்திரை ஒன்றைப் பொடித்துட் கொள்ள உளைமாந்தை தீரும்.

கையாந்தகரைச்சாறு 1 வராகன் எடை (3½ கிராம்), இதில் மேற்படி மாத்திரையை உட்கொள்ள வெப்புப்பாவை தீரும்.

சீரகத்தூள் 1 வராகன் எடை, சர்க்கரை 1 வராகன் எடை இவற்றைக் கலந்து மேற்படி மாத்திரையைச் சேர்த்துட்கொள்ளத் தாபசுரம் தீரும்.

சாதிக்காய்த்தூள் ½ வராகன் எடை இதில் மேற்படி மாத்திரையை சேர்த்துட் கொள்ளக் கழிச்சல் தீரும்.

வசம்பைச் சுட்டெரித்த சாம்பல் ½ வராகன் எடை, அதிமதுரத் தூள் ½ வராகன் எடை, இவ்விரண்டையும் கலந்து மேற்படி மாத்திரை ஒன்றைப் பொடித்துட் கொண்டுவர வாயுகுன்மந் தீரும்.

எருமைமோர் 1 பலம் (35 கிராம்), இதில் மேற்படி மாத்திரை ஒன்றைத்தூள் செய்துட் கொண்டுவர பித்தம் தீரும்.

அம்மான் பச்சரிசியை அரைத்தவிழுது வராகன் எடை, ஒன்றரை பசுவின் பால் அரை ஆழாக்கு, சர்க்கரை வராகன் எடை இரண்டரை இவை யெல்லாவற்றையும் கலந்து ஒரு மாத்திரையைப் பொடித்துப் போட்டு பருகச் செய்துவர இரத்தபித்தம், பெரும்பாடு, எலும்புருக்கி, வெள்ளை ஒழுக்கு, மேகம், கைகாலெரிவு, உடம்பெரிவு ஆகியவை தீரும்.

ஓமச்சூரணம் ½ வராகன் எடை, வெண்ணெய் அல்லது நெய் 1 வராகன்எடை இவ்விரண்டையும் கலந்து மேற்படி மாத்திரையைப் பொடித்துச் சேர்த்துட் கொண்டுவர, மூலக்கடுப்பு, வறள்மூலம், வாயு சம்பந்தமான மூலம் ஆகியவை தீரும்.

எலுமிச்சம் பழச்சாறு 3 வராகன் எடை இதில் மேற்படி மாத்திரையைப் பொடித்துச் சேர்த்துட் கொன்டுவர வயிற்றிலுள்ள கட்டி நோய்கள் தீரும்.

வெண்ஞெச்சிச்சாறு 1¼ வராகன் எடை இதில் ஒரு மாத்திரையைச் சேர்த்துட் கொண்டுவரச் சீதசுரம் தீரும்.

தூதுவளம்பழச்சாறு 1¼ வராகன் எடை இதில் ஒரு மாத்திரையைச் சேர்த்துட் கொண்டுவர சளை, இருமல் ஆகியவை தீரும்.

விளக்கெண்ணெய் 2½ வராகன் எடை, வசம்பைச் சுட்டெரித்த சாம்பல் 1¼ வராகன் எடை, கடுகுத்தூள் 1½ வராகன் எடை இவற்றைக் கலந்து மேற்படி மாத்திரை ஒன்றைச் சேர்த்துட் கொண்டுவர மலக்கட்டு, மலச்சிக்கல், மலபந்தம் ஆகியவை தீரும்.

நெய் 1 வராகன் எடை (3½ கிராம்) இதில் மேற்படி மாத்திரையைக் கலந்துண்ண உளைமாந்தை தீரும்.

தும்பையிலைச்சாறு 1¼ வராகன் எடை இதில் மேற்படி மாத்திரையை சேர்த்துட் கொண்டுவர எரிகுன்மம் தீரும்.

அரைப்படி கறியுப்பை ஒரு புதுச்சட்டியிற்போட்டு படபடப்பு அடங்குகிற வரையில் வறுத்து அதைக்கொட்டி விடவேண்டியது. பிறகு அதில் அரைப்படி தனித் தேங்காய்ப்பாலை விட்டு எண்ணெய்

காய்ச்சி, பளிங்குக் குப்பியில் வைத்துக் கொள்ளவும். இந்த எண்ணெய் 1 வராகன் எடை இதில் மேற்படி ஒரு மாத்திரையை கலந்துட் கொள்ள எட்டுவித குன்மம் தீரும்.

இலுப்பைப்பட்டைச்சாறு $1\frac{1}{4}$ வராகன் எடை இதில் மேற்படி மாத்திரை ஒன்றைக் கலந்துட்கொண்டுவரக் கெற்பவிப்புருதி தீரும்.

இலவம்பட்டைச்சாறு $1\frac{1}{4}$ வராகன் எடை இதில் மேற்படி மாத்திரையை கலந்துண்ண எலும்புருக்கி தீரும்.

வெள்ளரிப்பழச்சாறு அல்லது வெள்ளரி விதையை அரைத்துப் பிழிந்தபால் $2\frac{1}{2}$ வராகன் எடை இதில் மேற்படி மாத்திரையைக் கலந்துட் கொண்டுவரப் பிரமியம் தீரும்.

மோர் $2\frac{1}{2}$ வராகன் எடை இதில் மேற்படி மாத்திரையை சேர்த்துட் கொண்டுவர பெருங் கழிச்சல் நோய் தீரும்.

பனங்கருப்புக்கட்டி $1\frac{1}{4}$ வராகன் எடை இதில் மேற்படி மாத்திரையை கலந்துண்ண வெப்புப்பாவை தீரும்.

மஞ்சட்கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, மேற்ருேல் சீவினசுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, இவைகளைச் சமனுக திருத்தெடுத்து இடித்து துணியில்வடிகட்டி பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும். இந்தத்தூள் 1 வராகன் எடை இதில் மேற்படி மாத்திரையை கலந்துட் கொண்டுவரச் சுவாசகாசம் தீரும்.

தேன் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்) இதில் மேற்படி மாத்திரையைச் சேர்த்துட் கொண்டுவர உடல் பருக்கும்.

அரிசித்திப்பிலித்தூள், இலவங்கபட்டைத்தூள் இவ்விரண்டையும் சமனெடையாகச் சேர்த்துவைத்துக்கொள்ளவும். இந்தத்தூள் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்) இதில் மேற்படி மாத்திரையை சேர்த்துட் கொண்டுவர, சூலைவலி தீரும்.

வட்டத்திருப்பிச்சாறு $1\frac{1}{4}$ வராகன் எடை இதில் மேற்படி மாத்திரையை அனுபானித்துட் கொண்டுவர மேகம் தீரும்.

தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு $1\frac{1}{4}$ வராகன் எடை இதில் மேற்படி மாத்திரையைச் சேர்த்துட் கொண்டுவர நீர்க்கடுப்பு தீரும்.

கோமயம் $1\frac{1}{4}$ வராகன் எடை, இதில் மேற்படி மாத்திரையை சேர்த்துட் கொண்டுவரக் கிரந்தி தீரும்.

இலவம்பட்டைச்சாறு $1\frac{1}{4}$ வராகன் எடை, இதில் மேற்படி மாத்திரையை சேர்த்துட் கொண்டுவர வீக்கம் தீரும்.

பூவரசம்பழுப்பு, பனைவெல்லம் இவ்விரண்டையும் சமனாக நிறுத்தெடுத்து அரைத்துக்கொள்க. இந்த விழுதில் 1 வராகன் எடை, இதில் மேற்படி மாத்திரையைச் சேர்த்துண்ண ஆமக்கட்டு தீரும்.

ஆடாதோடையிலை $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), வெண்நொச்சியிலை $\frac{1}{2}$ பலம ($17\frac{1}{2}$ கிராம்) இவ்விரண்டையும் பிட்டவித்துப் பிழிந்த சாறு $1\frac{1}{4}$ வராகன் எடை இதில் மேற்படி மாத்திரையை சேர்த்துண்ண ஆமக்கட்டு தீரும்.

எலுமிச்சம்பழச் சாறு தேவையான அளவு. இதில் இரண்டு அல்லது மூன்று மாத்திரைகளை இழைத்து நெற்றியிலும் பல்லிறு களிலும் பூசி உள்ளுக்கும் கொஞ்சம் கொடுத்து வர முகசன்னி தீரும்.

எள்ளுப்பூச்சாற்றில் மேற்படி மாத்திரையை இழைத்து ஒரு அரிசி அளவு கண்ணிலிட்டு வர ஆணிப்பூ தீரும்.

முலைப்பாலில் மேற்படி மாத்திரையை இழைத்து அரிசியளவு கண்ணிலிட்டு வரக் கண்பூ தீரும்.

கருஊமத்தையிலைச்சாறு, கழுதைப்பால், சர்க்கரை இவை மூன்றையும் சமனெடையாகக் கலந்து மேற்படி மாத்திரையைக் கரைத்து மூக்கில் நசியஞ் செய்ய பயித்தியம், உன் மத்தம் ஆகியவை தீரும்.

எலுமிச்சம்பழச்சாற்றில் மேற்படி மாத்திரையை இழைத்து தலையில் அல்லது உடலில் கீறி வைத்துக் கட்ட பலவகை நஞ்சுகள் தீரும்.

ஆற்றுத்தும்மட்டி சமூலம் 5 வராகன் எடை ($17\frac{1}{2}$ கிராம்) இதைக் குடிநீர் செய்து அதில் மேற்படி மாத்திரையை கரைத்துக் கொடுக்க எலிக்கடி நஞ்சு தீரும்.

ஆற்றுத்தும்மட்டி இலைச்சாறு ½ வராகன் எடை (1¾ கிராம்), வெள்ளை வெற்றிலைச்சாறு ½ வராகன் எடை (1¾ கிராம்), சாதிக்காய்த் தூள் ½ வராகன் எடை (1¾ கிராம்) இம்மூன்றையும் கலந்து மேற்படி மாத்திரையைக் கரைத்து உட்கொள்ள வேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையும் நாற்பது நாள் உபயோகித்துவரின் செவ் வட்டை கடி தீரும்.

பேய் மிரட்டிச் சாற்றில் மேற்படி மாத்திரையை இழைத்துக் கலிக் கமிட முயல்வலி தீரும்.

குப்பை மேனிச்சாற்றில் மேற்படி மாத்திரையை இழைத்துக் கலிக்கமிட அனைத்து நஞ்சுகளும் தீரும்.

மேற்படி மாத்திரையைச் சிறுநீரில் இழைத்து உடலைக்கீறி அதில் வைத்துக் கட்ட விரியன் நஞ்சு தீரும்.

இலுப்பைப்பூவையும் மேற்படி மாத்திரையையும் தண்ணீர் வார்த்தரைத்து விரியன் கடி நஞ்சு வீக்கத்தின் மீதுபூசிவர அந்நஞ்சு வீக்கம் தீரும்.

எருக்கம்பாலில் மேற்படி மாத்திரையை இழைத்துஉடம்பை கீறி அதில் வைத்துக் கட்ட கடிவிகாரம் தீரும்.

மஞ்சள் தூள் ½வராகன் எடை (1¾ கிராம்), இதனுடன் மேற்படி மாத்திரையைச் சேர்த்து மென்று தின்னக்கொடுத்து வெற்றிலைச் சாற்றில் மேற்படி மாத்திரையை இழைத்துக் கடிவாயில் தடவ தேள் நஞ்சு உடனே தீரும்.

## குறிப்பு.

இன்னும் மேற்படி மாத்திரையை அந்தந்த நோய்களுக்குத் தகுந்த துணைமருந்துகளில் கொடுக்க அநேக நோய்கள் தீரும் இதற்காக நம்மால் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் வைத்திய சதகத்தை பார்வையிடவும்,

## 1232. இலகு அயாரிச் மாத்திரை.

மேற்றேல்ச் சீவின சுக்குத்தூள், மூசாம்பரத்தூள், கழற்சிப்பருப் புத்தூள் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்) தூய்மை செய்த நேர்வாளப்பருப்பு 1½ பலம் முதல் 2 பலம் வரை இஞ்சிச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :—வாளத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து இஞ்சிச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்தரைத்து வெண்ணெய் போலான பின்பு முன் மூன்று தூள்களையும் ஒன்ருகக் கலந்து இதில் சிறுகச் சிறுகச் சேர்த்து அரைத்து எல்லாம் கலந்த பின்பு மேற்படி இஞ்சிச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரமரைத்துக் குன்றிமணி அளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :—1 முதல் 2 மாத்திரை. கழிச்சல் அதிகம் வேண்டுமானுல் 3 முதல் 5, உடல் வலிமைக்குத் தகுந்தபடி உட்கொள்ளவும்.

துணைமருந்து :—சுக்கை அரைத்த விழுது, வெல்லம், இஞ்சி வகைகள் முதலியவைகளாம்.

தீரும் நோய்கள் :—பக்கவாதம், அண்டவாதம். அண்டவாயு, குடலேற்றம், அண்டவிக்கம், கீல்வாயு, முடக்குவாயு முதலிய வைகள் தீரும். குளிர்சுரம், நடுக்குசுரம், சூலைநோய் ஆகியவை களும், காக்கைவலி, முதலிய மூளை சம்பந்தமான நோய்களும் திரும்.

### 1233. விநோதபேதி மாத்திரை

மேற்ருேல் சீவின சுக்குத்தூள் 1 பலம் (35 கிராம்), தூய்மை செய்த நேர்வாளப்பருப்பு 1 பலம் (35 கிராம்), தூய்மை செய்த இரசம் 1 வராகன் எடை (3½ கிராம்), 1 கோழிமுட்டை, தண்ணீர் செல்லத்தக்க அளவு.

செய்முறை :—இரசத்தைக் கல்வத்திலிட்டுச் சுக்குத்தூளையுஞ் சேர்த்துத் தண்ணீரைச் சிறுகச் சிறுக வார்த்தரைத்து இரசம் மாண்டு வெண்ணெய் போலான பின்பு தனியே எடுத்து வைத்துக் கொள்ளவும். வாளத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்துத் தண்ணீரைச் சிறுகச் சிறுக வார்த்து அரைத்து வெண்ணெய் போலான பின்பு முன் சித்தப்படுத்தி வைத்திருக்கும் சுக்குக் கலவையையுஞ் சேர்த்து அரைத்து இரண்டும் கலந்த பின்பு கோழிமுட்டையை ஓட்டுடன் அதிற் சேர்த்து மெதுவாயரைத்து எல்லாம் கலந்த பின்பு அவசிய மானுல் தண்ணீரைத் துளித்துளியாக விட்டுக் கொண்டு இரண்டு சாமநேரமரைத்துக் குன்றிமணி அளவு மாத்திரைகள் செய்து பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :—1 மாத்திரை, இதனை உட்கொண்டு குளிர்ந்த நீரைப் பருகச் செய்ய வேண்டும். ஒருதடவை கழிச்சலாகும். மறுபடியும்

தண்ணீரைப் பருகச் செய்தால் மறுபடியும் கழிச்சலாகும். இவ்விதம் எத்தனை தடவை தண்ணீர் பருகச் செய்கின்றோமோ அத்தனை தடவை கழிச்சலாகும். தண்ணீர் பருகச் செய்யாவிட்டால் கழிச்சலாகாது. இது கழிச்சல் வகைகளில் விநோதமானது.

இதற்கு முரிப்பு நல்லவெல்லம், கோவையிலைச்சாறு ஆகியவைகளாம். கழிச்சல் இனி அவசியமில்லையெனத் தோன்றினால் கொஞ்சம் வெல்லத்தைச் சாப்பிட்டபோதிலும், கொஞ்சம் கோவையிலைச் சாற்றைப் பருகச் செய்த போதிலும் மருந்து வீறு முரிந்து போகும்

தீரும் நோய்கள் :— உடலிலுள்ள தீயநீர்கள் வெளிப்படும். வாயுகள், கைகால் வலி முதலியவை தீரும். அண்டவாயு, அண்ட வீக்கம் ஆகியவைகளும் தீரும்.

### 1234. சூலைபேதி மாத்திரை

தூய்மைசெய்த இரசகற்பூரம், பொரித்த வெண்காரம், கடையில் விற்கிற கெலோமல் என்னும் இரச பற்பம், மிளகுத்தூள், மேற்றோல் சீவின சுக்குத்தூள், தோலுரித்த பூண்டிதழ், பொரித்த பெருங்காயத் தூள் இவை வகை 1க்கு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), தூய்மைசெய்த நேர்வாளப் பருப்பு 7 வராகன் எடை ($24\frac{1}{2}$ கிராம்), பசுவின்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை :— வாளத்தையும், பூண்டிதழ்களையும் கல்வத்திற் போட்டுச் சிதைத்துப் பசுவின் பாலைச் சிறுகச் சிறுக வார்த்து அரைத்து வெண்ணெய் போலான பின்பு முன் சொன்ன சரக்குகளில் தூள் செய்யவேண்டியவைகளைத் தூள் செய்து மற்றவைகளையும் ஒன்றாகக் கலந்து இதில் சிறுகச் சிறுகச் சேர்த்தரைத்து எல்லாம் கலந்தபின்பு மேற்படி பாலைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம (6 மணி) நேரமரைத்துக் கடுகு அளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி பளிங்குக்குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :— 1 முதல் 3 மாத்திரை. உடல் இயல்பை ஆரம்பத்தில் நிதானித்துக் கொண்டு அதிக அளவாகவும் உட்கொள்ளலாம்.

துணைமருந்து :—வெல்லம், விளக்கெண்ணெய், இளக வகைகள் முதலியவைகளாம்.

தீரும் நோய்கள்:—பிரமேகம், நீர்ப்பை, நீர்த்தாரை முதலியவற்றி லுள்ள இரணங்கள் ஆகியவை தீரும். இன்னும் உடலில் மற்ற விடங்களிலுள்ள குழிப்புண், சிலைப்புண், அழிபுண் முதலியவைகளும் தீரும். கீல்வாயு, முடக்குவாயு, சூலை ஆகியவைகளும் தீரும்.

## குறிப்பு

இந்த மருந்தினுல் வேறு மருந்துகளில் தீராத கடினமான நோய்களெல்லாம் தீரும். இதில் இரசகற்பூரம் அதிகமாயிருப்பதால் சில உடலினர்க்குச் சீக்கிரமாக அல்லது தாமதமாக அவசியம் வாய் பிடிக்கும். ஆகையால் இதனை உபயோகிப்பவர்கள் அதிக விழிப் புடனும், கவனமாகவும் உபயோகிப்பார்களாக. இதனை விளக்கெண் ணெயுடன் சம்பந்தப்படுத்தி பயன்படுத்தி வந்தால் வாய் பிடிக்காமல் கடினமான நோய்கள் தீரும். ஆகையால் மருத்துவர்கள் தம் தம் அனுபவப்படி, சமயோசிதம் போல உபயோகிக்கவேண்டும்.

## 1235. இலிங்காதி சுககழிச்சல் குளிகை

தூய்மைசெய்த இலிங்கம், தூய்மைசெய்த இரசகற்பூரம், தூய்மைசெய்த இரசசெந்தூரம், பொரித்த வெண்காரம், (இந்நான் கையும் தனித்தனித்தூள் செய்து கொள்ளவும்), இலவங்கத்தூள் இவை வகை 1க்கு $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்), தூய்மைசெய்த நேர்வாளப்பருப்பு $12\frac{1}{2}$ வராகன் எடை ($43\frac{3}{4}$ கிராம்), தண்ணீர் செல்லத்தக்க அளவு.

செய்முறை :—கல்வத்தில் நேர்வாளப் பருப்பைப் போட்டு நசுக்கிப் பொடித்துத் தண்ணீரை வார்த்தரைத்து வெண்ணெய் போலான பின்பு முன் சரக்குகளை எல்லாம் ஒன்ருகக் கலந்து இதனுடன் சிறுகச் சிறுகச் சேர்த்தரைத்து எல்லாம் கலந்த பின்பு தண்ணீரைச் சிறுகச் சிறுக வார்த்து நான்குசாம நேரமரைத்துக் குன்றிமணி அளவு மாத்திரைகள்செய்து நிழலில் உலர்த்தி பளிங்குக்குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :—$\frac{1}{2}$ முதல் 1 மாத்திரை.

துணைமருந்து :—வெல்லம், சர்க்கரை, வெண்ணெய், பாலேடு இளகவகைகள் முதலியவைகளாம்.

தீரும் நோய்கள் :—வாதசுரம், சீதசுரம், கபசுரம், சீதளசம்பந்தமான நோய்கள், வாய்வுகள், கபநோய்கள் ஆகியவை தீரும். சீதள சம்பந்தமான நோய்களுக்கு இது மிகவும் மேலானதாகும். சூலை, பக்கவாதம், கீல்வாயு ஆகியவைகளும் தீரும்.

மருத்துணவு :—சமயோசிதம்போல் ஏற்படுத்தவும்.

### 1236. பாலவிரேசனக் குளிகை

ஏலரிசி, கோட்டம், செண்பகப்பூ, அதிமதுரம், இலவங்கப்பட்டை இவற்றைத் தனித்தனி இடித்து துணியில் சலித்த தூள் வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்), தூய்மைசெய்த நேர்வாளப்பருப்பு 2½ வராகன் எடை (8¾ கிராம்), எலுமிச்சம்பழச்சாறு செல்லத் தக்க அளவு.

செய்முறை :—தூள்களை எல்லாம் ஒன்றாகக் கலந்து வைத்துக் கொள்க. வாளத்தைக் கல்வத்திலிட்டு நசுக்கிப் பொடித்துப் பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து அரைத்து மைபோலான பின்பு முன் தூள்களைச் சிறுகச் சிறுகச் சேர்த்து எல்லாம் கலந்த பின்பு மேற்படி பழச்சாற்றைச் சிறுக விட்டு இரண்டு சாம நேரமரைத்துக் குன்றிமணி அளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :—சிறு பிள்ளைகளுக்கு 1 மாத்திரை. பெரிய பிள்ளைகளுக்கு 2 மாத்திரை. இவ்விதமே வயதிற்குத் தகுந்தபடி மூன்று முதல் ஐந்துவரையில் சமயோசிதம்போல் உபயோகிக்கவும்.

துணைமருந்தும், தீரும் நோயும் :—முலைப்பாலில் ஒரு மாத்திரையைக் கொடுத்தால் மாந்தத்தினால் வயிறு பொருமி உப்புசமாயிருத்தல் தீரும். அதாவது பொருமுமாந்தம் தீரும். பெரிய பிள்ளைகளுக்குப் பேதியாக வேண்டுமானால் ஐந்து மிளகுடன் ஒரு மாத்திரையை வைத்துப் பொடித்து இளவெந்நீரில் கலக்கிக் கொடுக்கச் சுகமாகக் கழிச்சலாகி வயிற்றிலுள்ள கட்டுகள் தீரும். வல்லாரையைப் பிட்டவித்து அந்தத் தண்ணீரில் ஒரு மாத்திரையை கலந்துக் கொடுத்தால் பிள்ளைகளுக் குண்டாகியிருக்கும் விடாசுரம் தீரும். பொடு தலைப் பிட்டவித்த நீரில் ஒரு மாத்திரையை இழைத்துக் கொடுத்தால் மாந்தத்தினால் காணும் வயிற்றுப்புசம் வயிற்றுப் பொருமல் முதலியவைகளும், பலவகை மாந்தங்களும் தீரும்.

## 1237. தசவாயு பேதி மாத்திரை

தூய்மைசெய்த இரசம், தூய்மைசெய்த சாதிலிங்கம், பொரித்த வெண்காரம், இவை வகைக்கு 1 வராகன் எடை, இந்துப்பு, மஞ்சட் கடுக்காய்த் தோல்தூள், கடுகுரோகணித்தூள், தூய்மைசெய்த வெள்ளைக் காக்கட்டான் வேர்த்தோல் தூள் இவை வகைக்கு 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), தூய்மைசெய்த நேர்வாளப்பருப்பு $7\frac{1}{2}$ வராகன் எடை ($26\frac{1}{4}$ கிராம்), பிரண்டைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :— இரசத்தையும் இலிங்கத்தையும் கலக்கும்படி அரைத்து மறுபடி வெண்காரத்தையும், இந்துப்பையும் சேர்த்தரைத்து மற்ற தூள்களை யெல்லாம் ஒன்றாகக் கலந்து இதனுடன் சேர்த்து ஒன்றாய்க் கலக்கும்படியாக அரைத்தெடுத்து வைத்துக் கொள்க. வாளத்தை கல்வத்திலிட்டுச் சிதைத்துப் பொடித்து பிரண்டைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்தரைத்து மைபோலான பின்பு முன் சித்தப்படுத்தி இருக்கும் தூள்களையும் சிறுகச் சிறுகச் சேர்த்து அரைத்து எல்லாம் ஒன்றாகக் கலந்த பின்பு மேற்படி பிரண்டைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரமரைத்து உளுந்தளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி பளிங்குக்குப்பி யில் பத்திரப் படுத்தவும்.

அளவு :— 1 முதல் 2 மாத்திரை. கழிச்சலாக வேண்டுமானால் 3 முதல் 4 மாத்திரைகள் சாப்பிடவும்.

துணைமருந்து :—இஞ்சிச்சாறு

தீருமநோய்கள் :— பலவகை வாயுக்கள், மந்தாக்கினி, வயிற்றி லுள்ள கட்டிகள், ஆமக்கட்டு முதலியவைகள் தீரும்.

மருத்துணவு :—மெல்லுணவு (இலகுபோசனம்), இரசம் சாதம், கூப்பு முதலியவைகளாகும்.

## 1238. இலகுபால விரேசனக் குளிகை

இலவங்கம், ஏலரிசி, சன்னலவங்கப்பட்டை, அதிமதுரம், கோட்டம், சண்பகமொக்கு, இவற்றைத் தனித் தனியிடித்து துணி யில் சலித்த தூள் வகைக்கு $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்), தூய்மை செய்த நேர்வாளப்பருப்பு $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்), எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—எல்லாத் தூள்களையும் ஒன்ருகக் கலந்து வைத்துக் கொள்க. வாளத்தைக் கல்வத்திலிட்டு நசுக்கிப் பொடித்துப் பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து அரைத்து மைபோலானபின்பு முன் சித்தப்படுத்தி வைத்திருக்கும் தூள்களையும் சிறுகச் சிறுகச் சேர்த்து அரைத்து கலந்து முன் பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து மூன்று சாம நேரமரைத்துக் கடலை அளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பளிங்குக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

அளவு:—சிறு பிள்ளைகளுக்கு 1 முதல் 2 வரை. பெரிய பிள்ளை களுக்கு 2 மாத்திரை முதல் 4 வரை.

துணைமருந்து:—தாய்ப்பால், இஞ்சிச்சுரசம், பொடு தலையைப் பிட்டவித்துப் பிழிந்த நீர், வல்லாரையைப் பிட்டவித்துப் பிழிந்த நீர், தேன் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:—குழந்தைகளின் சுரம், மாந்தம், வயிற்று பொருமல், அள்ளுமாந்தம், உப்புமாந்தம், வயிற்றிரைச்சல் முதலிய நோய்கள் தீரும். இது சாப்பிட்டுச் சாயங்காலம் கொஞ்சம் சுக்கைத் தட்டிப் போட்டு சீரகத்தை வெடிக்க வறுத்துக் கொஞ்சம் தண்ணீர் விட்டுக் காய்ச்சிக் குடிநீர்செய்து சாப்பிடவும்.

## 1239. இராஜ விரேசனக் குடிநீர்

சோற்றுக் கற்ருழைச் சருகு, வேப்பீர்க்கு, கரிவேப்பிலையீர்க்கு, விழுதியிலை இவை வகைக்குப்பிடி 1, மஞ்சட் கடுக்காய், 15 (இவற்றை நசுக்கி உட்கொட்டையை நீக்கிவிட வேண்டியது) 15 கொட்டைப் பாக்கு, 15 களிப் பாக்கு, கோது கொட்டை நீக்கின பழம்புளி, எலுமிச்சம்பழத்தளவு, காடி $\frac{1}{2}$ படி.

செய்முறை:—மேற்கண்டவைகளில் கொட்டைப் பாக்கு, களிப் பாக்கு ஆகியவைகளை நறுக்கி நையச் சிதைத்துக் கொள்ளவேண்டும். புளியைத் தவிர மற்றவைகளையும் சிதைத்துக் காடியை ஒரு பாண்டத்தில் விட்டு அதில் புளியைக் கரைத்து முன் சித்தப்படுத்தினவை களையும் அதிற் போட்டுப் பானை வாய்க்கு வேடுகட்டி வெய்யிலில் வைத்து வரவேண்டும். இரண்டு மூன்று நாள்கள் சென்றபின்பு பேதி மருந்து சாப்பிடும் முதல் நாளிரவு பாற் கஞ்சியைக் குடித்துத் தூங்கி விழித்துக் காலையில் முன் சித்தப்படுத்தி வைத்திருக்கும் காடி நீரில் சுமார் ஒரு ஆழாக்கு தெளிவை இறுத்துப் பருகச்

செய்யவேண்டும். வயிற்றிலுள்ள கட்டுப்பட்ட மலங்களெல்லாம் நீங்கும். இடையில் ஒருநாள் விட்டு மறுநாளும் முன்போலவே செய்ய வேண்டும். இப்படிச் செய்வதால் பாண்டு நோய், வல்லைக் கட்டி, கவுசை, மகோதரம் முதலியவைகள் தீரும். வயிற்றிலுள்ள நுண்புழுக்கள் நாசமாகும், குன்மக்கட்டி, சூதகக்கட்டி முதலியவைகளும் தீரும். இது அதிகமாகக் கழிச்சலாகும் இயல்புடையதாகையால் அவரவர்கள் உடல் இயல்பை நிதானித்து இதனை உபயோகிக்க வேண்டும். ஆனுல் எவ்வளவு கழிச்சலான போதிலும் களைப்பு, ஆயாசம், வயிற்றுவலி, எருவாய் எரிச்சல் முதலிய எவ்வித தீய குணங்களுமிரா. கழிச்சல்ாக எல்லோரும் சாப்பிடலாம். முன்கண்ட விதமாக நோய்களிலிலும் பேதிக்குக் கொடுக்கலாம்.

## 1240. கழிச்சல் நெய்

பசுவின் நெய் ½ படி, பசுவின்பால் ½ படி, தேங்காயின் தனிப் பால் ½ படி, சதுரக்கள்ளிப்பால் 1 ஆழாக்கு இவைகளைக் கலந்து அடுப்பேற்றி சிறு தீயாக எரித்து நீரெல்லாம் சுண்டி நெய்யான பதத்தில் இறக்கி இளஞ் சூட்டுடன் வடிக்கட்டி புட்டியில் பத்திரப் படுத்தவும்.

அளவு:—1 முதல் 2 வராகன் எடை.

துணைமருந்து:— சர்க்கரை, காப்பி, தேநீர், பால் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:—பாண்டு, மகோதரம், கவுசை முதலிய நோய்கள் தீரும். வயிற்றிலுள்ள நுண்புழுக்களெல்லாம் பந்து பந்தாய் வந்து விழும். ஆமக்கட்டி, வல்லைக்கட்டி, சூதகக்கட்டி, குன்மக்கட்டி முதலியவைகளும் குணப்படும்.

குறிப்பு:— கழிச்சல் அதிகமானால் தண்ணீரில் குளிக்கச் செய்து மோர் சாதம் சாப்பிட பேதி கட்டுப்படும்.

## 1241. கழிச்சல் நெய் (வேறு)

தேங்காயின் தனிப்பால் ½ படி, தூய்மை செய்த நேர்வாளப் பருப்பு 2½ வராகன் எடை (8¾ கிராம்).

இதனை மேற்படி பால் விட்டரைத்து மேற்படி பாலிற் கலக்கிக் காய்ச்சி நெய்யான பதத்தில் வடிகட்டி பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :—1 முதல் 3 துளிகள். உடல் வலிமைக்குத் தகுந்தபடி கொடுக்கவும்.

துணைமருந்து:— புளித் தெளிநீர் மணப்பாகு, பன்னீர் மணப்பாகு, எலுமிச்சம்பழ மணப்பாகு, தேநீர், காப்பி முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:—நன்ருய் கழிச்சலாகும்; வயிற்றிலிலுள்ள கெட்ட மலங்கள் நீங்கும். மாலையில் கொஞ்சம் மிளகை வறுத்துடைத்து அதிற் கொஞ்சம் சீரகத்தை சேர்த்து வறுத்து முக்கால் ஆழாக்கு நீரை விட்டு கால் ஆழாக்காக சுண்ட வைத்து வடிகட்டி பருகச் செய்ய வேண்டும்.

## 1242. மல சலக்கட்டு நெய்

பசுவின்னெய் $\frac{1}{4}$ படி, சாரணை வேரை இடித்துப் பிழிந்த சாறு $\frac{1}{4}$ படி, தூய்மை செய்த நேர்வாளப்பருப்பு, $\frac{3}{4}$ வராகன் எடை, தோலுரித்த வெள்ளைப் பூண்டிதழ் $\frac{3}{4}$ வராகன் எடை, மேற்ருேல் நீக்கின சுக்கு $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்), மிளகு $1\frac{1}{4}$ வராகன் எடை.

செய்முறை:—மேற்படி சரக்குகளை எல்லாம் பொடித்து மேற்படிச் சாற்றை வார்த்து வெண்ணெய் போலரைத்து மிகுந்திருக்கிற சாற்றில் கரைத்து நெய்யிற் கலந்து அடுப்பேற்றி மெதுவாக எரித்துக் கடுகுதிரள் பதத்தில் இறக்கி வடிகட்டி பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு:—1 முதல் 2 வராகன் எடை.

துணைமருந்து:—சர்க்கரை, குடிநீர்வகைகள், சோம்புத் திராவகம் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:—மலம், சிறுநீர் கட்டிக்கொண்டு அதிக தொந்திர வாயிருக்கும் சமயத்தில் இதனை உபயோகித்தால் உடனே அடைப்பு நீங்கி மலம், சிறுநீர் வெளிப்படும். நீர்த்தாரையில் கல் அடைப்பட்டிருந்தாலும் அதுவும் நொறுங்கிச் சிறுத்து வெளிப்பட்டுப் போகும். இவ்வித சமயங்களில் எனிமா என்னும் பீச்சாங் குழலை உபயோகிக்கிருர்கள். அதனுல் பெரும்பான்மையும் தொல்லையும் இழப்பும் உண்டாகுமே ஒழிய நன்மைக்கு ஏதுவில்லை; அந்த சமயங்களில் இவ்வகை மருந்துகளை பயன்படுத்துவதால் அதிக நன்மைக்கேதுவாகும்.

## 1243 சிவதை நெய்

(அ) தூய்மைசெய்த சிவதைவேர் 5 பலம், மஞ்சட் கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிமுள்ளி இவை வகைக்கு 4 பலம், உலர்ந்த மூக்குரட்டை வேர்த்தோல், உலர்த்தின சாரணை, வேர்த்தோல், வேப்பம்பட்டை, புங்கம்பட்டை, இவை வகைக்கு 4 பலம், கொடிவேலி வேர்ப்பட்டை 2 பலம் (70 கிராம்).

(ஆ) நல்ல பசுவின்னெய் 1 படி, பசுவின்பால் 1 படி, பசுவின் கோமியம் 1 படி, பிரம்மியிலைச்சாறு 1 படி, எருக்கம்பால் $1\frac{1}{4}$ படி, இந்துப்பு, வளையலுப்பு, வாய்விளங்கம், மிளகரணை வேர்த்தோல், கடுகுரோகணி, செவ்வியம், தேவதாரம், மஞ்சள், மரமஞ்சள், அரிசித்திப்பிலி, சிறுதேக்கு, பெருங்காயம், மைசாட்சி, இவை வகைக்கு $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்).

செய்முறை:—(அ) விலுள்ள சரக்குகளை எல்லாம் நைய சிதைத்து எட்டு படி குடிநீரில் போட்டு காய்ச்சி ஒரு படியாய் சுண்டவைத்து வடிக்கட்டின குடிநீரில் (ஆ) விலுள்ள நெய், பால்கள், சாறு வகைகள் முதலியவைகளை அதிற் விட்டுக் கலந்து மற்றச் சரக்குகளையும் அரைத்து கரைத்து அடுப்பேற்றி சிறு தீயாக எரித்துக் கடுகு திரள் பதத்தில் இறக்கி வடிகட்டிப் பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு:— 1 முதல் 2 வராகன் எடை.

துணைமருந்து:— சர்க்கரை, தேன், குடிநீர் வகைகள் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:—எல்லாவகைக் குன்ம நோய்கள், பீலிகை, மகோதரம், சோகை, பாண்டு, நச்சுபாகம், உதிரக்கட்டு, மூலவாயு கருப்பைவாயு, சுரோணிதவாயு, இரைப்பிருமல் முதலியவைகளும் இன்னும் இரைப்பை சம்பந்தமான நோய்களும் தீரும்.

மருந்துணவு:—நோயின் வலிமை, உடல் வலிமை ஆகியவைகளுக்கு தகுந்தபடி புளி, உப்பு முதலியவைகளைச் சேர்த்தும் சேர்க்காமலும் பத்திய மேற்படுத்தலாம்; புகை, புணர்ச்சி ஆகியவைகளை அவசியம் நீக்க வேண்டும்.

## 1244. கருமேக பேதி

தூய்மை செய்த இரசம், தூய்மை செய்த இரசகற்பூரம், தூய்மை செய்த நேர்வாளப் பருப்பு, கள்ளிப்பால் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்), தூய்மை செய்த சேராங்கொட்டை 4 பலம் (140 கிராம்), சிற்றாமணக் கெண்ணெய் 8 பலம் (280 கிராம்).

செய்முறை:— முன்சொன்ன நான்கு சரக்குகளையும் சேர்த்தரைத்து பொடித்து எண்ணெயிற் கலக்கி சேராங்கொட்டையும் அதிற் போட்டு அடுப்பேற்றி மெதுவாக எரித்து எண்ணெய் கக்கி கொட்டை மிதந்தவுடன் கொட்டைகளை நீக்கி விட்டு கடுகை எடுத்து கல்வத்திலிட்டு வெண்ணெய் போலரைத்து எண்ணெயிற் கலக்கி பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு:— 1 முதல் 1½ வராகன் எடை.

துணைமருந்து:— சர்க்கரை, இளநீர், வாழைப்பழம் முதலிவைகளாம்.

தீரும்நோய்கள்:— கைகால், உடல் முதலியவைகளெல்லாம் கறுத்திருக்கிற கறுப்பு வகை மேகங்கள், கைகால்முடக்கு, முழங்கால் வாதம், நரித்தலைவாதம், கருப்பை வாயு, கருப்பையூரல் முதலிய அநேக மேக நோய்கள் தீரும்.

மருத்துணவு:— புளி, புகை, புணர்ச்சி ஆகியவைகளை நீக்க வேண்டியது. நோய் வலிமையாக இருந்தால் உப்பை வறுத்துச் சேர்த்துக் கொள்ளலாம். உடல் வலிமை, நோய் வலிமை ஆகியவைகளுக்குத் தகுந்தது போலும் சமயோசிதமாகவும் மருத்துணவு ஏற்படுத்தவும்.

குறிப்பு :— இது கழிச்சல் அதிகமாக்கும் இயல்பை உடையதாகையால் ஆரம்பத்தில் உடல் இயல்பை அறிய வேண்டியது அவசியம். இதற்காக துளிக்கணக்காகக் கொடுத்து உடல் இயல்பை அறிந்து கொள்ளவேண்டியது.

இன்னும் இளமையான உடலினர்க்கு இதனை உபயோகிக்க வேண்டியதாக இருந்தால் மேற்கண்ட சரக்குகளைப் பலத்திற்குப் பதிலாக வராகன் எடை கணக்காகச் சேர்ந்து சித்தப்படுத்திக் கொள்ளலாம். இப்படிச் செய்வதால் சுகமாகக் கழிச்சலாகும்; கடின கழிச்சலாகாது.

## 1245. பேதி பச்சையெண்ணெய்

சிற்றாமணக் கெண்ணெய் 16 பலம் (560 கிராம்), சோற்றுக் கற்றாழைச்சாறு 16 பலம் (560 கிராம்), காட்டுச்சிறுகீரைச்சாறு 4 பலம் (140 கிராம்), தூய்மை செய்த வாளம் 1 பலம் (35 கிராம்), சாணிப்பாலில் வேகவைத்து மேற்தோல், நடுவிலிருக்கிற முளை யிலை ஆகியவைகளை நீக்கி வெய்யிலில் உலர்த்தி கொஞ்சம் நெய்யைத் தெளித்து வறுத்து எடுத்த புரசம் விதை 1 பலம் (35 கிராம்), விரலிமஞ்சள் ½ பலம் (17½ கிராம்), புளித்தகாடி 16 பலம் (560 கிராம்).

செய்முறை :— சரக்குகளை எல்லாம் தூள்செய்து அரைத்து எண்ணெயிற் கலக்கி திரவங்களையும் அதிற் கலந்து அடுப்பேற்றி சிறு தீயாக எரித்து கடுகுதிரள் பதத்தில் இறக்கி வடிகட்டி பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :— 1 முதல் 5 வராகன் எடை.

துணைமருந்து :— இளநீர், காப்பி, தேநீர், எலுமிச்சம்பழ மணப்பாகு, வெந்நீர், புளித்தெளிநீர், மணப்பாகு, பன்னீர் மணப் பாகு முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :— சுகமாய்க் கழிச்சலாகும். சீதக்கட்டு, மலக் கட்டு, பலவகை வாயுக்கள், பலவகை நுண்புழுக்கள் ஆகியவை தீரும். சிறுவர்களுக்கு தாய்ப்பாலில் சேர்த்து வயதிற்குத் தக்கபடி கொடுக்கவும். மாந்தம், செரியாமை, இசிவு, அள்ளு, முதலிய குழந்தை நோய்கள் அநேகம் தீரும்.

மருத்துணவு :— சமயோசிதம் போல் புளி, உப்பு ஆகியவை களைச் சேர்த்தும், சேர்க்காமலும் உபயோகிக்கவும். ஆனால் புகை புணர்ச்சி ஆகியவைகளை அவசியம் நீக்கவேண்டியது.

## 1246. நாக்குப்பூச்சி எண்ணெய்

சிற்ருமணக் எண்ணெய் ¼ படி, பசுவின்பால் ¼ படி, தேங்காய்த் தனிப்பால் ¼ படி, காட்டெருமைப்பால் ⅛ படி, மேற்கண்டபடி தூய்மைசெய்த புரசம் விதைப்பருப்பு 1 பலம் (35 கிராம்).

செய்முறை :—முன்நான்கு திரவங்களையும் ஒன்ருகக் கலந்து அதில் புரசம் விதையை அரைத்துக்கரைத்து அடுப்பேற்றி மெதுவாக எரித்துக் கடுகுதிரள் பதத்தில் இறக்கி வடிகட்டிப் பளிங்குக்குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :—1 முதல் 2 வராகன் எடை.

துணைமருந்து :—சர்க்கரை, தாய்ப்பால், காப்பி ,தேநீர் முதலிய வைகளாம்.

தீரும்நோய் :—வயிற்றிலுள்ள தட்டைப்பூச்சி, நுண்புழு, நீளப் பூச்சி முதலியவைகள் வெளிப்பட்டு சுகமுண்டாகும்.

குறிப்பு :— மேற்படி பாகத்தில் காட்டெருமைப்பாலிற்குப் பதிலாக்க் காட்டெருமைப் பாலெனக் கடையில் விற்பதை ஐந்துபலம் (175 கிராம்), வாங்கி ஒரு ஆழாக்கு நீரில் கரைத்து வடிகட்டிச் சேர்த்து மேற்கண்டபடி புரசம் விதையையுஞ் சேர்த்து செய்து கொள்வது அனுபவமுறை. ஆனால், காட்டெருமைப்பாலென்பது எருக்கம் பாலிற்கும் பெயராம். ஆகையால் விருப்பமானவர்கள் காட்டெருமைப் பாலிற்குப் பதிலாக எருக்கம்பாலைச் சேர்த்துச் செய்து கொள்ளவும்.

## 1247. நுண்புழு எண்ணெய்

சோற்றுக் கற்ருழைச்சாறு, வெங்காயச்சாறு, ஆற்றுத்தும்மட்டிக் காய்ச்சாறு, பசுவின்பால், தேங்காய்ப்பால், சிற்ருமணக் கெண்ணெய் இவை வகைக்கு 8 பலம் (280 கிராம்).

செய்முறை :—எல்லாவற்றையும் ஒன்ருகக் கலந்து அடுப்பி லேற்றி சிறுதீயாக எரித்து கடுகுதிரள் பதத்திலிறக்கிப் பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :— 1 முதல் 3 வராகன் எடை.

துணைமருந்து :— சர்க்கரை, குடிநீர் வகைகள் முதலியவை களாம்.

தீரும்நோய் :—இது சுகமாய்க் கழிச்சலாகக் கூடியதாகையால் குழந்தைகள், முதியவர்கள், பெண்கள் முதலிய எல்லோருக்கும் தாராளமாக உபயோகிக்கலாம். வயிற்றுக்குள் உள்ள பதினெட்டு வகைக் கிருமிகளும் வெளிப்பட்டு உடல்நலம் உண்டாகும். இந்த நுண்புழு நோயால் சிறுவர்கள், முதியவர்கள் முதலியவர்களெல்லாம் அதிக துன்பப்படுவதுண்டு. அத்தகையினர்களுக்கு இது சஞ்சீவிக் கொப்பானது.

## 1248. கிருமியுசிதம்

ஒருகோழி முட்டையை வேகவைத்து அதன் மஞ்சட்கருவை எடுத்து வயதிற்குத் தகுந்தபடி ஒன்று முதல் இரண்டு பலம் சிற்றாமணக் கெண்ணெயிற் குழைத்துச் சாப்பிடக் கொடுக்கவும். இதனால் வயிற்றிலுள்ள கிருமிகளெல்லாம் நாசமாகி வெளிப்பட்டு போகும். சில பிள்ளைகள் வயிற்றில் கிருமி இருப்பதால் நாளுக்கு நாள் உடல் இளைத்து வலுக்குறைவு ஏற்பட்டு வருவார்கள். அத்தகையினர்களுக்கு மேற்சொன்ன கிருமியெண்ணெயும் இந்த அண்டப் பிரயோகமும் அதிகம் உபயோகப் படத்தக்கவைகள். இந்த அண்டப் பிரயோகத்தை இரண்டு அல்லது மூன்று நாளைக் கொருதடவை உபயோகித்து வரவேண்டும். இவ்விதம் செய்வதால் வயிற்றிலுள்ள நுண்புழுக்கள் நீங்கி உடல் பருத்து வலுவுண்டாகும்.

## 1249. மணி பேதி

வேலிப்பருத்தி சமூலச்சாறு $\frac{1}{4}$ படி, பருமனுள இரண்டு தேங்காயின் தனிப்பால் $\frac{1}{8}$ படி, மேற்றோல் சீவியசுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி தூய்மைசெய்த நேர்வாளப்பருப்பு இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்).

செய்முறை :— சரக்குகளை இடித்து தூள்செய்து மேற்படி தேங்காய்ப்பாலைவிட்டு வெண்ணெய் போலரைத்து மேற்படி பாலிற் கரைத்து உத்தாமணிச் சாற்றையும் அதிற் கலந்து அடுப்பேற்றி எரித்து நீரெல்லாம் சுண்டி எண்ணெயான பதத்தில் இறக்கி வடிகட்டி பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :— ஐந்து முதல் பத்து துளி வரை.

துணைமருந்து :— வெந்நீர், காப்பி, தேநீர், பால் முதலியவை களாம்.

தீரும்நோய்கள் :— வயிற்றிலுள்ள கெட்ட மலங்களெல்லாம் வெளிப்பட்டு உடல் தூய்மையாகும்; பக்கவாதம், கீல்வாதம், அங்குலிவாதம், வயிற்றுக்கட்டி, சூதகவாயு முதலிய பல நோய்கள் தீரும்.

மருந்துணவு :— நோய் வலிமைக்குத் தகுந்தபடி புளி, உப்பு முதலியவைகளை சேர்த்தும் சேர்க்காமலும் உபயோகிக்க வேண்டியது. இதனை கழிச்சலாகச் சாப்பிட்டால் மத்தியானம் மிளகுரசம் சோறு, சூப்பு முதலியவைகளை சேர்த்துக் கொள்ளலாம். கழிச்சல் அதிகமானால் மோர் முறைமையாக சாப்பிட நின்று போகும். கிரமமாகக் கழிச்சலாகாவிட்டால் அடிக்கடி கொஞ்சம் வெந்நீரை பருகினால் நன்றாகக் கழிச்சலாகும்; மாலையில் நான்கு மணிக்கு வெந்நீரில் உடற்குளிப்பு செய்யவும்; இதை மருந்தாகக் குறைந்த அளவுடன் உபயோகித்துவரின் மேற்கண்ட விதிகள் அவசியமில்லை; சமயோசிதம்போல் செய்து கொள்ள வேண்டியது தான் விதி.

## 1250 அரையாப்பு எண்ணெய்

சிற்றாமணக்கெண்ணெய் 10 பலம் (350 கிராம்), மூக்குரட்டை வேர், நத்தைச்சூரிவேர், இவ்விரண்டையும் சனிக்கிழமை அறிக்கை செய்து பிடுங்கி மேற்றோலை எடுத்துக் கொள்ளவும்; வசம்புத்தூள், தோலுரித்த வெங்காயம், தோலுரித்த வெள்ளைப் பூண்டிதழ் இவை வகைக்கு $1\frac{1}{4}$ பலம் ($43\frac{3}{4}$ கிராம்).

செய்முறை :— மேற்கண்டவைகளை எல்லாம் அரைத்து எண்ணெயிற் கலக்கி அடுப்பேற்றி சிறுதீயாக எரித்து கடுகுதிரள் பதத்திலிறக்கி வடிகட்டி வைத்துக் கொள்ளவும்.

அளவு :— $1\frac{1}{4}$ வராகன் எடை முதல் $2\frac{1}{2}$ வராகன் எடை வரையில் உடல் வலிமையறிந்து இன்னும் அதிகமாகவும் கொடுக்கலாம். நோய் வலிமைக்குத் தகுந்தபடி ஐந்துநாள், ஏழுநாள் ஒன்பதுநாள் உபயோகிக்கலாம். கட்டிகளின் மீதும் பூசிவர வேண்டியது.

தீரும்நோய்கள் :—அரையாப்புக்கட்டி, தொடைக்கட்டி முதலிய பலவகைக் கட்டிகள், பிரமேகம் ஆகியவை தீரும்.

மருத்துணவு :—நோய் கடினமாயிருந்தால் புளி, புகை, புணர்ச்சி ஆகியவைகளை நீக்கவும்

## 1251. பால்பேதி எண்ணெய்

எருக்கம்பால் 5 பலம் (175 கிராம்), தேங்காய்ப்பால் 5 பலம் (175 கிராம்), மாவிலிங்கப்பட்டைச்சாறு 5 பலம் (175 கிராம்), வெள்ளெருக்கின் வேர்ப்பட்டை 4 பலம் (140 கிராம்), தூய்மை செய்த அரிதாரத் தூள் 2 பலம் (70 கிராம்), தூய்மை செய்த நீரடி முத்துப் பருப்பு 1 பலம் (35 கிராம்), தூய்மை செய்த நெல்லிக்காய்க் கெந்தகத்தூள் 1 பலம் (35 கிராம்), கருஞ்சீரகத் தூள் 1 பலம் (35 கிராம்), இலவங்கத்தூள் 1 பலம் (35 கிராம்), வெண்ணொச்சியிலை 1பலம் (35 கிராம்), தூய்மையான சேராங்கொட்டை எண் 20 தூய்மையான நேர்வாளப் பருப்பு எண் 40, நல்லெண்ணெய் 1 படி.

செய்முறை:—வேர்களையும் இலைகளையும் அம்மியில் வைத்து மைபோலரைத்துக் கொள்ளவும்; மற்றத் தூள்களையும் கல்வத்தி லிட்டு முன் அரைத்த விழுதை அதிற் சேர்த்து கலக்கும்படி அரைத்து பாலினங்களையும் சேர்த்து வெண்ணெய் போலரைத்து எண்ணெயிற் கலக்கிக் கொள்ளவும் கல்வத்திலரைப்பது கடினமாக இருந்தால் அம்மியில் வைத்து அரைத்துக் கொள்ளலாம். பின்பு அடுப்பேற்றி சிறுதீயாக எரித்துக் கடுகுதிரள் பதத்திலிறக்கி வடிகட்டி பளிங்குக் குப்பியில் விட்டு வாய்மூடி செய்து தானிய புடம் மூன்றுநாள் வைத்து எடுத்து உபயோகிக்கவும்.

அளவு:— 1¼ முதல் 2 வாரகன் எடை, குட்டநோய் மேக நோய் முதலிய கொடிய நோய்களுக்கு கழிச்சலுக்காக கொடுக்க இது மிகவும் சிறந்தது. மற்ற மருந்துகளைப் போல சாதாரணமாகவும் இதனை உபயோகித்து வரலாம்.

தீரும்நோய்கள்:— பதினெட்டு வகை குட்டநோய்களும் தீரும். மேகரணம் முதலிய பலவகை ரணங்களுக்கு மேலே பூசக் குணப்படும் ரணங்களிலுள்ள புழுக்கூட்டோடே விழும்.

மருத்துணவு:— உடல் இயல்பிற்குத் தக்கபடி இச்சாபத்தியமும் வைக்கலாம்; உப்பைத்தள்ளியும் வைக்கலாம். ஆனால் சமயோசிதம்போலச் செய்வதுதான் ஏற்றதாகும்.

## 1252. மேகபேதி எண்ணெய்

குன்மகுடோரி இலைச்சாறு, வெங்காயச்சாறு, கழற்சி இலைச் சாறு, சிற்றாமணக்கெண்ணெய் இவை வகைக்கு $\frac{1}{2}$ படி, தூய்மை செய்த இரசகற்பூரம், தூய்மை செய்த இரசம், தூய்மை செய்த நேர்வாளப்பருப்பு இவை வகைக்கு $\frac{1}{4}$ பலம் ($1\frac{3}{4}$ கிராம்).

செய்முறை :— சாறுகளை எல்லாம் ஒன்றாகக் கலந்து எண்ணெயுடன் சேர்த்துக் கொள்ளவும். இரசம், இரசகற்பூரம், வாளம் இம் மூன்றையும் வெண்ணெய் போலரைத்து முன் சித்தப்படுத்தி வைத்திருப்பதில் கரைத்து அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்துக் கடுகுதிரள் பதத்திலிறக்கி வடிக்கட்டி பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு:— $1\frac{1}{4}$ முதல் 2 வராகன் எடை.

தீரும்நோய்கள் :—வயிற்றிலிலுள்ள குன்மக்கட்டி, குன்மநோய், செரியாமை முதலியவைகள் தீரும். இதனைக் கழிச்சலாவதற்கு சாப்பிட்டால் இரைப்பை, குடல் இவைகளிலுள்ள கெட்ட நீர்களெல்லாம் நீங்கி உடல் நலமுண்டாகும்.

மருத்துணவு :— சமயோசிதம் போல் பத்திய மேற்படுத்தவும்.

## 1253. விநோத பேதி

தூய்மை செய்த இரசம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), கெந்தகம் 2 வராகன் எடை (7 கிராம்), தூய்மை செய்த நேர்வாளப்பருப்பு 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), வெட்பாலை அரிசி 4 வராகன் எடை (12 கிராம்), பொரித்த வெண்காரம் 5 வராகன் எடை ($17\frac{1}{2}$ கிராம்), தூய்மை செய்த ஆமணக்குப் பருப்பு 6 வராகன் எடை (21 கிராம்), கார் போகரிசித் தூள் 10 வராகன் எடை (35 கிராம்), மூங்கில் வேர்ப்பட்டை 11 வராகன் எடை ($38\frac{1}{2}$ கிராம்), கொம்புக்கள்ளிப்பால் தேவையான அளவு.

செய்முறை :— இரசத்தையும் கெந்தகத்தையும் கலக்கும்படி அரைத்து நன்றாகக் கருத்தவுடன் எடுத்து வைத்துக் கொள்க. மற்றச் சரக்குகளையும் தனித்தனி இடித்துத் தூள் செய்தும், அரைக்க

வேண்டியவைகளை அரைத்தும் எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கள்ளிப்பாலைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாம நேரமரைத்து ஒரு முற்றின தேங்காய்க்குட் செலுத்தி வாய்க்கு முளையடித்து வெய்யிலிற் போட்டு வைத்து ஒரு வாரம் பத்து நாள் சென்றெடுத்தால் எண்ணெயாயிருக்கும். இதில் ஏதேனும் கொஞ்சம் நீர்ப் பசை யிருந்தால் அதை வெய்யிலில் வைத்து ஈரத்தைப் போக்கிக் கொள்ளவும்.

தீரும்நோய்:—இந்த எண்ணெயி கொஞ்சமெடுத்து நாபியைச் சுற்றிலும் தடவி வைக்க நன்றாகக் கழிச்சலாகும். கழிச்சல் அதிகமானால் அதைத் துடைத்து விட்டுச் சந்தனத்தை இழைத்து தடவி வைக்க உடனே கழிச்சல் நின்று விடும். வயிற்றிலிலுள்ள தீய மலங்கள் நீங்கி உடல் நலமுண்டாகும்.

## 1254- பேதிக் கருப்பு மெழுகு

தூய்மை செய்த இரசம் 1 வராகன் எடை (3½ கிராம்), தூய்மை செய்த கெந்தகம் 2 வராகன் எடை (7 கிராம்), பொரித்த வெண்காரம் 3 வராகன் எடை (10½ கிராம்), மிளகுத்தூள் 4 வராகன் எடை (14 கிராம்), வெடியுப்பு 5 வராகன் எடை (17½ கிராம்), மஞ்சட்கடுக்காய்த் தோல் தூள் 6 வராகன் எடை (21 கிராம்), தூய்மை செய்த நேர்வாளம் 3 வராகன் எடை (10½ கிராம்), பனைவெல்லம் 24 வராகன் எடை (84 கிராம்).

செய்முறை :— இரசத்தையும் கெந்தகத்தையும் கலக்கும்படி அரைத்து நன்றாகக் கலந்த பின்பு மற்றச் சரக்குகளையும் கூடச் சேர்த்தரைத்து எல்லாம் கலந்த பின்பு பனை வெல்லத்தைச் சிறுகச் சிறுகச் சேர்த்தரைத்து வைத்துக் கொள்ளவும்.

அளவு :— 12 குன்றிமணி எடை (42 கிராம்).

துணைமருந்து :— சர்க்கரை, வாழைப்பழம், இளக வகைகள் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :—எண்வகை பாண்டு, நச்சுபாகம், நீராமை, பேராமை, மகோதரம், பெருவயிறு, இருமல், இரைப்பிருமல் இரைப்பு ஆகியவைகள் தீரும்.

மருத்துணவு :— நோய்வலிமை, உடல்வலிமை ஆகியவைகளுக்குத் தகுந்தபடி பத்திய மேற்படுத்தவும்.

### 1255. குன்ம பேதி மெழுகு

தூய்மை செய்த நெல்லிக்காய்க் கெந்தகம், சவுக்காரம், இந்துப்பு, வெண்காரம், தூய்மை செய்த நேர்வாளம் வகை 1-க்கு 1 வராகன் எடை (3½ கிராம்).

செய்முறை :— முன் சரக்குகளைத் தனித்தனி பொடித்துக் கொள்ளவும். நேர்வாளத்தைக் கல்வத்திலிட்டு வெண்ணெய் போல அரைத்து முன் தூள்களையும் ஒன்ருகச் சேர்த்து அதிற் கலந்து ஒருசாம நேரமரைத்துப் பீங்கான் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— ½ முதல் 1 குன்றிமணி எடை.

துணைமருந்து :—மேற்கண்ட முறையிற் சொல்லப் பட்டிருப்பவைகளாம்.

தீரும்நோய் :—இதனை அடுத்தடுத்து மூன்று நாள் கொடுக்க எண்வகைக் குன்மமும் தீரும். குன்மப் பூச்சி விழுந்து விடும்.

மருந்துணவு :—பச்சரிசியும் முருங்கையிலையும் சேர்த்து உப்பில்லாமல் கஞ்சி செய்து கொடுக்கவும்.

### 1256. சூட்சம பேதி மெழுகு

தூய்மைசெய்த நேர்வாளப்பருப்பு 1 பங்கு, கறியுப்பு 1 பங்கு இவ்விரண்டையும் சேர்த்தரைத்து வெண்ணெய் போலான பதத்தில் எடுத்துப் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்க.

அளவு :— ½ முதல் 1 குன்றிமணி எடை.

துணைமருந்து :— வெல்லம், வெண்ணெய், பாலேடு, சுக்கையரைத்த விழுது.

தீரும் நோய் :—நன்ருகக் கழிச்சலாகும். வாயு, சுரம், குன்மம், காசம் ஆகியவை தீரும்.

மருந்துணவு :— சமயோசிதம் போல் அமைக்கவும்.

### 1257. வாசனை பேதி

வெள்ளைக் குங்கிலியம் 1 பலம் (35 கிராம்), இது ஒரே கட்டியாய் இருக்கவேண்டும். கள்ளி மரத்தைத் துளைத்துக் குங்கிலியக் கட்டியை அதற்குட் செலுத்தி முன் சக்கையை வைத்தடைத்து அதன் மீது

மண்ணை அல்லது சாணியைப் பூசி வைத்து விடவேண்டும். நாற்பது நாட் சென்றபின் எடுத்து பளிங்கு மூடியுள்ள குப்பியில் பத்திரப் படுத்தவும்.

தீரும்நோய் :— கழிச்சல் அவசியமாயிருக்கும்போது மல்லிகைப் பூ அல்லது ரோசாப்பூச்செண்டு ஒன்று தயார் செய்து கால் வராகன் எடை முன் குங்கிலியத்தைப் பொடித்து பன்னீரை அல்லது ரோசாப்பூ அந்தரை விட்டுக் குழைத்து மேற்படி செண்டிற் பூசி அழுத்தி ஒருதரம் முகர ஒருதடவை கழிச்சலாகும். வயிற்றிலுள்ள கட்டிகள் நீங்கும். கழிச்சல் அதிகமானால் மோருஞ் சாதமும் சாப்பிடவும்.

## 1258. புஷ்ப பேதி

தூய்மை செய்த இரசம், தூய்மை செய்த கெந்தகம், வெண்காரம், ஆகியவை வகைக்கு 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), தூய்மை செய்த நேர்வாளப்பருப்பு 5 வராகன் எடை ($17\frac{1}{2}$ கிராம்), தூய்மை செய்த ஆமணக்குப் பருப்பு 6 வராகன் எடை (21 கிராம்), கார்போகரிசித்தூள் 7 வராகன் எடை (24 கிராம்), தூய்மை செய்த புரசம் விதைப்பருப்புத் தூள் 8 வராகன் எடை (28 கிராம்), மஞ்சட் கடுக்காய்த்தோல் தூள் 9 வராகன் எடை, ($31\frac{1}{2}$ கிராம்), தூய்மை செய்த சிவதைவேர்த்தூள் 10 வராகன் எடை (35 கிராம்), புங்கம் விதைப்பருப்புத்தூள் 11 வராகன் எடை ($38\frac{1}{2}$ கிராம்), கொடிக் கள்ளிப்பால் தேவையான அளவு, தேங்காய் 1.

செய்முறை :— இரசத்தையும் கெந்தகத்தையும் கலக்கும்படி அரைத்து நன்றாகக் கருத்த பின்பு வெங்காரத்தையும் சேர்த்தரைத்து மற்றத் தூள்களையும் ஒன்றாகக் கலந்து கல்வத்திலிட்டு கள்ளிப்பாலைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரமரைத்து தேங்காய்க்குட்போட்டு வாயை அடைத்து பதினைந்து நாள் தானிய புடம் வைத்துப் பிறகு எடுத்து உடைத்து மறுபடியும் அரைத்துப் பீங்கானில் அப்பி இரவியில் வைக்க எண்ணெய் கசியும். அதனைச் சேர்த்துப் பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

தீரும் நோய் :— இதிற் கொஞ்சமெடுத்து பூச்செண்டில் தடவி முகர கழிச்சலாகும். வயிற்றிலுள்ள கட்டுகள் நீங்கும். கழிச்சல் அதிகமானால் நாபியில் சந்தனத்தைத் தடவி தண்ணீர் விட்டுக் கழுவ கழிச்சல் நிற்கும்.

## 1259. வாசனை பேதித் தைலம்

முற்றின பெருந்தேங்காய் ஒன்று. இதனைக் கண் திறந்து நீரை ஊற்றி விட்டு அதில் அரைவாசி தூய்மைசெய்த நேர்வாளப்பருப்பை நிறைத்து வேப்பமுளையால் வாயை அடைத்து மதம் பிடித்திருக்கிற யானையின் மதம் விழுகிற இடத்தில் அல்லது யானையின் மூத்திரம் விழுகிற இடத்தில் இதனை ஒருமாதம் வரையில் புதைத்து வைத்துப் பிறகெடுத்து தேங்காயையும் பருப்பையும் அரைத்துப் பீங்கான் பாத்திரத்தில் அப்பி வெய்யிலில் வைக்க தைலம் இறங்கும். வடி கட்டிப் பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

தீரும்நோய் :— பூச்செண்டில் இந்த எண்ணெயைக் கொஞ்சம் தடவி எத்தனை தடவை முகருகிறோமோ அத்தனை தடவை கழிச்ச லாகும்.

குறிப்பு :—தேங்காயைப் பக்குவப்படுத்தி எடுக்கும் தைலங் களில் ஒருவிதவாசனை இருப்பதால் இதனுடன் ரோசாப்பூ அத்தர் முதலிய சுகந்தங்களைச் சேர்த்து உபயோகிப்பது உத்தமம்.

## 1260. சூட்சம வாசனை பேதித் தைலம்

ஆங்கில மருந்துக் கடைகளில் விற்கப்படும் நேர்வாளப் பருப்புத் தைலம் 1 பங்கு, தேங்காய்ப்பாலைக் காய்ச்சி எடுத்த தேங்கா யெண்ணெய் 1 பங்கு, ரோசாப்பூ அத்தர் 1 பங்கு, இம்மூன்றையும் கலந்து பளிங்குக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

தீரும்நோய் :— கழிச்சலாக அவசியமானால் நான்கு அவுன்ஸ் வெந்நீரில், அல்லது பாலில், அல்லது சோம்புக் குடிநீரில், அல்லது காப்பியில் அல்லது தேநீரில் உடல்வலிமைக்குத் தகுந்தபடி ஒன்று அல்லது இரண்டு துளி விட்டு பருகச் செய்ய சுகமாய்க் கழிச்ச லாகும். பூச்செண்டில் தடவி எத்தனை தடவை முகருகிறோமோ அத்தனை தடவை கழிச்சலாகும்.

## 1261. இலகுவாசனை பேதித் தைலம்

தூய்மை செய்த இரசம், தூய்மை செய்த காட்டாமணக்குப் பருப்பு, வகைக்கு 2 வராகன் எடை (7 கிராம்), தூய்மை செய்த சிற்று மணக்குப் பருப்பு 3 வராகன் எடை (10½ கிராம்), தூய்மை செய்த கெந்தகம் 4 வராகன் எடை (14 கிராம்), தூய்மை செய்த நேர்வாளப் பருப்பு 5 வராகன் எடை (17½ கிராம்), தேங்காய்த் தனிப்பால் செல்லத்தக்க அளவு, தேங்காய் 1.

செய்முறை :—இரசத்தையும் கெந்தகத்தையும் கலக்கும்படி அரைத்து நன்ருகக் கறுத்த பின்பு, மற்ற பருப்புகளையும் சேர்த்து அரைத்து வெண்ணெய் போலான பின்பு, தேங்காய்ப்பாலைச் சிறுகச் சிறுக வார்த்து ஒருசாம நேரமரைத்து முன் தேங்காயைப் பொத்து நீரை வூற்றிவிட்டு முன் அரைத்ததை அதற்குட் போட்டு வேப்பம் முளையை வைத்தடித்து ஓரிடத்தில்வைத்து எட்டு நாட்சென்ற பின்பு, எடுத்து உடைத்து தேங்காயையும் மருந்தையும் சேர்த்து வெண்ணெய் போலரைத்து வெண்கலக் கிண்ணியில் அப்பிச் சூரியனுக் கெதிரில் வைக்க எண்ணெய் வடியும், அதைச் சேகரித்துப் பளிங்குக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

தீரும்நோய் :—இதனை எடுத்து நாவில் கொஞ்சம் தடவ கழிச்ச லாகும்; எலுமிச்சம்பழத்தில் தடவி முகர்ந்தாலும் கழிச்சலாகும்.

## 1262. சுக விரேசனத் தைலம்

தூய்மைசெய்த இரசம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), தூய்மை செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் 2 வராகன் எடை (7 கிராம்), தூய்மைசெய்த நேர்வாளப்பருப்பு 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), தூய்மைசெய்த சிற்ருமணக்குப் பருப்பு 4 வராகன் எடை (14 கிராம்), தூய்மைசெய்த வெண்காரம் 5 வராகன் எடை ($17\frac{1}{2}$ கிராம்), மஞ்சட் கடுக்காய்த் தோல் தூள், தூய்மைசெய்த சிவதை வேர்த்தூள், தூய்மைசெய்த புரசம் விதைப்பருப்பு வகைக்கு 1 வராகன் எடை, திருகுக்கள்ளியை வாட்டிப் பிழிந்தசாறு செல்லத்தக்க அளவு, பருமனான தேங்காய் ஒன்று.

செய்முறை :— இரசத்தையும் கெந்தகத்தையும் கலக்கும்படி அரைத்து நன்ருகக் கறுத்த பின்பு, தனியே எடுத்துக் கொள்ள வேண்டும். வெண்காரத்தைப் பொடித்து அதனுடன் சேர்த்துக் கொள்ளவும். பருப்பினங்களை, கல்வத்தில் போட்டு வெண்ணெய் போலரைத்து, மற்றத் தூள்களையும் முன் சித்தப்படுத்தின தூள்களுடன் கலந்து கல்வத்திலிருக்கிற மருந்துடன் சேர்த்து ஒரு மணி நேரமரைத்து எல்லாம் கலந்தபின்பு, முன் கள்ளிச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து மூன்று நாளரைத்து தேங்காயைத் துருவி முன் அரைத்த மருந்தைச் சேர்த்துக் கொஞ்சம் அரைத்து வெங்கலக் கிண்ணியின் ஓரத்தில் அப்பி சூரியனுக்கெதிரில் வைக்க எண்ணெய் கசியும். இதனை பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

தீரும்நோய்கள்:— இதில் ஒரு துளி எடுத்து நாபியில் தடவ நன்கு கழிச்சலாகும். மார்பில் தடவ கக்கலாகும். ஒரு கிராம்பை இத் தைலத்தில் நனைத்து தாம்பூலத்துடன் கொடுக்க மூன்று முறைக்

கழிச்சலாகும். பச்சைத் தண்ணீரால் உடம்பைத் துடைத்தால் கழிச்சல் நின்றுவிடும். வசம்பைச் சுட்டெரித்துச் சாம்பலாக்கிச் செய்த குடிநீரில் வெண்ணெய் அல்லது தயிரைக் கலந்து கொடுத்தாலும் கழிச்சல் நிற்கும். இவைகளைத் தனித் தனியே உபயோகித்தாலும் கழிச்சல் நிற்கும்.

### 1263. முகர் பேதி

தூய்மை செய்த அழிஞ்சில் விதைப்பருப்பு 5 பலம் (175கிராம்), தூய்மை செய்த நேர்வாளப்பருப்பு 5 பலம் (175 கிராம்), சிற்றுமணக்கெண்ணெய் 20 பலம் (700 கிராம்), இளநீர் செல்லத்தக்க அளவு.

செய்முறை :— முன்பருப்பைத் தனித்தனியாகப் பொடித்து ஒன்றாகச் சேர்த்து இளநீரைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாம நேரமரைத்து விளக்கெண்ணெயில் கரைத்து அடுப்பேற்றிச் சிறு தீயாக் எரித்துக் கடுகுதிரள் பதத்திலிறக்கி வடிகட்டிப் பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

தீரும்நோய் :— செவ்வல்லிப்பூவைச் செண்டுகட்டி மாலையில் மேற்படி எண்ணெயை அதிற் கொஞ்சம் தடவி இரவில் பனியில் வைத்துக் காலையில் எடுத்து பத்துத் தடவை நுகர நன்கு கழிச்சலாகும்.

### சுர நோய் மருத்துவம்

சுரம் தோன்றும்வகை, பிறப்பு, தன்மை, நலப்படும், நலப்படா நிலை, சுரத்தில் சித்த, யூனானி, ஆங்கில மருத்துவங்களை எல்லாம் ஒன்றாகத் திரட்டி சுரநோய் சிகிச்சாபோதினி என ஒரு நூலை வெளிப்படுத்த உத்தேசித்திருப்பினும் நமது நண்பர்களின் உபயோகத்திற்காக சுரம், சன்னி முதலியவைகளுக்காக சில அனுபவமுறைகளை இங்கு எழுதுவோம். அவை பின்வருகிற விதமாகும்.

### 1264. மகா பூபதி மாத்திரை

(அ) தங்க பற்பம் அல்லது, தங்கச் செந்தூரம்; அய பற்பம் அல்லது, அயச் செந்தூரம்; காந்த பற்பம் அல்லது, காந்தச் செந்தூரம்; நாக பற்பம், தாம்பிர பற்பம் அல்லது, தாம்பிரச் செந்தூரம்; வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்), தாய்ப்பால் தேவையான அளவு.

(ஆ) துளையிடாத நன்முத்து, நற்பவழம், வயிரம், புட்பராகம், பச்சை, நல்ல மாணிக்கம், வகைக்கு ½ வராகன் எடை(1¾ கிராம்).

(இ) தூய்மை செய்த கெந்தகம், வைத்திய முப்பூ, இல்லா விட்டால் தீட்சை செய்த பூநீறு வகைக்கு 5 வராகன் எடை (17½) கிராம்), தூய்மை செய்த இரசம் 8 வராகன் எடை (28 கிராம்), தூய்மை செய்த தாளகம், தூய்மை செய்த மனேசிலை, தூய்மை செய்த பாடாணம், துருசு, துத்தம், நவச்சாரம், சீனக்காரம், தூய்மை செய்த வீரம், தூய்மை செய்த இரசகற்பூரம், இவை வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்), பொற்றலைக் கையாந்தகரைச்சாறு, சிறு பிள்ளைகள் மூத்திரம், எலுமிச்சம்பழச்சாறு இவை வகைக்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை :—(அ) வில் உள்ளவைகளை ஒன்ருகக் கலந்து தாய்ப் பாலால் ஒருசாமம் அரைத்துப் புது ஓட்டில் வறுத்தெடுத்துக்கொள்ள வேண்டியது. (ஆ) வில் உள்ளவைகளில் நமது பூஞனி வைத்திய தாதுவிருத்தி போதினியிற் சொல்லி இருக்கிறபடி, முத்து மாணிக்கம் ஆகியவைகளைப் பக்குவப்படுத்துவது போலவே மற்ற இரத்தினங் களையும் பக்குவப்படுத்தி ஒன்ருகக் கலந்து வைத்துக் கொள்ள வேண்டியது. அவரவர்களுக்குத் தெரிந்த வேறுவிதமாகவும் பக்குவப் படுத்திக் கொள்ளலாம். (இ) யில் உள்ளவைகளில் இரசத்தைத் தவிர மற்றவைகளைத் தனித்தனி பொடித்துக் கொள்ள வேண்டும். பிறகு இரசத்தைக் கல்வத்திலிட்டு கெந்தகம், தாளகம், பாடாணம் முதலியவைகளை முறையே சேர்த்தரைத்து இரசம் மடிந்த பின்பு, மற்றச் சரக்குகளையும் சேர்த்தரைத்து எல்லாச் சரக்குகளும் நன்ருக மடிந்து கலந்த பின்பு, முன் சித்தப்படுத்தியிருக்கிற (அ) வில் உள்ள தையும், (ஆ) வில் உள்ளதையும் இதனுடன் கலந்து இரண்டொரு மணி நேரமரைத்து எல்லாம் கலந்த பின்பு பொற்றலைக்கையாந்தகரைச் சாறு முதல் எலுமிச்சம்பழச்சாறு ஈருக முறையே ஒவ்வொரு சாற்றை யும் தனித்தனி சிறுகச் சிறுக வார்த்து, ஒவ்வொரு சாமநேர மரைத்து, ஈரமுலர்த்தி மறுசாறு விட்டரைக்க வேண்டியது. பின்னர் ஒரே வில்லை யாகச் செய்து, வெய்யிலிலுலர்த்திப் புது ஓட்டில் வைத்து மேலோடு மூடி சந்தில்லாமல் ஏழு சீலைமண் செய்து, ஈரமில்லாமல் ஐந்து பல முள்ள ஐம்பது எருவிற் புடமிடவும். குளிர ஆறினபின் எடுத்தால் அரை வேக்காட்டான செங்கல்லைப் போலிருக்கும். இதனை நிறுத்து, இது கண்ட எடையிற் பாதியெடை, (ஆ) விலுள்ள இலிங்கத்தைச் சேர்த்துத் தாய்ப்பாலைச் சிறுகச்சிறுக வார்த்து இரண்டு சாம நேர மரைத்து வில்லை செய்து நிழலிலுலர்த்திப் பளிங்குக்குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :—1 முதல் 2 அரிசி எடை.

துணைமருந்து :—தேன், தாய்ப்பால், சுரசங்கள் முதலியவைகளாம்.

தீரும் நோய் :—இதனால் எல்லா கொடிய நோய்களும் தீரும். மனிதனது இறுதி காலத்தில் இதனை உபயோகிப்பதால் *இறப்பு நேரத் துன்பம் தீர்ந்து நல்லறிவுண்டாகி பேசும் வலிமை யுண்டாகும். இதன் உபயோகம் அநேகருக்குத் தெரிந்திருக்குமாகையால் அதனை விரித்தெழுதவில்லை.

குறிப்பு :—மருந்தினால் இறப்புநேரத்துன்பம் தீர்ந்து நல்லறிவுண்டாகிப் பேசக்கூடுமென்றால் நமது புதிய நாகரிகத்தினர் நம்ப மாட்டார்கள். ஆனால், இந்த நிலையில் (ஆக்ஸிஜன்) பிராணவாயு எந்திரத்தை உபயோகித்துப் பேசச் செய்வதைப் பார்த்த பின்பாகிலும், நமது மருந்துகளில் நம்பிக்கையுண்டாகலாம். இவர்கள் இப்போது இந்த எந்திரத்தைக் கண்டு பிடித்த போதிலும், நம்மவர்கள் எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன், இத்தகைய பேராய்வு உண்மைகளைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

## 1265. நந்தீசர் பூபதி

தூய்மை செய்த இரசம், தூய்மை செய்த நெல்லிக்காய்க் கெந்தகம், தூய்மை செய்த நேர்வாளப் பருப்பு, மேற்றோல்நீவின சுக்குத் தூள், மிளகுத் தூள், அரிசித்திப்பிலித் தூள், வெள்ளைக் காக்கட்டான் விதைத்தூள் இவை வகைக்கு 1 பலம், பொற்றலைக் கையாந்தகரைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :—இரசத்தையும் நெல்லிக்காய்க் கெந்தகத்தையும் சேர்த்தரைத்து நன்றாகக் கறுத்த பின்பு, மற்றத் தூள்களையும் சேர்த்து அரைத்த தூள்களையும் கலந்து, தனியே எடுத்து வைத்துக் கொள்ளவும். வாளத்தைக் கல்வத்திலிட்டு அரைத்து வெண்ணெய் போலான பின்பு, முன் சித்தப்படுத்தின தூள்களைச் சிறுகச் சிறுகச் சேர்த்து எல்லாம் கலந்த, பின்பு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரமரைத்துக் குன்றிமணி அளவு மாத்திரைகள் செய்து, நிழலில் உலர்த்திப் பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :— 1 மாத்திரை. கழிச்சலாக வேண்டுமானால் மாத்திரை இரண்டு, மூன்று சமயோசிதம் போல் உபயோகிக்கலாம்.

துணைமருந்து :—வெல்லம், சர்க்கரை, தேன், தாய்ப்பால், சுரசங்கள் குடிநீர்கள் முதலியவைகளாகும்.

தீரும்நோய்கள் :—சுரம், சன்னி, வயிற்றுவலி முதலிய அநேக நோய்கள் தீரும். (இது தேரையர் முறை).

---

* மரணாவஸ்தை

## 1266. எமதண்டக் குளிகை

(அ) தூய்மைசெய்த இரசம், தூய்மைசெய்த மனோசிலை, தூய்மை செய்த நெல்லிக்காய்க் கெந்தகம், தூய்மைசெய்த வீரம், தூய்மை செய்த இரசகற்பூரம், தூய்மை செய்த இலிங்கம், தூய்மை செய்த பாடாணம், வறுத்ததுருசு, தூய்மைசெய்த அரிதாரம், தூய்மைசெய்த இரச செந்தூரம், தூய்மைசெய்த பால்துத்தம், தூய்மைசெய்த கௌரி, தூய்மை செய்த மிருதார்சிங்கி, வெண்காரம் இவை வகைக்கு 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்).

(ஆ) தூய்மைசெய்த நாபி, கோரோசனை, பூங்காவி, ஏலரிசி, இலவங்கம், அரிசித்திப்பிலி, மேற்றோல் சீவினசுக்கு, அக்கராகாரம் கோட்டம், கடுகுரோகணி, சோம்பு, இவற்றின் தனித்தனித் தூள் வகைக்கு 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), கையாந்தகரைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :— (அ) விலுள்ளவைகளில் இரசத்தைத் தவிர மற்ற வைகளைத் தனித்தனியாகப்பொடித்து தனித்தனியே வைத்துக்கொள் ளவும். பிறகு இரசத்தையும் கெந்தகத்தையும் கலக்கும்படி அரைத்து நன்றாகக் கறுத்தபின்பு மற்றத் தூள்களையும் சேர்த்துஒன்றாகக் கலந்த பின்பு, (ஆ) விலுள்ள தூள்களை எல்லாம் ஒன்றாகக் கலந்து இதிற் சேர்த்து ஒரு மணி நேரமரைத்து எல்லாம் கலந்த பின்பு, பொற்றலைக் கையாந்தகரைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேர மரைத்து, அரைக்குன்றி மணியெடை மாத்திரைகள் செய்து, நிழலி லுலர்த்திப் பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :— 1 முதல் 2 மாத்திரை.

துணைமருந்து :—தேன், வெல்லம், சர்க்கரை, குடிநீர்கள், சுரசங் கள் முதலியவைகளாம்.

தீரும்நோய் :— பலவகைச் சுரங்கள், பலவகைச் சன்னிகள் கோழைக் கட்டு, கபக்கட்டு, மூர்ச்சை முதலிய நோய்கள் தீரும்.

## 1267. இராமபாணக் குளிகை

தூய்மைசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம், இரசம், தொட்டிப் பாடாணம், நாவித்தூள், இலவங்கத்தூள் இவை வகைக்கு $2\frac{1}{4}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்), நெருஞ்சிச்சாறு, புளியிலைச் சாறு ஆகிய இரண்டும் சமனெடையாகக் கலந்தது செல்லத் தக்க அளவு.

அளவு :— 1 மாத்திரை.

செய்முறை :—இரசத்தையும், கெந்தகத்தையும் கலந்தரைத்து நன்ருகக் கறுத்த பின்பு, தொட்டியைத் தனியே பொடித்து மற்ற தூள்களுடன் கலந்து இதில் சேர்த்து நான்கு சாம நேரமரைத்து, அரைக் குன்றிமணி எடை மாத்திரைகள் செய்து, நிழலிலுலர்த்தி பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவு ம்

துணைமருந்து :—தாய்ப்பால், வெல்லம், குடிநீர் முதலியவை களாம்.

தீரும்நோய்:—எல்லாவகை சுரங்களும் தீரும்.

குறிப்பு :—பாடாணம், கௌரி முதலியவைகளைச் சேர்த்துச் செய்யும் இராமபாண மாத்திரையைப் பார்க்கிலும் இது சிறந்த குணமுள்ளது.

### 1268. குளிர்சுரக் குளிகை

தூய்மை செய்த மயில் துத்தம் 4 வராகன் எடை (14 கிராம்), பாடாணம் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), வாளப்பருப்பு 2 வராகன் எடை (7 கிராம்), சாத்திரபேதி 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), புளித்தமோர் செல்லத்தக்க அளவு.

செய்முறை :— மேற்கண்ட சரக்குகளைத் தனித்தனியாகப் பொடித்து, ஒன்ருகக் கலந்து வைத்துக் கொள்க. வாளத்தைக் கல்வத்திலிட்டு வெண்ணெய் போலரைத்து, முன் சித்தப்படுத்தி வைத்திருக்கும் தூளையும் சேர்த்து அரைமணி நேரமரைத்து எல்லாம் கலந்த பின்பு, மேற்படி மோரைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரமரைத்து, கால் குன்றிமணி அளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :—1 மாத்திரை.

துணைமருந்து :—வெல்லம், வெண்ணெய், பாலேடு, சுக்கை அரைத்த விழுது முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :—குளிர் சுரம், நடுக்கு சுரம், முறை சுரம், மாறல் சுரம் முதலியவைகள் தீரும்.

மருத்துணவு:— உடலுக்குத் தகுந்த உணவை சமயோசிதம் போலவும், பாய்பாயசம், பால்சோறு முதலியவைகளையும் உபயோகிக்கலாம்.

### 1269. சந்திரோதயக் குளிகை

(அ) குங்குமப்பூ 10 வராகன் எடை (35 கிராம்), தூய்மை செய்த இரசகற்பூரம் $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்), பச்சைக் கற்பூரம் $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்), இலவங்கத்தூள், இலவங்கப்பட்டைத்தூள், கோட்டத்தூள், வகைக்கு $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்), இலிங்கம் $1\frac{1}{4}$ வராகன் எடை.

(ஆ) சந்தனத்தூள் 5 பலம் (175 கிராம்), இலவங்கம், கோரைக்கிழங்கு, சடாமாஞ்சில், சிறுநாகப்பூ இவை வகைக்கு $1\frac{1}{4}$ வராகன் எடை. பின்கண்ட நான்கு சரக்குகளையும் நன்றாகச் சிதைத்துச் சந்தனத் தூளுடன் சேர்த்து, ஒரு படி தண்ணீர் விட்டு எட்டொன்றாகக் காய்ச்சி இறக்கி, வடிகட்டின குடிநீர் செல்லத்தக்க அளவு.

செய்முறை :— இரசகற்பூரத்தையும் இலிங்கத்தையும் பச்சைக் கற்பூரத்தையும் தனித்தனியாகப் பொடித்து மற்றத் தூள்களுடன் கலந்து வைத்துக் கொள்க. குங்குமப்பூவைக் கல்வத்திலிட்டு மேற்படி குடிநீரைச் சிறுகச் சிறுக வார்த்து அரைத்து வெண்ணெய் போலான பின்பு, முன் சித்தப்படுத்தின தூள்களையும் சேர்த்து அரைமணி நேரமரைத்து எல்லாம் கலந்த பின்பு, மேற்படி குடிநீரைச் சிறுகச் சிறுக் வார்த்து இரண்டு சாம நேரமரைத்துக் குன்றிமணி அளவு மாத்திரைகள் செய்து, நிழலில் உலர்த்திப் பளிங்குக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :—1 மாத்திரை.

துணைமருந்து:—தேன், துளசிச்சாறு, சர்க்கரை, சுக்குக் குடிநீர் பற்பாடகக் குடிநீர், தாளிசப்பத்திரித் தூள் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :—எல்லா வகை சுரங்கள், சன்னிகள், இருமல், இரைப்பிருமல், கடின சுவாசம் முதலிய அநேக நோய்கள் தீரும். இன்னும் தகுந்த சிறப்பான துணைமருந்துகளில் கொடுத்தால். எல்லா வகை நோய்களும் குணப்படும்; அவரவர்கள் தம் தம் அனுபவத்தால் நிச்சயித்துக் கொள்ளலாம்.

மருத்துணவு:—வெள்ளாட்டிறைச்சி, முருங்கைப் பிஞ்சு, கத்தரிப் பிஞ்சு, முழுத் துவரை, மிளகுரசம், சோறு ஆகும்; மற்றொன்றும் ஆகாது. இன்னும் உடல், இயல்பு, நோய்வலிமை, உடல்வலிமை முதலியவைகளுக்குத் தகுந்தபடி பத்தியம் ஏற்படுத்த வேண்டியது மருத்துவர்களின் கடமையாம்.

## 1270. வச்சிரகண்டி மாத்திரை

தூய்மை செய்த இலிங்கம் 8 வராகன் எடை (28 கிராம்), இரசகற்பூரம் 1 வராகன் எடை (3 கிராம்), ½ வீரம் வராகன் எடை, இரசசெந்தூரம் 2 வராகன் எடை (7 கிராம்), எலுமிச்சம் பழச்சாறு, இஞ்சிச்சாறு இவை வகைக்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை :—எல்லாச் சரக்குகளையும் தனித்தனியாகப் பொடித்துப் பிறகு ஒன்றாகச் சேர்த்தரைத்து நன்றாகக் கலந்த பின்பு, எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒருசாம நேரமரைத்துக் குன்றிமணி அளவு மாத்திரைகள் செய்து, நிழலில் உலர்த்திப் பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :—1 மாத்திரை.

துணைமருந்து :—தேன், சர்க்கரை, துளசிச்சாறு, சுக்குக் குடிநீர், சோம்புக் குடிநீர் முதலியவைகளாம். இன்னும் அந்தந்த நோய்களுக்குத் தகுந்த துணைமருந்துகளிலும் தரலாம்.

தீரும்நோய்கள் :— மேகக் குடைச்சலுக்கு ஐந்து நாளும், விதைவாதத்திற்கும், சுரத்திற்கும் மூன்று வேளையும், புண் புரைக்குப் பத்து நாளும், மூர்ச்சைக்கும் கணு வாதத்திற்கும் மூன்று வேளையும், கொடுக்க அவை தீரும். இன்னும் தகுந்த முறைகளில் நோய்களுக்குத் தகுந்த நாள் ஒழுங்குப்படி கொடுக்க வெள்ளை, அரையாப்பு, கண்டமாலை முதலிய நோய்களும் தீரும்.

மருத்துணவு :— சிறுபயறு, முருங்கைப்பிஞ்சு, வெள்ளாட்டு வற்றல், மிளகுநீர், துவரை, அரைக்கீரை, பாற்கஞ்சி, கோதுமை நொய்க் கஞ்சி, சர்க்கரை இவை ஆகும்.

குறிப்பு :—வச்சிரகண்டி மாத்திரையின் முறை பலவகையாம்; ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையாகச் செய்வதுண்டு. இது பல தடவை பழக்க முறையில் செய்யப்பட்டுச் சுரத்திற்கு அதிகம் உபயோகப் படுவதால் இங்கு எழுதப்பட்டது. இன்னநோய் இத்தனை நாளையில் தீருமென்று எழுதப்பட்டிருப்பதின் விவரமாவது அந்தந்த நோயிற் கண்டிருக்கிற நாட்கணக்கின்படி அந்தந்த நோய் தீர்ந்துவிட்டால் உத்தமம்; அப்படித் தீராவிட்டால் இடையில் அத்தனை நாள் நிறுத்தி மறுபடியும் அத்தனை நாள் உபயோகிக்க வேண்டியது. இதனைத் தொடர்ச்சியாய் உபயோகிக்காமல் இடையில் விட்டு விட்டு உபயோகிக்க வேண்டும். அவசியமானால் தொடர்ச்சியாகவும் உபயோகிக்கலாம்.

## 1271. மேகக்குளிக் குளிகை

வெண்காரத்தூள், தூய்மை செய்த இலிங்கத்தூள், தூய்மை செய்த சிவதைவேர்த்தூள், சுட்டெரித்த வசம்புச்சாம்பல், மேற்றேல் சீவின சுக்குத்தூள், இந்துப்புத்தூள், வாய்விளங்கத்தூள், ஓமத்தூள், வறுத்த பெருங்காயத்தூள், காட்டாமணக்கு வேர்த்தூள் இவை வகைக்கு 1 பலம், எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :—எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கல்வத்தி லிட்டு ஒருமணி நேரமரைத்து எல்லாம் கலந்தபின்பு எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம (12மணி) நேர மரைத்துக் குன்றிமணி அளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்திப் பளிங்குக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :—1 முதல் 2 மாத்திரை.

துணைமருந்து:—சர்க்கரை, தேன் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :— குளிர் சுரங்கள்; சுரக்கட்டி பலவகைச் சுரங்கள், எண்வகைக் குன்மம், வாதநோய்கள், பித்தநீர், சோகை, பாண்டு. சயநோய், வயிற்றுவலி, செரியாமை ஆகியவைகளும் தீரும்

மருத்துணவு :—மிளகுநீர், கருவாடு, வாழைக்கச்சல் சேர்க் கவும்.

## 1272. சூடாமணி மாத்திரை

(அ) தூய்மைசெய்த இலிங்கம் 1 வராகன் எடை (3½ கிராம்), இரசகற்பூரம் 1 வராகன் எடை (3½ கிராம்), தாளகம் 1 வராகன் எடை (3½ கிராம்), நாபி ½ வராகன் எடை (1¾ கிராம்).

இவை எல்லாவற்றையும் தனித்தனியாகத் தூள் செய்து ஒன்று கக்கலந்து வைத்துக் கொள்ளவும்.

(ஆ) இலுப்பைப் பூ, அரிசித்திப்பிலி, கோட்டம், கோரைக் கிழங்கு, வெட்டிவேர், பன்னீர்ப்பூ, தாமரைப்பூ, நன்னாரிவேர் சந்தனம் இவற்றின் தனித்தனித் தூள் வகைக்கு 1 பலம், விதை நீக்கின திராட்சைப்பழம், விதை நீக்கின பேரீச்சம்பழம் இவை வகைக் குப் 1 பலம், தண்ணீர் விட்டான்கிழங்குச்சாறு, கையாந்தகரைச் சாறு இவை வகைக்கு செல்லத்தக்க அளவு.

செய்முறை :—(ஆ) விலுள்ள திராட்சைப் பழத்தையும் பேரீச் சம் பழத்தையும் கல்வத்திலிட்டு அரைத்து வெண்ணெய் போலான

பின்பு (அ) விலுள்ள தூள்களையும் (ஆ) விலுள்ள தூள்களையும் ஒன்றாகக் கலந்து இதில் சேர்த்து ஒருமணி நேரமரைத்து எல்லாம் கலந்த பின்பு, தண்ணீர்விட்டான் கிழங்குச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து எட்டுசாம நேரமறைத்துப் பிறகு கையாந்தகரைச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து பன்னிரண்டு சாம நேரமும் அரைத்துப குன்றிமணி அளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :— 1 முதல் 2 மாத்திரை.

துணைமருந்து :— சர்க்கரை, வெல்லம், வெண்ணெய் முதலிய வைகளாம்.

தீரும்நோய்கள் :— பித்தசுரம், கக்கல், விக்கல், விடாச்சுரம் எலும்புசுரம், சயசுரம், எலும்புருக்கி சுரம் முதலிய அறுபத்து நான்கு வகை சுரங்களும் தீரும். செரியாமை, மந்தாக்கினி, வயிற்று வலி முதலிய இரைப்பை நோய்களும் தீரும். இன்னும் தகுந்த துணைமருந்துகளில் எல்லாவகை நோய்களுக்கும் உபயோகிக்கலாம் இதன் சிறந்த குணத்தை அனுபோகத்தால் நிச்சயித்தறிந்துக் கொள்ளவும்.

மருந்துணவு :— உடல் இயல்பு, நோய்வலிமை முதலியவை களுக்குத் தகுந்தது போல் மருந்துணவு ஏற்படுத்த வேண்டியது.

## 1273. கோரோசனை மாத்திரை

கோரோசனை 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), அரிசித்திப்பிலித் தூள், இலவங்கத்தூள், ஏலரிசித்தூள், வெற்றிலை இவை வகைக்குப் 1 பலம், தாய்ப்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை :—வெற்றிலையைக் கல்வத்திலிட்டு வெண்ணெய் போலரைத்து பிறகு கோரோசனையைச் சேர்த்தரைத்து மற்றத் தூள்களையும் ஒன்றாகக் கலந்து, சேர்த்து ஒருமணி நேரமரைத்து எல்லாம் கலந்த பின்பு, தாய்ப்பாலைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமம் அரைத்துக் குன்றிமணி அளவு மாத்திரைகள் செய்து, நிழலிலுலர்த்தி பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :—1 மாத்திரை.

துணை மருந்து :—சர்க்கரை, தேன், வெல்லம், சீரகக்குடிநீர் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :—எல்லாவகை சுரங்களும் தீரும். தேகக் குடைச்சல், தேகக் கனதி, தேகபாரம், தலைப்பாரம் முதலியவைகளும் தீரும். குழந்தைகளுக்கு இதனை எல்லா நோய்களிலும் உபயோகிக்கலாம். இது குழந்தைகளுக்கு சிறப்பாக உபயோகப் படுகிறபடியால் இதற்குப் பாலசஞ்சீவியென்று மறுபெயருமுண்டு. இதனைத் தாம்பூலத்துடன் உபயோகிக்கலாமாகையால் தாம்பூலக் குளிகை என்றும் சிலர் சொல்லுவார்கள்.

குறிப்பு :—மேற்கண்ட முறையில் சக்தியுள்ளவர்கள் கோரேசனையை அதிகமாகச் சேர்த்துக் கொள்ளலாம்.

## 1274. இலிங்க மாத்திரை

தூய்மைசெய்த இலிங்கம் 1 வராகன் எடை. அரிசித்திப்பிலித் தூள் 1 வராகன் எடை, தாய்ப்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை :—இலிங்கத்தைக் கல்வத்திலிட்டு நேர்மையாகப் பொடித்து திப்பிலித் தூளையும் சேர்த்துக் கால்மணி நேரமரைத்து ஒன்றுகக்கலந்த பின்பு, மேற்படிப் பாலைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாம நேரமரைத்து, அரைக்குன்றிமணி எடை மாத்திரைகள் செய்து, நிழலில் உலர்த்திப் பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :—சிறுவர்களுக்கு ஒரு மாத்திரை, பெரியவர்களுக்கு இரண்டு மாத்திரை.

துணைமருந்து :—சர்க்கரை, வெல்லம், தாய்ப்பால் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :— வாதசுரம், கபசுரம், கபக்கட்டு, கோழைக் கட்டு முதலியவைகள் தீரும்.

## 1275. அபின் மாத்திரை

அபின் 1 வராகன் எடை (3½ கிராம்). மேற்றேல் சீவின சுக்குத் தூள் 7 வராகன் எடை (24 கிராம்), அரிசித்திப்பிலித்தூள் 8 வராகன் எடை (28 கிராம்), சீரகத்தூள் 8 வராகன் எடை மிளகுத்தூள் 8 வராகன் எடை (28 கிராம்), விஷ்ணு கிரந்திக் குடிநீர் செல்லத்தக்க அளவு.

செய்முறை :—அபினியைக் கல்வத்திலிட்டு மேற்படி குடிநீரைக் கொஞ்சம் விட்டு அரைத்து வெண்ணெய் போலான பதத்தில், மேற்படி தூள்களையெல்லாம் ஒன்றுகக் கலந்து சிறுகச் சிறுகத் தூவி அரைத்து எல்லாம் கலந்த பின்பு, மேற்படி குடிநீரை சிறுகச் சிறுக

வார்த்து நான்குசாம நேரமரைத்துக் குன்றிமணி அளவு மாத்திரைகள் செய்து, நிழலிலுலர்த்திப் பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :—1 முதல் 2 மாத்திரை.

துணைமருந்து :—விட்டிணுகிராந்தி, சீரகம், வெற்றிலைக்காம்பு, நல்லவேளை இவை வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்), இவற்றை ஒன்றரை ஆழாக்குத் தண்ணீரில் போட்டு நான்கிலொரு பாகமாகச் சுண்டவைத்து வடிகட்டின குடிநீரில் கலந்துக் கொடுக்க வேண்டும்.

இதனை தேன், சர்க்கரை முதலியவைகளிலும் கலந்து கொடுக்கலாம்.

தீரும்நோய் :— கழிச்சலோடு கூடிய பலவகை சுரங்கள், செரியாமைக் கழிச்சல், பசிக்குறைவு நோய், வயிற்றிரைச்சல், வயிற்றுவலி முதலியவைகளும் தீரும்.

மருந்துணவு :—நோய் பலமாயிருந்தால் புளியில்லாப் பத்தியம் மேற்கொள்ளவும்.

### 1276. சுர சங்கார மாத்திரை

தூய்மைசெய்த இலிங்கத்தூள், நாபித்தூள், வெண்காரத்தூள், அரிசித்திப்பிலித்தூள், மிளகுத்தூள், நேர்வாளம் வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்), பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :— கல்வத்தில் வாளத்தைப் போட்டு எலுமிச்சம் பழச்சாற்றைக் கொஞ்சம் விட்டு அரைத்து வெண்ணெய் போலான பதத்தில், மற்றவைகளையும் ஒன்றாகக் கலந்து அரைமணி நேரமரைத்து எல்லாம் கலந்த பின்பு, மேற்படி பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம (6 மணி) நேரமரைத்துக் குன்றிமணி அளவு மாத்திரைகள் செய்து, நிழலிலுலர்த்தி புட்டியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :— 1 மாத்திரை. மிளகைமென்றுத் துப்பிவிட்டு மேற்படி மாத்திரையைச் சாப்பிடவும்.

துணைமருந்தும், தீரும்நோய்களும் :—மேற்படி மாத்திரையை அளவுப்படி சர்க்கரையில் கலந்து மூன்று வேளை அல்லது ஆறு வேளை கொடுக்க வாதசுரம் தீரும்,

சீரகக் குடிநீரில் கலந்துண்ண பித்தசுரம் தீரும். இஞ்சிச்சுரசத்தில் கலந்துண்ண கபசுரம் தீரும்.

மருந்துணவு :—புளி, புகை நீக்கவும். பேதி அதிகமானால் சோற்றில் பருப்புப் போட்டு நெய்விட்டு உண்ணவும்.

1277. சூட்சம பாலசஞ்சீவி மாத்திரை

ஆடுதீண்டாப்பாளை இலை, இலவங்கப்பட்டைத்தூள் இவை வகைக்கு 5 வராகன் எடை (17½கிராம்), எலுமிச்சம்பழச்சாறு செல்லத் தக்க அளவு.

செய்முறை :—மேற்படி இலையைக் கல்வத்திலிட்டு அரைத்து வெண்ணெய் போலானபின்பு, மேற்படித் தூளையும் சேர்த்து கால் மணி நேரமரைத்து நன்றாகக் கலந்த பின்பு, பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம (6மணி) நேரமரைத்துக் குன்றி மணி அளவு மாத்திரைகள் செய்து, நிழலிலுலர்த்திப் பளிங்குக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :—½ முதல் 1 மாத்திரை வரை.

துணைமருந்து :—தாய்ப்பால், தேன் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :—குழந்தைகளுக்குக் காணும் எல்லாவகை சுரங்களும், மாந்தம், கழிச்சல், வயிற்று உப்புசம் முதலிய அநேக நோய்களும் தீரும். இது குழந்தைகளின் எல்லா நோய்களுக்கும் உபயோகப் படுவதாலும் மூலிகை சம்பந்தமாகவிருப்பதால் இதற்குப் பாலசஞ்சீவியெனப் பெயரிடப்பட்டிருக்கிறது.

குறிப்பு :—மேற்படி இலைக்குப் பதிலாக மேற்படி வேர்ப்பட்டையைச் சேர்த்துச் செய்து கொள்வது நல்லது. சிறு பிள்ளைகளுள்ள குடும்பத்தில் இது எப்போதும் இருக்க வேண்டியது. இதனை உபயோகித்து வருவதால் சிறு குழந்தைகள் நலமாக இருக்கும்.

1278. சீதஜ்வர உசிதம்

மிளகாய்இலையை அரைத்த விழுது 1¼ வராகன் எடை கறியுப்புத் தூள் ½ வராகன் எடை இதனை மேற்படி விழுதுக்குள் வைத்துப் பொதிந்து விழுங்கி விடவேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையும் ஆறுவேளை உட்கொள்ள நாட்பட்ட குளிர்சுரம் தீரும்.

1279. முறைசுர உசிதம்

ஊமத்தனிலைச்சாறு துளி 1, 2, 3. இதனை உடல் வலிமைக்குத் தகுந்தபடி உபயோகிக்கவேண்டும். இதில் அதிக போதையிருக்கிற

படியால், ஆரம்பத்தில் ஒரு துளியை அல்லது இரண்டு துளியை கொஞ்சம் பசுவின் பாலில் கலந்து பருகச் செய்விக்க வேண்டும். மூன்று நாள் ஆறு வேளை உபயோகித்தால் போதுமானது. வலிமை யற்றிருந்தால் காலையில் ஒவ்வொரு வேளை உபயோகித்தால் போது மானது,

தீரும்நோய்கள் :—மூன்ரும்முறை, நான்காம்முறை முதலியமுறை சுரங்கள் தீரும்.

குறிப்பு :— இன்னும் சுரநோய்க்கான பலமுறைகள் இந்த அனு போக வைத்திய நவநீதத்தின் முன் பாகங்களில் ஆங்காங்குச் சொல் லப்பட்டிருக்கின்றன. அவற்றின் குறிப்புக்களையெல்லாம் இந்த அனு போகவைத்திய நவநீதத் திறவுகோலில் தெரிந்து கொள்ளலாமாகை யால் அம்முறைகளைத் தெரிந்து சுரநோய்களுக்கு உபயோகித்துக் கொள்க.

## மேகநோய் மருத்துவம்

மேகநோய் பலவகையாம்; இவைகளின் மருத்துவங்களைப் பலர் பலவகையாகச் செய்து வருகின்ருர்கள். இவற்றின் வகைகளுக்கு அளவே இல்லை. இவைகளைப்பற்றிப் பிரமேக நிவாரண போதினி, சரபேந்திரமேக நிவாரண போதினி முதலிய நமது நூல்களிலும் பலமுறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. நூற்றிற்குத் தொண்ணூற் றைந்து பேர், மேக, நோய்களில் ஏதேனும் ஒரு நோயில் சம்பந்தப் பட்டிருப்பதால், அவைகளுக்காக எத்தனை முறைகள் தெரிந்திருந்த போதிலும் அத்தனைக்கத்தனை நன்மையே. ஆகையால் நமது முன் னேர்களுக்கும், நமக்கும் கைவல்யமான பலமுறைகளை இங்கு எழுது வோம். இந்த மேக நோயைப் பற்றற நீக்குவது என்பது முடியாதா கையால், அவற்றை நீக்கத் தக்க அருமையான முறைகள் அவசியம் வேண்டும். கீழ்க்காணும் முறைகள் மிகவும் அருமையானவைகள் அவற்றை அறிவுடைமையோடு உபயோகித்தால் மேற்படி நோய் பற்றற, நீங்கி உடல் தலம் முதலியவைகளைப் பெற்று நோயற்ற வாழ்வைப்பெற்று வாழலாம்.

### 1280. சலபேதி

கொடிக்கள்ளிப் பழுப்பை விளக்கில் வாட்டிப் பிழிந்தசாறு 4 வராகன் எடை (14 கிராம்), தூய்மை செய்த வெடியுப்புத் தூள் 1 வராகன் எடை (3½ கிராம்), நீரும் மோரும் சமமாகக் கலந்த, நீர்மோர் 1 ஆழாக்கு.

மேற்கண்டவைகளை இந்த நீர்மோரிற் கலந்து குடிக்கச் செய்ய வேண்டும். பிறகு தேவையான மோரையும் அதற்குச்சமன் தண்ணீரையும் கலந்து வைத்துக்கொண்டு, முக்கால் ஆழாக்கு அல்லது ஒரு ஆழாக்கு வீதம் அடிக்கடி பருகச் செய்யவேண்டும். இவ்விதம் காலையிலிருந்து பகல் இரண்டு மணி வரையில் செய்யலாம். நீர்மோர் சாப்பிடச் சாப்பிட மூத்திரம் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும். இவ்விதம் மூன்று நாள்கள் செய்யவேண்டும்.

தீரும்நோய்கள் :—நீர்ப்பை, நீர்த்தாரை ஆகியவைகளிலுள்ள விரணம், புண், தாபிதம் முதலியவை தீர்ந்து இரத்தமேகம், தந்து மேகம் ஆகிய சகல மேகங்களும் நீங்கும்.

குறிப்பு :— சில முரட்டு உடலினர்க்கும், சில முரட்டு நோயினருக்கும் வேறு எவ்வித மருந்துகளை உபயோகித்த போதிலும் அவர்களுக்கு நோய் தீருகிறதில்லை; அத்தகையினர்களுக்கு இந்தவகை மருந்து அவசியம் வேண்டியது.

இதனைச்சாந்தமாக்கச் செய்து கொள்ள வேண்டுமானால் பழுப்பின் மீது சிற்ருமணக் கெண்ணெயைத் தடவிச் சிற்ருமணக் கெண்ணெயை விட்டெரித்த விளக்கில் வாட்டிச் சாறு பிழிந்து கொள்ள வேண்டும் வேகம் செய்யாமல் சாந்தமாயிருக்கும்.

## 1281. சலபேதி (வேறு)

பிஞ்சுக் கடுக்காய்த் தூள், சோம்புத் தூள், ஏலரிசித் தூள் அதிமதுரத் தூள் இவை வகைக்கு ½ பலம் (8¾ கிராம்), சூரத்து நிலாவாரைத் தூள் 1 வராகன் எடை (3½ கிராம்) (இவற்றை ஒன்றாகக் கலந்து மூன்று பாகம் செய்து கொள்ள வேண்டும்) நாலாங்காய்ச்சல் வெடியுப்புத் தூள் 2½ வராகன் எடை (8¾ கிராம்), (இதனை மூன்று பாகம் செய்து தனியே வைத்துக்கொள்க) ரேவல் சின்னித் தூள் 1 வராகன் எடை (3½ கிராம்), (இதனையும் மூன்று பாகம் செய்து தனியே வைத்துக் கொள்ள வேண்டியது.) நீர்மோர் 1படி, தேன் செல்லத்தக்க அளவு.

பயன்படுத்தும் முறை :—மேற்கண்ட மூன்று வகைகளையும் ஒன்றாகக் கலந்து வைத்தால் கெட்டுப்போகுமாகையால் அவைகளைத் தனித்தனியாக வைத்துக் கொண்டு கீழ்க்காணும் விதமாக பயன்படுத்த வேண்டும். ஆரம்பத்தில் ரேவல் சின்னியின் ஒரு பகுதியைக் கொஞ்சம் தேனிற் குழைத்துச் சாப்பிடவேண்டும். அதன் பிறகு வெடியுப்பின் ஒரு பாகத்தைக் கொஞ்சம் மோரில் கலக்கி அதில் தூளின் ஒரு பாகத்தையும் போட்டுக் கலக்கிக் குடிக்கச் செய்ய வேண்டும். அதன் பிறகு மேற்படி மோரைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குடிக்கச் செய்து

வர மூத்திரம் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும். எல்லா மோரையும் குடித்தான பின்பு சற்று நாமதித்துக் கிச்சடிச் சாதம் சாப்பிடவும், இவ்விதம் மூன்று நாட்கள் செய்யவேண்டும்,

தீரும்நோய்கள் :— நீர்ப்பை, நீர்த்தாரை முதலியவைகளிலுள்ள இரணங்கள் நீங்கி எல்லா வகைப் பிரமேகங்களும் தீரும்,

குறிப்பு .—மேற்கண்ட அளவு வாலிப உடலினர்க்கதாம் உடல் வலிமைக்குத் தகுந்தபடி இந்த அளவை அதிகப்படுத்தியுங் கொள்ளலாம்.

## 1282. மேலவேதி (வேறு)

ரேவல் சின்னித்தூள், சீரகத்தூள், ஏலரிசித்தூள், பொட்டுலுப்புத் தூள், சர்க்கரை இவை வகைக்கு 3 வராகன் எடை (10½ கிராம்), பசுவின் பால் ½ படி, தண்ணீர் ½ படி (இவ்விரண்டையுங் கலந்து கொள்ள வேண்டியது; இதற்கு நீர்ப்பாலென்று பெயர்)

பயன்படுத்தும் முறை :— முன் சரக்குகளையும் சர்க்கரையையும் தனித்தனி மூன்று பாகஞ் செய்து வைத்துக் கொள்ள வேண்டியது. மேற்படி நீர்ப்பாலில் ஒரு ஆழாக்கு எடுத்து அதில் ஒருபாக தூளையும் சர்க்கரையையும் போட்டுக் கலக்கி குடிக்கச் செய்யவும். இப்படிச் சாப்பிட விருப்பமில்லாதவர்கள் முன் ஒருபாகத் தூளையும் சர்க்கரையையும் வாயிற் போட்டுக் கொண்டு அதன் மீது ஒரு ஆழாக்கு நீர்ப்பாலை குடிக்கச் செய்யவும். ஒரு மணிக்கொரு தடவை ஆழாக்கு நீர்ப்பாலை குடிக்கச் செய்து வரவும். இவ்விதம் மூன்று நாள் செய்ய பிரமேகநோய்கள் தீரும்.

மருந்துணவு :— முதல் மூனறு நாள் பச்சரிசி போட்டு உப்பில்லாமல் பால்கஞ்சி செய்து கொடுக்கவும்; மறு மூன்று நாள் உப்பை வறுத்துச் சேர்க்கவும்.

## 1283. பால்தெளிநீர்

பசுவின் பால் ½ படி, இதனைக் காய்ச்சி இதில் இரண்டு எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து பால் முரிந்த பிறகு வடிகட்டி அந்தத் தெளி நீரில், இரண்டு முட்டை வெள்ளைக் கருவை விட்டுக் காய்ச்சி வடிகட்டி அதில் காற்பலம் சால்புர்நீல் என்னும் தூய்மை செய்த வெடியுப்பைப் பொடித்துப் போட்டுக் குடிக்கச் செய்யவேண்டும்.

இவ்விதம் காலையில் ஒருவேளை மாத்திரம் பத்து நாள் அல்லது இருபதுநாள் செய்ய வேண்டும்.

தீரும்நோய்கள் :— எல்லா வகைப் பிரமேகங்கள், நீர்ப்பை அழலை, நீர்த்தாரை அழலை, எல்லாவகைச் சூடுகள், மேகச்சொறி, மேகச் சிரங்குகள், மேகபபடைகள்; ஆகியவை தீரும்.

மருந்துணவு :—புளி, புகை, மீன் முதலியவை தள்ளவும்.

## 1284. மேகக் குடிநீர்

சோம்பு, சீரகம், விலாமிச்சம் வேர், கொத்துமல்லி விதை இவை வகைக்கு $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்), நெலிமுள்ளி, சடாமாஞ்சில், செண்பகமொட்டு வகைக்கு $1\frac{1}{4}$ வராகன் எடை.

செய்முறை :— இவைகளை நன்ருகச் சிதைத்து ஒருபடி அல்லது ஒன்றரைப் படி ஒருபுதுத் தோண்டியிற் போட்டு அது நிறைய நீரை வார்த்து மூடி மணலைப் பரப்பி நீரைத் தெளித்து அதன் மீது இந்தத் தோண்டியை வைத்து பன்னிரண்டு மணிநேரம் சென்ற பின்பு ஒரு ஆழாக்கு எடுத்துப் பருகச் செய்யவேண்டும்; அவசியமான போதெல்லாம் பருகச் செய்து வரவும்; இந்த நீர் ஆகிவிட்டால் முன்போல் சரக்குகளைப் புதிதாகச் சேர்த்து வேறுநீர் செய்து கொள்ளவும்; இவ்விதம் ஏழுநாள் செய்யவேண்டும்.

தீரும்நோய்கள் —அதிதாகநோய், மதுமூத்திரத்தி லுண்டாகும் தாகம், மேகவறட்சியாலுண்டாம் தாகம், அதிபித்தவறட்சி, வாதவறட்சி, சிலேத்மவறட்சி, மயக்கம், மேகச்சூடு ஆகியவை தீரும்.

## 1285. மேகவெள்ளை உசிதம்

கீழ்க்காய் நெல்லிவேர் 1 பலம் (35 கிராம்), பூவரசம்பட்டை $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), சர்க்கரை 1 பலம் ($52\frac{1}{2}$ கிராம்), பசுவின் பால் $1\frac{1}{2}$ ஆழாக்கு.

செய்முறை :— மேற்படி இரண்டு சரக்குகளையும் தனித்தனி பால் தெளித்து வெண்ணெய் போலரைத்து ஒன்ருகக் கலந்துப் பாலிற்கலக்கிச் சர்க்கரையையும் கலந்து குடிக்கச் செய்யவேண்டும்; இவ்விதம் காலையில் மட்டும் மூன்று நாள் செய்யவும்.

தீரும்நோய்கள் ;—மேகத்தினுல் வெள்ளை விழுகிறது நிற்கும். பிரமேகந் தீரும்.

## 1286. சீனபற்பம்

சீனக்காரம் தேவையான அளவு, நெருஞ்சிச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :— சீனத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து சரக்கிற்குத் தகுந்தபடி

இரண்டு சாம நேரமரைத்துப் வில்லை தட்டியுலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடு மூடி மூன்று சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் எட்டுப்பங்கெடை வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுத்து பளிங் குக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :—$\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ வராகன் எடை.

துணைமருந்து :—எருமைத்தயிர், வெள்ளரி விதையை அரைத்துப் பிழிந்தபால் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :— பிரமேகம், வெள்ளை விழுதல், எரிச்சல் கடுத்தல் முதலியவை தீரும்.

மருத்துணவு :—மீன், கருவாடு, உஷ்ண பதார்த்தங்கள் முதலிய வைகளை நீக்கவும். வாழைப்பூ, வாழைக்கச்சல் முதலிய துவர்ப்பான பொருட்களைச் சேர்க்கவும்.

## 1287. பால் இளகம்

தூதுவளம்பூ, முருங்கைப்பூ, சதாவரிக்கிழங்கு இவைகளைத் தனித்தனி உலர்த்தி தனித்தனி இடித்த தூள் வகைக்கு 4 பலம் (140 கிராம்), நன்னாரிவேர், அதிமதுரம் இவற்றின் தூள் வகைக்கு 2 பலம் (70 கிராம்), நெருஞ்சிவேர், நிலப்பனைக்கிழங்கு, ஏலரிசி, இவற்றின் தூள் வகைக்கு 1 பலம் (35 கிராம்), பசுவின் பால் 4 படி, நெய், தேன், சர்க்கரை இவை வகைக்கு 2 வீசை (2 கிலோ 800 கிராம்).

செய்முறை :—தூள்களை யெல்லாம் ஒன்றாகக்கலந்து வைத்துக் கொள்க. பாலை அடுப்பிலேற்றிக் காய்ச்சி கைவிடாமல் துழாவிக் கொண்டிருக்க வேண்டும். பால் அரைவாசி சுண்டினவுடன் தேனை யும், சர்க்கரையையும் சேர்த்துக் காய்ச்சி துழாவிப் பாகுபதத்தில் முன் தூள்களைத் தூவி நன்றாகக் கிளறி இளகியபதத்தில் மேற்படி நெய்யை விட்டு நன்றாக மேலுங் கீழுமாகப் புரட்டிக் கிளறி இறக்கி ஆறினபின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

அளவு :—10 முதல் 20 வராகன் எடை.

தீரும்நோய்கள் :—பிரமேகம், மேகநோய், எலும்புருக்கி, பெரும் பாடு, மேக எரிச்சல், மேகச் சூடு, மேக அழலை, வறட்சியினால் உடல் இளைத்துப் போகுதல் முதலிய பல நோய்கள் தீரும்.

மருத்துணவு :—மீன், கருவாடு முதலிய சூடுதரும் உணவுப் பண்டங்களை நீக்கவும். ஐந்துநாள் மருந்து சாப்பிட்டால் மறு ஐந்துநாள் வரை பத்தியம் காக்க வேண்டியது.

## 1288. பிரமேக உசிதம்

முருங்கை இலைச்சாறு 1 பலம் (35 கிராம்), நல்லெண்ணெய் 1 பலம் (35 கிராம்), கோழி முட்டை வெள்ளையம்புலி 1, இம் மூன்றையும் கலந்து காலையில் ஒருவேளை பருகச் செய்யவும். இவ்விதம் மூன்றுநாள் அல்லது ஐந்துநாள் செய்யின் தீராத பிரமேகம் தீரும்.

மருத்துணவு :—புளி, புகை, புணர்ச்சி நீக்குக.

குறிப்பு :— சில உடல்களுக்கு கக்கலுண்டாகும். இரண்டொரு நாள் பழகி விட்டால் பிறகு கக்கலாகாது. வலுவான உடல்களானால் ஒன்றேகால் முதல் ஒன்றரைப் பலமாக அதிகப்படுத்திக் கொடுக்கலாம். இது கைவல்யமானமுறை; பழக்க முதிர்ச்சியால் உடற்கூறுபாட்டியல்பைத் தெரிந்து கொடுத்தால் இரண்டு மூன்று தடவையில் அதிக நாள்பட்ட பிரமேகமெல்லாம் தீரும்.

## 1289. பிரமேக உசிதம் (வேறு)

வெள்ளருகு இலை 5 பலம் (175 கிராம்), பிரமதண்டு இலை 1 பலம் (35 கிராம்), இவ்விரண்டையும் சேர்த்திடித்துப் பிழிந்த சாறு 1 பலம் (35 கிராம்), பசுவின்பால் அல்லது பசுவின் தயிர் 1 ஆழாக்கு, காலையில் தயிரிலும், மாலையில் பாலிலும் மேற்படி சாற்றை மேற்கண்ட அளவுப்படி பயன்படுத்த வேண்டியது. இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையும் ஐந்துநாள் ஏழுநாள் பயன்படுத்தினால் இரத்தப் பிரமேகம், மஞ்சள்பிரமேகம் முதலிய எல்லா வகைப் பிரமேகங்களும் தீரும். இரத்தப் பிரமேகத்தை ஒரு வேளையில் நிறுத்தி இருக்கிறது; பிரமேகந் தொடர்பான எல்லா நோய்களிலும் இதனை பயன்படுத்தலாம்.

**மருத்துணவு :— புளி, புகை, மீன், கருவாடு ஆகியவைகளை நீக்கவும். தயிர், பால், மோர், இறைச்சி, நெய் ஆகியவைகளை அதிகமாகக் கூட்டவும்.**

## 1290. பிரமிய உசிதம்

கழுவின எள்ளெண்ணெய் 28 வராகன் எடை (98 கிராம்), கத்தூரி மஞ்சள் தூள் 4 வராகன் எடை (14 கிராம்).

இவ்விரண்டையும் கலந்துக் காலையில் பருகச் செய்யவேண்டும் இவ்விதம் மூன்றுநாள் செய்ய வேண்டியது.

தீரும்நோய் :— பிரமியநோய் தீரும்.

மருத்துணவு :—காலத்திற்கும், உடல்நிலைக்கும் தகுந்தாற் போல் மருத்துணவை ஏற்படுத்தவும்.

## 1291. பிரமிய உசிதம் (வேறு)

கழுவின எள்ளெண்ணெய் 2 பலம் (70 கிராம்), பொடுதலைச் சாறு 2 பலம் (70 கிராம்), மருந்து வெள்ளைத்தூள் 1 வராகன் எடை (3½ கிராம்).

இம்மூன்றையுங்கலந்து காலையில் பருகச் செய்யவேண்டும். இவ் விதமே மூன்றுநாள் செய்ய வேண்டியது.

தீரும்நோய் :—பிரமிய நோய் தீரும்.

மருத்துணவு :—உப்பில்லாமல் பத்தியமிருக்கவும். மறு மூன்று நாளும் உப்பை வறுத்துக் கூட்டவும்.

## 1292. வெள்ளைச் சூரணம்

(அ) மருந்து வெள்ளை 2 பலம் (70 கிராம்), தூய்மைசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம் 2½ வராகன் எடை (8¾ கிராம்), இவ்விரண் டையும் உருக்கி நீர்போல் உருகினபின்பு வேறு ஓட்டில் சாய்த்து விட வேண்டும். நன்றாக ஆறின பின்பு பொடித்துக் கொள்ள வேண்டும்.

(ஆ) ஏலரிசி, நற்சீரகம், தேற்றாங்கொட்டை (இதனை நையச் சிதைத்துக் கொள்ள வேண்டும்) இவை வகைக்கு 4 வராகன் எடை (14 கிராம்).

செய்முறை :— (ஆ) விலுள்ளவைகளை இளவறுப்பாக வறுத்துத் தூள்செய்து துணியில் வடிகட்டி (அ) விலுள்ளதையும் சேர்த்து நன்றாகக் கலந்துவைத்துக்கொள்ளவும். இவ்விரண்டையும் சேர்த்துக் கல்வத்திலிட்டு அரைமணி நேரம் அரைத்துக் கொள்வது நல்லது.

அளவு :—1 வராகன் எடை (3½கிராம்).

துணைமருந்து :—நெய், தேன், வெண்ணெய், சர்க்கரை முதலிய வைகளாம்.

தீரும்நோய்கள் :— இதனை அளவுப்படி இரண்டு வேளையும் பத்துநாட்கள் சாப்பிட நீரெரிச்சல், நீர்க்குத்தல், நீர்க்கடுப்பு, பிரமியம் ஆகியவை தீரும்.

மருத்துணவு :— இச்சா பத்தியம்; நோயின் வலிமைக்கும், உடல் நிலைமைக்கும் தகுந்தபடி மருத்துணவை ஏற்படுத்தவும்.

## 1239. இரத்தப் பிரமிய உசிதம்

நாவல் பட்டைச்சாறு 2 பலம் (70 கிராம்), கழுவின எள்ளெண்ணெய் 1 பலம் (35 கிராம்).

இவ்விரண்டையும் கலந்து காலையில் மட்டும் மூன்றுநாள் பருகச் செய்ய இரத்தப் பிரமியம் தீரும்.

மருந்துணவு :— புளி, மீன், கருவாடு தள்ளி இச்சா பத்தியமாக இருக்கவேண்டியது.

## 1294. இரத்தப் பிரமிய உசிதம் வேறு

காசினிவிதை, வெள்ளரிவிதை, சிறு நெருஞ்சிமுள் இவை வகைக்கு 2½ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்).

இவற்றை இரவில் ஊறவைத்து காலையில் அம்மியில் வைத்து வெண்ணெய் போலரைத்து அரையாழாக்கு பசுவின் பாலில் கரைத்து வடிகட்டி திப்பியை நீக்கிவிட்டு அரைப்பலம் கற்கண்டுத் தூளைச் சேர்த்து பருகச் செய்ய வேண்டும். இவ்விதம் காலையில் மாத்திரம் பத்து நாள் உபயோகிக்கவேண்டும்.

தீரும்நோய் :— இரத்தப் பிரமியம் தீரும்.

மருந்துணவு :— மேற்கண்டவைகளாம்.

குறிப்பு :— இதனுடன் முன் சொல்லப்பட்டு இருக்கும் சினப் பற்பத்தை சேர்த்து பயன்படுத்தினால் அதிக மேன்மையான குணத்தைத் தரும். அல்லது மேற்கண்ட வெள்ளையுசிதத்தூளைக் கலந்து பயன்படுத்தலாம்.

## 1295. இரத்தப் பிரமிய உசிதம் (வேறு)

கழுவின எள்ளெண்ணெய் 2 பலம் (70 கிராம்), கோழி முட்டை வெள்ளைக்கரு 1, எலுமிச்சம்பழம் 1, தூய்மைசெய்த வெண்காரத்தூள் அல்லது பொரித்த சீனத்தூள் 1 வராகன் எடை (3½ கிராம்).

செய்முறை :—எண்ணெயில் முட்டை வெண்கருவை விட்டு எலுமிச்சம்பழத்தை அறுந்து அதிற் பிழிந்து மேற்படி வெண்காரத் தூளை அல்லது சீனத்தூளைச் சேர்த்து எல்லாம் ஒன்றாகக் கலக்கும் படி நன்றாகக் கலந்து காலை, மாலை குடிக்கச்செய்ய வேண்டும்.

இவ்விதம் மூன்றுநாள் செய்துவரவும்.

தீரும்நோய்கள் :— இரத்தப்பிரமியம், சீழ்ப்பிரமியம் ஆகியவை தீரும்.

மருத்துணவு :— புளி, புகை, புணர்ச்சி ஆகியவைகளை நீக்கவும்.

## 1296. இரத்தப் பிரமிய உசிதம் வேறு

பழம்பாசியிலை $2\frac{1}{2}$ பலம் ($87\frac{1}{2}$ கிராம்), இதில் ஒரு ஆழாக்கு எருமை மோரைவிட்டு இடித்துப் பிழிந்த சாறு, இதற்குச்சமன் நீராகாரம். இவ்விரண்டையும் கலந்து இரண்டுபலம் பனை வெல்லத்தை அதில் கரைத்து காலையில் குடிக்கச் செய்ய வேண்டும். இவ்விதம் மூன்று நாள் செய்யவும்.

தீரும்நோய் :—இரத்தப்பிரமியம் தீரும்.

மருத்துணவு :—முருங்கைக்கீரை, முருங்கைப்பூ, முருங்கைக்காய், துவரம்பருப்பு கூட்டவும்.

## 1297. இரத்தப் பிரமிய உசிதம் வேறு

கடுக்காய்ப்பிஞ்சு, கருவேல்பிஞ்சு, சீரகம், இவற்றின் தனித்தனித்தூள் $\frac{1}{2}$ வராகன் எடை ($1\frac{3}{4}$ கிராம்), கழுவின எள்ளெண்ணெய் 10 வராகன் எடை (35 கிராம்), இவற்றைக் கலந்து பருகச் செய்ய வேண்டும். இதன் மீது செம்பருத்தியிலையைக் குடிநீர் செய்து கொஞ்சம் கற்கண்டுத் தூளையும் போட்டுப் பருகச் செய்யவேண்டும். இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையும் பத்து நாட்கள் செய்து வரவும்.

தீரும்நோய் :— இரத்தப் பிரமியம் தீரும்.

மருத்துணவு :— இச்சாபத்தியம்.

## 1298. வேளையுசிதம்

காணு வேளையை அரைத்தவிழுது $1\frac{1}{2}$ பலம் ($52\frac{1}{2}$ கிராம்), பசுவின் வெண்ணெய் $1\frac{1}{2}$ பலம் ($52\frac{1}{2}$ கிராம்), இவ்விரண்டையும் நன்ருகக் கலந்து உட்கொள்ளவேண்டும்.

இவ்விதம் காலை ஒருவேளை மட்டும் மூன்று நாள் உபயோகிக்க வேண்டும்.

தீரும்நோய்கள் :—இரத்தப்பிரமியம், சீழ்மூலம், மூலவாயு ஆகியவை தீரும்.

மருத்துணவு :— இச்சாபத்தியம்.

## 1299. இரத்தப் பிரமியக் குடிநீர்

கீழ்க்காய் நெல்லிசமூலம், இம்பூறல் சமூலம் வகைக்கு $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), நற்சீரகம், காட்டாத்திப்பூ இவை வகைக்கு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்).

செய்முறை :—பின் சொன்ன இரண்டையும் குறுக அரிந்து எல்லாவற்றையும் ஒன்ருகக் கலந்து ஒருபாத்திரத்தில் போட்டு இரண்டு ஆழாக்கு நீரை விட்டுக் காய்ச்சி மூன்றிலொரு பாகமாகச் சுண்ட வைத்திறக்கி வடிகட்டி பருகச் செய்யவேண்டும். இவ்விதம் காலே, மாலே இரண்டு வேளேயும் மூன்றுநாள் செய்யவும்.

தீரும்நோய் :—இரத்தப்பிரமியம், இரத்த மூத்திரம் தீரும்.

மருத்துணவு :—புளி, புகை, புணர்ச்சி நீக்குக.

## 1300. சாரணே உசிதம்

சத்திச்சாரணேக்கிழங்கை அரைத்த விழுது $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்) இதனேச் சர்க்கரையுடன் கலந்து உட்கொள்ள வேண்டியது. அல்லது கொஞ்சம் பசுவின் பாலில் கரைத்துக் குடிக்கச் செய்ய வேண்டியது. இவ்விதம் காலே, மாலே இரண்டு வேளேயும் மூன்று நாள் உபயோகிக்கவும்.

தீரும்நோய் :— இரத்தப் பிரமியம் தீரும்.

மருத்துணவு :— இச்சாபத்தியம்.

## 1301. பெண் பிரமிய உசிதம்

வட்டத்துத்தி வேர்ப்பட்டை அரைத்த விழுது $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), குறுவைஅரிசிக்கழுநீர் $\frac{3}{4}$ படி, 1 இளநீர் இம்மூன்றையும் கலந்து பருகச் செய்யவேண்டும். இவ்விதம் காலேயில் ஒரு வேளே மட்டும் மூன்றுநாள் உபயோகிக்கவும்.

தீரும்நோய் :— பெண்களுக்குச் சாய்க்கும் மேக நீரொழுக்கு பிரமியம் ஆகியவை தீரும்.

மருத்துணவு :— இச்சாபத்தியம்.

## 1302. வட்டத்துத்திப் பிரயோகம்

வட்டத்துத்தி வேர்ப்பட்டையைப் பசுவின் பால் விட்டரைத்த விழுது 1 பலம் கசகசாவைப் பசுவின் பால் விட்டரைத்த விழுது 1 பலம் (35 கிராம்) பசுவின் பால் 1 ஆழாக்கு சர்க்கரை 1 பலம் (35 கிராம்).

செய்முறை :—இவையெல்லாவற்றையும் கலந்து பருகச் செய்ய வேண்டும். இவ்விதம் காலையில் ஏழுநாள் பயன்படுத்தவும்.

தீரும்நோய்கள் :—பெண்களுக்குக்காணும் சீழ்ப்பிரமேயம், நாபிப் புண், நாபிரணம், அனைத்து மேகங்கள் ஆகியவை தீரும்; உடல் வளமையுண்டாகும்.

மருத்துணவு :—இச்சாபத்தியம்.

## 1303. பெண்மேக உசிதம்

கடுக்காய்ப் பிஞ்சுச் சூர் 1 வராகன் எடை (3½ கிராம்), நெய்யில் வறுத்துச் சூர் செய்த கருவேலம்பிசின் தூள் 1 வராகன் எடை (3½ கிராம்) முட்டை வெள்ளையம்புலி செலுத்தக்க அளவு. பசுவின் பால் 1 ஆழாக்கு.

செய்முறை :—முன் இரண்டு சரக்குகளையும் கல்வத்திலிட்டு வெள்ளையம் புலியைச் சிறுகச் சிறுக விட்டு வெண்ணெய் போல அரைத்து மேற்படி பாலிற் கரைத்து குடிக்கச் செய்யவேண்டும். இவ்விதம் காலையில் மூன்றுநாள் செய்யவும்.

தீரும்நோய் :—பெண்களுக்குச் சாய்க்கும் மேக ஒழுக்கு தீரும்.

மருத்துணவு :—இச்சாபத்தியம்.

## 1304. தாமரைக்காய்ப் பிரயோகம்

கோழியின் இருதயம் என்னும் தாமரைக்காயைப் பிளந்து அதற்குள்ளிருக்கும் சவ்வை நீக்கி பொறுத்துவிட்டு அதை எடுத்துக் கொள்ளவேண்டியது. தூய்மைசெய்த இலிங்கம் 1 வராகன் எடை (3½ கிராம்), முடக்கொத்தான் வேர்ப்பட்டை 1 வராகன் எடை (3½ கிராம்), முடக்கொத்தான் வேர்க்குடிநீர் செலுத்தக்க அளவு.

செய்முறை :— முடக்கத்தான் வேர்ப்பட்டையைக் கல்வத்தி விட்டு வெண்ணெய் போலரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும். அவசியமானால் முடக்கத்தான் வேர்க்குடிநீரிற் கொஞ்சம் விட்டுக் கொள்ளலாம். பிறகு இருதயத்தைக் கல்வத்திலிட்டு மேற்படி குடிநீரைவிட்டு வெண்ணெய் போலரைத்து எடுத்துக் கொள்ளவும். இதன் பிறகு இலிங்கத்தைக் கல்வத்திலிட்டு நேர்மையாகப் பொடித்து முன் சித்தப்படுத்தின இரண்டு பண்டங்களையும் சேர்த்து முன் குடிநீரைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு மணிநேரம் கைவிடாமல் அரைத்து மூன்று உருண்டை செய்து மூன்று காலையில் மேற்படி முடக்கொத்தான் வேர்க்குடிநீரில் கலந்து உட்கொள்ள வேண்டும். மறுபடியும் முன்போல் சித்தப்படுத்தி ஏழுநாள் வரையில் பயன்படுத்தவும்.

தீரும்நோய்கள் :— ஆண்களுக்குக்காணும் சிழ்ப்பிரமேயம், நீர்ப்பை அழலே, தேக அழலை முதலியவை தீரும்.

மருத்துணவு :— இச்சாபத்தியம்.

குறிப்பு :— உடலின் வலிமை, நோயின் வலிமை முதலியவைகளுக்குத் தக்கபடி இதனளவை அதிகப் படுத்திக் கொள்ளலாம்.

## 1305. மிளகு உசிதம்

ஐந்து பலம் (175 கிராம்) பூவரசம்பட்டையை நைய இடித்து நீரை தெளித்து மறுபடியும் இடித்துச் சாறு பிழிந்து கொள்ள வேண்டும். இதனை ஒரு பாத்திரத்தில் விட்டு அதில் இரண்டு பலம் (70 கிராம்), மிளகைப் போட்டு ஓரிரவு ஊறவைத்து மறுநாள் வெயிலில் உலர்த்தவேண்டும். சாருனது மிளகு அமிழ்ந்திருக்கும் படியாக இருக்கவேண்டியது. ஈரமில்லாமல் நன்ருக உலர்ந்த பின்பு முன்போல் பூவரசம்பட்டையைச் சாறுபிழிந்து முன்போல் ஒரு இரவு ஊறவைத்து முன்போல் உலர்த்திக் கொள்ள வேண்டியது. இவ் விதம் மடக்கி மடக்கி ஏழு தடவைகள் செய்து முடிவாக நன்ருயுலர்த்தி இடித்துத் தூள்செய்து பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :— ¼ வராகன் எடை. நோய்க்குத் தகுந்தபடி காலை, மாலை இரண்டு வேளையும் அரைமண்டலம் முதல் ஒரு மண்டலம் உபயோகிக்கவும்.

துணைமருந்து :— வெண்ணெய், நெய், தேன் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :— மஞ்சள் மேகம், மஞ்சட்காமாலை முதலிய எல்லா மேகங்களும் தீரும்.

மருத்துணவு :— புளி, புகை, புணர்ச்சி தள்ளவும்.

## 1306. வீரியபந்துப் பிரயோகம்

நீர்முள்ளிவிதை, துத்திவிதை, இசுபகோல், வெந்தயம், தேற்றாங் கொட்டை (இதனை நையச்சிதைத்துக் கொள்ளவேண்டும்) கசகசா இவை வகைக்கு 2 வராகன் எடை (7 கிராம்), பனங்கற்கண்டு ½ பலம் (17½ கிராம்), ரஸ்தாளி வாழைப்பழம் 1 பசுவின் வெண்ணெய் 2 (பலம் 70 கிராம்), மான் கொம்பிழைத்த விழுது 1¼ வராகன் எடை.

செய்முறை :— இவற்றுள் இசுபகோல் விதையை அரை ஆழாக்கு நீரில் போட்டு மூன்று மணி நேரம் ஊறவைத்து அதன் கோழையை இறுத்துக் கொண்டு திப்பியை நீக்கி விடவும். மற்ற

ஐந்து சரக்குகளையும் இரவில் நீரில் போட்டு ஊறவைத்துக் காலையில் அம்மியில் வைத்து வெண்ணெய் போலரைத்துக் கொள்ளவும். இதனுடன் இசுபகோல் கோழை, மான் கொம்பிழைத்தவிழுது, பசுவின் வெண்ணெய், வாழைப்பழம், கற்கண்டு ஆகியவற்றையும் கலந்து நன்ருக மகத்தித்துப் பிசைந்து காலையில் உட்கொள்ள வேண்டும். இம்முறையில் ஏழு நாள்கள் தொடர்ந்து காலையில் சாப்பிடவும்.

தீரும்நோய்கள் :— நீர்த்து அல்லது உடைந்து போன விந்து இறுகிக் கட்டும்; எல்லா வகை மேகச்சூடும் சாந்தப்பட்டு உடல் குளிரும்; இளைத்த உடல் பருத்துப் பூரிக்கும். கணச்சூடு, அஸ்திச் சூடு, வெட்டைச்சூடு, முதலியவை தீர்ந்து உடல் செழிக்கும்.

மருத்துணவு :— மீன், புளி, கருவாடு, புகை, புணர்ச்சி ஆகியவைகளை நீக்கவும்; பசுநெய், உப்புக்கண்டம், சிறுபயறு சேர்ந்த கிச்சடி உபயோகிக்கவும்.

## 1307. பயருதி உசிதம்

பச்சைப்பயறு தேவையான அளவு. சோற்றுக் கற்ருழை மடல்களைப் பிளந்து ஒவ்வொன்றிலும் பயற்றை நிரப்பி நூலால் கட்டிக் குளிர்ச்சியான இடத்தில் வைத்து மூன்றும் நாள் பார்த்தால் அப்பயறுகளில் முளை கிளம்பி இருக்கும். அப்படியிருந்தால் பதம், அப்படி இல்லாவிட்டால் மறுநாள் அல்லது அதற்கடுத்த மறுநாள் எல்லாவற்றிலும் முளை கிளம்பி இருக்கும். அந்தப் பதத்திலெடுத்து அம்மியில் வைத்து வெண்ணெய் போலரைத்த விழுது $1\frac{1}{4}$ பலம் ($43\frac{3}{4}$ கிராம்), நிலப்பனைக் கிழங்கை அரைந்த விழுது $1\frac{1}{4}$ பலம் ($43\frac{3}{4}$ கிராம்), சாதிக்காய்த்தூள், சாதிப்பத்திரித்தூள், ஏலரிசித்தூள், இவை வகைக்கு $\frac{1}{2}$ வராகன் எடை ($1\frac{3}{4}$ கிராம்), நற்சீரகத்தூள், நெல்லிவற்றல்தூள், இவைவகைக்கு 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), இலவங்கம் எண்ணில் 5 (இதனையும் தூள்செய்துக் கொள்ளவும்) பசுவின்பால் $\frac{1}{2}$ படி.

செய்முறை :—முன் சரக்குகளையெல்லாம் கல்வத்தில் வைத்துப் பசுவின் பாலைச் சிறுகச் சிறுகத் தெளித்து வெண்ணெய் போல் அரைத்து மிகுந்த பசுவின் பாலில் கரைத்து பருகச் செய்ய வேண்டும். இவ்விதங் காலையில் ஏழுநாள் பயன்படுத்தவும்.

தீரும்நோய்கள் :—எல்லாவகைப் பிரமியநோய்கள், மேகநோய்கள் ஆகியவை தீரும்.

மருத்துணவு :— புளி, புகை, புணர்ச்சி ஆகியவை தள்ளவும்; பசுவின் மோர், பசுவின் தயிர், பசுவின்நெய், கூட்டிக்கொள்ளவும்.

குறிப்பு :— அதிக சூடான உடலினர்களுக்கு ஆரம்பத்தில் சற்றுக் குளிர்ச்சி காணும்; ஆயினும் பரவாயில்லை; அத்தகையினர்களுக்கு ஆரம்பத்தில் கொஞ்சமாகக் கொடுத்து படிப்படியாக மேற்கண்ட அளவிற்குக் கொண்டு வந்துவிடவும். செரித்தல் திறனுக்குத் தகுந்தபடி பாலைக் குறைத்துக் கொள்ளலாம். இதனை உட்கொண்ட பின் இது நன்ருகச் செரித்த பின்புஉணவு உட்கொள்ள வேண்டும்

## 1308. மேகாதி யுசிதம்

மருந்து வெள்ளை $7\frac{1}{2}$ பலம் ($262\frac{1}{2}$ கிராம்), சர்க்கரை $7\frac{1}{2}$ பலம் ($262\frac{1}{2}$ கிராம்), நல்லெண்ணெய் செல்லத்தக்க அளவு.

செய்முறை :—மருந்து வெள்ளையைத் தூளாக்கி துணியில் வடிகட்டி சர்க்கரையைச் சேர்த்து ஒருமணி நேரமரைத்து நன்ருகக் கலந்த பின்பு பளிங்குக் குப்பியில் பந்திரப்படுத்தவும்.

அளவும், துணைமருந்தும் :—மேற்படி தூள் $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$கிராம்) இதனை அரைப்பலம் ($17\frac{1}{2}$ கிராம்) நல்லெண்ணெயில் கலந்து உட்கொள்ள வேண்டும். காலை, மாலை இரண்டுவேளையும் இரண்டு நாள் உபயோகிக்கவும்.

தீரும்நோய்கள் :—பிரமேகம், மதுமேகம், நீரழிவு முதலிய மேக வகைகளெல்லாம் தீரும்.

மருத்துணவு :—புளி, புகை, புணர்ச்சி, மீன், கருவாடு ஆகியவை தள்ளவும். பசுவின் பால், துவரம்பருப்பு, எள்ளுப் புண்ணுக்கு, வாழைக்கச்சல் ஆகியவைகளைக் கூட்டவும். உப்பும், மிளகுமட்டும் சமைத்த அன்னம் உண்ணவும்.

## 1309. அண்டபற்பம்

கோழி முட்டைத்தோல் தேவையான அளவு. இதனைச் சிறு பிள்ளைகள் மூத்திரத்தில் மூன்று நாள் ஊறவைத்துக்காய்ச்சி ஓட்டின் உள் சவ்வை நீக்கிக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி அமுரியைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டுசாம நேரமரைத்து வில்லை செய்துலர்த்தி அகலில் வைத்து மேலகல் மூடி ஐந்து சீலை மண் செய்துலர்த்திக் கவசத்தின் பத்துப் பங்கெடை வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்க வெண்ணிறமான பற்பமாயிருக்கும். அப்படி வெண்ணிறமாகாவிட்டால் மறுபடியும் கல்வத்திலிட்டு மூத்திரத்தைச் சிறுச் சிறுக விட்டு இரண்டுசாம நேரமறைத்து முன்போல் வில்லைசெய்து முன்போலுலர்த்தி முன் போல் புடமிட வெண்மை நிறமாகிவிடும்.

அளவு :—4 முதல் 8 குன்றிமணி எடை.

துணைமருந்து :—தேன், வெண்ணெய், நெய் ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள் :—கல்லடைப்பு, நீரடைப்பு, நீர்க்கட்டு ஆகியவை தீரும். கல்லிருந்தால் அது நொறுங்கி வெளிப்பட்டு நீர் தாராளமாயிறங்கும்.

மருந்துணவு :—சமயோசிதம் போல் பத்திய மேற்படுத்தவும்.

## 1310. பருத்திப் பிரயோகம்

செம்பருத்திஇலை 3 பலம் (105 கிராம்), கொதிக்கஞ்சி $1\frac{1}{2}$ ஆழாக்கு நல்லெண்ணெய் 1 பலம் (35 கிராம்), சீரகத்தூள் $1\frac{1}{2}$ வராகன் எடை, பழையவெல்லம் $1\frac{1}{2}$ பலம் ($52\frac{1}{2}$ கிராம்).

செய்முறை :— மேற்படி இலையை மேற்படிக் கஞ்சியிற் போட்டு ஓரிரவு ஊறவைத்துக் காலையில் நன்றாகப் பிசைந்து வடிகட்டித் திப்பி நீக்கி அதில் வெல்லத்தைக் கரைத்து மறுபடியும் வடிகட்டி எண்ணெயை விட்டுக் கலந்து சீரகத் தூளைத் தூவி குடிக்கச் செய்ய வேண்டும். இவ்விதம் காலையில் மூன்றுநாள் அல்லது ஐந்துநாள் செய்யவும்.

தீரும்நோய்கள் :— நீரெரிச்சல், நீர்ருகல், நீர்க்கட்டு, நீர்க்கடுப்பு ஆகியவை உடனே தீரும்.

## 1311. இளநீர்ப் பிரயோகம்

புதிய இளநீர் 1 ஆழாக்கு, தேற்றாங்கொட்டை எண்ணிக் 5, (இதனைப்பஞ்சு போல் சிதைத்துக் கொள்ளவும்) கற்றாழைச்சோறு $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்). பொரித்த வெண்காரத்தூள் $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்), சர்க்கரை 2 பலம் (70 கிராம்).

செய்முறை :— இளநீரில் தேற்றாங் கொட்டையைப் போட்டு அவித்து வெந்த பதத்தில் இறக்கி அதனை வெண்ணெய் போல அரைத்து மீதியாயிருக்கின்ற இளநீரிற் கரைத்து கற்றாழை, வெண்காரப்பொடி, சர்க்கரை ஆகியவைகளைச் சேர்த்து நன்றாகக் கலக்கிக் குடிக்கச் செய்ய வேண்டும். இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையும் மூன்றுநாள் ஐந்துநாள் உபயோகிக்கவும்.

தீரும்நோய்கள் :— நீர்க்கடுப்பு, நீரெரிச்சல், நீர்ருகல், நீர்க்கட்டு, கல்லடைப்பு, பிரமேகம், ஆகியவை தீரும்.

மருந்துணவு :—சமயோசிதம் போல் பத்தியமேற்படுத்தவும்.

## 1312. கல்லடைப்புத் தூள்

வெண்காரத்தூள், சவுக்காரத்தூள், சீனக்காரத்தூள், இந்துப்புத்தூள், பனம்பூக் கதிரைச் சுட்டெரித்த சாம்பல், வாழைப்பூவை உலர்த்திச் சுட்டெரித்த சாம்பல் அல்லது வாழைச்சருகைச் சுட்

டெரித்த சாம்பல், நாயுருவியைச் சுட்டெரித்த சாம்பல், விதைமுற்றின கத்திரிக்காயை உலர்ந்திச் சுட்டெரித்த சாம்பல் அல்லது உலர்த்தின கத்திரிச் செடியைச் சுட்டெரித்த சாம்பல், கத்தைக் காம்புத்தூள் இவை வகைக்கு ½ பலம் (17½ கிராம்).

செய்முறை :— இவை யெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து ஒருமணி நேரமரைத்து நன்றாகக் கலந்த பின்பு பளிங்குக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :—1 முதல் 1½ வராகன் எடை.

துணைமருந்து :—தேன், இளநீர், முள்ளங்கிக்கிழங்குச்சாறு, சோம்புத்திராவகம், காசிவித்திராவகம், வெள்ளரிக்காய்ச்சாறு, வெள்ளரி விதையை அரைத்துப் பிழிந்தபால் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :— மூத்திரக்கிரிச்சரம், கல்லடைப்பு, சதையடைப்பு, நீரடைப்பு, நீர்கடுப்பு, துர்மாமிசவளர்ச்சி முதலியவை தீரும்.

மருத்துணவு :— நீரை அதிகப்படுத்தும் காய்கறிகளைச் சேர்க்கவும்.

## 1313. நீரெரிவு உசிதங்கள்

பத்துச் சங்கின் இலையை மென்று சாபபிட வேண்டும். இவ்விதம் நாளொன்றிற்கு இரண்டு மூன்று தடவை சாப்பிட்டால் நீரெரிச்சல் நிற்கும்.

## 1314. மேற்படி வேறு

நெருஞ்சிசமூலம் 1 பலம் (52½ கிராம்), இதில் ஒன்றரை ஆழாக்கு நீரைவிட்டு இரண்டிலொரு பாகமாகச் சுண்டவைத்து வடிகட்டிக் குடிக்கச் செய்யவும், இவ்விதம் நாளொன்றிற்கு மூன்று தடவை செய்யின் நீரெரிச்சல் உடனே தீரும்.

குறிப்பு :— இதனுடன் முன் சொல்லப்பட்டிருக்கின்ற சீனபற்பத்தைக் கலந்து உபயோகிப்பது அதிக நலம், இன்னும் சிலாசத்து பற்பத்தை அல்லது பொறித்த வெண்காரத்தூளைச் சேர்த்தும் உபயோகிக்கலாம்.

## 1315. மேற்படி வேறு

நற்சீரகம் தேவையான அளவு. இதனைத் தூள் செய்து கல்வத்திலிட்டுச் சோற்றுக் கற்றாழைச்சாறு சிறுகச் சிறுக விட்டு வெண்ணெய் போலரைத்து மெல்லிய துணியில் சற்று கனமாகத் தடவி

இலிங்கத்தின் மீது சுற்றிவைக்கவும். இவ்விதம் செய்ய நீர் எரிச்சல் அடங்கி நீர் குளிர்ந்து இறங்கும். நோய், உடல், காலம் இவற்றின் தன்மைக்கேற்றுற் போல் நாளொன்றிற்கு இரண்டு மூன்று தடவை செய்யலாம்.

## 1316. மேற்படி வேறு

உப்புத்தூள், சர்க்கரை ஆகிய இவ்விரண்டும் சமனெடை. இவ்விரண்டையும் கலந்து உமிழ்நீரில் குழைத்து நாபியிலும், நாபியைச் சுற்றிலும் தடவி மெதுவாகத் தேய்க்க நீரடைப்பு நீங்கி நீர் இறங்கும்.

## 1317. மேற்படி வேறு

முள்ளங்கிக் கிழங்கை நான்காகப் பிளந்து அதற்குள் தேவையான அளவு வெடியுப்பைப் பொடித்து நிரப்பி நூலால் சுற்றிக் கட்டித் தலைகீழாகத் தொங்க வைத்து அதன் நடுவில் ஒரு பீங்கான் பாத்திரத்தை வைக்கவும். இதில் நீர் வடியும். அந்த நீரைப் பளிங்குக் குப்பியில் பத்திரப்படுத்தவும். இவ்விதம் தேவையான கிழங்குகளில் நிரப்பி நீரை வடித்து சித்தப்படுத்தி வைத்துக் கொள்ளலாம்.

அளவு :— 1 பலம் முதல் $1\frac{1}{2}$ பலம்.

துணைமருந்து :—சோம்புத்திராவகம், இளநீர், காசினித்திராவகம் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—** நீரடைப்பு, நீரெரிச்சல், தீரும். நீர் தாராளமாய் இறங்கும்.

## 1318. மேற்படி வேறு

நடுத்தரமான 8 பலகறை. இதனை ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டு ஒரு ஆழாக்கு எலுமிச்சம்பழச்சாற்றை விட்டு ஒருநாள் வைக்கப் பலகறை எல்லாம் கரைந்து போகும். பிறகு திரிபோட்டு நீரை வடித்துக் கொள்ளவும். இந்த நீரைக் குடித்து வந்தால் பித்த மேகம், மூத்திரக்கிரிச்சரம், நீரெரிச்சல், நீரடைப்பு, நீர்க்கட்டு முதலியவை தீரும்.

## 1319. மேற்படி வேறு

மேற்படி பலகறையை அகலில் வைத்து மேலகல் மூடிக் கொல்லன் உலையில் வைத்து அகல் சிவக்கும்படியாக ஊதி எடுத்து ஆறவைத்து எடுக்கப் பலகறை பற்பமாயிருக்கும். இதனை ஒரு ஆழாக்கு எலுமிச்சம்பழச்சாற்றில் போட்டுக் கலக்கி முன்போல் திரிபோட்டுத் தெளிவிறுத்து உபயோகிக்கலாம். மேற்கண்ட குணங்களுண்டாகும்.

## 1320. மேற்படி வேறு

சங்கைப் புடம்போட்டால் பற்பமாகிவிடும். அல்லது கொல்ல னுலையில் வைத்து ஊதியும் பற்பமாக்கிக் கொள்ளலாம். ஒரு ஆழாக்கு எலுமிச்சம்பழச்சாற்றில் அரைப்பலம் (17½ கிராம்), சங்குபற்பத்தைப் போட்டுக் கலக்கித் திரிபோட்டுத் தெளிவிறுத்துக் கொடுக்க மேற்கண்ட குணங்கள் உண்டாகும்.

ஒரு வராகன் எடை மேற்படி பற்பத்தைக் கால் அல்லது அரை ஆழாக்கு எலுமிச்சம்பழச் சாற்றில் கலக்கிப் பருகச் செய்விக்க மேற்கண்ட குணங்களுண்டாம்.

## 1321. மேற்படி வேறு

சிறுபூளையிலை 1¼ பலம். இதனை வெண்ணெய் போலரைத்து நீர்கலக்காத எருமைமோரில் கலக்கி பருகச் செய்யவும். இவ்விதம் தினம் காலை, மாலை இரண்டு தடவை செய்துவரின் நீர்க்கட்டு, நீரடைப்பு, நீரெரிச்சல், நீர்த்தாரை அழலை ஆகியவை தீரும்.

## 1322. செம்பரத்தம்பூ சர்பத்து

செம்பரத்தம்பூ 30, நெல்லிக்காய்ச்சாறு 1 ஆழாக்கு, நடுத்தர மான எலுமிச்சம்பழம் 8, (இதனைச் சாறுபிழிந்துக் கொள்ளவும்.) நாரத்தம்பழம் 10, (இதனையும் சாறுபிழிந்துக் கொள்ளவும்.) இஞ்சி 8 பலம், (இதனை மேற்றோல் போக்கி இடித்துச் சாறுபிழிந்துக் கொள்ளவும்.) தாழைவிழுதுச்சாறு ½ ஆழாக்கு, கற்கண்டு 12 பலம் (420 கிராம்).

செய்முறை :— மேற்படி பூவின்காம்பு புறவிதழ்களை நீக்கி உள்ளிதழ்களை மாத்திரம் எலுமிச்சம்பழச்சாற்றில் போட்டு ஒருநாள் ஊறவைத்து மறுநாள் நன்குகப் பிசைந்து வடிகட்டி திப்பிநீக்கின சாறுடன் மற்றச் சாறுகளையும் கலந்து வடிகட்டி கற்கண்டை பொடித்துப் போட்டு பளிங்குக் குப்பியில் விட்டுக் காரக்கிட்டுத் னம் வெய்யிலில் வைத்துவரவும்.

**அளவு :—2 முதல் 2½ வராகன் எடை. காலை, மாலை இரண்டு வேளையும் உபயோகிக்கவும்.**

தீரும்நோய்கள் :— சீழ்ப்பிரமியம், நீர்ப்பிரமியம், இரத்தப் பிரமியம், நீர்க்கடுப்பு, நீரெரிச்சல், தாகம், அரோசிகம் ஆகியவை தீரும்.

## 1323. பிரமிய நிவாரண நெய்

(அ) இளநீர், தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு, பசுவின் பால், பசுவின் நெய் இவை வகைக்குப் ½ படி, நெல்லிக்காய்ச்சாறு,

கருப்பஞ்சாறு, பூசணிக்காய்ச்சாறு, மொந்தன் வாழைக்கிழங்குச் சாறு இவை வகைக்குப் ½ படி.

(ஆ) ஏலரிசி, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, பெரு நாகப்பூ, தேற்றான்விதை, கூகைநீர், தாளிசபத்திரி, சந்தனத்தூள், நற்சீரகம், திராட்சைப்பழம், பேரீச்சம்பழம், இலாமிச்சம்வேர், முசுமுசுக்கை வேர்ப்பட்டை, நெய்தற்கிழங்கு, நன்னாரிவேர், செங்கழுநீர்க்கிழங்கு இவை வகைக்கு 2 வராகன் எடை (7 கிராம்) இவற்றுள் இடிக்க வேண்டியவைகளை எல்லாம் ஒன்றாகக் கலந்து இடித்துத் தூள்செய்து துணியில் வடிகட்டி கொள்ளவும்.

(இ) சர்க்கரை 4 பலம் (140 கிராம்).

செய்முறை :— (அ) விலுள்ள திரவங்களை எல்லாம் ஒன்றாகக் கலந்து கொள்ளவும். (ஆ) வில் முன் சித்தப்படுத்தின தூளுடன் மற்றவைகளையும் கலந்து அம்மியில் வைத்துப் பசுவின்பாலைத் தெளித்து வெண்ணெய் போலரைத்து (அ) விலுள்ள திரவத்தில் கரைத்து அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்து கடுகுதிரள் பதத்தில் இறக்கி வடிகட்டி அதில் (இ) யிலுள்ள சர்க்கரையைக் கலந்து பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

அளவு :—1½ முதல் 3½ வராகன் எடை. காலை, மாலை இரண்டு வேளையும் அரைமண்டலம் (24 நாட்கள்) உபயோகிக்கவும்.

துணைமருந்து :— சர்க்கரை, பொரியரிசிமா, தேன் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :— இருபத்தொருவகைப் பிரமியநோய்கள் பெரும்பாடு, எலும்புருக்கி முதலிய மேகநோய்கள் தீரும்.

மருந்துணவு :— புளி, புகை, புணர்ச்சி தவிர்க்கவும்; பசுவின் பால் சேர்க்கவும்.

## 1324. சீரகக் கிருதம்

சீரகம் அரைப்படி, வட்டத்திருப்பிச்சாறு செல்லத்தக்க அளவு, பருமனான தேங்காய் 2.

செய்முறை :— சீரகத்தை உரலிலிட்டுக் குத்தி உமியைச் சுத்தமாக நீக்கி அரிசியை மாத்திரம் எடுத்துக் கொள்ளவேண்டும். இதனை ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டு வட்டத்திருப்பிச் சாற்றை மிதக்கவிட்டு நன்றாகப் புரட்டி வெய்யிலில் உலர்த்தி ஈரமில்லாமல் உலர்ந்தபின்பு அதில் முன் தேங்காய்களைத் துருவி தனிப்பாலாகப் பிழிந்து வெய்யிலில் வைத்து நீர்சுண்டி எண்ணெயான பிறகு இறுத்து பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :— $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ பலம், காலை, மாலை இரண்டு வேளையும் கால்மண்டலம் உபயோகிக்கவும்.

தீரும்நோய்கள் :— வாதமேகம், பித்தமேகம் முதலிய மேக நோய்கள் தீரும்.

மருத்துணவு :—இச்சாபத்தியம்.

## 1325. நெய்தல் நெய்

(அ) நெய்தல் கிழங்குச்சாறு, வல்லாரைச்சாறு, முசுமுசுக்கைச் சாறு, நெய்ச்சுண்டிச்சாறு, செவ்விளநீர், பசுவின் நெய், பசுவின் பால் இவை வகைக்கு $\frac{1}{2}$ படி.

(ஆ) மிளகு, கோட்டம், தக்கோலம், அகில், குங்குமப்பூ. கோரோசனை ஆகிய இவை வகைக்கு 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), மேற்றோல் சீவின சுக்கு, நற்சீரகம் இவை வகைக்கு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), அல்லிக்கிழங்கு, செங்கழுநீர்க்கிழங்கு, தாமரைய் வளையம், இவை வகைக்கு 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்).

செய்முறை :— (அ) விலுள்ள எல்லா திரவங்களையும் ஒன்ருகக் கலந்து கொள்ளவும். (ஆ) விலுள்ளவைகளில் கோரோசனையைத் தனியே பொடித்து வைத்துக்கொள்க. குங்குமப்பூவைத் தனியே அரைத்து வைத்துக்கொள்க. மற்றவைகளை ஒன்ருகச் சேர்த்து இடித்துத் தூள்செய்து பசுவின்பாலைத் தெளித்து வெண்ணெய் போலரைத்து (அ) விலுள்ளதில் கரைத்து அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்து கடுகுதிரள் பதத்தில் இறக்கி வடிகட்டி கோரோசனைப் பொடியைத் தூவி குங்குமப்பூவைக் கரைத்து பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

அளவு :—$1\frac{1}{2}$ முதல் 2 வராகன் எடை. இருபது முதல் நாற்பது நாள் சமயோசிதம் போல் உபயோகிக்கவும்.

துணைமருந்து :— சர்க்கரை, பொரியரிசிமா முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :— எல்லாவகைப் பிரமேகங்கள், பெரும்பாடு, எலும்புருக்கிநோய், வாத, பித்த, சிலேத்துமமேகங்கள், என்புச்சூடு, உட்காய்ச்சல் ஆகியவை தீரும்.

மருத்துணவு :— உடலியல்பு, நோயின்வலிமை ஆகியவை களுக்குத் தகுந்தபடி பத்தியம் ஏற்படுத்தவும்.

## 1326. வல்லாதி நெய்

மூக்கு வெட்டிச் சாணிப்பாலில் வேகவைத்து உலர்த்தி தூய்மை செய்த சேராங்கொட்டை 8 பலம் (280 கிராம்), பசுவின் நெர

8 பலம் (280 கிராம்), பிரமிய வழுக்கை 4 பலம் (140 கிராம்), தண்ணீர் 8 பலம் (280 கிராம்).

செய்முறை :— இவைகளை எல்லாம் ஒரு பாத்திரத்தில் போட்டு அடுப்பின் மீதேற்றிச் சிறுதீயாக எரித்து நீர் சுண்டி கொட்டை மிதந்தவுடன் கீழிறக்கிக் கொட்டைகளை நீக்கி வடிகட்டிப் பளிங்குக்குப்பியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :—1 வராகன் எடை முதல் 1½ வராகன் எடை.

துணைமருந்து :—சர்க்கரை, பொரியரிசிமா முதலியவைகளாம்.

திரும்நோய்கள் :—பிரமேகம், மேகசூலை, கிரந்திகள், அரையாப்பு, கரட்டு வாதம், முழங்கால் வாதம், நரித்தலை வாதம், சந்து வாதம், வெள்ளை ஆகியவை தீரும்.

மருத்துணவு :—நோய்க்குத் தகுந்தபடி உப்பு, புளி, புகை ஆகிய வைகளை நீக்கியும் நீக்காமலும் பத்தியம் வைக்கவும். அடியில் காணும் முறையிலுள்ள பத்தியத்தையும் கையாளவும்.

## 1327. வல்லாதி நெய் (வேறு)

(அ) மேற்கண்டபடி தூய்மைசெய்த சேராங்கொட்டை 2 பலம் (70 கிராம்), பசுவின் நெய் 8 பலம் (280 கிராம்).

(ஆ) சீரகத்தூள், ஏலரித்தூள், மருத்து வெள்ளைத்தூள் இவை வகைக்கு ½ பலம் (17½ கிராம்).

செய்முறை :—(அ)விலுள்ள கொட்டையை நெய்யில் போட்டு காய்ச்சி கொட்டை மிதந்தவுடன் அவைகளை நீக்கிவிடவும். பிறகு (ஆ)விலுள்ள தூள்களை ஒன்றாகக் கலந்து மேற்படி நெய்யில் தூவி சற்று சூடு காட்டி வடிகட்டாமல் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும்.

அளவு :—1 வராகன் எடை முதல் 1½ வராகன் எடை. காலை மாலை இரண்டு வேளையும் அரைமண்டலம் 1முதல் 1வரை ஒரு மண்டலம் உபயோகிக்கவும்.

துணைமருந்து :—சர்க்கரை, பொரியரிசிமா முதலியவைகளாம்.

திரும்நோய்கள் :—மேகம், நீர்க்குத்தல், நீரடைப்பு, நீரெரிச்சல் கிரந்திநோய்கள் ஆகியவை தீரும்.

மருத்துணவு :—சிறுபயறு, பச்சரிசி சேர்த்துக் கிச்சடி செய்து சாப்பிடவும். நெய் அதிகமாகச் சேர்த்துக் கொள்ளவும். வெந்தயக் கீரை, துவரம் பருப்பு, முருங்கைப்பிஞ்சு, அவரைப்பிஞ்சு, சுக்கான் கீரை, முளைக்கீரை, மோர் ஆகியவை கூட்டிக் கொள்ளலாம்.

## 1328. மகா மேக நெய்

(அ) பசுவின் நெய் ½ படி, பசுவின் பால் 1 படி, இளநீர் 10, சர்க்கரை 40 பலம் (1400 கிராம்).

(ஆ) சாலா மிசிரித்தூள் ½ பலம் (17½ கிராம்), ரூமிமத்தகித் தூள் ¼ பலம் (8¾ கிராம்), சாதிப்பத்திரித்தூள் ½ பலம் (17½ கிராம்) சாதிக்காய் எண்ணில் 2, (இவற்றைத் தூள்செய்து கொள்ளவும்) குங்குமப்பூ ¼ பலம் (8¾ கிராம்), நிலப்பனைக்கிழங்கு, தண்ணீர் விட்டான் கிழங்கு, அமுக்கிராக் கிழங்கு, நன்னாரி வேர், வெருகங் கிழங்கு, இவற்றின் தனித்தனித் தூள் வகைக்கு 1 பலம் (35 கிராம்).

செய்முறை :—(அ)விலுள்ள இளநீர்களைப் பொத்து நீரை எடுத்து அதில் நெய், பால், சர்க்கரை ஆகியவைகளைச் சேர்த்து அடுப்பிலேற்றவும். (ஆ)விலுள்ளவைகளில் ரூமிமத்தகியின் தூளைத் தனியே வைத்துக்கொள்ளவும். குங்குமப்பூவைப் பசுவின் பால் விட்டரைத்துத் தனியே வைத்துக் கொள்ளவும். மற்றத் தூள்களையெல்லாம் ஒன்றாகக் கலந்து அம்மியில் வைத்துப் பசுவின் பாலைவிட்டு வெண்ணெய் போலரைத்து முன்சித்தப்படுத்தி இருப்பதில் கரைத்து மெதுவாக எரித்து ஒரு கொதி வந்தவுடன் முன் அரைத்து வைத்திருக்கும் குங்குமப்பூவை அதில் கரைத்து நீர்சுண்டின பதத்திலிறக்கி ஒருநாள் வைத்துக் குளிர ஆறின பின்பு, ரூமிமத்தகித்தூளைத் தூவி நன்றாகக் கலந்து பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும். இது ஒருவகை இளகியமாகவும், நெய்யாகவும் இருக்கும். நெய்யும் சரக்கும் சேர்ந்து உட்கொள்ளவேண்டியது.

அளவு :—1½ வராகன் எடை முதல் 2 வராகன் எடை.

தீரும்நோய்கள் :—தீராத மேகங்கள், பெரும்பாடு, அத்திச்சூடு வெட்டைச்சூடு, உட்காய்ச்சல், பிரமியநோய்கள் ஆகியவை தீரும்.

மருத்துணவு :—இச்சாபத்தியம்.

## 1329. அமுத இளகம்

வால்மிளகு 1 பலம் (35 கிராம்), கசகசா 2 பலம் (70 கிராம்), பசுவின் பால் 8 பலம் (280 கிராம்), சர்க்கரை 4 பலம் (140 கிராம்), நெய் 1½ பலம் (52½ கிராம்).

செய்முறை :—முன் சொன்ன இரண்டு சரக்குகளையும் தனித்தனி பொன்னிறமாக வறுத்து தனித்தனி கல்வத்தில் வைத்து நேர்மையாக அரைத்துப் பொடித்துக் கொள்ளவும். பிறகு பாலில் சர்க்கரையைக் கரைத்து காய்ச்சி பாகுபதத்தில் முன் தூளைக் கலந்து தூவி கீழிறக்கி நெய்யைவிட்டு நன்றாகக் கிளறி பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

அளவு :—1 வராகன் எடை முதல் $1\frac{1}{2}$ வராகன் எடை காலை, மாலை இரண்டுவேளையும் பத்துநாள் உட்கொள்ளவும்

தீரும்நோய்கள் :—நாட்பட்ட பிரமேகங்கள் முதலிய இருபத்தொரு வகை மேகங்களும் தீரும்.

மருந்துணவு :—இச்சாபத்தியம்.

## 1330. ரேவல்சின் எண்ணெய்

சிற்றாமணக்கெண்ணெய் 16 பலம் (560 கிராம்), நுணாக்கொழுந்துச்சாறு 16 பலம் (560 கிராம்), கருஞ்சீரகம், வசம்பு வகைக்கு $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), தோலுரித்த வெள்ளைப்பூண்டிதழ் 4 பலம் (140 கிராம்), ரேவல் சின்னித்தூள் $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்).

செய்முறை :—எண்ணெயும் சாற்றையும் கலந்து அடுப்பேற்றி சீரகத்தையும் வசம்பையும் பூண்டையும் நைய சிதைத்து அதில் போட்டு நீர்சுண்டின பதத்திலிறக்கி வடிகட்டி ரேவல் சின்னித்தூளை தூவி துழாவி நன்றாகக் கலந்து பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு :—காலையில் 2 வராகன் எடை (7 கிராம்), மாலையில் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), இவ்விதம் காலை, மாலை இரண்டுவேளையும் ஏழு, ஒன்பது, பதினொரு நாட்கள் நோயின் வன்மைக்குத் தகுந்தபடி உபயோகிக்கவும்.

தீரும்நோய்கள் :—எல்லாவகை மேகங்கள், எலும்புருக்கி, பெரும்பாடு, பிரமியநோய்கள், நீரெரிச்சல், நீர்க்கட்டு, மூத்திரமானது உப்பைப் போலவும் சுண்ணாம்பைப் போலவும் வெண்ணெயைப்போலவும் படிந்திருக்கும் மேகங்கள், நாபிப்புண் முதலிய நோய்களெல்லாம் தீரும்.

மருந்துணவு :—சுடுசோற்றில் தயிரைச்சேர்த்து வெங்காயத்தை உபகறியாக உபயோகித்துக் கொண்டு சாப்பிடவும்; புளி, புகை புணர்ச்சி, மீன், கருவாடு ஆகியவைகளை நீக்கவும்.

## 1331. பூவந்திப்பட்டை எண்ணெய்

(அ) சிற்றாமணக் கெண்ணெய் 8 பலம் (280 கிராம்), பூவந்திப்பட்டைச்சாறு 8 பலம் (280 கிராம்), எலுமிச்சம்பழச்சாறு, வெங்காயச்சாறு, சோற்றுக்கற்றாழைச்சாறு, இலுப்பைப்பட்டைச்சாறு, புளியாரைச்சாறு, வல்லாரைச்சாறு இவை வகைக்கு 2 பலம் (70 கிராம்).

(ஆ) சாதிப்பத்திரி 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), கோரோசனை 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்).

செய்முறை :—(அ)விலுள்ளவைகளை எல்லாம் ஒன்றாகக் கலந்து அடுப்பேற்றி சிறுதீயாக எரித்து கடுகுதிரள் பதத்தில் இறக்கி வடிகட்டி (ஆ)விலுள்ள சாதிபத்திரியைவறுத்து தூள்செய்து எண்ணெயில் தூவி நன்றாகக் கலந்து பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு :—1½ வராகன் எடை முதல் 3 வராகன் எடை காலை, மாலை இரண்டுவேளையும் உபயோகிக்கலாம்.

தீரும்நோய்கள் :—இருபத்தொருவகை மேகங்கள், மேகஊறல் மேகத்தடிப்பு முதலிய மேகசம்பந்த நோய்கள் தீரும்.

மருத்துணவு :—இச்சாபத்தியம்.

## 1332. மேகாதி எண்ணெய்

(அ)விலுள்ள சிற்றாமணக்கெண்ணெய் 8 பலம் (280 கிராம்) இலுப்பைப்பட்டை, மாம்பட்டை, நாவல்பட்டை, பூவரசம்பட்டை இவற்றின் சாறு வகைக்கு 4 பலம் (140 கிராம்), வெங்காயச்சாறு 2 பலம் (70 கிராம்).

(ஆ) மிளகு, சீரகம் வகைக்கு 5 வராகன் எடை (17½ கிராம்), செங்கத்தாரிப்பட்டை 4 வராகன் எடை (14 கிராம்), இலவங்கம், இலவங்கப்பட்டை வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்).

செய்முறை :—(அ)விலுள்ளவைகளை ஒன்றாகக் கலந்து கொள்ளவும். (ஆ)விலுள்ளவைகளை ஒன்றாகக் கலந்து இடித்து தூள்செய்து அம்மியில் வைத்து பசுவின்பால் தெளித்து வெண்ணெய் போலரைத்து முன் சித்தப்படுத்தி இருப்பதில் கரைத்து அடுப்பேற்றி சிறுதீயாக எரித்துக் கடுகுதிரள் பதத்திலிறக்கி வடிகட்டி பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு :—¾ பலம் (26¼ கிராம்) முதல் 1 பலம் (35 கிராம்) வரை, காலையில் ஒருவேளை மட்டும் மூன்று அல்லது ஐந்து நாட்கள் சமயோசிதம் போல் உபயோகிக்கவும்.

துணைமருந்து :—இளநீர், காப்பிபானம், தேபானம், கொத்துமல்லி விதைக் குடிநீர் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :—இரத்தப்பிரமியம், பிரமேகம், கிரந்திகள், அரையாப்பு, மேகரணம், மேகப்புண், சொறிசிரங்குகள், வாயு, கருங்கிரந்தி முதலியவை தீரும்.

சிரங்குகள், இரணங்கள், புண்கள் ஆகியவைகளுக்கு உள்ளுக்குக் கொடுத்து மேலும் பூசிவரவும். சொறிசிரங்கிற்கு மேற்பூசவும்; வாயுவிற்கு மேல்பூசி அனல்காட்டவும்.

மருந்துணவு !—உப்பில்லாமல் பால்கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும். மறுபத்தியம் உப்பை வறுத்து சேர்க்கவும்.

## 1333. சந்தன எண்ணெய்

(அ) சிற்ருமணக்கெண்ணெய் 12 பலம் (420 கிராம்), உயர்ந்த சந்தனத்தூள் 8 பலம் (280 கிராம்).

(ஆ) சாதிக்காய் 5 வராகன் எடை ($17\frac{1}{2}$ கிராம்), மிளகு $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்), சீரகம் $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்), கோரோசனை, குங்குமப்பூ வகைக்கு 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), கற்கண்டு 1 பலம் (35 கிராம்).

செய்முறை :— (அ)விலுள்ள எண்ணெயில் சந்தனத்தூளை போட்டு சூரியனில் பன்னிரண்டு நாள் வைக்கவேண்டியது. ஒவ்வொரு நாளும் இரண்டு மூன்று தடவை நன்ருகக் கலக்கியும் வர வேண்டியது. அதில் தூசி, தும்பு விழாமல் மெல்லிய துணியை வேடு கட்டியும் வைக்க வேண்டியது. பன்னிரண்டுநாள் என்னும் கணக்கு அவசியமில்லை. எண்ணெயில் சந்தன வாசனை வந்துவிடவேண்டும். இதற்காக மூன்று அல்லது நான்கு நாட்கள் அதிகமாயினும் குற்றமில்லை. எண்ணெயில் வாசனை வந்தபிறகு கம்பிளியில் வைத்து பிழிபிந்து திப்பியை நீக்கிக் கார்குள்ள பளிங்குக் குப்பியில் எண்ணெயை விட்டு (ஆ)விலுள்ள சரக்குகளை தனித்தனி தூள் செய்து அந்தந்த எடைப்பிரகாரம் நிறுத்தெடுத்து ஒன்ருகக் கலந்து பளிங்குக் குப்பியில் போட்டு காரக்கிட்டு நன்ருகக் குலுக்கி நாலைந்து நாள் வெய்யிலில் வைக்க வேண்டியது. ஒவ்வொரு நாளும் இரண்டு மூன்றுதடவை குலுக்கு வந்தால் நல்லது.

அளவு :—$1\frac{1}{2}$ வராகன் எடை முதல் $2\frac{1}{2}$ வராகன் எடை.

துணைமருந்து :—இளநீர், காப்பிபானம், தேபானம் முதலியவை கனாம்.

தீரும்நோய்கள் :—எல்லாவகை பிரமேகங்கள், வெட்டைச்சூடு, அத்திச்சூடு, பித்தச்சூடு, மேகவெட்டை, அத்திவெட்டை, கைகால் எரிச்சல் ஆகியவை தீரும்.

மருந்துணவு :—இச்சாபத்தியம்.

## 1334. மேற்படி வேறு

சிற்ருமணக்கெண்ணெய் 8 பலம் (420 கிராம்), மண்டி 2 பலம் (70 கிராம்). இவ்விரண்டையும் கலந்து நன்ருகக்குலுக்கி இரண்-

* சந்தன அத்தர்

டொருநாள் வெய்யிலில் வைத்து மேற்கண்ட முறையில் சொல்லி யிருக்கிற சரக்குகளைத் தூள்செய்து சேர்த்து ஒருவாரம் வெய்யிலில் வைத்து மேற்கண்டபடி உபயோகிக்க மேற்கண்ட நோய்கள் தீரும்.

## 1335. கிரிச்சர ராசன் குளிகை

தூய்மைசெய்த நெல்லிக்காய் கெந்தகம், இலிங்கம், அரிதாரம், கிருஷ்ண அப்பிரேக நவநீதம் இவை வகைக்கு ½ பலம் (8¾ கிராம்), ஆவாரைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :—முன் மூன்று சரக்குகளையும் தனித்தனியாகப் பொடித்து ஒன்றாகக் கலந்து மேற்படி நவநீதத்தையும் சேர்த்து ஒரு மணி நேரமரைத்து எல்லாம் கலந்தபின்பு, மேற்படி சாற்றைச் சிறுக சிறுக வார்த்து நான்குசாம நேரமரைத்து வில்லைசெய்து, ஈரமில்லா மல் உலர்த்தி அகலில் வைத்து மேலகல்மூடி சீலைமண் செய் துலர்த்தி நாலங்குலம் ஆழமுள்ள ஒருகுழி தோண்டி அதில் மணலைப் பரப்பி அதன்மீது கவசத்தை வைத்து நாலங்குலம் மணலைக் கொட் டிப் பரப்பிக் கவசத்தின் பத்துப்பங்கெடை வறட்டியை அடுக்கித் தீயிட்டுக் குளிர ஆறின பின்பு, கவசத்தைப் பிரித்து வில்லையை எடுத் துக் கல்வத்திலிட்டு பொடித்து முன் ஆவாரைச் சாற்றை சிறுகச் சிறுக வார்த்து இரண்டுசாம நேரமரைத்து ஒரு குன்றிமணி பிரமா ணம் மாத்திரைகள் செய்து, நிழலில் உலர்த்திப் பளிங்குக் குப்பி யில் பத்திரப் படுத்தவும்.

அளவு :—1 மாத்திரை.

துணைமருந்து :—தேன், நெய், முள்ளங்கிக்கிழங்குச்சாறு, வெள் ளரிக்காய்ச்சாறு, வெள்ளரி விதையை அரைத்து பிழிந்தபால் முதலிய மூத்திர வர்த்தனகாரிகளாம்.

தீரும்நோய்கள் :—எல்லாவகை மூத்திரக் கிரிச்சர நோய்களும் தீரும்.

மருத்துணவு :—சமயோசிதம்போல் ஏற்படுத்தவும்.

## 1336. வித்தாதிச் சூரணம்

துத்திவிதை, நீர்முள்ளிவிதை, ஆவாரவிதை, நெல்லிவிதைப் பருப்பு, தேற்றான்விதை *இசுபகோல்விதை, வெள்ளரிவிதைப்பருப்பு சப்சாவிதை, தாமரைக்கொட்டைப்பருப்பு, மருதோன்றிவிதை மஞ்சட்

---

* இதனை ஜலத்தில் ஊறவைத்து இதன் கோழையையெடுத்துச் சேர்த்துக்கொள்ளவும். அல்லது இதனை இடிக்காமல் சேர்த்துக் கொள்ளவும்.

கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், வெந்தயம், குராசாணி ஓமம், மருதம்பட்டை, கடலழிஞ்சிப்பட்டை, நிலப்பனைக்கிழங்கு, அல்லிவிதை, நற்சீரகம், கசகசா (இதனை நீர் வார்த்து வெண்ணெய் போலரைத்துக் கொள்ளலாம்.) மாசக்காய் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்), கருவேற்பிசின் $\frac{3}{4}$ பலம் ($26\frac{1}{4}$ கிராம்), (இதனை நெய்யில் வறுத்துக் கொள்ளவும்.) கலைமான் கொம்பு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), (இதனைப் பன்னீர் வார்த்து வெண்ணெய்போல் இழைத்துக் கொள்ளவும், அல்லது இதன் பற்பத்தை சேர்த்துக் கொள்ளவும்) பனங்கற்கண்டுப் பொடி தேவையான அளவு.

செய்முறை :—மேற்கண்டவைகளில் இடிக்க வேண்டியவைகளை இடித்தும் அரைக்க வேண்டியவைகளை அரைத்தும் ஒன்ருகக் கலந்து அதற்குச் சட்டனெடை மேற்படி பனங்கற்கண்டுத் தூளைச் சேர்த்துக் கல்வத்தில் அல்லது அம்மியிலிட்டு ஒருமணி நேரமரைத்து ஏதேனும் ஈரமிருந்தால் வெய்யிலில் உலர்த்தி அவசியமானல் மறுபடியும் பொடித்து பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :—$1\frac{1}{2}$ பலம் முதல் 3 பலம் காலை, மாலை இரண்டு வேளையும் அரை மண்டலம், ஒரு மண்டலம் சமயோசிதம் போல் உபயோகிக்கவும்.

துணைமருந்து !—நெய், வெண்ணெய், வாழைப்பழம், பசுவின் பால், பாலேடு ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள் :—இருபத்தொரு வகைப் பிரமேகங்கள், நீரெரிச்சல், மதுமேகம், தாதுநட்டம், விந்து இழிவு, விந்து ஒழுக்கு ஆகியவைகள் தீரும். வெட்டைச்சூடு, அத்திச்சூடு ஆகியவைகளும் தீர்ந்து தாதுவன்மை, உடல்வன்மை முதலியவைகளும் உண்டாகும்.

குறிப்பு :—இதனுடன் 1 அல்லது $1\frac{1}{2}$ குன்றிமணியெடை அப்பிரக பற்பத்தையாவது, அப்பிரக செந்தூரத்தையாவது சேர்த்துச் சாப்பிட்டால் விரைவில் குணம் காணும்.

மருத்துணவு :—இச்சாப்பத்தியம்,

## 1337. பட்டைச் சூரணம்

பாலில் தூய்மைசெய்த பறங்கிப்பட்டை 5 பலம் (175 கிராம்), தூய்மைசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம் 2 பலம் (70 கிராம்), சாதிக்காய், சாதிப்பத்திரி, இலவங்கம், சிறுநாகப்பூ, அமுக்குராக்கிழங்கு,

---

* இது பூநாறி மருந்துக்கடைகளில் கிடைக்கும். இது அகப்படாத சமயங்களில் சந்தன அத்தரைச் சேர்த்துக்கொள்ளலாம். ஆனல் முன்கண்டதுதான் சிரேஷ்டம்.

கொடிவேலி வேர்ப்பட்டை, சடாமாஞ்சில் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்), பச்சைக்கற்பூரம் $2\frac{1}{2}$ வராகன் எடை முதல் 10 வராகன் எடை.

மருத்துணவு :—கெந்தகத்தையும் பச்சைக்கற்பூரத்தையும் தனித் தனியாக நேர்மையாகப் பொடித்து வைத்துக் கொள்ளவும். மற்றச் சரக்குகளை சேர்த்திடித்து துணியில் வடிகட்டி கொண்டு முன் சித்தப் படுத்தின இரண்டையும் சேர்த்து நன்ருகக் கலந்து ஒருமணி நேர மரைத்து அதற்கு சமனெடை சீனியைச் சேர்த்து நன்ருகக் கலந்து பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

அளவு :—$1\frac{1}{2}$ வராகன் எடை. முதல் $2\frac{1}{2}$ வராகன் எடைகாலை, மாலை இரண்டுவேளையும் நோய்க்குத் தகுந்தபடி அரை மண்டலம் முதல் ஒரு மண்டலம் வரை உபயோகிக்கவும்.

துணைமருந்து :—நெய், தேன், வெண்ணெய், முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :—இருபத்தொருவகைப் பிரமேகங்கள், சூலை கிரந்தி, மேகவூறல், மேகவாயு ஆகியவை தீரும்.

மருத்துணவு :—இச்சாபத்தியம்.

## 1338. வெட்டை உசிதம்

காட்டாமணக்குப்பால் $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), இதனைக் கொஞ்சம் பசுவின் பாலில் கலந்து பருகச் செய்யவேண்டும். இதனைத் தனியாக வும் சாப்பிடலாம். இவ்விதம் மூன்றுநாள் காலையில் மட்டும் செய்ய வும். இந்த மூன்றுநாளும் பச்சரிசியும் பசுவின் பாலும் சேர்த்து உப்பில்லாமல் பொங்கி சாப்பிடவும். வேறென்றும் ஆகாது; நாலாம் நாள் வெந்நீர்ச் சோறு சாப்பிடவும். ஐந்தாம் நாள் கஞ்சிதேய்த்து குளியல்செய்து எல்லாக் காய்கறிகளையும் சேர்த்துக்கொள்ளலாம்.

தீரும்நோய்கள் :—எல்லாவகை வெட்டைகள், எல்லாவகைப் பிரமேகங்கள், நாபிரணம், நீர்ப்பை அழலை, நீர்ப்பைரணம், நீர்த் தாரை அழலை, நீர்த்தாரைரணம் ஆகியவை தீரும்.

## 1339. வெள்ளைத் தைலம்

தேவையான மருந்து வெள்ளையைத் தோண்டியில் பொடித்துப் போட்டு விலாவில் துளையிட்ட ஒரு தோண்டி பொருத்தி பாகப்படி சீலைமண்செய்து கயிற்றினுல்கட்டி சீலைமண் காய்ந்தபின்பு, அடுப்பின் மீது ஒரு தோண்டியைச் சாய்த்து வைத்து மறுதோண்டிக்கு முட்டுக் கொடுத்து அந்த துளை கீழ்ப்பக்கமிருக்கும் படியாக வைத்து அதில் திரிபோட்டு அதன்கீழ், ஒரு பீங்கான் பாத்திரம் வைக்கவும். பின்பு அடுப்பில் நெருப்பிட்டு எரிக்க திரி வழியாகத் தைலம் இறங்கும்.

இந்த தைலத்தை பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும். மேற்படி மருந்து வெள்ளையைத் தோண்டியில் போட்டு தோண்டியின் விலாவில் துளைசெய்து இரும்புக் குழாயை பொருத்தி சீலமண் செய்து தோண்டியின் வாயில் சிறுகலயத்தை அல்லது சிறுசட்டியை வைத்து சீலமண் சந்தில்லாமல் செய்து அது காய்ந்தபிறகு, அடுப்பேற்றிக் கலயத்தில் அல்லது சட்டியில் நிறைய நீரை இட்டு சிறுதீயாக எரிக்க குழாயின் மூலம் தைலம் வடியும். இந்த வகையாகவும் தைலமிறக்கிக்கொள்ளலாம். மேற்கண்ட இரண்டு வகைகளிலும் கைபாகம், செய்பாகம் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும்.

அளவு :—1 வராகன் எடை முதல் 1½ வராகன்எடை.

துணைமருந்து :—சர்க்கரை, தேன், நெய், வெண்ணெய், பொரியரிசிமா முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :—இருபத்தொரு வகைப் பிரமேகங்கள், நாபிரணம், நீர்ப்பைரணம், நீர்த்தாரைரணம், பெரும்பாடு, அழலை ஆகியவை தீரும்.

## 1340. பட்டைமது உசிதம்

பட்டைச்சாராயம் 1½ பலம் (52½ கிராம்), இதில் ஒரு சேவலை அறுத்து அதன் இரத்தத்தை விட்டுக் கலந்து சூடாருமல் உடனே பருகச் செய்யவேண்டும்; இவ்விதம் காலையில் மூன்றுநாள் செய்யவும்.

தீரும்நோய்கள் :—இருபத்தொருவகைப் பிரமியங்கள், நீரெரிச்சல் ஆகியவை தீரும்.

மருந்துணவு :—இச்சாபத்தியம்.

## 1341. திலத் உசிதம்

எள்ளெண்ணெய் 1 பலம், (35 கிராம்), ஒரு கோழிமுட்டையின் வெள்ளைக்கரு, ஒரு எலுமிச்சம்பழத்தின் சாறு, வெண்காரத்தைப் பொரித்து அரைத்த தூள் ½ வராகன் எடை (1¾ கிராம்), இந்நான்கையும் ஒன்ருகக் கலந்து உட்கொள்ள வேண்டும். இவ்விதம் காலை, மாலை இரண்டுவேளையும் மூன்றுநாள் செய்யவும்.

தீரும்நோய்கள் !—எல்லாவகைப் பிரமியங்களும் தீரும்.

மருந்துணவு :—இச்சாபத்தியம்.

## 1342. ஆவாரையாதிச் சூரணம்

ஆவாரை வேர்ப்பட்டை, ஆவாரை மரப்பட்டை, ஆவாரம்பூ, ஆவாரை விதை, ஆவாரைஇலை இவை வகைக்கு 10 வராகன்எடை

(35 கிராம்), ஓதியம்பட்டை 25 வராகன் எடை (87½ 1 கிராம்), மரமஞ்சள் 12½ வராகன் எடை (37¾ கிராம்), அத்திக்கொழுந்து 6¼ வராகன் எடை (21¾ கிராம்), சீந்திற் சர்க்கரை 46¾ வராகன் எடை (163 கிராம்).

செய்முறை:—முன் சரக்குகளை எல்லாம் வெய்யிலுலர்த்தி தனித் தனி இடித்து துணியில் வடிகட்டி மேற்கண்ட நிறைப்படி தனித்தனி நிறுத்தெடுத்து ஒன்ருகக் கலந்து சீந்திற் சர்க்கரையையும் சேர்த்துக் கல்வத்தில் அல்லது அம்மியில் ஒருமணி நேரமரைத்து நன்ருகக் கலந்தபின்பு, பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

அளவு :—1½ வராகன் எடை முதல் 2½ வராகன் எடை.

துணைமருந்து :—நெய், தேன், வெண்ணெய், வெந்நீர் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :—எல்லாவகைப் பிரமியம், பிரமேகம், மூத்திர நோய் ஆகியவை தீரும்.

மருத்துணவு :—சமயோசிதம்போலவும், நோய்க்குத் தகுந்தபடியும் பத்தியம் ஏற்படுத்தவும்.

## 1343. வல்லாதகி உருண்டை

தூய்மைசெய்த சேராங்கொட்டை 8 பலம் (280 கிராம்), கல்லாய்ந்த எள்ளு 8 பலம் (280 கிராம்), நெல்பொரி 8 பலம் (280 கிராம்), வெல்லம் 6 பலம் (210 கிராம்).

செய்முறை:—கொட்டையை ஓட்டிவிட்டு வறுத்து மற்றவைகளையும் சேர்த்து உரலிலிட்டு நன்ருகத் தூளாகும்படியாக இடித்து இளகிய பதத்தில் எடுத்து பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

அளவு :—3 வராகன் எடை முதல் 5 வராகன் எடை. இன்னும் நோயின் வலிமை உடலின் வன்மையறிந்து அளவை அதிகப்படுத்தியும் கொள்ளலாம்.

தீரும்நோய்கள் :—மேகம், மேகவூறல், கைகால் பிடிப்பு, மூத்திரக்கிரிச்சரம், நீர்க்கடுப்பு ஆகியவை தீரும்.

மருத்துணவு:—முருங்கைப் பிஞ்சு, கத்திரிப்பிஞ்சு, துவரம்பருப்பு, சிறுபயறு. வெள்ளாட்டு உப்புக்கண்டம், பசுவின்மோர், பசுவின்நெய் ஆகும். புளி, புகையிலை, குளிர்ந்தநீர் ஆகா. விளக்கெண்ணெய் தேய்த்து குளியல் செய்யவும்.

குறிப்பு :—சேராங் கொட்டையைச் சேர்ப்பதைக் காட்டிலும் அதனைக் குழித்தைலமாக இறக்கி சேர்த்துக் கொள்வது நல்லது. ஆனுல் அப்போது அளவைக் குறைத்துக் கொடுக்க வேண்டும்.

## 1344. மகா மேக வல்லாதகி

தூய்மைசெய்த சேராங் கொட்டை எண்ணில் 50, 1 எள்ளுந் சிரங்கை, 1 நெற்பொரிபிடி, 1 கொப்பரைத் தேங்காய் மூடி, பனை வெல்லம் 3 பலம் (105 கிராம்), மிளகுத்தூள் $1\frac{1}{4}$ வராகன் எடை.

செய்முறை :—இவை எல்லாவற்றையும் பாகப்படி சேர்த்திடித்து இளகிய பதத்தில் எடுத்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

அளவு :—$1\frac{1}{2}$ வராகன் எடை முதல் 3 வராகன்எடை காலை, மாலை இரண்டுவேளையும் கால் அரை ஓருமண்டலம் தின்னவும்.

தீரும்நோய்கள்:—தீராதமேகங்களெல்லாம் தீரும்.

மருத்துணவு :—புளி, புகை, புணர்ச்சி நீக்கவும்.

## 1345. புட்ப லேகியம்

வேப்பம்பூ, புங்கம்பூ, நெல்லிப்பூ, இலவம்பூ, காரைப்பூ, விராலிப், பூ, செண்பகப்பூ, சிறுநாகப்பூ, இலவங்கம், குங்குமப்பூ, புரசம்பூ காட்டுலவங்கம், கஞ்சாப்பூ, மாம்பூ, ஊமத்தம்பூ, கரிசாலைப்பூ,பொற்றலைக்கையாந்தகரைப்பூ, பொற்கொன்றைப்பூ, அமுக்குராப்பூ,தூதுவளைப்பூ, காட்டாத்திப்பூ, கருவேலம்பூ, ஆவாரம்பூ, அழிஞ்சிப்பூ, கோங்கிலவம்பூ, நெருஞ்சிப்பூ, மாதளம்பூ, இலவங்கப்பத்திரி, பச்சைக் கொத்துமல்லி, இவைகளைத் தனித்தனி உலர்த்தி தனித்தனி சமனெடை எடுத்துக் கொள்ளவும். இவற்றிற்கு சமனெடை உலர்த்தின தென்னம்பாளைப்பூ, இவ்விரண்டு வகைகளையும் சேர்த்திடித்து துணியில் வடிகட்டி கொள்ளவும். மேற்படி தூளிற்கு சமனெடை சர்க்கரை, எல்லாவற்றின் மொத்த எடைக்கு நான்கிலொருபங்கு பசுவின் நெய், சீனியும் தூளும் சேர்ந்த எடைக்கு எட்டிலொருபங்கு தேன்,

செய்முறை:—சர்க்கரையைப் பாகுசெய்து பாகுபதத்தில்மேற்படி தூளை சிறுகச் தூவி நன்ருகக் கிளறி கிண்டி கீழிறக்கி நெய்யையும் தேனையும் விட்டு நன்ருகப் புரட்டி ஆறினபின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

அளவு:—$1\frac{1}{2}$ வராகன் எடை முதல் 3 வராகன் எடை.

தீரும்நோய்கள் :—இருபத்தொரு வகைப் பிரமேகங்கள், எலும்புருக்கி, பெரும்பாடு, உடல் எரிவு, உடல் காந்தல், உடல் வறட்சி, மேகரணம், பித்தவிகாரம் ஆகியவை தீரும். விந்து கெட்டிப்படும் விந்துப்பெருக்கம் உண்டாம்.

மருத்துணவு :—இச்சாபத்தியம்.

குறிப்பு :—இது ஒரு வகை அருமையான இளகம்; ஆனால்,இதில கண்ட பூவகைகளெல்லாம் நினைத்தபோதும், எல்லா காலத்திலும் கிடைப்பதரிது; ஆகையால் இதனைச் செய்ய விரும்புவோர் அந்தந்தப் பூக்களின் காலத்திலும் அந்தந்த இடங்களிலும் அவைகளை முன்னரே சேகரித்து சித்தப்படுத்தி வைத்துக் கொள்ளவேண்டும். அப்படிச் செய்யமுடியாதவர்கள் கிடைக்கக் கூடிய பூக்களைச் சேகரித்தும், கிடைக்காதவைகளுக்குப் பதிலாக அதனதன் கொழுந்தை அல்லது அதன் விதையை காலத்திற்கேற்றாற்போல் சேர்த்து செய்து கொள்வார்களாக. இதில் முக்கியமானது தென்னம்பூ ஒன்றே. ஆதலால் கிடைத்தவைகளை சேகரித்து அவற்றிற்கு சமன் தென்னம்பூவைச் சேர்த்து செய்து கொள்ளலாம்.

## 1346. குங்கிலிய நவநீதம்

வெள்ளைக்குங்கிலியம் 18 வராகன் எடை (63 கிராம்), தூய்மை செய்த கெந்தகம் 2 வராகன் எடை (7 கிராம்), பசுவின் நெய் 1 பலம் (35 கிராம்), செம்பருத்திஇலை, தேங்காயைத் துருவினபூ செல்லத்தக்க அளவு.

செய்முறை :—செம்பருத்திஇலையையும் தேங்காய்ப் பூவையும் சேர்த்திடித்துப் பிழிந்து கொள்ள வேண்டும். இது சுமார் முக்கால் அல்லது ஒரு அழாக்கு இருக்க வேண்டும். இதனை ஒரு கல்வத்தி விட்டு வைத்துக்கொள்க. ஒரு இரும்புக் கரண்டியில் மேற்படி நெய்யை விட்டு காய்ச்சி சூடுகண்டவுடன் குங்கிலியத்தையும் கெந்தகத்தையும் போட்டுக் காய்ச்சி நீர்போலுருகினவுடன் இரும்புக் கம்பியால் இரண்டு-மூன்று தட்வை நன்றாகக் கலக்கி முன் கல்வத்தில் சாய்க்கவேண்டும் நன்றாய்க் குளிர ஆறின் பின்பு, பாலை இறுத்து விட்டு தண்ணீர்விட்டு அரைத்தரைத்து இறுத்திறுத்துவிடவேண்டும். இவ்விதம் ஏழு தடவை செய்தால் வெண்ணெயாகிவிடும். ஒரு பாத்திரத்தில் நீரைவிட்டு அதில் இதனை போட்டு மூடிவைக்கவேண்டும்.

அளவு :—1½ வராகன் எடை முதல் 2 வராகன் எடை,

துணைமருந்து :—வெல்லம், சர்க்கரை, வெண்ணெய், வாழைப் பழம் முதலியவைகளாம். இவற்றுள் ஒன்றில் வைத்து மேலே பொதிந்து உட்கொள்ள வேண்டும் காலை, மாலை இரண்டுவேளையும் பத்துநாள் உபயோகிக்கவும்.

தீரும்நோய்கள் :—பலவகைப் பிரமேகங்கள் தீரும். நாபிரணம் நீர்ப்பைரணம், நீர்த்தாரைரணம், நீரெரிச்சல் முதலியவைகளும் தீரும்

மருத்துணவு:—இச்சாபத்தியம்.

## 1347. திந்திருணி உசிதம்

புளியிலை, தோலுரித்த வெங்காயம், எருமை மோர் இவை மூன்றும் செல்லத்தக்க அளவு.

முன்னிரண்டையும் சேர்த்திடித்து எருமை மோரை விட்டுப் பிசைந்து வடிகட்டி உட்கொள்ள வேண்டும். இதில் சுமார் ஒரு ஆழாக்கு இருக்க வேண்டும்.

காலை, மாலை இரண்டுவேளையும் ஆறுநாள் உபயோகித்தால் இரத்தபிரமியம், நீர்க்கடுப்பு, நீரெரிச்சல் தீரும். கணச்சூடு, எலும்பு சூடு முதலியவைகளும் தீரும். சிறு பிள்ளைகளுக்குக் கொடுத்தால் அளவைக் குறைத்துக் கொடுக்க வேண்டும்.

மருந்துணவு :—இச்சாபத்தியம்.

## 1348. மகாவிந்தாதிக் குளிகை

வெள்ளைக் குன்றிமணி விதைப்பருப்பு, (இதனைக் காடியில் இரண்டு மூன்றுநாள்ஊறவைத்து தனித்தனியே அரைத்துக் கொள்ளவும்.) ஆவாரை விதைத்தூள், தேற்றான் விதை (இதனைப் பஞ்சு போல் சிதைத்துக் காடியில் இரண்டொருநாள் ஊறவைத்து தனியே அரைத்துக் கொள்ளவும்.) நாயுருவி விதைத் தூள் மஞ்சட்கடுக்காய் தோல் தூள், தான்றிக்காய் தோல் தூள், நெல்லிமுள்ளித் தூள் சித்திரமூலவேர்ப்பட்டைத் தூள், மரமஞ்சள் தூள், பருத்திவிதைப் பருப்புத் தூள் புளியங்கொட்டைத்தோல் தூள் விளாம்பிசின் (இதனை தண்ணீரில் ஊறவைத்துக் கோழையாகச் செய்து கொள்ளவும்.) * காந்தம், அப்பிரகம், கல்மதம்,வங்கம், காந்தம், துத்தம்,சிலாசத்து * இவற்றின் பற்பம் அல்லது செந்தூரம் வகைக்கு 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்) காடி செல்லத்தக்க அளவு.

செய்முறை:— எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கல்வத்தி விட்டு இரண்டொருமணி நேரமரைத்து எல்லாம் கலந்த பின்பு, காடியைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரமரைத்து ஒரு குன்றிமணி அளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி பத்திரப் படுத்தவும்.

அளவு:— 1 முதல் 2 மாத்திரை.

துணைமருந்து:— தேன், நெய், முதலியவைகளாம்.

---

*......* இவற்றின் பற்ப செந்தூரங்களெல்லாம் இந்த அனுபோக வைத்திய நவநீதம் முன் பாகங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

தீரும்நோய்கள் :—நீரிழிவு, மதுமேகம், பிரமேகம், மூத்திரக் கிரிச்சரம், தந்துமேகம், ஒன்பதுவகை மூலநோய்கள், அறுவகைக் கிராணிகள், அறுவகைப் பவுத்திரங்கள் ஆகியவை தீரும்.

மருத்துணைவு:—உடலியல்பு, நோயின்வன்மை ஆகியவைகளுக்குத் தகுந்தபடி பத்திய மேற்படுத்தவும்.

## 1349. நீரிழிவு உசிதம்

விரால் மீன் தலையிலுள்ள கல்லை சேகரித்து அஞ்சனம் போல் பொடித்து பளிங்குக் குப்பியில் வைத்துக் கொள்ளவும்.

அளவு :—3 குன்றிமணி எடை முதல் 5 காலை, மாலை இரண்டு வேளையும் பத்துநாள் உபயோகிக்கவும்.

துணைமருந்து :—தண்ணீர், பசுவின் பால்.

தீரும்நோய்கள் :—அதிகமாக இறங்குகிற நீர் அதி சீக்கிரம் குறைந்து போகும் ; தாகம் நிற்கும்.

## 1350. விழுது உசிதம்

ஆலம்விழுது 1 பலம் (35 கிராம்), இதனை வெண்ணெய் போலரைத்து ஒரு ஆழாக்கு எருமைமோரில் கரைத்துப் பருகச் செய்யவும். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையும் பத்துநாள் செய்யின் நீரிழிவு, தினைக் கழிச்சல், குருதிக் கழிச்சல் முதலியவை தீரும். வெள்ளை, பிரமேகமும் போகும்.

மருத்துணைவு :—நோய்க்குத் தகுந்தப்படி பத்திய மேற்படுத்தவும்

## 1351. சத்துமா உசிதம்

ஆவாரை விதையை வறுத்தரைத்த மாவு ½, கருங்குருவை அரிசியை வறுத்தரைத்த மாவு 1 படி, (இவ்விரண்டையும் கலந்து கொள்ளவும்) வெல்லம் தேவையான அளவு, நல்லெண்ணெய் செலலத்தக்க அளவு.

செய்முறை :—மேற்படி மாவில் அரை ஆழாக்கு எடுத்து அதனுடன் செல்லத்தக்க வெல்லத்தையும் நல்லெண்ணெயையும் சேர்த்து இளகிய பதமாகப் பிசைந்து சாப்பிடவேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டுவேளையும் பன்னிரண்டுநாள் செய்யவும்.

தீரும்நோய்கள்: — நீரிழிவு, வெகுமூத்திரம், வாயிலிருந்து இரத்தம், விழுதல், குருதிக்கழிச்சல், பெரும்பாடு முதலியவை தீரும்.

மருந்துணவு :—நோய்த்தன்மை, உடலியல்பு ஆகியவைகளுக்குத் தகுந்தபடி பத்தியமேற்படுத்தவும்.

## 1352. அத்தி உசிதம்

அத்திப்பட்டைத்தூள் $7\frac{1}{2}$ வராகன் எடை ($26\frac{1}{4}$ கிராம்), எள்ளுப் பிண்ணாக்கு $7\frac{1}{2}$ வராகன் எடை ($26\frac{1}{4}$ கிராம்). இவ்விரண்டையும் கலந்து கொஞ்சம் நீர்தெளித்து பாகப்படி பிட்டவித்து இதனுடன் நல்லெண்ணெய் சேர்த்து இளகிய பதமாகப் பிசைந்து சாப்பிடவேண்டும். இவ்விதம் காலை, மாலை இரண்டுவேளையும் பத்துநாள் உபயோகிக்க நீரிழிவு, மதுமேகம் ஆகியவை தீரும்.

மருந்துணவு :—நோயிற்குத் தகுந்தபடி பத்தியமேற்படுத்தவும்.

## 1353. சாமை உசிதம்

சாமையரிசி $\frac{1}{4}$ படி, எள் $\frac{1}{4}$ படி, முத்தலும்பருமனுமான 2 தேங்காய்.

செய்முறை :—தேங்காய்களைத் துருவிப் பால்பிழிந்து அதில் எள்ளைப் போட்டு புரட்டி உலர்த்தி ஈரமுலர்ந்த பின்பு, கல்லுரலிலிட்டுச் சாமையரிசியையும் சேர்த்து இடித்து போலான பின்பு எடுத்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

அளவு :—$\frac{3}{4}$ பலம் முதல் $1\frac{1}{2}$ பலம் வரை.

தீரும்நோய்கள் !—நீரிழிவு, வெகு மூத்திரநோய், சொட்டுமூத்திரம் ஆகியவை தீரும்.

மருந்துணவு :—நோய்க்குத் தகுந்தபடி பத்தியமேற்படுத்தவும்,

## 1354. மேனி உசிதம்

குப்பைமேனி இலையை உலர்த்தி இடித்தத் தூள் $\frac{1}{2}$ படி, கருங்குருவையரிசிமா 1 படி.

இவ்விரண்டையும் கலந்து வேளை ஒன்றுக்கு கால் ஆழாக்கு ரீதம் எடுத்து பாகப்படி களி கிண்டி இதில் கொஞ்சம் நல்லெண்ணெயும் சேர்த்து உட்கொள்ள வேண்டும். இவ்விதம் காலை, மாலை ரண்டுவேளையும் இருபதுநாள் செய்யின் நீரிழிவு, துத்திவிழுகிற நீர் தலியவை தீரும்.

மருந்துணவு :—சமயோகிதம்போல் ஏற்படுத்தவும்.

## 1355. தூதுவளை உசிதம்

ஆவாரைவிதை மாவு $\frac{1}{8}$ ஆழாக்கு, குருவையரிசிமா $\frac{1}{2}$ ஆழாக்கு, தூதுவளை சமூலம் 10 பலம் (350 கிராம்).

செய்முறை :— தூதுவளையைப் பானையில் போட்டு மெதுவாக நீர் வார்த்து பானை வாய்க்கு வேடு கட்டி அதன்மீது இரண்டு மாவையும் கலந்து கொஞ்சம் நீர் தெளித்து வைத்து மேல்சட்டி மூடி பிட்டவித்து எடுத்துச் சாப்பிட வேண்டும். இவ்விதம் காலை, மாலை இரண்டுவேளை யும் இரண்டு வாரம் சாப்பிட நீரிழிவு, கபம், இருமல் ஆகியவை தீரும்.

மருத்துணவு :—நோய்க்குத் தகுந்தபடி ஏற்படுத்தவும்.

## 1356. காந்த உசிதம்

உயர்ந்த காந்தம் 2 பலம் (70 கிராம்), (இதனை நேர்மையாகப் பொடித்துக் கொள்ளவும். சாதிக்காய்த்தூள் 1 பலம் (35 கிராம்), ஆவாரம் வேர்ப்பட்டைத்தூள், உளுந்துமா இவை வகைக்கு 1 ஆழாக்கு, சர்க்கரை 1 பலம் (35 கிராம்) இவை எல்லாவற்றை யும் கலந்து வைத்துக் கொள்க.

அளவு :—1 பலம் (35 கிராம்).

துணைமருந்து :—எருமைமோர் ஆழாக்கு ஒன்றில் கலக்கி பருகச் செய்யவேண்டும்.

தீரும்நோய்கள் :—நீரிழிவு, மதுமேகம் ஆகியவை தீரும். இரத்தப் பெருக்கம், உடல்வலிமை ஆகியவைகளுண்டாகும்.

மருத்துணவு :—சமபோசிதம்போல் ஏற்படுத்தவும்.

## 1357. கிராந்தி உசிதம்

விட்ணுகிராந்தி சமூலத்தை அரைத்த விழுது 1 பலம் (35 கிராம்) இதில்நீர்விட்டுக் கரைத்து பருகச் செய்துவர மதுமேகத்தாலுண்டாகும் தாகம், அதிதாக நோய் ஆகியவை தீரும்.

## 1358. மதுமேகச் சூரணம்

சாதிக்காய்த்தூள், சுட்டெரித்த வசம்புச்சாம்பல் வகைக்கு $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), குராசாணி ஓமத்தூள் $\frac{3}{4}$ பலம் ($26\frac{1}{4}$ கிராம்), மறளுமத்தை விதைத்தூள் $\frac{3}{4}$ பலம் ($26\frac{1}{4}$ கிராம்), இலவங்கத்தூள், பொரித்த சீனக்காரத்தூள், தூய்மைசெய்த இலிங்கத்தூள், காந்தத் தூள், அபின் இவை வகைக்கு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்).

செய்முறை:—அபினியைக் கல்வத்திலிட்டு அரைத்து காந்தத்தையும், இலிங்கத்தையும், சீனக்காரத்தையும் அதில் சேர்த்து அரைத்து மற்றத் தூள்களையெல்லாம் ஒன்ருகக் கலந்து சிறுகச் சிறுகத் தூவி ஒருசாம நேரம் அரைத்து எடுத்துப் பளிங்குக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

அளவு : — $\frac{1}{4}$ முதல் $\frac{3}{4}$ வராகன் எடை. இதனை உட்கொண்டு கொஞ்சம் தண்ணீர் குடித்த உடனே சாப்பிடவேண்டும் இவ்விதம் நாள்தோறும் இரண்டுவேளை செய்து வரலாம். இது போதையுள்ளதாகையால் உடலியல்பு அறிந்து உபயோகிக்கவும்.

தீரும் நோய்கள் :—நீரிழிவு, மதுமேகம், அதிமூத்திரம் ஆகியவை தீர்ந்து உடல்வலிமை உண்டாகும்.

குறிப்பு : —இதனுடன் சரபேந்திர மேக நிவாரணபோதினியில் சொல்லப்பட்டிருக்கும் ஏதேனும் ஒரு குடிநீரையும் பயன்படுத்தி வந்தால் கூடியவிரைவில் மேற்கண்ட நோய் குணமாகும்.

மருந்துணவு :—தேக உடலியல்பிற்குத் தகுந்தபடி பத்தியம் ஏற்படுத்தவும்.

## 1359. மதுமேகப்பட்டைத் தூள்

தூய்மை செய்த பறங்கிப்பட்டைத் தூள் 3 பலம் (105 கிராம். கடலழிஞ்சிப்பட்டை, மிளகரணை வேர்ப்பட்டை, செங்கத்தாரிப்பட்டை, ஆவாரை வேர்ப்பட்டை, ஆவாரவிதை, நற்சீரகம், வால்மிளகு, அதிமதுரம், கோட்டம், இவற்றின் தனித்தனித் தூள் வகைக்கு $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), குரோசாணி ஓமத்தூள் 3 வராகன் எடை 10 கிராம்), இலவங்கம், சாதிக்காய் இவற்றின் தனித்தனித் தூள் வகைக்கு 2 வராகன் எடை (7 கிராம்), சாதிப்பத்திரித்தூள் 1 வராகன் எடை.

செய்முறை :—எல்லாவற்றையும் ஒன்ருகக் கலந்து புட்டியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— $1\frac{1}{2}$ முதல் $3\frac{1}{2}$ வராகன் எடை.

துணைமருந்து:—இதனுடன் $1\frac{1}{2}$ குன்றிமணி கருவங்க பற்பத்தை சேர்த்து தேன், நெய், வெண்ணெய் முதலியவைகளில் ஒன்றில் கலந்து காலை, மாலை, இரண்டு வேளையும் அரை மண்டலம் (24 நாட்கள்) உபயோகிக்கவும்.

தீரும்நோய்கள் :— நீரிழிவு, மதுமேகம், அதிமூத்திர நோய் ஆகியவை தீரும்.

மருத்துணவு :—நோய் வன்மைக்குத் தகுந்தபடி மருத்துணவு ஏற்படுத்தவும்.

## 1360. மேகசஞ்சீவி நெய்

(அ) மேற்றேல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, ஏலரிசி, மஞ்சள் கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிமுள்ளி, அதிமதுரம், குரோசாணி ஓமம், இலவங்கம், சாதிக்காய்,சாதிப்பத்திரி, இலவங்கப்பட்டை, கோரோசனை, வால்மிளகு, கருஞ்சீரகம், குளப்பாலைவேர், கோவைவேர், சிறுகீரைவேர், கொடுப்பைவேர், ஆனை நெருஞ்சில்வேர், நீர்வள்ளிவேர், ஒரிலைத்தாமரைவேர், குத்திரைவேர், இவை வகைக்கு $1\frac{1}{4}$ வராகன் எடை.

(ஆ) பசுவின் பால் $\frac{1}{2}$ படி, பசுவின் நெய் $\frac{1}{2}$ படி.

செய்முறை :— (அ) விலுள்ளவைகளில் கோரோசனையைத் தனியே பொடித்து வைத்துக்கொள்க. மற்றவைகளைச் சேர்த்திடித்து தூள் செய்து அம்மியில் வைத்து பசுவின்பாலைச் சிறுகச் சிறுக விட்டு வெண்ணெய் போலரைத்து நெய்யில் கரைத்து மிகுந்த பசுவின் பாலையும் அதில் சேர்த்து ஒரு பாத்திரத்தில் விட்டு அடுபேற்றி மூன்று நாள் சிறு தீயாகக் கொஞ்ச நேரம் சூடு காட்டி நந்து நாலாம் நாள் சிறு தீயாக எரித்துக் கடுகுதிரள் பதத்திலிறக்கி வடிகட்டிக் கோரோசனைப் பொடியைத் தூவி நன்ருகக் கலந்து பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு :—$1\frac{1}{2}$ முதல் 3 வராகன் எடை.

துணைமருந்து :— சர்க்கரை, பொரியரிசிமாவு முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :—சுக்கிலப் பிரமியம், சுரோணி தப்பிரமியம் முதலிய எல்லாவகைப் பிரமியங்கள், கல்லடைப்பு, நீர்க்கடுப்பு, மூத்திரப்பாலை, நீணமுருக்கி, உள்ளுருக்கி, இந்திர கோபம், தூர்மாங்கிசம், மூத்திரக்கிரிச்சரம், காசம், தாதுநட்டம் ஆகியவை தீரும்.

மருந்துணவு:—உப்பு புளி, புகை, புணர்ச்சி தள்ளவும், பசுவின் பால், நெய், வெந்நீர் ஆகும்.

## 1361. பூசணிக்காய் நெய்

(அ) கலியாணப் பூசணிக்காய்ச்சாறு 2 படி, நீர்வள்ளிச்சாறு 2 படி, கரும்புச்சாறு 1 படி, பசுவின் பால் 1 படி, பசுவினெய் 1 படி.

(ஆ) ஏலரிசி, இலவங்கப்பத்திரி, விழலரிசி, நற்சீரகம் கருஞ்சீரகம், ஓமம், இந்துப்பு, சாதிக்காய், சதகுப்பை, மூயகிலுப்பு, அதிமதுரம், கோட்டம், திராட்சைப்பழம், பேரிச்சம்பழம் இவை வகைக்கு $6\frac{1}{4}$ வராகன் எடை.

(இ) பேயன் வாழைப்பழம் 10 சர்க்கரை 10 பலம் (350 கிராம்).

செய்முறை : — (அ) விலுள்ளவைகளை எல்லாம் ஒன்ருகக் கலந்து அடுப்பேற்றி (ஆ) விலுள்ளவைகளில் தூள் செய்யவேண்டிய வைகளைத் தூள் செய்தும் மற்றவைகளையும் ஒன்ருகக் கலந்து அம்மி யில் வைத்துப் பசுவின் பால் தெளித்து வெண்ணெய் போலரைத்து முன் சித்தப்படுத்தி இருப்பதில் கரைத்து மூன்றுநாள் சூடு காட்டி வந்து நாலாம் நாள் (இ) யிலுள்ளவைகளைச் சேர்த்துப் பிசைந்து சிறு தீயாக எரித்துக்காய்ச்சி கடுகு திரள் பதத்திலிறக்கி வடிகட்டா மல் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும்.

அளவு :—2½ முதல் 3½ வராகன் எடை. காலை, மாலை இரண்டு வேளையும் உபயோகிக்கவும்.

தீரும்நோய்கள் :—உடம்பிலுள்ள வெட்டை, அதிதாக நோய் சுழை, இருமல், நெஞ்சுநோவு, மூத்திரக்கிரிச்சரம், மூத்திரப்பாளை, இரத்தபித்தம், மந்தாரகாசம் ஆகியவை தீரும். இளைத்த உடல் வளமை பெறும்.

மருத்துணவு :—இச்சாபத்தியம்.

## 1362. சலவல்லாதகி

(அ) தூய்மை செய்த சேராங்கொட்டை 10 பலம் (350 கிராம்) பசுவின் பால் 1படி.

(ஆ) கொப்பரைத் தேங்காய் 2 (இதனை மேல் தோலைச் சீவிச் சிறு துண்டுகளாகத் துண்டித்துக் கொஞ்சம் நல்லெண்ணெயைக் காய்ச்சி அதில் போட்டு வறுத்துக் கொள்ளவும்).

பச்சைக்கடலை 1½ ஆழாக்கு (இதனையும் நல்லெண்ணெயில் வறுத்துக் கொள்ளவேண்டும்). எள்ளு 1½ ஆழாக்கு (இதனை வறுக் கலாகாது).

(இ) வெல்லம் 10 பலம்(350 கிராம்), நல்லெண்ணெய் 7½பலம் (362½ கிராம்).

செய்முறை :—(அ) விலுள்ள கொட்டைகளை நான்காக நறுக்கிப் பாலில் போட்டுக் காய்ச்சி தைலமிறக்கிக் கொட்டை மிதந்தபின் கொட்டையை நீக்கிவிட்டுப் பாலை குழம்புப் பதமாகக் காய்ச்சிக் கொள்ளவும். (ஆ) விலுள்ளவைகளைத் தனித்தனி மேற்படி பால் வார்த்தரைத்து மறுபடி மூன்றையும் ஒன்ருகக் கலந்து மேற்படி பால் வார்த்து வெண்ணெய் போலரைத்து ஏதேனும் பால் மிகுந் திருந்தால் அதனுடன் கலந்துக்கொள்ளவும். பிறகு (இ) யிலுள்ள வெல்லத்தில் கொஞ்சம் நீர் சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் முன் சித்தப்படுத்தினதைப் போட்டு நன்ருகக் கடைந்து எண்ணெ

யையும் விட்டு கீழ்மேலாக நன்ருகப் புரட்டி கலந்தபின் இறக்கி ஆறின பின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

அளவு :— 1 முதல் 1½ வராகன் எடை.

துணைமருந்து :— பொரியரிசிமாவு, சர்க்கரை முதலியவை களாம்.

தீரும்நோய்கள் :—நீரழிவு, மதுமேகம், மேகவகைகள் ஆகியவை தீரும்.

மருத்துணவு :— இச்சாபத்தியம்.

## 1362. கதலி நெய்

(அ) வாழைக் கிழங்கு, வாழையிலை, வாழைப்பூ, வாழைத் தண்டு, வாழைக்கச்சல் இவை எல்லாவற்றையும் சமமாகச் சேர்த்து இடித்துப் பிழிந்த சாறு 2 படி, நெல்லிக்காய்ச் சாறு 2 படி, பெரும் பூசணிக்காய்ச்சாறு 2 படி, கரிசாலைச்சாறு 2படி, நீர்வள்ளிக்கிழங்குச் சாறு 2படி, முசுமுசுக்கைச் சாறு 2படி, வாழைப்பூ 100 பலம் (3500 கிராம்) முன்கண்ட ஆறு வகைகளையும் ஒரு பாண்டத்தில் போட்டு வாழைப்பூவைத் துவைந்து அதில்போட்டு அடைகுடிநீராகக் காய்ச்சி எட்டிலொரு பாகமாகச் சுண்டவைத்து இறக்கி வடிகட்டி வைத்துக் கொள்க,

(ஆ) ஆலம்பட்டை, அரசம்பட்டை, மாம்பட்டை, அத்திப் பட்டை, மருதம்பட்டை, வெட்பாலைப்பட்டை, வஞ்சிப்பட்டை, விரிசம் பட்டை, நரிநாவல்பட்டை, சிற்றகத்திப்பட்டை, வெள்வேலம் பட்டை, இலுப்பைப்பட்டை, நெல்லிப்பட்டை இவை வகைக்கு 5பலம்(175 கிராம்) இவற்றை இடித்து எட்டுப்படி நீரில்போட்டு எட்டிலொரு பாகமாகச் சுண்டவைத்திறக்கி வடிகட்டி வைத்துக் கொள்க.

(இ) பசுவின் பால் 2படி பசுவின் நெய் 4 படி,

(ஈ) வாய்விளங்கம், நற்சீரகம், மேற்ருேல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, அதிமதுரம், ஏலரிசி, இலவங்கப்பட்டை, இலவங்கப் பத்திரி, தக்கோலம், அதிவிடயம், சிறுதேக்கு, கொத்துமல்லிவிதை, கூகைநீர், திராட்சைப்பழம், பேரிச்சம்பழம் பொன்முசுட்டை வேர் இவை வகைக்கு 2 பலம் (70 கிராம்), இவற்றுள் தூள் செய்ய வேண்டியவைகளைத் தூள் செய்தும் பொடிக்க வேண்டியவைகளைப் பொடித்தும் மற்றவைகளையும் ஒன்ருகக் கலந்து பசுவின் பால் வார்த்து வெண்ணெய் போலரைத்துக் கொள்க.

(இ) விளாம்பழச்சதை 8பலம் (280 கிராம்), வில்வப்பழச்சதை 8 பலம் (280 கிராம்),

(ஊ) சர்க்கரை 25 பலம் (875 கிராம்), தேன் 40 பலம் (1400 கிராம்).

செய்முறை :— அ, ஆ, இ, ஆகிய இம்மூன்றிலுள்ளவைகளையும் ஒன்றாகக் கலந்து அதில் (ஈ) (உ) ஆகியவைகளிலுள்ளவைகளைக் கரைத்து அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்துக் கடுகு திரள் பதந்தில் இறக்கி வடிகட்டித் திப்பி நீக்கி அதில் (ஊ) விலுள்ளவைகளைச் சேர்த்து மறுபடியும் இலகுவாகக் காய்ச்சி முரியாத பதமாக இறக்கி ஆறவைத்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு : — ½ பலம் முதல் ¾ பலம் வரை, காலை, மாலை இரண்டு வேளையும் ஒரு மண்டலம் உட்கொள்ளவும்.

தீரும்நோய்கள் :—இருபத்தொரு வகைப் பிரமியங்கள், மதுமேகம் முதலிய இருபத்தொரு வகை மேகங்கள், பெரும்பாடு, நீரடைப்பு, கல்லடைப்பு, துர்மாங்கிசக்கட்டு, எலும்புவெட்டை, உள்ளங்கால் எரிச்சல், கையெரிச்சல், கண்ணெரிச்சல், தலையெரிச்சல், நீரெரிச்சல் நீர்க்குத்தல், நீர்க்கடுப்பு, நீரிழிவு, கணச்சூடு, மூலச்சூடு, எலும்புச் சூடு, பித்தச்சூடு, இரத்தச்சூடு முதலிய எல்லாவகைச் சூடுகள், கிராணி, முதலிய பல நோய்கள் தீர்ந்து உடல் குளிர்ந்து உடல் வன்மை, உள்ள வலிமை முதலியவைகளுண்டாகும்.

மருத்துணவு :—உணவுப் பண்டங்கள் வாழைக்கச்சல், பொன்னாங்காணி, முருங்கைக்கீரை, முருங்கைக்காய், சிறுபயறு, எள்ளுப் பிண்ணாக்கு, முளைக்கீரை, முசுட்டைஇலை, ஆவாரங்காய், ஆவாரம் பிஞ்சு, எள்ளெண்ணெய், நீர்மோர், தூதுவளை பஞ்சாங்கம், சிறு வழுதலங்காய், பறட்டை, எலிச்செவிக்கீரை, நாரத்தங்காய், தூதுவளை வற்றல், முயல், உடும்பு, காடை, கவுதாரி, ஆமை, நத்தை, ஊர்க்குருவி, வெள்ளாட்டு இறைச்சி, புறு ஆகியவைகளாகும்.

ஆகாத உணவுப்பண்டங்கள் கைப்பு, நெய்ப்பு, வழுதலங்காய் வாழைத்தண்டு, பூசணிக்காய், கொள்ளு, சுண்டைக்காய், முள்ளிக் கீரை, முள்ளித்தண்டு, பால், கோழி, செம்மறியாட்டு இறைச்சி, மீன், கருவாடு ஆகியவைகள் ஆகாது. இவைகளைச் சேர்த்தால் நீர் அதிகப்படும்.

## 1364. அமுதாத வல்லாதி

சிற்றாமணக்கு எண்ணெய் 4பலம் (140 கிராம்), தூய்மை செய்த சேராங்கொட்டை 4 பலம்(140 கிராம்), வெள்ளெருக்கம் வேர்ப்பட்டை தூள் 14 வராகன்எடை, பெருமருந்து வேர்ப்பட்டைத் தூள் 4 வராகன் எடை (14 கிராம்), பனைவெல்லம் 4வராகன் எடை (14 கிராம்).

செய்முறை :—சேராங்கொட்டையைக் கல்லுரலிலிட்டு இடித்து வெண்ணெய் போலான பின்பு மேற்படி தூள்களைத் தூவிப் பிறகு எண்ணெயை விட்டு இடித்து அதன் மேல் பனைவெல்லத்தைச் சேர்த்து வெண்ணெய் போலிடித்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

அளவு :—$1\frac{1}{4}$ முதல் $1\frac{1}{2}$ வராகனெடை. காலை, மாலை இரண்டு வேளையும் எட்டுநாள் உபயோகிக்கவும்.

தீரும்நோய்கள்:— வெள்ளை மேகம், மஞ்சள் மேகம், இரத்தமேகம் புண், சொருக்கு, அரிகிரந்தி முதலிய மேகநோய்கள் தீரும்.

மருத்துணவு:— எருமைமோர், நெய், வெள்ளாட்டு உப்புக் கண்டம், முருங்கைப் பிஞ்சு இவை கூட்டவும். ஒன்பதாம் நாள் விளக்கெண்ணெய் தேய்த்து முழுகவும்.

குறிப்பு :—இதனை இன்னொரு வகையாகவும் செய்துக் கொள்ள லாம். மேற்படி எண்ணெயில் மேற்படி கொட்டைகளை நான்காக நறுக்கிப் போட்டு காய்ச்சி எண்ணெய் கக்கினவுடன் கொட்டைகளை நீக்கிவிட்டு வெல்லந்தூள் ஆகியவைகளைச் சேர்த்தரைத்தும் உபயோகிக்கலாம்.

எண்ணெய்க்குப் பதிலாக நான்கு பலம் (140 கிராம்) நெய்யில் மேற்படி கொட்டைகளை நான்காக நறுக்கிப் போட்டு காய்ச்சி எண்ணெய் கக்கினவுடன் நீக்கிவிட்டு வெல்லம் தூள் ஆகியவை களைச் சேர்த்தரைத்தும் உபயோகிக்கலாம்.

சேராங் கொட்டைகளை எவ்விதமாக இடித்த போதிலும் மசியா மல் நெற நெறவெனத் திப்பியிருக்கும். ஆகையால் அதனைப் பாலில் போட்டுக் காய்ச்சி எண்ணெய் கக்கினபின்பு அந்தப் பாலைக் காய்ச்சி இளகிய அல்லது வேறு விதமாக உபயோகிப்பது நுட்பமான முறையாகும்.

## 1365. இளநீர் உசிதம்

நெல்லிக்காய் அரைத்த விழுது $2\frac{1}{2}$ பலம் ($87\frac{1}{2}$ கிராம்), தூய்மை செய்த அரிதாரத்தூள் $\frac{1}{4}$ வராகனெடை. இவ்விரண்டையும் கலந்து ஒரு செவ்விள நீரைக் கண்திறந்து அதற்குள் போட்டு ஒரு இரவு வைத்திருந்து காலையில் மேலாக இளநீரை மாத்திரம் இறுத்துக் குடிக்கச் செய்யவும். இவ்விதம் ஒவ்வொரு காலையிலும் ஏழு, ஒன்பது, பதினைறுநாள் செய்யவும்.

தீரும்நோய்கள் :—எலும்புருக்கி நோய், எலும்புச்சூடு, வெட்டைச் சூடு ஆகியவைகள் தீரும்.

மருத்துணவு :—சூடு தரும் உணவுகள், மீன், கருவாடு ஆகியவைகளை நீக்கவும்.

## 1366. நெல்லி உசிதம்

கீழ்க்காய் நெல்லி சமூலத்தை அரைத்த விழுது 2 பலம் (70 கிராம்), எருமைபால், வெள்ளாட்டுப்பால், பசுவின்பால் இம்மூன்றும் வகைக்கு ½ ஆழாக்கு. இவற்றை ஒன்ருகக் கலந்து முன் மருந்தில் கரைத்துப் பருகச் செய்யவேண்டும். இவ்விதம் ஒவ்வொரு காலையிலும் 5 முதல் 9 நாட்கள் செய்யின் மூத்திரத்தில் சுண்ணும்பைப் போல் மண்டி கீழ்ப்படியும் எலும்புருக்கி, மஞ்சள்காமாலை ஆகியவை தீரும்.

மருத்துணவு :—மேற்கண்டவைகளேயாம்.

## 1367. அத்திநக மாத்திரை

உயர்ந்த காந்தம் 1 பலம் (35 கிராம்), யானை நகத்தை அராவினத் தூள் 1 பலம் (35 கிராம்), எலுமிச்சம்பழச்சாறு செல்லத் தக்க அளவு.

செய்முறை :—காந்தத்தைக் கல்வத்திலிட்டு நேர்மையாகப் பொடித்து நகத்தூளையும் சேர்த்து அரைமணி நேரமரைத்து எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து மூன்று நாளரைத்து மூன்று குன்றிமணி எடை மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பளிங்குக்குப்பியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :—1 முதல் 2 மாத்திரை.

மருத்துணவு:—தேன், நெய், சர்க்கரை ஆகியவைகளாம்.

தீரும் நோய்கள்:— எலும்புருக்கி, கணைவெட்டை, சோகை ஆகியவை தீரும்.

மருத்துணவு:—புளி, புகை, மீன், கருவாடு ஆகியவை ஆகாது.

## மூலநோய்

இதன் பிறப்பு, காரணம், தன்மை இதற்காகும் அநேக வகை உசித முறைகள், நுட்ப முறைகள், பலவகை மருந்துகள் முதலியவைகளும், இன்னும் மூலசம்பந்தமான மூலக்கடுப்பு, மூலவாயு முதலிய நோய்களுக்காகும் நாலாவகை மருத்துவமுறைகளும் நமது மூலரோக சிகிச்சாபோதினியில் வகை விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அதனைப் பார்வையிடுகிறவர்கள் அந்நோய்களின் மருத்துவத்திற்கு வேறு நூல்களைப் பார்க்கவும், வேறு மருந்து முறைகளைத் தேடவும் அவசியமிராது.

## 1368. ஈயல் உசிதம்

ஈசல் இறகுகளை நீக்கித் தூய்மை செய்து வறுத்தத் தூள் 5 வராகனெடை ($17\frac{1}{2}$ கிராம்), நற்சீரகத் தூள் $1\frac{1}{4}$ வராகனெடை சர்க்கரை $6\frac{1}{4}$ வராகனெடை

இவற்றை ஒன்றாகச் சேர்த்தரைத்து உட்கொள்ளவேண்டும். இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையும் ஐந்து, ஏழு, ஒன்பது நாள் உபயோகிக்கவும். இவ்வாறு செய்ய எல்லாவகைப் பவுத்திர நோய்களும் தீரும்.

மருந்துணவு :—புளி, புகை நீக்கவும்.

## 1369. பாளை உசிதம்

ஆடு தீண்டாப் பாளை இலையை அரைத்து அடைதட்டி பவுத்திர ரணத்தின் மீது வைத்து ஏழு நாள் ஏழுகட்டுக் கட்டவும். இவ்வாறு செய்ய பவுத்திர ரணமானது அதிகமாகும், அதற்கு பயப்படலாகாது. பிறகு கழற்சி இலையை அரைத்து அடைதட்டி அரை வராகனெடை கழற்சிப் பருப்பைப் பொடித்து அதன் மீது தூவி ரணத்தின் மீது வைத்துக் கட்டி வரவேண்டும். இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையும் இரண்டு கட்டுக் கட்டிவரவும். ரணத்திலுள்ள நச்சு நீர் வற்றி நுரை கண்டு இரத்தம் காணுகிற நேரத்தில் நிறுத்தி விடவும். ரணம் தானே ஆறிப் போகும். இது கொஞ்சம் கடினமான மருந்துவ முறையாயினும் தீராத பவுத்திரங்களெல்லாம் தீர்ந்து விடுகிறது. கொஞ்சம் கடினத்திற்கு சோர்ந்திடாமல் செய்தால் அதிக பயனை அடையலாம்.

மருந்துணவு:— இச்சாபத்தியம்.

## 1370. அர்க்கன் உசிதம்

வெள்ளெருக்கம் பூவை அரைத்து அடைதட்டிக் கால் வராகன் எடை கருநாபியைத் தூள்செய்து அதில் பரப்பிப் பவுத்திரத்தில் வைத்துக் கட்டவேண்டும். இவ்விதம் தினம் ஒவ்வொரு கட்டாக மூன்று நாள் மூன்று கட்டுக் கட்டினால் பவுத்திரத்திலுள்ள நுண்புழுக்கள் வெளிப்பட்டுபோகும். நான்காம்நாள் சிந்தில் இலையில் ஆமணக்கு எண்ணெய் தடவி இரணத்தில் வைத்துக் கட்டவேண்டும், இவ்விதம் இரண்டு மூன்று கட்டுக் கட்டினால் இரணம் ஆறிக் குணமாகி விடும்.

மருந்துணவு :—மூன்று நாளும் புளி, புகை ஆகியவைகளை நீக்கி வைத்தால் நல்லது.

1371 தூய்மைசெய்த இரசம், தூய்மைசெய்த இலிங்கம், தூய்மைசெய்த இரச கற்பூரம், தூய்மை செய்த மனோசிலை, சாம்பிராணி இவை வகைக்கு 2 வராகன் எடை (7 கிராம்), தூய்மை செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் 4 வராகன் எடை (14 கிராம்), கெட்டியான பசுவின் வெண்ணெய் 14 வராகன் எடை (49 கிராம்).

செய்முறை:— இரசத்தையும் கெந்தகத்தையும் கலந்து அரைத்து நன்ருகக்கருத்த பின்பு மற்றச்சரக்குகளையும் தனித்தனியேபொடித்துச் சேர்த்து அரைமணிநேரம் அரைத்து எல்லாம் கலந்த பின்பு வெண்ணெயைச் சேர்த்து ஒரு சாம (3 மணி) நேரமரைத்து மெல்லிய துணியில் தடவி பாதப்படி சுடர் தைலம் இறக்கிப் பளிங்குக்குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு:— மூன்று முதல் ஐந்து துளிகள். உடல்வலிமைக்குத் தகுந்தபடி கொடுக்கவும்.

துணைமருந்து:— சர்க்கரை, பொரியரிசிமாவு, வெண்ணெய் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:— பலவகைப் பவுத்திரங்கள் தீரும். கீழ்க்காணும் மேற்பூச்சுத் தைலத்தையும் உபயோகித்து வரவேண்டியது.

குறிப்பு :— மேற்கண்ட பாகத்தில் வெண்ணெய்க்குப் பதிலாகப் பசுவின் நெய்யைச் சேர்த்து சுடர்த்தைலம் இறக்கிக் கொள்வது நல்லது.

மருந்துணவு:— சமயோசிதம் போல் ஏற்படுத்தவும்.

## 1372. பவுத்திர மேற்பூச்சுத் தைலம்

நல்லெண்ணெய் 20 வராகன் எடை (70 கிராம்), மனிதர் நகம் 3 வராகன் எடை (10½ கிராம்). மேற்படி நகத்தைச்சன்னமாகத் துண்டித்துக் கல்வத்திலிட்டு நீர் விட்டு வெண்ணெய் போலரைத்து மேற்படி எண்ணெயில் கலக்கிக் காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கி பளிங்குக்குப்பியில் வைத்துக் கொண்டு மெல்லிய துணியில் தடவி இரணத்தின் மீது போட்டுவர பவுத்திரப்புண், குட்டரணம் முதலியவை தீரும்.

## 1373. பவுத்திரத் தூள்

எட்டி மரப் புல்லுருவி, வக்கணத்திப் பட்டை, வெள்ளறுகு, சங்கம் வேர்ப்பட்டை, நிலாவரை, கொடிவேலி வேர்ப்பட்டை, மிளகரணை வேர்த்தோல், சிறுகுறிஞ்சா வேர்ப்பட்டை, நீர்க்கடம்பு வேர்ப்பட்டை முத்தினவேப்பம்பட்டை, இவைகளை உலர்த்தித்தனித்தனியே இடித்த தூள் வகைக்கு 1 பலம், மிளகுத் தூள் 3¾ பலம்.

செய்முறை:— இவைகளை எல்லாம் ஒன்றாகக் கலந்து இரண்டு மணிநேரமரைத்து மூடியுள்ள புட்டியில் பத்திரப் படுத்தவும்.

அளவு:— 1 முதல் 1½ வராகன் எடை.

துணைமருந்து:— தேன், நெய், வெண்ணெய் முதலியவைகளாம். காலை, மாலை இரண்டு வேளையும் பதினான்கு நாள் உபயோகிக்கவும்.

தீரும்நோய்கள்:— பலவித பவுத்திரங்கள், பெருநோய், சூலை ரணங்கள், கிரந்திகள் ஆகியவை தீரும்.

மருந்துணவு:— காரப்பு, புளிப்பு, புகை, புணர்ச்சி ஆகாது.

குறிப்பு:—பஞ்சசூத செந்தூரத்தை இந்தத் தூளுடன் சேர்த்துக் கொடுத்தால் சீக்கிரம் குணமுண்டாகும்.

## 1374. மாக பவுத்திரத் தைலம்

(அ) விளக்கெண்ணெய் 10 பலம் (350 கிராம்), ஆடுதின்னாப் பாளையிலை, காட்டாமணக்கு இலை, சின்னியிலை, அவுரி இலை, சங்கங் குப்பி இலை, கருவேலம்பட்டை இவற்றின் தனித்தனிச்சாறு வகைக்கு, 2 பலம் (70 கிராம்), புங்கம் பால், ஆலம்பால் வகைக்கு 4 பலம் (140 கிராம்).

(ஆ) தூய்மை செய்த சாதிலிங்கம், அரிதாரம், மிருதார்சிங்கி தூய்மை செய்த நெல்லிக்காய் கெந்தகம், சீனாக்காரம், மடல் துத்தம், துருசு, கார்போக அரிசித் தூள், கருஞ்சீரகத் தூள், வசம்புத் தூள், வேம்பாடம்பட்டைத் தூள் கொடுக்காய்ப்புளி வேர்பட்டைத் தூள், சித்திரமூல வேர்பட்டைத் தூள் வகைக்கு 3 வராகன் எடை (10½ கிராம்), வெள்ளைக் குங்கிலியத்தூள் 5 வராகன் எடை (17½ கிராம்).

செய்முறை:— (அ) விலுள்ளவைகளை எல்லாம் ஒன்றாகக் கலந்து அடுப்பேற்றி (ஆ) விலுள்ளவைகளில் சரக்குகளைத் தனித் தனியேப் பொடித்து மற்றத்தூள்களையும் ஒன்றாகக் கலந்துகல்வத்தில் போட்டு இரண்டொரு மணி நேரம் அரைத்து எல்லாம் கலந்தபின்பு முன் சித்தப் படுத்தி இருப்பதில் தூவி நன்றாகக் கிளறி சிறுதீயாக எரித்து கடுகுதிரள் பதத்தில் இறக்கி வடிகட்டி புட்டியில் பத்திரப் படுத்தவும். எரிக்கும்போது மர அகப்பையால் அடிக்கடி துழாவிக் கொண்டிருக்க வேண்டியது.

தீரும்நோய்கள்:— இதனை செப்பிய துணியில் நடவி இரணங்களின் மீது போட்டு வந்தால் பலவகைப் பவுத்திரங்கள், பலவகை பவுத்திர ரணங்கள், விப்புருதிப் புண்கள், சூலையில் வெடித்த புண்கள் ஆகியவை தீரும்.

மருந்துணவு:— சமயோசிதம்போல் ஏற்படுத்தவும்.

## தொடர்க்கழிச்சல் மருத்துவம் (கிராணி)

### 1375. கிராணிக்கு உசிதம்

கல்சுண்ணும்பு 10 பலம் (350 கிராம்), தண்ணீர் 1 படி. தண்ணீரில் சுண்ணும்பைக் கரைத்து இருபத்துநான்கு மணிநேரம் வைக்க வேண்டியது. இரண்டொரு தடவை கலக்கி விட்டுத் தெளியவைத்து தெளிவை இறுத்து புட்டியில் பத்திரப்படுத்தவும். இந்தத் தெளிவில் ஐந்து பலம் எடுத்து ஒரு பீங்கான் பாத்திரத்தில் விட்டு இரண்டு பலம் பலாப்பட்டையை வெண்ணெய் போலரைத்து இதில்கரைத்துக் குச்சியால் துழாவிக் கொண்டே இருந்தால் அதில் நாறுபோல் பிசின் வரும். அந்தப் பிசினை எடுத்து சர்க்கரையில் புரட்டிச் சாப்பிடவும்.

இவ்விதம் காலை, மாலை இரண்டுவேளை ஐந்து அல்லது ஏழுநாள் செய்யின் கிராணிநோய்கள், தீரும்.

பத்தியம்:— வாழைப்பூ, வாழைக்கச்சல் முதலிய துவர்ப்புக் காய்கறிகள் கூட்டவும்.

குறிப்பு: —இதனைப் பக்குவமாகவும், கைபாகமாகவும் செய்ய வேண்டும். பகுவம் தப்பினுல் இதைச் செய்வது கடினமாகும்.

### 1376. கிராணி உசிதம் (வேறு)

கோழி முட்டை 1 இதனைக் கால்வாசி பாகம் திறந்து இதிலுள்ள மஞ்சள்கருவை நீக்கிவிட்டு சாதிக்காய்த்தூள் ¾ வராகன் எடை அபின் 3 குன்றிமணி எடை, இவ்விரண்டையும் சேர்த்தரைத்து நன்ருகக் கலந்த பின்பு மேற்படி முட்டைக்குள் போட்டு முட்டையினடியில் சீலைமண்செய்து கரிநெருப்பில் வைத்துச் சிறு குச்சியால் துழாவி நீர்சுண்டின பதத்தில் எடுத்து ஆறவைத்து முட்டைக்குள் இருப்பதைக் கல்வத்தில் போட்டு அரைத்து மூன்று மாத்திரை செய்து காலை, மாலை மறுநாட்காலை ஆகிய மூன்றுவேளையும் கொடுக்கவும். கிராணிக் கழிச்சல் தீரும், அவசியமானுல் இரண்டொருநாள்விட்டு மறுபடியும் இதனைச் செய்து கொடுக்கவும்.

### 1377. கிரகணி அண்டத் தூள்

(அ) பருமனுன 2 ஆண் உடும்பு, இவற்றை அறுத்து வயிற்றைக் கீறி வயிற்றிலுள்ள குடல் முதலியவைகளை நீக்கிவிட வேண்டியது. தலை, கால் முதலியவைகளை நீக்கித் தோலையும் உரித்து நீக்கிவிட வேண்டியது. அதிலுள்ள மாமிசத்தை மாத்திரம் எடுத்துக் கொண்டு எலும்பையும் நீக்கிவிட வேண்டியது. மாமிசத்தைச் சிறு

துண்டுகளாகத் துண்டித்து ஒரு மண்பாத்திரத்தில் போட்டுக் கொஞ்சம் நீர் விட்டுப் புரட்டிப் பாத்திரத்தை மூடி அடுப்பின் மீதேற்றி விட்டநீர் வற்றிப் போகும் படியாக எரித்துப் பொய்யாவி காண்பிக்க வேண்டும். அரைவேக்காடாயிருந்தால் போதுமானது அதிகம் வேகவைக்க லாகாது. விட்டதண்ணீர் வற்றிப் போக வேண்டியதே தவிர அதை இறுக்கலாகாது. இவ்விதம் வேகவைத்த மாமிசத்தை எடுத்து அம்மியில் வைத்துப் பஞ்சுபோல் சிதைத்து எண்ணெய்ப்பசையுள்ள பாத்திரத்தில் கொஞ்சம் நல்லெண்ணெயை விட்டு மேற்படி மாமிசத்தை அதில்போட்டு வறுத்துக் கல்லுரலில் இடித்து முன்போல் முன்சட்டியில் நல்லெண்ணெய் வார்த்து முன்போல் வறுத்து முன்போல் இடித்துக் கொள்ளவும். மூன்றும்தடவையும் முன்போல் வறுத்து முன்போல் இடித்து மெல்லிதாகத் தெள்ளிப் பத்திரப் படுத்தவும்.

(ஆ) அரிசித்திப்பிலி, மிளகு, கண்டத்திப்பிலி, சாதிக்காய், கசகசா, உலர்ந்த மாதளையோடு, நெல்லி முள்ளி, இலவங்கம் இவற்றைத் தனித்தனியே இளவறுப்பாக வறுத்துத் தனித்தனி இடித்தத தூள் வகைக்கு 2 வராகன் எடை, கருஞ்சீரகம், ஓமம், கோட்டம், அதிமதுரம், சாதிப்பத்திரி, மேற்ருேல் சீவின சுக்கு, வாய்விளங்கம், இலவங்கப்பத்திரி, கொத்துமல்லிவிதை, இவற்றைத் தனித்தனி இளவறுப்பாக வறுத்துத் தனித்தனியே இடிதது துணியில் வடிகட்டியத் தூள் வகைக்கு 3 வராகன் எடை (10 கிராம்).

செய்முறை :— (ஆ) விலுள்ள தூள்களை எல்லாம் ஒன்ருகக் கலந்து கொள்ளவும். இவ்விதம் கலந்த தூள் ஒருபங்கு, முன்சித்தப் படுத்தின உடும்புத் தூள் ஒரு பங்கு. இவ்விரண்டு வகைகளையும் ஒன்ருகக் கலந்து கல்வத்திலிட்டு இரண்டொரு மணிநேரமரைத்து நன்ருகக் கலந்த பின்பு புட்டியில் பத்திரப் படுத்தவும்.

அளவு:— 1 முதல் $1\frac{1}{2}$ வராகன் எடை.

துணைமருந்து:— தேன், சிறுநாகப்பூக் குடிநீர், வெந்தயக் குடிநீர், வாழைப்பூச்சாறு, தயிர்ச்சக்கை முதலியவைகளாம். காலைமாலை இரண்டு வேளையும் நோய் வன்மைக்குத் தகுந்தபடி அரைமண்டலம் முதல் ஒரு மண்டலம் வரை உட்கொள்ளவும்.

தீரும்நோய்கள்:— மூலக்கிராணி, பாலக்கிராணி, சீழ்க்கிராணி, இரத்தக்கிராணி, இரத்தக்கழிச்சல், ஓட்டுக்கிராணி, சங்கரகிராணி, சோகைக்கிராணி, வயிற்றிரைச்சல், வயிற்றுநோய், மூலவாயு, அதிசாரம், இருமல், பெரும்பாடு ஆகியவை தீரும். உடல்வலிமை இன்மை, நீங்கி உடல் வன்மை, உடல்வளமை உண்டாகும்.

மருத்துணவு:— வாழைப்பூ, வாழைக்கச்சல் முதலிய துவர்ப்புக் காய்கறிகள் கூட்டவும்.

## 1378. கிராணி சூட்சுமச் சூரணம்

மேற்சொல் சீவின சுக்கு, மிளகு, அரிசித் திப்பிலி, சோம்பு, நற்சீரகம், கொத்துமல்லி விதை, இவைகளைத் தனித்தனியே பொன்னிறமாக வறுத்துத் தனித்தனியாக இடித்து துணியில் வடிகட்டினத் தூள் வகைக்கு 1 பலம், கறியுப்புத்தூள் 1 பலம்.

செய்முறை:— எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கல்வத்திலிட்டு மூன்றுமணி நேரம் அரைத்துப் புட்டியில் பத்திரப் படுத்தவும். இதனை எவ்வளவுக் கெவ்வளவு அரைக்கின்றோமோ அவ்வளவுக் கவ்வளவு சீக்கிரமாக குணத்தைத் தரும். இதிலுள்ள மருத்துவ நுட்பம் இதுதான். இது அதிக நுண்ணியமான முறையென்பதிற் சந்தேகமில்லை.

அளவு:— 1 முதல் 2 வராகன் எடை. காலைமாலை இரண்டு வேளையும், அரைமண்டலம், முக்கால்மண்டலம் உண்ணவும்.

துணைமருந்து:— தேன், தயிர்ச்சக்கை, வாழைப்பூச்சாறு முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:— அறுவகைக் கிராணிகள், அக்கினி மந்தம், செரியாமை ஆகியவை தீரும்.

மருத்துணவு:— மெல்லுணவாகப் பத்தியமேற்படுத்தவும்.

குறிப்பு:— மேற்படி பாகத்தில் தனிக் கறியுப்பைச் சேர்ப்பதைப் பார்க்கிலும் அதனை முருங்கைப்பட்டைச் சாற்றில் வன்மைக்கேற்றபடி மூன்று, நான்கு புடங்கள் போட்டு எடுத்துச் சேர்த்தால் சிறந்த குணத்தைக் கொடுக்கும். இன்னும் நமது "தாது விருத்தி போதினி" இரண்டாம் பாகத்தில் சீவாட்சாமிர்த பாகத்தில் சொல்லியிருக்கிற படி உப்பை பக்குவப் படுத்திச் சேர்த்துக் கொண்டாலும் அதிக மேன்மையான குணத்தைத் தரும்.

## 1379. கிரகணி திலதாதித் தூள்

மேற்சொல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, மஞ்சட் கடுக்காய்த் தோல், நெல்லிமுள்ளி, போஸ்துக்காய், சாதிக்காய், சாதிப் பத்திரி, இலவங்கம், ஏலரிசி குராசானிஓமம், சோம்பு, சிறுநாகபூ, சன்னலவங்கப்பட்டை, அரலடயம் சடாமாஞ்சில், கண்டந்திப்பிலி சித்திரமூல வேர்ப்பட்டை, தூய்மைசெய்துலர்த்தின கஞ்சா இலை, வாய்விளங்கம், நாய்க்கடுகு, மஞ்சள் இவற்றைத் தனித்தனி வறுத்து இடித்துத் தூள் செய்து துணியில் வடிகட்டியத் தூள் வகைக்கு 1 வராகன் எடை (3 கிராம்), கல்லாய்ந்து தூய்மை செய்த எள் $5\frac{1}{3}$ வராகன் எடை ($19\frac{1}{4}$ கிராம்), சர்க்கரை $5\frac{1}{2}$ வராகன் எடை ($19\frac{1}{4}$ கிராம்).

செய்முறை:— இவை எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து, கல்வத்திலிட்டு இரண்டுமணி நேரமரைத்து புட்டியில் பத்திரப் படுத்தவும்.

அளவு:— 1 முதல் $1\frac{1}{2}$ வராகன் எடை. காலை, மாலை இரண்டு வேளையும் நோயிற்குத்தகுந்தபடி இருபதுநாள் அல்லதுநாற்பதுநாள் உபயோகிக்கவும்.

துணைமருந்து:— தேன், நெய், வெந்நீர் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:—அறுவகைக் கிராணி, அக்கினி மந்தம், செரியாமை, உடல் வலுவின்மை ஆகியவை தீரும்.

மருத்துணவு:— நோயின்வன்மைக்குத் தகுந்தபடி மெல்லுணவு முதலியவற்றைப் பத்தியமாக ஏற்படுத்தவும்.

## 1380. வாயுக்கிராணிக் குடிநீர்

ஊமத்தையிலை ஒருகைப்பிடி, மிளகு எண்ணில் 6, மேற்றோல் சீவின சுக்கு $\frac{1}{2}$ வராகன் எடை, ஈரமான மணல் ஒருகைப்பிடி, அபின் குன்றிமணி எடை ($1\frac{3}{4}$ கிராம்).

செய்முறை:— முன் மூன்று சரக்குகளையும் அம்மியில் வைத்து வெண்ணெய் போலரைத்து அரைப்படி தண்ணீரில் கரைத்து வைத்துக் கொள்க. ஈரமணலை ஓட்டிலிட்டு வறுத்துப் புகைந்த பதத்தில் முன் சித்தப்படுத்தின நீரை அதில் ஊற்றி இரண்டொரு கொதிவந்தவுடன் இறக்கி வடிகட்டி அதில் அபினைக் கரைத்து குடிக்கச் செய்யவேண்டும். இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையும் மூன்று நாள் செய்யவும்.

தீரும்நோய்கள்:—வாயு சம்பந்தமான கிராணிக் கழிச்சல், இரைப்பையிலுள்ள வாயு, வயிற்றிரைச்சல் முதலியவை தீரும்.

மருத்துணவு :—வாழைப்பூ, வாழைக்கச்சல் ஆகிய துவர்ப்பு பொருட்களை கூட்டவும்.

## 1381. கிரகணி லவங்க உசிதம்

இலவங்கம் 1 வராகன் எடை (3 கிராம்), நடுத்தரமான சாதிக்காய் 3 வராகன எடை ($10\frac{1}{2}$ கிராம்), அபின் $\frac{1}{2}$ வராகன் எடை ($1\frac{3}{4}$ கிராம்), தாய்ப்பால், தேன் ஆகியவை தேவையான அளவு.

செய்முறை :—மேற்கண்ட சரக்குகளைத் தூள் செய்து சேர்த்தரைத்து ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டு தாய்ப்பாலை மிதக்க விட்டு நான்குசாமம் ஊறவைத்து அரைத்து இரும்புக் கரண்டியிடத்துக் கரி நெருப்பில் 12 மணி நேரம் வைத்து தேன்விட்டுக் கிண்டி இளகிய பதத்தில் எடுத்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

அளவு :—மூன்று அல்லது நான்கு குன்றிமணியளவு. காலை, மாலை இரண்டு வேளையும் உபயோகிக்கவும்.

தீரும்நோய்கள் :—எல்லாவகைக் கிராணிகள், கழிச்சல்கள் ஆகியவைகள் தீரும்.

## 1382. கபாடச் சிந்தாமணி

(அ) மேற்றோல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, மஞ்சள் கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல் நெல்லிமுள்ளி, நற்சீரகம், ஓமம், குரோசாணி ஓமம், சதகுப்பை, கற்கடக சிங்கி, காட்டாத்திப் பூ, சிறுநாகப்பூ, வால்மிளகு, ஏலரிசி, கொத்துமல்லிவிதை, சன்ன லவங்கப்பட்டை, பெருலவங்கப்பட்டை, சாதிக்காய், சாதிப்பத்திரி, இலவங்கம், அதிவிடயம், வெந்தியம், சோம்பு, அதிமதுரம், வெட்பாலை அரிசி, வாலுழுவையரிசி, விழாலரிசி, மாசிக்காய், காய்ச்சுக்கட்டி கசகசா, போஸ்துக்காய், செண்பகப்பூ, செவ்வள்ளிக்கொடி, சடாமாஞ்சில், சிறுதேக்கு, நற்கடுகு, தேற்றான்விதை, (இதனைப்பஞ்சுபோல் சிதைத்துக்கொள்ளவும்) ஊமத்தைவிதை, கழற்சிவிதைப்பருப்பு புளியம் விதைத் தோல், சுண்டைக்காய்வற்றல், நீர்முள்ளி விதை, மாங்கொட்டைப் பருப்பு, மிசிரி அபின், முள்ளிலவம்பிசின், கருவேலம் பிசின், விளாம்பிசின், கம்பிப்பிசின், உலர்ந்த அத்திப்பிஞ்சு, உலர்த்தின கருவேற்பிஞ்சு, உலர்ந்த மாதளம்பிஞ்சு, உலர்ந்த விளாம்பிஞ்சு உலர்த்தின வில்வப்பிஞ்சு; இவை வகைக்கு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்) தூய்மைசெய்த கஞ்சா 8 பலம் (280 கிராம்).

(ஆ) வாழைப்பூச்சாறு, கருவேப்பிலைச்சாறு, கீழ்காய் நெல்லிச் சாறு; ஆலம்விழுதுச்சாறு, புளியாரைச்சாறு வகைக்கு 4 பலம், (140 கிராம்), எலுமிச்சம்பழச்சாறு 8 பலம் (280 கிராம்) இஞ்சிச் சாறு 16 பலம் (560 கிராம்).

(இ) பெருமரப்பட்டை, பொன்முசுட்டைவேர், நாவல்பட்டை, நெல்லிப்பட்டை, அத்திப்பட்டை, ஆவாரம்பட்டை, அரசம்பட்டை, ஓதியம்பட்டை, கருவேலம்பட்டை, மாம்பட்டை, விடத்தேரம் பட்டை, பனம்பூ, மாதளையோடு, கோரைக்கிழங்கு, இவை வகைக்கு 8 பலம் (280 கிராம்), இவற்றைத் தனித்தனியே நையச், சிதைத்துப் பானையிலிட்டுப் பதினறுபடி நீர்வார்த்து எட்டிலொரு பாகமாகச் சுண்டவைத்து இளம் சூட்டுடன் நன்ருகப் பிசைந்து வடிகட்டித் திப்பி நீக்கிக் குடிநீரை எடுத்துக் கொள்ளவும்.

(ஈ) பசுவின்பால் 3 ஆழாக்கு, பனைவெல்லம் 16 பலம் (560 கிராம்), தேன் 8 பலம் (280 கிராம்), நெய் 8 பலம் (280 கிராம்).

செய்முறை :—(அ) விலுள்ளவைகளில் அபினைத் தவிர மற்ற வைகளைத் தனித்தனி வறுத்து எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து இடித்துத் துணியில் வடிகட்டியத் தூளை அம்மியில் வைத்து (ஆ) விலுள்ள பசுவின் பாலைத் தெளித்து வெண்ணெய் போலரைத்து வைத்துக் கொள்க. (இ) யிலுள்ள சாறு வகைகளையும் கலந்து காய்ச்சி குழம்பு பதத்தில் (ஈ) யிலுள்ள பனைவெல்லத்தைக் கரைத்துக் காய்ச்சி பாகு பதத்தில் முன் சித்தப்படுத்தினதைக் கரைத்து கீழுமேலுமாக நன்றாய்ப் புரட்டி இளகிய பதத்தில் (அ) விலுள்ள தேனையும் நெய்யையும் விட்டு நன்றாகப் புரட்டிக் கொடுத்துக் குளிர ஆறின பின்பு (ஆ) விலுள்ள அபினியைக் கொஞ்சம் பசுவின்பாலில் அல்லது தண்ணீரில் கரைத்து அதில் கலந்து கீழுமேலுமாக நன்றாகப் புரட்டிக் கலந்து பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு:—1 முதல் $1\frac{1}{2}$ வராகன் எடை. இது போதையுள்ள இளகமாகையால் உடலியல்பை அறிந்து குறைந்த அளவாகவும், அதிகப்படுத்தியும் உபயோகிக்கவும். இதனை காலை, மாலை இரண்டு வேளையும் அரை மண்டலம் (24 நாட்கள்) முதல் ஒரு மண்டலம் (48 நாட்கள்) வரை உபயோகிக்கவும்.

தீரும்நோய்கள் :—அறுவகைக் கிராணிகள், அதிசார வகைகள், அறுவகைக் கடுப்புகள், மூலக்கிராணி, பலவகை மலப்போக்குகள் ஆகியவை தீரும். இன்னும், விந்துக்குறைவு நோய், துரிதஸ்கலிதம், விந்து வெளிப்பாடு, பெண்களுக்குக் காணும் மேக ஒழுக்கு, வெள்ளைப்போக்கு, பிரமேகம், செரியாமை, பசிக்குறைவு ஆகியவைகள் தீரும். விந்து அழுத்தம் உண்டாகும். இன்னும் பலவகை நோய்களுக்கு உபயோகப்படும். அவரவர்கள் பழக்கத்தில் தெரிந்து கொள்வார்களாக.

மருத்துணவு :—நோயிற்குத் தகுந்தபடி சமயோசிதம் போல் மருத்துணவு ஏற்படுத்தவும்.

குறிப்பு :—இதனுடன் நாகசெந்தூரத்தை அல்லது நாகபற்பத்தைச் சேர்த்து உபயோகித்தால் மேற்கண்ட நோய்கள் கடினமாக இருப்பினும் தீர்ந்து விடும். இது சற்று நீண்ட முறையாயினும் அநேக நோய்களில் உபயோகப்படுவதால் சிறந்த மருத்துவர்களிடத்தில் அல்லது பெருங்குடும்பத்தில் இது அவசியமிருக்க வேண்டியது.

## 1383. சூசிகாகிராணி இளகம்

மேற்றோல் சீவின சுக்கு, மிளகு, கடுகு இவை வகைக்கு 5 பலம் (175 கிராம்), சாதிப்பத்திரி 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்) எலுமிச்சம்பழச்சாறு 2 ஆழாக்கு, நல்லெண்ணெய் செல்லத்தக்க அளவு.

செய்முறை: —மேற்கண்ட சரக்குகளை எல்லாம் தனித்தனி பொன்னிறமாக வறுத்து ஒன்ருகச் சேர்த்திடித்துத் துணியில் வடி கட்டிய தூளில் எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு கல்வத்தில் அல்லது அம்மியில் அரைத்து வெண்ணெய் போலான பின்பு ஒரு பாத்திரத்தில் நல்லெண்ணெய் விட்டுக் காய்ச்சி அதில் இதனைப் போட்டு நன்ருகக் கிளறி நெய்ப்பசை உண்டானவுடன் கீழிறக்கி ஆறவைத்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு:— 1 முதல் 2 வராகன் எடை. காலை, மாலை இரண்டு வேளையும் அரை மண்டலம் முதல் ஒரு மண்டலம் வரை உபயோகிக் கவும்.

தீரும்நோய்கள்: —சூசிகாகிராணி, பிள்ளைபெற்றவர்களுக்குக் காணும் செரியாமை நோய், பசியாமை நோய். புளியேப்பம், செரி யாக்கழிச்சல் முதலியவை தீரும்.

மருத்துணவு :—நோயிற்குத் தகுந்தபடி சமயோசிதம் போல் மருத்துணவு ஏற்படுத்தவும்.

## 1384. சூசிகாகழற்சி உருண்டை

கழற்சிப்பருப்பு 50, மிளகு, தோலுரித்த வெள்ளைப் பூண்டிதழ் இவை வகைக்கு 2 பலம் (70 கிராம்), நுணா இலை செல்லத்தக்க அளவு, நெல்லுமி செல்லத்தக்க அளவு, கெட்டித்தயிர் செல்லத் தக்க அளவு.

செய்முறை: —முன் மூன்று சரக்குகளையும் ஒன்ருகக் கலந்து ஒரு மெல்லிய துணியில் முடிந்து கொள்க. மூன்றுபடி கொள்ளும் படியான ஒரு பானையில் நுணா இலையைப் பரப்பி அதன்மீது ஒன்றேகால் படி உமியைக் கொட்டிச் சமமாகப் பரப்பி அதன்மீது முன் சித்தப்படுத்தின முடிச்சை வைத்து அதன்மீது ஒன்றே கால்படி உமியைப் போட்டுப் பரப்பி அதன் மேலும் நுணாவிலையைப் பரப்பி பானை நிறைய நீரை மெதுவாக விட்டுப் பானை வாய்க்குச் சாணக்கி இட்டுச் சீலைமண் செய்து உலர்ந்த பின்பு அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து தண்ணீர் சுண்டின பின்பு கீழிறக்கிக் குளிர ஆறினபின்பு சீலைமண்ணைப் பிரித்து உள்ளிருக்கிற முடிச்சை எடுத்து அதிலுள்ளவைகளைக் கல்வத்தில் போட்டுத் தயிரைச் சிறுகச் சிறுக விட்டு வெண்ணெய் போலரைத்துக் கழற்சிப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :—½ முதல் 1 வராகன் எடை மாத்திரை.

துணைமருந்து:—தயிர்ச்சக்கை, சர்க்கரை, வாழைப்பழம் முதலிய வைகளாம்.

தீரும்நோய்கள் :—சூசிகாகிராணி, பிள்ளைபெற்றவர்களுக்குக் காணும் செரியாமைநோய், பசியாமைநோய், வயிற்றெரிச்சல், வயிற்றுப்பொருமல், இரைப்பையிலுள்ள வாயுவுகள், இரைப்பையில் சேர்ந்திருக்கும் கபக்கட்டுகள் முதலியவை தீர்ந்து உடல்வலிமை உண்டாகும்.

மருத்துணவு:—சமயோசிதம் போல் மருத்துணவு ஏற்படுத்தவும்.

## 1385. இரத்தக் கிராணி நெய்

பசுவின் நெய் 1 ஆழாக்கு, அதிமதுரத் தூள் 1 பலம் (35 கிராம்), தூளை அம்மியில் வைத்துப் பசுவின் பால் தெளித்து வெண்ணெய் போலரைத்து மேற்படி நெய்யில் கரைத்து நான்கு நாள் சூடுகாட்டி வந்து ஐந்தாவதுநாள் காய்ச்சிக் கடுகுதிரள் பதத்தி லிறக்கி ஆறினபின்பு வடிகட்டி வைத்துக் கொள்ளவும்.

அளவு:—2முதல் 2½ வராகன் எடை. காலை, மாலை இரண்டு வேளையும் உபயோகிக்கவும்.

துணைமருந்து:—சர்க்கரை, பொரியரிசி மாவு முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:—இரத்தகிராணி, வயிற்றிலுள்ள அழலை, புண் முதலியவை தீரும்.

மருத்துணவு:—இச்சாபத்தியம்.

## 1386. புளியாரை நெய்

(அ) புளியாரைச்சாறு 2 படி, கெட்டித்தயிர் 1 படி, பசுவின்நெய் ½ படி.

(ஆ) பெருங்காயம், அதிவிடயம், அரிசித்திப்பிலி, இந்துப்பு, எவச்சாரம், இலவங்கம், சாதிக்காய், வெட்பாலரிசி, கண்டத்திப்பிலி, மரமஞ்சள், மாதளம்பூ, இலவங்கப்பட்டை இவை வகைக்கு 7½ வராகன் எடை (26¼ கிராம்).

செய்முறை:—(அ) விலுள்ளவைகளை ஒன்றுகக் கலந்து நன்குகச் சேர்த்து (ஆ) விலுள்ள சரக்குகளைத் தனித்தனி வறுத்து எல்லா வற்றையும் சேர்த்திடித்த தூளை அம்மியில் வைத்துப் பசுவின் பாலைத் தெளித்து வெண்ணெய் போலரைத்து முன் சித்தப்படுத்தி வைத்திருப்பதில் கரைத்து அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து நீர் சுண்டின பதத்திலிறக்கி வடிகட்டிப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு:—1 முதல் 1½ வராகன் எடை. காலை, மாலை இரண்டுவேளை யும் அரை மண்டலம் முதல் ஒரு மண்டலம் வரை நேரத்திற்கேற்றுற் போல் உபயோகிக்கவும்.

துணைமருந்து:—சர்க்கரை, பொரியரிசிமாவு, முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:—அதிசாரம், கிராணி ஆகியவை தீரும்.

மருத்துணவு:—சமயோசிதம் போல் ஏற்படுத்தவும்.

## 1387. கிராணி பலகறைபற்பம்

பலகறை 5 வராகன் எடை (17½ கிராம்), (இதனைத் தனியே தூள் செய்து கொள்ளவும்). துத்தம், உயர்ந்த காந்தம், வெண்காரம், தூய்மைசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம், நிமிளை இவை வகைக்கு 2 வராகன் எடை (7 கிராம்), எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—முண்கண்ட சரக்குகளைத் தனித்தனி பொடித்து ஒன்ருகக் கலந்து இரண்டுமணி நேரமரைத்து நன்ருகக் கலந்து பின்பு எலுமிச்சம்பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்குசாம (12 மணி) நேரமரைத்து வில்லை செய்துலர்த்தி அகலில் வைத்து மேலகல் மூடி ஐந்து சீலைமண் செய்துலர்த்திக் கவசத்திற்குப் பத்துப் பங்கெடை வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுத்து கல்வத்தில் பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

அளவு:—2 முதல் 4 குன்றிமணி எடை.

துணைமருந்தும் தீரும்நோய்களும்:— குன்மத்திற்கு தேன், நெய் ஆகியவைகளில் சேர்த்துக் கொடுக்க அது தீரும். கிராணிக்கு சாதிக்காய்த் தூள் 1 வராகன் எடை (3½ கிராம்), தேன் 1 வராகன் எடை (3½ கிராம்), இவ்விரண்டையுங் கலந்து மேற்படி பற்பத்தை சேர்த்துக் கொடுக்க அது தீரும்.

மருத்துணவு:—சமயோசிதம் போல் ஏற்படுத்தவும்.

## 1388. கிராணி கெந்தி பக்குவம்

தூய்மை செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் 1 வராகன் எடை (3½ கிராம்), இரசகற்பூரம், இலிங்கம் வகைக்கு 2 வராகன் எடை (7 கிராம்).

செய்முறை:—இம் மூன்றையும் பொடித்துக் கரிநெருப்பில் புது ஓட்டைக் காயவைத்து அதில் போடவேண்டும். உடனே தண்ணீர் போல உருகும். அவ்வாறு உருகின உடனே புகையாமல் கீழிறக்கி ஒரு ஓலைத் துண்டால் சீக்கிரம் அள்ளி அள்ளிக் கல்வத்திலிட்டுக் குளிர ஆறினபின் நன்ருகப் பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

அளவு:—1 முதல் 2 குன்றிமணி எடை காலை, மாலை இரண்டு வேளையும் உபயோகிக்கவும்.

துணைமருந்து:—தேன், நெய் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:—கழிச்சல்வகைகள், மலப்போக்கு, அறுவகைக் கடுப்புகள், மூலவாயு, அதிசாரம், கிராணி ஆகியவை தீரும்.

மருத்துணவு:—நோயிற்குத் தகுந்தபடி பத்தியமேற்படுத்தவும்.

குறிப்பு:—நோயின் தன்மையை அறிந்து இரசகற்பூரம், இலிங்கம், இவை ஒரு வராகன் எடைக்கு கெந்தகத்தில் மூன்று முதல் ஐந்து வராகன் எடை வரை சேர்த்தால் பலமாயிருக்கும்.

## 1389. பேதி கட்டக் குடிநீர்

மஞ்சள் கடுக்காய்த்தோல், மேற்றோல் சீவின சுக்கு, கொட்டைப் பாக்குச் சீவல் இவை வகைக்கு 2 வராகன் எடை (7 கிராம்).

இவற்றைச் சிதைத்து ஒன்றரை ஆழாக்கு நீரை விட்டு அரை ஆழாக்காகச் சுண்ட வைத்து இறக்கி வடிகட்டிப் பருகச் செய்ய வேண்டும். இரண்டு அல்லது மூன்று வேளை செய்யின் பலவகை கழிச்சல்கள், படுவன் கழிச்சல் நச்சுக்கழிச்சல், ஆகியவை தீரும்.

## 1390. பேதி கட்டக் குடிநீர் (வேறு)

மேற்றோல் சீவின சுக்கு, முக்கா வேளை வேர் இவை வகைக்கு 2½ வராகன் எடை (8¾ கிராம்).

இவற்றைச் சிதைத்து ஒன்றரை ஆழாக்கு நீரில் போட்டு அரை ஆழாக்காகச் சுண்ட வைத்து இறக்கி வடிகட்டிப் பருகச் செய்யவும். இவ்விதம் நாளும் இரண்டு மூன்று முறைகள் செய்யின் செரியாமை பேதி தீரும்.

## 1391. பேதி கட்டக் குடிநீர் (வேறு)

மேற்றோல் சீவின சுக்கு, மஞ்சள் கடுக்காய்த் தோல் இவை வகைக்கு 2½ வராகன் எடை (8¾ கிராம்). இவற்றைச் சிதைத்து ஒன்றரை ஆழாக்கு நீரை விட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்ட வைத்து இறக்கி வடிகட்டிப் பருகச் செய்துவர செரியாமை கழிச்சல் தீரும்.

## 1392. மேற்படி (வேறு)

மேற்றோல் சீவின சுக்கு, மிளகு, அரிசித் திப்பிலி, ஓமம், வெந்தயம், வகைக்கு 2 வராகன் எடை (7 கிராம்), கறிவேப்பிலை ஈர்க்கு 1 பிடி, நல்ல வேளைத் தண்டு 1 பிடி.

இவற்றை நையச் சிதைத்துச் சட்டியில் தனித்தனியே வறுத்து அரைப்படி நீர் விட்டு எட்டிலொன்றாகக் காய்ச்சி வடிகட்டிப் பருகச்

செய்பவும். இவ்விதம் நாளும் இரண்டு, மூன்று முறைகள் செய்து வரின் செரியாமைக் கழிச்சல், கழிச்சலில் காணும் நீர்வேட்கை, ஆகியவை தீரும்.

## 1393. ஓம உருண்டை

ஓமம் 1 பலம் (35 கிராம்), சட்டியிலிட்டு வறுத்துப் பொரிக்கிற பக்குவத்தில் ஒன்றரைப் பலம் வெல்லத்தைப் போட்டுக் கிளறி எடுத்து மூன்று உருண்டைசெய்து தினம் மூன்று வேளை சாப்பிடவும். இவ்விதம் மூன்று நாள் செய்யின் வயிறு கடுத்துக் கழிகிறது நிற்கும், செரிப்பின்மை தீரும்.

## 1394. சலக் கழிச்சல் உசிதம்

வடக்கே போகிற புளியம் வேர்த்தோலை அரைத்த விழுது 1 பலம் (35 கிராம்), சீரகம் 1 வராகன் எடை (3½ கிராம்), இலவங்கம் 1 வராகன் எடை (3½ கிராம்), இவ்விரண்டையும் தூள்செய்து முன் மருந்துடன் ஒன்றாகக் கலந்து கால் அல்லது அரை ஆழாக்கு தயிரில் குழைத்துப் பருகச் செய்யவும். இவ்விதம் நாளும் இரண்டு மூன்று தடவைகள் செய்துவரின் நீர் போல் போகிற கழிச்சல்கள் கட்டுப்படும்.

## 1395. மேற்படி (வேறு)

ஒதியம் பட்டையை அரைத்த விழுது 1 பலம் (35 கிராம்), நற்சீரகத் தூள், இலவங்கத் தூள், சாதிக்காய்த்தூள் வகைக்கு ¾ வராகன் எடை. இவையெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கால் அல்லது அரை ஆழாக்கு எருமைத் தயிரில் கரைத்துப் பருகச் செய்யவும். இவ்விதம் நாளும் இரண்டு அல்லது மூன்று தடவைகள் செய்ய நீர் போல் கழிகிற கழிச்சல்கள் கட்டுப்படும்.

## 1396. விடபேதி இலிங்கமெழுகு

தூய்மை செய்த சாதிலிங்கம் 1 வராகன் எடை (3½ கிராம்), மிசிரி அபின் 1 வராகன் எடை (3½ கிராம்), யானைமதம் 1 வராகன் எடை (3½ கிராம்).

செய்முறை:— இலிங்கத்தை நேர்மையாகப் பொடித்து மற்ற இரண்டையும் சேர்த்து இரண்டு சாம நேரம் அரைத்துப் பீங்கான் சிமிழில் வைத்துக் கொள்ளவும்.

அளவு:— 1 முதல் 1½ குன்றிமணி எடை.

துணைமருந்து:— சர்க்கரை, தேன் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:— விடபேதி, வாந்தி, விடபேதியில் காணும் நளிர், நீர்வேட்கை, வேர்வை, சைத்தியம் ஆகியவை தீரும்.

## 1397. விடபேதி உசிதம்

விடபேதி கண்டவுடனே கடையில் விற்கிற இரச செந்தூரம் இரண்டு வராகன் எடை (7 கிராம்) வாங்கி தேனில் கால் வராகன் எடை இழைத்து உள்ளுக்குக் கொடுக்கவும். இவ்விதம் மணிக்கு ஒரு தடவை செய்து இரண்டு வராகன் எடையும் உள்ளே செலுத்தி விடவும். இவ்வாறு செய்யின் கழிச்சல் கட்டுப்படும்; உடம்பில் குளிர்ச்சிகாணுமல் சூட்டைஉண்டாக்கும்; நீர்வேட்கையிராது: வாந்தி காணுது; வேர்வைகாணுது; இதனுல் அதிகக் குணமுண்டாகும்.

மலங்கட்டி வயிற்று உப்புசம்கண்டால் மேற்படிமருந்துடன் இரச கற்பூரம் அரைக் குன்றுமணி எடை கூட்டிக் கொடுத்தால் மலம் இளகும். நீர்கட்டினுல் மேற்கண்ட மருந்துடன் இரண்டு குன்றிமணி எடை வெண்காரப் பொரி கூட்டிக் கொடுத்தால் நீரிறங்கும்.

குறிப்பு:— மேற்கண்ட இரசசெந்தூரம் 2 வராகன் எடை தூய்மை செய்த இரசகற்பூரம் 4 குன்றிமணி எடை, பொரித்த வெண் காரம் 2 வராகன் எடை, இவை எல்லாவற்றையும் தனித்தனியே பொடித்து பிறகு ஒன்ருகக் கலந்து மூன்றுமணி நேரம் நன்ருய் அரைத்து பளிங்குக் குப்பியில் வைத்துக் கொண்டு *நச்சுக்கழிச்சல் கண்டவுடன் கால் வராகன் எடை வீதம் தேனில் கொடுத்துக் கொண்டு வந்தால் வயிற்று உப்புசம், நீரடைப்பு முதலியவை உண் டாகாது. முன் இரசசெந்தூரத்தைத் தனியாகக் கொடுத்து வரும் போது சிற்சில சமயங்களில் சிலருக்கு வயிற்று உப்புசம், நீர்க்கட்டு முதலியவை காண்பது உண்டு. அச் சமயத்தில் மேற்படி இரசசெந் தூரத்தைத் தனியாக உபயோகிப்பதை நிறுத்தி இம் மருந்தை உப யோகித்தால் நல்ல குணமுண்டாகும். ஆகையால் மேற்கண்ட இரு வகை மருந்துகளையும் சித்தப்படுத்தி வைத்திருப்பது உத்தமம்.

## 1398. சோம்புத் தைல உசிதம்

ஐந்து அல்லது ஏழுதுளி சோம்புத் தைலத்தை மிளகுக் குடிநீரில் அல்லது சீரகக் குடிநீரில், அல்லது மேற்சொல்லியிருக்கிற குடிநீர்களி லொன்றில் அல்லது வேறு சிறப்பான துணைமருந்துகளில் கலந்து கொடுத்துக் கொண்டு வந்தால் நச்சுக்கழிச்சல், கக்கல், செரியாமைக் கழிச்சல், சூட்டுக்கழிச்சல், மாந்தக்கழிச்சல், நிணக்கழிச்சல், ஆகிய பேதிகளெல்லாம் தீரும்.

## 1399. விடபேதிக் களங்கு

தூய்மை செய்த இரசம் 1 பலம் (35 கிராம்), நெல்லிக்காய்க் கெந்தகம் 1 பலம் (35 கிராம்), வெடியுப்புத்தூள் 1 வராகன் எடை (3½ கிராம்), வெண்காரத்தூள் 1 வராகன் எடை (3½ கிராம்).

---

* நச்சுக்கழிச்சல் = விடபேதி = Cholera.

செய்முறை:— இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித் தரைத்து நன்ருகக் கறுத்த பின்பு ஒரு இரும்புக் கரண்டியில் போட்டு கரிநெருப்பின்மீது வைத்தால் அது உருகி இளகும். அந்தச் சமயத்தில் மற்ற இரண்டு தூள்களையும் போட்டு நன்ருகக் கிளறிக் கொடுத்துக் கெந்தகத்தின் எடை சுமார் அரைவாசி குறைந்த பக்குவத்தில் ஒரு பலகையின்மீது ஊற்றி விடவேண்டும். அதிகப் புகையெழும்பினல் சரக்கு அதிகம் குறைந்து போகும். ஆகையால் அதிகமாகப் புகை யாமல் விழிப்பாக எடுத்துக்கொள்ள வேண்டியது. குளிர ஆறின பின்பு கல்வத்திலிட்டு நேர்மையாகப் பொடித்துப் பளிங்குக்குப்பியில் பத்திரப்படுத்தவும்.

அளவு:— 2 முதல் 4 வராகன் எடை.

துணைமருந்து:— தேன், நெய் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:— நச்சுக்கழிச்சல், செரியாமைக்கழிச்சல், குழந்தைகளுக்குக்காணும் மாந்தக்கழிச்சல், வேறு பலவகைக் கழிச்சல்கள், சூட்டுக்கழிச்சல், நிணக்கழிச்சல் ஆகிய எல்லாவகைக் கழிச்சல்களும் தீரும்.

விண்ணப்பம்:— நச்சுக்கழிச்சல் சம்பந்தமான எல்லா விவரங்களும் நமது நச்சுக்கழிச்சல் நிவாரணியில் விளக்கமாகச் சொல்லப் பட்டிருக்கின்றன. அவசியமானவர்கள் அதைப் பார்த்துத் தெரிந்து கொள்ளவும்.

## பித்தவாயு மருத்துவம்

### 1400. உஷ்ணவாயு உருண்டை

மேற்றோல் சீவின இஞ்சி, மிளகுத்தூள், தோலுரித்த வெள்ளைப் பூண்டிதழ் இவை வகைக்கு 2 பலம் (70 கிராம்), இந்துப்பு 1 வராகன் எடை (3 கிராம்), எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:— மேற்கண்டவைகளில் இஞ்சியைக் கல்வத்திலிட்டு வெண்ணெய் போலரைத்து தனியே எடுத்துக் கொள்ளவும், பிறகு பூண்டை தனியே அரைத்துக் கொள்ளவும். பிறகு எல்லாவற்றையும் ஒன்ருகக் கலந்து கல்வத்திலிட்டு ஒரு மணி நேரம் அரைத்து எல்லாம் கலந்த பின்பு எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டுசாம நேரம் அரைத்து கால் வராகன் எடையுள்ள மாத்திரை களாகச் செய்து நிழலிலுலர்த்திப் பளிங்குப்குப்பியில் பத்திரப் படுத்தவும்.

**அளவு:— 1 முதல் 1½ மாத்திரை. காலை, மாலை இரண்டு வேளையும் உபயோகிக்கவும்.**

திரும்நோய்கள்:—உட்டினவாயு, உட்டினவாயுவினால் உண்டாகும் கழிச்சல், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம் முதலிய உட்டின வாயு சம்பந்தமான நோய்கள் தீரும்.

## 1401. உஷ்ணவாயு ஓமச்சூரணம்

ஓம உமி, மேற்றோல் சீவின சுக்குத்தூள், மிளகுத்தூள் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்), கெந்தவெடியுப்பு 2 பலம்(70 கிராம்), நாய்க்கடுகு 1 பலம் (35 கிராம்), (இதனை வறுத்துத் தூளாக்கிக் கொள்ளவும்) சுட்டெரித்த வசம்புச் சாம்பல் ½ பலம் (17½ கிராம்), பொடித்துத் தூள்செய்த பெருங்காயத் தூள் 2 வராகன் எடை (7 கிராம்).

செய்முறை:— இவையெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கல்வத்திலிட்டு இரண்டுமணி நேரம் அரைத்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

அளவு:— 1 முதல் 1½ வராகன் எடை.

துணைமருந்து:— சர்க்கரை, தேன், நெய் முதலியவைகளாம்.

திரும்நோய்கள்:— உட்டினவாயு, அனல்மந்தம், வயிற்றிரைச்சல், வயிற்றுப் பொருமல், வயிற்றுக் கழிச்சல், புளித்த ஏப்பம் முதலிய உட்டினவாயு சம்பந்தமான நோய்களெல்லாம் தீரும்.

## 1402. உஷ்ணவாயு பொடுதலை இளகம்

பொடுதலங்காயை வறுத்து இடித்தத்தூள், மிளகுத்தூள், மேற்றோல் சீவின சுக்குத்தூள் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்), அரிசித்திப்பிலி, நற்சீரகம், மஞ்சள் கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிமுள்ளி, கறிவேப்பிலை, குரோசானி ஓமம், இவற்றைத் தனித்தனி இடித்த தூள் வகைக்கு ½ பலம்(17½ கிராம்), இலவங்கத் தூள், சாதிக்காய்த்தூள், சாதிபத்திரித்தூள் இவை வகைக்கு 3 வராகன் எடை, நல்லெண்ணெய் செல்லதக்க அளவு.

செய்முறை:—முன் தூள்களையெல்லாம் ஒன்றாகக் கலந்து கல்வத்திலிட்டு ஒருமணிநேரம் அரைத்து நன்றாகக் கலந்தபின்பு நல்லெண்ணெயைச் சிறுகச்சிறுக வார்த்து அரைத்து இளகிய பதத்தில் எடுத்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு:— 1 முதல் 1½ வராகன் எடை.

திரும்நோய்கள்:— உட்டினவாயு சம்பந்தமான மேற்கண்டநோய்களெல்லாம் தீரும்.

## 1403. உஷ்ணவாயு சீரகச் சூரணம்

சீரகம் 2 பலம் இதனை மெல்லிய துணியில் தாளிக்காத கற்சுண்ணும்பை ஒருபாத்திரத்தில் கொஞ்சம் பரப்பி அதன்மீது முடிச்சை வைத்து முடிச்சு மறையும் படியாகச் சுண்ணும்பைக்கொட்டி அதன் மீது தண்ணீரைத் தெளித்து வேகவைத்து ஆறினபின்பு எடுத்து தண்ணீரில் போட்டுக் கொதிக்க வைத்துச் சுண்ணும்புப்பற்று நீங்கின பின்பு வெய்யிலிலுலர்த்தி இடித்தத்தூள் 1பலம் (35 கிராம்), மேற்றேல் சீவின சுக்கு 2 பலம், இதன் மீது சுண்ணும் பைத் தடவி நெருப்பில் சுட வேண்டும். பின்புஎடுத்து ஆறினபின் சுண்ணும்பை நீக்கிவிட்டு மறுபடியும் சுண்ணும்பைத் தடவி முன் போல் சுடவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கிஒன்பது தடவைகள் செய்து இடித்து துணியில் சலித்த தூள் 1 பலம், இலவங்கத்தூள் 2 வராகன் எடை (7 கிராம்), சாதிக்காய்த்தூள் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), சாதிப்பத்திரித்தூள் 1 வராகன் எடைசன்ன இலவங்கப் பட்டைத்தூள் 4 வராகன் எடை (பின்கண்ட நான்கு சரக்குகளையும் இளவறுப்பாக வறுத்துத் தூள்செய்து கொள்ள வேண்டும்).

செய்முறை:— எல்லாத் தூள்களையும் ஒன்ருகக் கலந்து கல்வத்திலிட்டு ஒருமணி நேரம் அரைத்து நன்ருகக் கலந்த பின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு:— 1 முதல் $1\frac{1}{2}$ வராகன் எடை.

துணைமருந்து:— தேன், நெய் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:—உட்டிணவாயு, உட்டிணவாயுசம்பந்தமாக உண்டாகும் எல்லா வகை தீக்குணங்கள், அனல் மந்தம் ஆகியவை தீரும்

## 1404. உஷ்ணவாயு மேனிச் சூரணம்

குப்பைமேனி சமூலத்தை நிழலிலுலர்த்தி இடித்து துணியில் வடிகட்டியதூள் 1 பலம்(35 கிராம்), நற்சீரகத்தூள் 1 பலம்(35 கிராம்), சர்க்கரை 3 பலம் (105 கிராம்).

செய்முறை :—இம் மூன்றையுங் கலந்து கல்வத்திலிட்டு ஒரு மணி நேரமரைத்து நன்ருகக் கலந்த பின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

அளவு:— 1 முதல் 2 வராகன் எடை.

துணைமருந்து:— தேன், நெய் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:—உட்டினவாயு, மண்டைநோய், பீனிசம், பவுத்திரம், உட்டினவாயு சம்பந்தமான நோய்கள் தீரும். பசித்தீ அதிகப்படும்; மாந்தாக்கினி தீரும்.

## 1405. உஷ்ணவாயுக் கண்டுச் சூரணம்

அதிமதுரம், சோம்பு, சதகுப்பை, நற்சீரகம், கருஞ்சீரகம், கொத்துமல்லிவிதை, இவற்றைத் தனித்தனி இடித்து துணியில் சலித்த தூள் வகைக்கு 8 வராகன் எடை (28 கிராம்), கருவாப்பட்டைத்தூள் 1 பலம் (35 கிராம்), கற்கண்டுத்தூள் 50 வராகன் எடை (175 கிராம்), சர்க்கரை 5 பலம் (175 கிராம்).

செய்முறை:— இவை எல்லாவற்றையும் ஒன்ருகக் கலந்து கல்வத்திலிட்டு இரண்டு மணிநேரம் அரைத்து நன்ருகக் கலந்துபீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு:—3 முதல் 6 வராகன் எடை. காலை, மாலை இரண்டு வேளையும் உட்கொள்ளவும்.

தீரும்நோய்கள் :—கழிச்சல், சூட்டுக்கழிச்சல், வயிற்றிரைச்சல், அனல்மந்தம், வயிற்றுப்பொருமல், இரைப்பை வலுக்குறைவு ஆகியவை தீரும். குருதிவளமை உண்டாகும்.

## 1406. உஷ்ணவாயு அடைக் குடிநீர்

மேற்ருேல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, ஓமம், கண்டத்திப்பிலி, தோலுரித்த வெள்ளைப்பூண்டிதழ், கற்கடகசிங்கி, இவை வகைக்கு 3 பலம் (105 கிராம்), இவற்றைத் தனித்தனி சிதைத்து மெல்லிய துணியில் முடிந்து வைத்துக் கொள்க. பிரண்டை 5 பலம் (175 கிராம்), பொடுதலை 5 பலம் (175 கிராம்), இவ்விரண்டையும் அம்மியில் வைத்துக் நன்ருகச் சிதைந்துக் கொள்ளவும். எருமை மோர் 4 படி.

செய்முறை:—மேற்கண்ட இரண்டு மூலிகைகளையும் புதியமண் சட்டியிலிட்டுப் பொன்னிறமாக வறுத்து முன் முடிச்சையும் மோரையும் சேர்த்துக் காய்ச்சி நான்கிலொன்ருகச் சுண்டவைத்து அடைக் குடிநீராக வைத்துக் கொண்டு ஒரு வேளைக்கு அரை ஆழாக்கு வீதம் காலை, மாலை இரண்டு வேளையும் மூன்று நாள் உபயோகிக்கவும்

தீரும்நோய்கள்:— உட்டினவாயு, வயிற்றிரைச்சல், வயிற்றுப் பொருமல், அனல்மந்தம், கழிச்சல், செரியாமைக்கழிச்சல் ஆகியவை தீரும்.

மருத்துணவு:—புளி, புகை, புணர்ச்சி, வாயுபண்டம் ஆகியவை ஆகாது.

## 1407. உஷ்ணவாயு உசிதம்

கெண்டைக் கச்சைக்கருவாடு ¼ படி, உத்தாமணிச்சாறு ¼ படி.

கருவாட்டைச் சட்டியிலிட்டு மணம் வரும்படி வறுத்து மேற்படி சாற்றை விட்டு, உப்பு, புளி, மிளகாய், வெள்ளைப்பூண்டு, மிளகு,

மஞ்சள், வெங்காயம் முதலிய பண்டங்களை முறைப்படி சேர்த்துக் குழம்பு செய்து கொள்ளவும். இதனைச் சுடு சோற்றுடன் வேண்டிய அளவு உபயோகிக்கவும், இவ்விதம் நாளுக்கு இரண்டு வேளை மூன்று நாள் உட்கொண்டுவரின் உட்டினவாயு, பித்தவாயு, மேக வாயு, ஆகியவைகளும் சுவாசகாசம், இரைப்பு, மந்தாரகாசம், கபக்கட்டு, தொண்டைக்கட்டு, முதலிய கபநோய்களும் தீரும்.

குறிப்பு:—மேற்கண்ட அளவை உடல்வலிமை, நோய்வலிமை ஆகியவைகளுக்குத் தகுந்தபடி குறைத்துக் கொள்ளலாம். இந்த மருத்துவ நுட்பங்களானது மருத்துவர்களின் அறிவுக் கூர்மையைச் சார்ந்தது. சென்னையில் யாவருமறிந்த ஒரு ஆங்கில மருத்துவர் இந்த முறையை ஆங்கில முறைப்படி செய்து குப்பியிலடைத்து விசித்திரமாக விளம்பரப்படுத்தி விற்பனை செய்து வந்தார். அதனால் அநேகர் நன்மையடைந்தார்கள்.

## 1408. உஷ்ணபேதிக் கருக்குச் சூரணம்

*புன்கிலை, நுணாவிலை, பழங்கோணி, பட்டுத்துணி, பனையோலை, திருநீற்றுப்பச்சை இவை வகைக்கு 3 பலம் (105 கிராம்), மிளகு 2 பலம் (70 கிராம்), நற்சீரகம், ஓமம், வசம்பு இவை வகைக்கு 2 வராகன் எடை (7 கிராம்), காடித் தண்ணீரிலிருக்கிற சோறு 1 பிடி.

செய்முறை :—மேற்கண்டவைகளுள் ஒவ்வொன்றையும் தனித் தனி ஓட்டிலிட்டுச் செம்மையாக வறுத்துக் கரியாக்கிக் கொள்ள வேண்டியது. ஒவ்வொன்றையும் கொஞ்சமும் பாக்கியில்லாமல் நன்றாயெரித்து கரியாக்கி விடவேண்டியது. இந்தக் கரிகளை எல்லாம் ஒன்றாகச் சேர்த்துக் கல்வத்திலிட்டு இரண்டு மணி நேரமரைத்து நேர்மையான பொடியானவுடன் குப்பியில் பத்திரப்படுத்தவும். இதனைத் துணியில் சலித்துத் திப்பியை அரைத்தரைத்துத் தூள் செய்து கொள்வது உசிதம்.

அளவு:—1 முதல் 2 வராகன் எடை.

துணைமருந்து :—தேன், நீராகாரம், மோர், நெய், குடிநீர் வகைகள் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:—கழிச்சல், சூட்டுக்கழிச்சல், வயிற்றிரைச்சல், வயிற்றுப்பொருமல், வாயு, செரியாமை, வயிற்றுவலி ஆகியவை தீரும். சிறுபிள்ளைகள் கழிச்சல், மாந்தம், உப்புசம் ஆகியவை களுக்கு இது உயர்வாக உபயோகப்படும் மருந்து.

குறிப்பு:—காடியிலுள்ள சாதம் நினைத்தபோது நினைத்த இடத்தில் கிடைப்பதரிது; ஆகையால் ஒருபிடி சாதத்தைச் சட்டியி லிட்டு இரண்டு அல்லது மூன்று ஆழாக்குக் காடியைச் சிறுகச்

*புன்கிலை = மணிப்புங்கன் (பூந்திக் கொட்டை) இலை.

சிறுக விட்டு சுண்ட வைத்துக் காடியெல்லாம் சென்ற பின்பு அதனை வறுத்துக் கரியாக்கிக் கொள்ளவும். அல்லது சாதத்தைப் புளிக்க வைத்தும் சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் காடியில் சித்தப்படுத்துவது தான் உத்தமமானது.

## 1409. உஷ்ணவாயு உருண்டை

மேற்ரேல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, கண்டத்திப்பிலி, யானைத்திப்பிலி, பொரித்த பெருங்காயம், கொடிவேலி வேர்ப் பட்டை, கொத்துமல்லி விதை, நற்சீரகம், ஓமம், இவற்றின் தனித் தனித் தூள் வகைக்கு 1 பலம் (35 கிராம்), கறியுப்பு, வெண்காரம், இந்துப்பு, சீனக்காரம்; அட்டுப்பு இவற்றின் தூள் வகைக்கு 1 பலம் (35 கிராம்), எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்கண்ட எல்லாவற்றையும் கல்வத்தில் அல்லது அம்மியில் வைத்து எலுமிச்சம்பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்குசாம நேரமரைத்துக் கால் வராகன் எடையுள்ள மாத்திரை களாகச் செய்து நிழலிலுலர்த்திப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

அளவு:—½ முதல் 1 மாத்திரை. காலை, மாலை இரண்டு வேளையும் உபயோகிக்கவும்.

துணைமருந்து:—சுக்குக்குடிநீர், மோர், வாழைப்பூச்சாறு, தயிர்ச் சக்கை முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:— உட்டினவாயு, செரியாமை, அனல்மந்தம், வயிற்றுப்பொருமல், வயிற்றிரைச்சல், புளித்த ஏப்பம், நெஞ்செரிவு ஆகியவை தீரும்; பசிதீபனம் அதிகப்படும்; செரித்தல் திறன் உண் டாகும்.

## 1410. உஷ்ணவாயு இளகம்

பொரித்த பெருங்காயத்தூள் 1 வராகன் எடை (3½கிராம்), சுட்டெரித்த வசம்புக்கரித்தூள் 2 வராகன் எடை (7 கிராம்), வாய் விளங்கத்தூள் 3 வராகன் எடை (10½ கிராம்), இந்துப்புத் தூள் 4 வராகன் எடை (14 கிராம்), நற்சீரகத் தூள் 5 வராகன் எடை (17½ கிராம்), மேற்ரேல் சீவின சுக்குத் தூள் 6 வராகன் எடை (21 கிராம்), மிளகுத் தூள் 7 வராகன் எடை (24½ கிராம்), அரிசித் திப்பிலித் தூள் 8 வராகன் எடை (28 கிராம்), கோட்டத் தூள் 9 வராகன் எடை (31½ கிராம்), மஞ்சள்கடுக்காய்த் தோல்தூள் 10 வராகன் எடை (35 கிராம்), கொடிவேலி வேர்ப்பட்டைத்தூள் 11 வராகன் எடை (38½ கிராம்), குரோசானி ஓமத்தூள் 12 வராகன் எடை (42 கிராம்), வெல்லம் 156 வராகன் எடை (546 கிராம்).

செய்முறை:—மேற்கண்ட தூள்களை எல்லாம் ஒன்ருகக் கலந்து கல்வத்திலிட்டு ஒரு மணி நேரம் நன்ருக அரைத்துக் கலந்து கொள்க. வெல்லத்தைத் தூள் செய்து கொஞ்சம் நீர்விட்டுக் காய்ச்சி வெல்லம் கரைந்து இரண்டு கொதிவந்தவுடன் இறக்கி வடிகட்டி திப்பியை நீக்கி விட்டு மறுபடியும் அடுப்பேற்றிக் காய்ச்சிப் பாகுபதத்தில் முன் சித்தப்படுத்தின தூள்களைச் சிறுகச் சிறுகத் தூவி மத்தால் கடைந்து செம்மையாகக் கலந்த பின்பு கீழிறக்கி ஆறினபின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு:—2 முதல் 3 வராகன் எடை. காலை, மாலை இரண்டு வேளையும் உபயோகிக்க வேண்டும்.

தீரும்நோய்கள்:— உட்டினவாயு, செரியாமை, அனல்மந்தம் வயிற்றுப்பொருமல், வயிற்றிரைச்சல், நெஞ்செரிவு ஆகியவை தீரும். பசித்தீபனமுண்டாகும். செரித்தல் திறன் அதிகப்படும்.

## சூதகவாயு மருத்துவம்

### 1411. சூதகவாயு எள்ளு இளகம்

எள்ளு $\frac{1}{4}$ படி, (இதனைக் கல் முதலியவைகளாய்ந்து தூய்மை செய்து எடுத்துக் கொள்ளவும்.) மேற்ரூேல் சீவின சுக்கு, மிளகு அரிசித்திப்பிலி, கண்டத்திப்பிலி, ஓமம், சதகுப்பை, வாய்விளங்கம் நற்கடுகு, நாய்க்கடுகு, இவைகளைத் தனித்தனி இளவறுப்பாக வறுத்துத் தனித்தனி இடித்த தூள் வகைக்கு $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), வறுத்திடித்த இலவங்கத் தூள் 2 வராகன் எடை (7 கிராம்), வறுத் திடித்த சித்திரமூல வேர்ப்பட்டைத்தூள் $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்), பெருங்காயம் $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்), (இதனைக் கறுக வறுத்துத் தூள் செய்து கொள்ளவும்) இந்துப்புத்தூள் $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்), வெடியுப்புத்தூள் $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்), கறியுப்புத்தூள் $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்), கெந்த வெடி யுப்புத்தூள் $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்), வளையலுப்புத்தூள் $1\frac{1}{2}$ வராகன் எடை, தோலுரித்த வெள்ளைப்பூண்டிதழ் 5 பலம்.

செய்முறை:—தூள்களையும் இலவண வகைகளையும் ஒன்ருகக் கலந்து வைத்துக் கொள்க. எள்ளைக் கழுவி உலர்த்தி இளவறுப் பாக வறுத்து அம்மியில் வைத்து நேர்மையாக அரைத்து முன் சித்தப்படுத்தி வைத்திருப்பதுடன் கலந்து கொள்ளவும். பூண்டை இள வறுப்பாக வறுத்து வதக்கி அம்மியில் வைத்து வெண்ணெய் போல அரைத்து முன் சித்தப்படுத்தின தூள்களைச் சிறுகச் சிறுக சேர்த்து இரண்டுசாம நேரமரைத்துக் கால் வராகன் எடை உள்ள உருண்டைகளாக உருட்டிப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத் தவும்.

அளவு:—2 முதல் 3 உருண்டை. காலை, மாலை இரண்டு வேளையும் அரை முதல் ஒரு மண்டலம் உபயோகிக்கவும்.

துணைமருந்து:—தேன், நெய், வெண்ணெய், வாழைப்பழம் முதலியவைகளாம். இது சாப்பிடுவதற்குக் கொஞ்சம் அருவருப்பாக இருக்குமாகையால் தேனில் அல்லது நெய்யின் நனைத்து உட்கொள்ள வேண்டியது.

தீரும்நோய்கள் :—சூதகவாயு, அக்கிரமசூதகம், சூதகத்தில் காணும் வயிற்றுவலி, மூலவாயு, சூதகபந்தம், கிராணி, சூதகத்தில் காணும் இடுப்புவலி, அக்கினிமந்தம், செரியாமை ஆகியவை தீரும்.

மருத்துணவு:—வாயுவினால் உடல் பருத்திருந்தால் புளி, உப்பு முதலியவைகளைச் சிறுக சேர்த்துப் பத்தியம் வைக்கவும்; பித்த சம்பந்த உடலாக இருந்தால் சூடுதரும் பண்டங்களை நீக்கி வைக்கவும்; உடல் இயல்பு, நோய் இயல்பு, ஆகியவைகளுக்குத் தகுந்தபடி மருத்துணவு ஏற்படுத்துவது மருத்துவர்களின் கடமையாகும்.

## 1412. சூதகவாயு பட்டை இளகம்

தூய்மை செய்த பறங்கிப்பட்டைத் தூள் 72 வராகன் எடை (252 கிராம்), சிற்றரத்தை, இலவங்கம், மேற்றோல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, ஏலரிசி, கிச்சிலிக்கிழங்கு, நற்சீரகம், சடாமாஞ்சில், இலவங்கப் பட்டை, நரிவிளாப்பட்டை, சதகுப்பை, புங்கம்வேர்பட்டை, ஆயில் பட்டை, குமிழாத்திப்பட்டை, சாதிக்காய் இவற்றின் தனித்தனித் தூள் வகைக்கு 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), சர்க்கரை 6 பலம் (210 கிராம்), தேன், செல்லத்தக்க அளவு.

செய்முறை :— மேற்கண்டவைகளை எல்லாம் ஒன்றாகக் கலந்து அம்மியில் வைத்து ஒருமணி நேரம் அரைத்து நன்றாகக் கலந்த பின்பு தேனைச் சிறுகச் சிறுக வார்த்து மூன்றுமணி நேரம் அரைத்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு:— 1 முதல் $1\frac{1}{2}$ வராகன் எடை. காலை, மாலை இரண்டு வேளையும் உபயோகிக்கவும்.

துணைமருந்து:— பசுவின்பால், பசுநெய் ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள்:— சூதகவாயு, சூதகக்கட்டு, அக்கிர மசூதகம், சூதகவயிற்றுவலி, எல்லாவகைக் கழிச்சல் ஆகியவை தீரும்.

மருத்துணவு:— புளி, புகை, பூசனிக்காய், அகத்திக்கீரை, கடுகு, நல்லெண்ணெய் ஆகியவைகளை நீக்கவும்.

## 1413 சூதகவாயு கத்திரி இளகம்

கண்டங்கத்திரி சமூலம், மூங்கிலிலை இவை வகைக்கு 5 பலம் (75 கிராம்), தோலுரித்த வெள்ளைப் பூண்டிதழ் 3 பலம் (105 கிராம்), மிளகு, பெருங்காயம் (இவைகளை வறுத்துத் தூள் செய்து கொள்ளவும்) அரிசித்திப்பிலி, கண்டந்திப்பிலி, ஓமம் இவற்றை இள வறுப்பாக வறுத்துத் தனித்தனி இடித்த தூள் வகைக்கு $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), புட்டிவெல்லம் 10 பலம் (350 கிராம்).

செய்முறை :—முன் இரண்டு மூலிகைகளையும் ஒரு பாத்திரத்தில் போட்டு இரண்டு படி தண்ணீர் வார்த்து நான்கிலொன்றாகக் காய்ச்சி வடிகட்டின குடிநீரில் வெல்லத்தைக் கரைத்து இரண்டு கொதி வந்தவுடன் துணியில் வடிகட்டி கசடு நீங்கிக் பாகு பதமாய்க் காய்ச் பூண்டை வதக்கி அம்மியில் வைத்து வெண்ணெய் போல வரைத்துமுன் தூள்களையும் சேர்த்தரைத்துஅப்பாகில் கரைத்து நன்றாகக் கிண்டிக் கிளறிக் கீழிறக்கி ஆறினபின் பீங்கான்பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

அளவு :—1 முதல் $1\frac{1}{2}$ வராகன் எடை. காலை, மாலை இரண்டு வேளையும் உபயோகிக்கவும்.

தீரும்நோய்கள் :—சூதகவாயு, பலவகை வாயுக்கள் ஆகியவை தீரும்.

## 1414. சூதகவாயு நிம்பை இளகம்

வேப்பீர்க்கு 10 பலம் (350 கிராம்), புட்டி வெல்லம் 5 பலம் (175 கிராம்), பழம் புளி 5 பலம் (175 கிராம்), தோலுரித்த வெள்ளைப் பூண்டிதழ் 3 பலம் (105 கிராம்), மிளகுத் தூள் $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), அரிசித்திப்பிலித் தூள் $\frac{1}{8}$ பலம், கண்டத்திப்பிலித் தூள் $\frac{1}{8}$ பலம், ஓமத்தூள் $\frac{1}{8}$ பலம், குரோசானி ஓமத்தூள் $\frac{1}{8}$ பலம், நல்லெண்ணெய் 8 பலம் (280 கிராம்).

செய்முறை.—வேர்ப்பீர்க்கைப் பஞ்சுப் போலச் சிதைத்து ஒரு படி தண்ணீர் விட்டு மசிய இடித்துச் சாறு பிழிந்து கொள்ள வேண்டும். இதில் புளியைக் கரைத்து வடிகட்டித் திப்பியை நீக்கி விடவேண்டும். பிறகு இதில் வெல்லத்தைக் கரைத்துக் காய்ச்சிக் குழம்புப் பதத்தில் பூண்டை வதக்கி அம்மியில் வைத்து வெண்ணெய் போலரைத்து முன் தூள்களையும் சேர்த்தரைத்து மேற்படி பாகில் கரைத்து நல்லெண்ணெயை விட்டு நன்றாகக் கிளறிக் கீழிறக்கி ஆறினபின் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— 1 முதல் 2 வராகன் எடை. காலை, மாலை இரண்டு வேளையும் உபயோகிக்கவும்.

தீரும்நோய்கள் :—சூதகவாயு, பலவகை வாயுக்கள், கழிச்சல், கைகால் குடைச்சல், வயிற்றுவலி ஆகியவை தீரும்.

## 1415. சூதகசன்னித் தைலம்

நல்லெண்ணெய் 8 பலம் (280 கிராம்), புங்கம்வேர்ப்பட்டை, கஸ்தூரிமஞ்சள், செவ்வியம், மரமஞ்சள் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்), மிளகு $1\frac{1}{4}$ வராகன் எடை.

செய்முறை:—மேற்கண்ட ஐந்து சரக்குகளையும் நையச்சிதைத்து ஒரு படி தண்ணீர் வார்த்து எரியும் அடுப்பில் ஏற்றி ஆறிலொரு பாகமாகச் சுண்ட வைத்திறக்கி இளஞ் சூட்டுடன் பிசைந்து வடிகட்டின குடிநீரை எண்ணெய்யில் சேர்த்துக் காய்ச்சி கடுகுதிரள் பதத்தில் இறக்கி வடிகட்டி பளிங்குக்குப்பியில் வைத்துக் கொள்ளவும்.

தீரும்நோய்கள்:—நான்கு நாளைக்கொரு தடவை இதனைத் தேய்த்துத் தலைமுழுக்குச் செய்து வருவதால் சூதகசன்னி, சூதக சம்பந்தமான வலிப்பு, கைகால் குடைச்சல் ஆகியவை தீரும்.

## 1416. சூதகவாயு உள்ளிப் பாயசம்

தோலுரித்த ஒருதலை வெள்ளைப்பூண்டிதழ் 1 பலம் (35 கிராம்), பசுவின் பால் $1\frac{1}{2}$ ஆழாக்கு, நற்சீரகத்தூள், சோம்புத்தூள் இவை வகைக்கு $\frac{1}{2}$ வராகன் எடை, சர்க்கரை $\frac{3}{4}$ பலம் ($26\frac{1}{4}$ கிராம்).

செய்முறை:—பூண்டில் தண்ணீரை விட்டு நன்றாகப் பிசைந்து தண்ணீரை இறுத்து விடவேண்டும். மறுபடியும் தண்ணீர்விட்டு அலம்பி அந்தத் தண்ணீரையும் இறுத்து விடவேண்டும். இவ் விதம் மடக்கிமடக்கி மூன்று அல்லது ஐந்து தடவைகள் செய்து இதனை ஒரு பாத்திரத்தில் போட்டுச் செல்லத்தக்க அளவு தண்ணீரை விட்டு வேகவைத்துத் தண்ணீர் அதில் சுவறிப்போவது தான் உத்தமம். தண்ணீரை அதிகமாகவிட்டு இறுத்து விடுவதனால் அதன் சத்து குறையும். தண்ணீரை இறுத்தால் அதன் வாசனையும் குறையும். ஆகையால் அவரவர்கள் விருப்பப்படி செய்து கொள்ளவும். பிறகு அதில் பாலை வார்த்துக் காய்ச்சி நன்றாகக் கடைந்து குழம்பு பதத்தில் முன் தூள், சர்க்கரை ஆகியவைகளைக் கலந்து காலையில் உட்கொள்ள வேண்டும். இவ்விதம் காலையிலும் மாலையிலும் ஒவ்வொரு வேளையும் புதிது புதிதாகச் செய்து மூன்று நாள்கள் சாப்பிடவும்.

தீரும்நோய்கள்:—சூதகக்கட்டு, சூதக சம்பந்தமான வாயுக்கள் கருப்பையிலுள்ள வாயு, மூலவாயு, மூலக்கிராணி முதலிய நோய்கள் தீரும்.

மருந்துணவு:—உப்புக்கண்டம், பருப்பு, நெய், எலுமிச்சங்காய் ஊறுகாய் ஆகியவை கூட்டவும்.

குறிப்பு:—இன்னும் நமது யூனானி வைத்திய தாருட்டிய விருத்தி போதினி முதற்பாகத்தில் சொல்லியிருக்கிற லசுண பாயசத்தையும் பார்வையிடவும்.

## 1417. சூதகவாயுக் குடிநீர்

(அ) எருக்கம் வேர்ப்பட்டை, கண்டங்கத்திரிவேர், முக்காவேளை வேர், சாரணைவேர், அரிசித்திப்பிலி, கண்டந்திப்பிலி, செவ்வியம், மேற்றோல் சீவின சுக்கு, கொடிவேலி வேர்ப்பட்டை இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்).

(ஆ) வசம்பைச் சுட்டசாம்பல் தேவையான அளவு.

செய்முறை :—மேற்கண்ட ஒன்பது சரக்குகளையும் நையச் சிதைத்து ஒரு மண்பாத்திரத்தில் போட்டு நான்குபடி தண்ணீர் விட்டு ஒரு படியாகச் சுண்ட வைத்து அடைக்குடிநீராக வைத்துக் கொண்டு வேளைக்கு அரை ஆழாக்கு வீதமாக இறுத்து அதில் அரை வராகன் எடை வசம்புச் சாம்பலைப் போட்டுக் கலக்கி பருகச் செய்யவேண்டும். இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையும் செய்து வரவும்.

தீரும்நோய்கள்:—சூதகவாயு, சூதகவாயு சம்பந்தமான வயிற்று நோய், கைகால் குடைச்சல், இடுப்புவலி, மார்புவலி முதலிய பல வகை வாயு நோய்கள் தீரும்.

மருத்துணவு:— வாயுவைத்தூண்டும் உணவுப்பண்டங்கள் முதலியவைகளை நீக்கவும்.

## மலம் சிறுநீர் மருத்துவம்

## 1418. மலசலக்கட்டு உசிதம்

நாயுருவி இலை, தோலுரித்த வெள்ளைப்பூண்டிதழ், கோது கொட்டை நீக்கின பழம்புளி, ஆகிய இம் மூன்றையும் சமமாகச் சேர்த்து வெண்ணெய் போலரைத்து அடிவயிற்றில் தடவி, சிகைக் காயை இடித்துத் துணியில் சலித்த தூளை அம்மியில் வைத்துத் தண்ணீர் வார்த்து வெண்ணெய் போலரைத்து மெல்லிய துணியில் ஊட்டி எருவாய்த்திரியாகச் செய்து எண்ணெய்ப்பசை தடவி எருவாயில் செலுத்தி வைக்கவும். ஒரு மணி நேரத்திற்குள் மலம், சிறுநீர்க்கட்டு நீங்கி அவை வெளிப்படும்.

## 1419. மேற்படி உசிதம் (வேறு)

சாரணையிலை, தோலுரித்த வெள்ளைப்பூண்டிதழ், கோது கொட்டை நீக்கின பழம்புளி, ஆகிய இவைகளைச் சமனாகச் சேர்த்து அரைத்து அடிவயிற்றில் பற்றிடவும். மலம், சிறுநீர்க்கட்டு நீங்கும். அவசியமானால் மேற்கண்ட எருவாய்த்திரியை அல்லது வேறு எருவாய்த்திரியை உபயோகிக்கலாம்.

## 1420. மேற்படி உசிதம் (வேறு)

மஞ்சளை அரைத்த விழுது $1\frac{1}{2}$ வராகன் எடை (8$\frac{3}{4}$ கிராம்), இதனைத் தண்ணீரில் கரைத்துக் கொஞ்சம் சுண்ணாம்பையும் கரைத்துப் பருகச் செய்விக்க, மலம், சிறுநீர்க்கட்டு நீங்கி அவை தாராளமாக வெளிப்படும்.

## 1421. மேற்படி உசிதம் (வேறு)

மணிப்புங்கின் வடக்கே போகிற வேர்ப்பட்டையை அரைத்த விழுது $1\frac{1}{2}$ வராகன் எடை. இதனை அரை அல்லது முக்கால் ஆழாக்கு வெந்நீரில் கரைத்துப் பருகச் செய்விக்க, கட்டு நீங்கி மலம், சிறு நீர் வெளிப்படும்.

## 1422. மேற்படி உசிதம் (வேறு)

தூய்மை செய்த அரிதாரம் ஒரு நெல்லெடை, தூய்மை செய்த இலிங்கம் ஒரு நெல்லிடை. இவ்விரண்டையும் நேர்மையாகப் பொடித்துக் கொள்ளவும். பொரித்துப் பொடி செய்த தேற்றாங் கொட்டைத்தூள் 2 வராகன் எடை (7 கிராம்), பசுவின் வெண் ணெய் $2\frac{1}{2}$ பலம் (87$\frac{1}{2}$ கிராம்).

இவை எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து உட்கொள்ளக் கட்டு நீங்கி மலம், சிறுநீர் வெளிப்படும்.

## 1423. மேற்படி உசிதம் (வேறு)

உத்தாமணி வேர்ப்பட்டையை அரைத்த விழுது $1\frac{1}{4}$ வராகன் எடை. இதனை அரை அல்லது முக்கால் ஆழாக்கு இளவெந்நீரில் கரைத்துப் பருகச் செய்விக்கக் கட்டு நீங்கி மலம், சிறுநீர் வெளிப் படும்.

## 1424. மேற்படி உசிதம் வேறு

தோல், நரம்பு ஆகியவை நீக்கின தண்ணீர்விட்டான் கிழங்கு 1 பலம் (35 கிராம்), கறியுப்பு $\frac{1}{2}$ பலம் (17$\frac{1}{2}$ கிராம்), இவ்விரண்டை யும் வெண்ணெய் போலரைத்து அரை அல்லது முக்கால் ஆழாக்கு இளவெந்நீரில் கரைத்துப் பருகச் செய்விக்க மலம், சிறுநீர்க்கட்டு நீங்கும்.

## 1425. மேற்படி உசிதம் (வேறு)

கருஞ்சீரகத்தூள், கழற்சிப்பருப்புத்தூள், பீங்கானோட்டுத்தூள், உலர்த்தின துளசியிலைத்தூள், முருங்கைப் பட்டைத்தூள், வெள்ளரி விதைப் பருப்பு, முட்டையோட்டுத்தூள், சரக்கொன்றைப்புளி, கலங் கொம்பு இழைத்த விழுது, வெடியுப்பு இவை வகைக்கு அரைப் பலம் முருங்கைப் பட்டைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :—மேற்கண்டவைகளையெல்லாம் ஒன்ருகக் கலந்து ஒருமணி நேரமரைத்து நன்ருக கலந்த பின்பு முருங்கைப்பட்டைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டுசாம நேரமரைத்து ஒவ்வொரு வராகன் எடையுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்தி பளிங்குக்குப்பியில் பத்திரப்படுத்தவும்.

தீரும்நோய்கள்:—இதில் இரண்டு, மூன்று மாத்திரைகளை முருங்கைப்பட்டைச் சாற்றில் இழைத்து அடிவயிற்றில் பற்றிட வாயு சம்பந்தத்தினல் கட்டுப்பட்டிருக்கிற (பந்தம்) மலம், சிறுநீர் வெளிப்படும்.

## 1426. நீர்க்கட்டு உசிதம்

பிரமியிலை 1 படி, வெள்ளரிவிதைப்பருப்பு $1\frac{1}{2}$ பலம் வெண்காரப் பொரி 1 வராகன் எடை, காடி 1 ஆழாக்கு.

செய்முறை:—காடியில் பிரமியிலையைப் போட்டு நன்ருகப் பிசைந்து இறுத்து அதில் வெள்ளரிவிதைப் பருப்பை வெண்ணெய் போலரைத்துக் கரைத்து வெண்காரப் பொரியையும் போட்டுக் கலக்கிப் பருகச் செய்யவும். இவ்விதம் தினம் இரண்டு, மூன்று வேளை செய்துவரின் நீரடைப்பு, நீர்க்கட்டு, நீரருகல், நீரெரிச்சல் ஆகியவை தீரும்.

## 1427. மேற்படி வேறு

புங்கங்கொழுந்தை அரைத்த விழுது $1\frac{1}{2}$ பலம் இதனை முக்கால் அல்லது ஒரு ஆழாக்கு எலுமிச்சம் பழச்சாற்றில் கரைத்துப் பருகச் செய்விக்கவும். இவ்விதம் தினம் இரண்டு அல்லது மூன்று வேளை செய்துவரின் நீரடைப்பு, சதையடைப்பு, கல்லடைப்பு ஆகியவை தீரும்.

குறிப்பு :—மேற்கண்ட மூலிகையை வெந்நீரில் அல்லது இளநீரில், அல்லது மோரில் சமயோசிதம் போல் கரைத்துக் கொடுக்கலாம்.

## 1428. மேற்படி வேறு

மஞ்சள்கடுக்காய்த் தோல் 3 வராகன் எடை சோற்றுக் கற்ருழைச்சோறு 5 பலம்(175 கிராம்),வெங்காயம் 10பலம்(350 கிராம்) வெண்காரப்பொரி 1 வராகனெடை (3$\frac{1}{2}$ கிராம்).

செய்முறை:—கடுக்காயைப் பொடித்துக் கற்ருழைச் சோற்றில் போட்டுக் கலந்து சற்றுநேரம் வைத்துப் பிறகு வெங்காயத்தையும் சேர்த்திடித்துச் சாறு பிழிந்து வெண்காரப் பொரியைப் போட்டுக் கலந்து பருகச் செய்விக்கவும். இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையும் மூன்று நாள் செய்யின் நீர்க்கட்டு, நீரெரிச்சல், நீரருகல் ஆகியவை தீரும்.

ஒன்பதாம் பாகம் அனுபோக வைத்திய நவநீதம்
முற்றுப்பெற்றது.

## பிழை திருத்தப் பட்டியல்

| பக்க எண் | வாக்கிய (வரி) எண் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 20 | 27 | — | தான்றிக்காய்த் தோல் விடப்பட்டுள்ளது சேர்த்துக்கொள்க. |
| 37 | 14 | குடிநீரில் | நீரில் |
| 59 | 27 | 8 வராகன் எடை | 10 வராகன் எடை |
| 76 | 12 | வெள்ளத்தை | வெல்லத்தை |
| 79 | 11 | சிறு பூழையிலை | சிறுபீளையிலை |
| 81 | 13 | தாமயை | தாமரை |
| ,, | 34 | நெர | நெய் |
| 86 | 32 | மண்டி | சந்தன அத்தர் மண்டி |
| 91 | 3 | $46\frac{3}{4}$ | $46\frac{7}{8}$ |
| 103 | 25 | இளகிய | இளகமாக |
| 107 | 11 | மாக பவுத்திர தைலம் | மகா பவுத்திரத் தைலம் |
| 128 | 12 | காய்ச் | [illegible] |